

# பால்நிலை பரவலாக்கல்: ஏன் ஆண்மை விடயம்

இலங்கையின் நான்கு மாவட்டங்களில் மனப்பான்மைகள், நடைமுறைகள், மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயல்

care

partners
for prevention

Violence is preventable
UNDP, UNFPA, UN Women & UNV
Asia-Pacific regional joint programme
for gender-based violence prevention

© CARE International Sri Lanka.

All rights reserved.

April 2013

Designed by: Daniel Feary

Translated by: Rasendran Logendra

The views expressed in this book are those of the persons interviewed and do not necessarily reflect the views and policies of CARE International Sri Lanka. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical , photocopying, recording or otherwise without full attribution.

For further information please contact:
CARE International Sri Lanka
No. 73, Isipathana Mawatha, Colombo 05, Sri Lanka
Tel: + 94 115 399 299
Fax: + 94 112 583 721
Email: srilanka@co.care.org

# பால்நிலை பரவலாக்கல்: ஏன் ஆண்மை விடயம்

இலங்கையின் நான்கு மாவட்டங்களில் மனப்பான்மைகள், நடைமுறைகள், மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயல்


நிலுபர் டி மெல்

பிரடீப் பீரீஸ்

ஷியாமளா கோமஸ்



2013


care

partners for prevention

Violence is preventable
UNDP, UNFPA, UN Women & UNV
Asia-Pacific regional joint programme
for gender-based violence prevention

முகவுரை

# இலங்கை கெயார் இன்டர்நஷனலிடமிருந்து

அண்மைய மாதங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறை விடயம் உலகம் பூராகவும் தேவையான வெளிப்பாட்டினையும் கவனத்தையும் பெற்றிருக்கின்றது. பெண்களுக்கு எதிரான வன்முறை தேசமொன்றின் அபிவிருத்திக்கு ஓர் பிரதான தடையாக இருப்பதுடன், பெண்களை மட்டுமல்லாது முழு சமுதாயத்தையும் பாதிக்கும் ஓர் உலகளாவிய தோற்றப்பாடாகும்.

உலகத்தின் மிகவும் வறுமையான பெண்கள் மற்றும் மகளிரை வலுவூட்டுவதன் ஊடாக வறுமைக்கு எதிராகப் போராடும் ஒரு சர்வதேச அரசசார்பற்ற நிறுவனமாக, பெண்களின் சமூகப்- பொருளியல், பண்பாட்டு மற்றும் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்துவது கெயார் நிறுவனத்தின் உலகளாவிய பணிகளில் அடிப்படை அம்சமாகுமென கெயார் நம்புகின்றது. இலங்கையில், கடந்த 60 வருடங்களாக பெண்கள் மற்றும் மகளிரின் உரிமைகளை மேம்படுத்துவதில் கெயார் ஈடுபட்டுள்ளது. கடந்த தசாப்தத்தில் இந்தப் பணி பால்நிலை சார்ந்த வன்முறை விடயங்களைக் கவனிப்பதற்கு புத்தமைவான மற்றும் நீடித்துநிலைக்கும் அணுகுமுறைகளை உள்ளடக்கியிருந்தது.

2010 ஆம் ஆண்டு ஒக்தோபரில் தொடங்கப்பட்ட, பால்நிலை ஒப்புரவினை மீள வரையறுத்தல் மற்றும் ஈடுபடுத்துவதற்கு ஆண்களை வலுவூட்டுதல் கருத்திட்டம் (EMERGE ), தெரிவுசெய்யப்பட்ட சமூகங்களிலிருந்து பால்நிலை ஒப்புரவினை மேம்படுத்துதல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறைகளைத் தடுப்பதில் ஈடுபடுத்துவதற்கு நாவலப்பிட்டிய, மட்டக்களப்பு, பொலன்னறுவை, மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய நடப்பிலுள்ள கெயார் கருத்திட்ட அமைவிடங்களில் இருக்கின்ற வயதுவந்த மற்றும் இளம் ஆண்களை விசேடமாக இலக்கு வைக்கின்ற ஒரு கெயார் முனைப்பாகும். ஒரு மேன்மையான விளக்கம் மற்றும் இலங்கையில் பெண்களுக்கு எதிரான வன்முறையின் தற்காலிகக் காரணிகளை விபரிப்பதற்கான ஒரு வழிவகையாக, கெயார் P4P கூட்டமைப்புடன் (ஒரு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், ஐக்கிய நாடுகள் குடித்தொகை நிதியம், ஐக்கிய நாடுகள் பெண்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் தொண்டர்கள் ஆசியா மற்றும் பசுபிக்கில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான பிராந்திய இணை நிகழ்ச்சித்திட்டம்) பால்நிலை சார்ந்த வன்முறை மற்றும் பால்நிலை ஒப்புரவு தொடர்பில் ஆண்களின் அறிவு, மனப்பான்மைகள், மற்றும் நடைமுறைகள் தொடர்பில் ஒரு அளவுசார் களஆய்வினை மேற்கொள்வதற்கு 2011 இல் கைகோர்த்தது.

பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றிய பேச்சுவார்த்தைகளில் ஆண்களை ஈடுபடுத்துவதற்கு மிகவும் ஒருமுகப்படுத்தப்பட்ட மற்றும் வரையறை அளவிடை அணுகுமுறைகளின் தேவை அத்துடன் பல்வகை வடிவிலான வன்முறைகள் பற்றிப் பெண்களின் சொந்த மனப்பான்மைகளை மாற்றுவதன் தேவை என்பவற்றை இந்த ஆய்வு கோடிட்டுக் காட்டுகின்றது. இந்தப் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதில் பெண்கள், சமூகங்கள், குடிசார் சமுதாயங்கள், அரசாங்கங்கள், கொடையாளிகள் மற்றும் தனியார்த் துறையினருடன் பங்காளர்களாகப் பணியாற்றுவதற்குக் கெயார் உறுதிபூண்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறையை முடிவுறுத்துவதற்கும் பால்நிலை ஒப்புரவினை மேம்படுத்துவதற்கும் சிறுவர்கள், இளைஞர், ஆண்கள் மற்றும் பெண்களுடனான உங்கள் பணிகளைப் வலுவூட்டுவதற்கும் இந்த ஆய்வு முடிவுகளைப் பயன்படுத்துமாறு உங்களை அழைக்கின்றோம்.

கிறெகெறி பிறாடி
இலங்கைப் பணிப்பாளர்

# முகவுரை
# P4P கூட்டமைப்பிடமிருந்து

பெண்கள் மற்றும் மகளிருக்கு எதிரான வன்முறைக் கதைகள் மிக அண்மைக் காலங்களில் செய்திச் சுற்றுக்களை நிறைத்திருந்தன, மிகவும் விசேடமாகக் குறிப்பிடத்தக்கது திசெம்பரில் புது தில்லியில் இடம்பெற்ற காடையர் கற்பழிப்பு. இந்த நிகழ்வுகள் ஒவ்வொரு நாளும் உலகம் பூராகவும் நடைபெறுகின்ற போதும், அவை எவ்வாறு இந்த விடயங்கள் நடைபெறுகின்றன என்பது பற்றிய ஆழமான வினாக்களை மனதில் ஏற்படுத்துகின்றன, யாரைக் குற்றங்கூறுவது அவ்வாறான சம்பவங்கள் எதிர் காலத்தில் நடைபெறாது இருப்பதனை எவ்வாறு நாம் தடுத்து நிறுத்த முடியும்.

பல்வகைமையான ஆசிய- பசுபிக் பிராந்தியம் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பதிவுசெய்யப்பட்ட மட்டங்களில் உலகத்தில் அதி உயர்ந்த சிலவற்றையும் மற்றும் மிக குறைந்த சிலவற்றையும் கொண்டிருக்கின்றது. எவ்வாறாயினும், பல தசாப்த பணிகள் மற்றும் மில்லியன் கணக்கான டொலர்கள் செலவிடப்பட்டிருந்த போதிலும் தேசிய, பிராந்திய அல்லது உலகளாவிய ரீதியில் வன்முறை நிலவுகையில் ஒட்டுமொத்தக் குறைவினை நாம் காண்பதில்லை.
இது வரையில், பெண்கள் மற்றும் மகளிருக்கு எதிரான வன்முறைகளைக் கவனிப்பதற்கான முயற்சிகள், அநேகமான பகுதிக்கு, வன்முறைக்கான பதிற்செயலாற்றல் மற்றும் சேவைகளை மேம்படுத்துவது தொடர்பில் - ஒட்டுமொத்த சட்டவாக்க மற்றும் குற்றவியல் நீதி முறைமையை வலுவூட்டுதல் - மற்றும் தரமான சுகாதார, சட்ட மற்றும் சமூக சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல் என்பவற்றின் மீது சரியாக ஒருமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் வன்முறைகளின் விளைவுகளுக்கு மட்டும் பதிற்செயலாற்றுவது மட்டும் அதனை முடிவிற்குக் கொண்டுவருவதற்கு போதுமானதாக இருக்கவில்லை.

பதிலாக, நான்கு ஐக்கிய நாடுகள் முகவர்கள், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், ஐக்கிய நாடுகள் குடித்தொகை நிதியம், ஐக்கிய நாடுகள் பெண்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் தொண்டர்கள் P4P இணை நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக ஆண்களின் வன்முறைப் பயன்பாட்டினை அதனைத் தடுப்பதன் பொருட்டு நன்கு விளங்கிக்கொள்ள முயற்சிப்பதற்காக ஒன்றாக முன்வந்திருக்கின்றன. ஆண்கள் மற்றும் வன்முறை தொடர்பான ஐக்கிய நாடுகள் பன்னாட்டு ஆய்வு ஆசியா மற்றும் பசுபிக்கில் உள்ள ஆறு நாடுகளிலிருந்து 10,000 இற்கும் மேற்பட்ட ஆண்களின் ஒரு களஆய்வினையும் உள்ளடக்கியிருந்தது. முக்கியமாக, கெயார் நிறுவனத்தினால் வழிநடத்தப்பட்ட அந்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாக இருந்தது. பிரதேசத் தரவுத் தொகுதியின் நாடு தழுவிய ஒப்பீட்டுத்திறன் மற்றும் பல்வகைமைக்கு இலங்கைத் தரவு கணிசமானளவு தரவு சேர்க்கின்றது.

அதேயளவு முக்கியத்துவமாக, இந்த ஆராய்ச்சி இலங்கையில் பால்நிலை சார்ந்த வன்முறை மற்றும் பால்நிலை ஒப்புரவின்மையின் மூல காரணங்கள் தொடர்பில் நாட்டிற்கு- குறிப்பான இலக்கியத்திற்கு ஒரு தனித்துவமான பங்களிப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்தி இருக்கின்றது. ஏனெனில் வித்தியாசமான பண்பாடு மற்றும் சமூக நெறிமுறைகள் தனித்துவமான நடத்தைகள் மற்றும் நடைமுறைகளைத் தோற்றுவிக்கின்றன, இந்த அறிக்கையிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட நாட்டிற்குக் குறிப்பான சான்று மேலும் பயனுறுதியான மற்றும் இலக்கு நோக்கிய பாலின சமத்துவமான மூலோபாயங்களை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்யும், குறிப்பாக ஆண்கள் மற்றும் சிறுவர்களை ஈடுபடுத்துபவைகளுக்கு.

இந்த ஆய்வு ஆண் பாலுணர்வுசார் உரிமை அல்லது பெண்கள் மற்றும் அவர்களின் உடல்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தாம் உரிமை கொண்டிருப்பதாக எண்ணும் சில ஆண்களின் நம்பிக்கையைத் தொடர்ந்து நீடித்திருக்கச் செய்யும் தீங்கான சமூக நெறிமுறைகளை மாற்றுவதற்கான தேவையைக் கோடிட்டுக் காட்டுகின்றது. வன்முறை மற்றும் பாரபட்சம் இல்லாத ஒரு எதிர்காலத்திற்காக ஆரோக்கியமான மனப்பான்மைகள், நடைமுறைகள் மற்றும் உறவுமுறைகளைப் பேணுவதற்கு இளம் மக்களுடன் நாங்கள் பணியாற்ற வேண்டியுள்ளது. கடினமாக இருப்பதாக வரையறுக்கப்படுகின்ற ஆண்மைநிலை எண்ணத்தை நாம் மாற்ற வேண்டும். ஆண்மைநிலையின் மாற்று வடிவங்களான வன்முறையற்ற, பால்நிலை ஒப்புரவான மற்றும் பச்சாத்தாபத்தை ஊக்குவிக்கின்ற மற்றும் கண்ணியம் என்பன நெறிமுறைகளாக முடியும். இறுதியாக, நாங்கள் வன்முறைகளிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டியதுடன் பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் பணியாற்றுவதன் ஊடாக ஆரோக்கியமான குழந்தைப்பராயங்களைப் பேணுதல்.

இந்த ஆராய்ச்சி எங்களுக்குப் பாரிய எதிர்பார்ப்பினை வழங்குகின்றது. வன்முறை தடுக்கப்படக் கூடியதாக இருக்கின்றது அத்துடன் நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றினால் ஒரு மிகவும் ஒப்புரவான மற்றும் சமாதானமான உலகத்தை உருவாக்குவதற்கு நாங்கள் உதவ முடியும்.

ஜேம்ஸ் லாங்க்
நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர்
P4P இணை நிகழ்ச்சித்திட்டம்

# ஏற்பறிவிப்புகள்

முதலில் நாங்கள் இந்த ஆய்விற்காக நேர்காணப்படுவதற்கு உடன்பட்ட கொழும்பு, மட்டக்களப்பு, நுவரெலியா, மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலுள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ஏற்புத்தெரிவிப்பதுடன் நன்றிகூற விரும்புகின்றோம்.

P4P யின் அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாடு இல்லாவிட்டால் இந்த அறிக்கை ஒரு உயிர்த்தோற்றம் பெற்றிருக்காது. P4P யைச் சேர்ந்த ஜேம்ஸ் லாங்க், எம்மா ப்ளு மற்றும் ஷியான் வொர்னர் மற்றும் ஆண்கள் மற்றும் வன்முறை தொடர்பான பன்னாட்டு ஆய்விற்கான தலைமைத் தொழில்நுட்ப ஆலோசகர், தென் ஆபிரிக்க மருத்துவ ஆராய்ச்சிப் பேரவையைச் சேர்ந்த பேராசிரியர் ரச்சல் ஜுக்ஸ், ஆகியோருக்கு ஆராய்ச்சிச் செயல்முறைகள் பூராகவும் அவர்களின் உழைப்புள்ள வழிகாட்டல் மற்றும் முடிவுகள் தொடர்பான கருத்துரைகளுக்கு நன்றிகள் உரித்தாகட்டும். P4P யின் நிபுணத்துவ ஆலோசகர், ஸ்கொட் ஜோன்சன் அவர்களுக்கு தரவுகளைத் திரட்ட பயன்படுத்தப்பட்ட தனிநபர் எண்ணியல் உதவியாளர் (PDA) நிகழ்ச்சித்திட்டத்திற்காக மற்றும் P4P யைச் சேர்ந்த கரோலின் லீயோவ் அவர்களுக்கு இந்த அறிக்கையைத் தொகுத்து அமைத்தமைக்காக நாங்கள் ஏற்பறிவிப்பைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

தலைமை ஆய்வாளர், பேராசிரியர் நிலூபர் டி மெல் அவர்களுக்கு, தீவிர ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வின் ஊடாக முடிவுகளைச் சமர்ப்பித்தமைக்காக அவரின் அர்ப்பணிப்பு மற்றும் கடமையுணர்ச்சிக்கு மற்றும் பிரதீப் பீரீஸ் அவர்களுக்கு இலங்கை ஆராய்ச்சிக் குழு மற்றும் பாங்கொக்கில் P4P குழு இரண்டிற்கும் களப்பணி, தரவுப் பகுப்பாய்வு மற்றும் சமர்ப்பிப்புச் செயற்பரப்புகளில் தொழில்நுட்ப உதவி வழங்குவதில் அவரின் அயர்வற்ற முயற்சிகளுக்கு நாங்கள் ஏற்பறிவிப்பினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். ஷியாமளா கோமஸ் அவர்களுக்கும் பரிந்துரைகள் அத்தியாத்தைத் தயாரித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

இறோமி பெரேரா மற்றும் ஹஷிகா ஜயவர்த்தன, முன்னாள் சமூக குறிகாட்டி, மற்றும் டினிடு கருணாநாயக்க மொழிபெயர்ப்பு உட்பட தமிழ் மற்றும் சிங்கள வினாக்கொத்துகளுடன் அவர்களின் உதவிக்கு, மற்றும் களத்தில் வினாக்கொத்துக்களைச் செயற்படுத்தியமைக்காக தரவு சேகரிப்புக் குழுவினர்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். வரைபுகள், அட்டவணைகள் மற்றும் இந்த அறிக்கையின் தோற்ற ஒழுங்கமைப்பிற்கு உதவிய ஷஷிக் தனுஷ்க அவர்களுக்கு, மற்றும் தமிழ் வினாக்கொத்துத் தொடர்பில் உதவியமைக்காக மாரிமுத்து கிறிஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாக உள்ளோம்.

எமக்குப் பின்னூட்டலில் அல்லது ஆராய்ச்சியின் குறிப்பிட்ட தோற்றப்பாடுகளில் இலக்கியங்களைத் தேடுவதில் உதவியவர்களுக்கும் கூட இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். விசேடமாக கலாநிதி வத்சலா ஜயசூரிய, பேராசிரியர் அமலா த சில்வா, பேராசிரியர் கமீலா சமரசிங்க, சரளா இமானுவேல் மற்றும் குமுதினி சாமுவேல் ஆகியோருக்கும் இது தொடர்பில் நாங்கள் ஏற்பறிவிப்பினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தக் கருத்திட்ட அமுலாக்கம் தொடர்பில் பின்னூட்டல்களை வழங்கிய ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவிற்கும் நாங்கள் நன்றி கூறுகின்றோம்.

# உள்ளடக்கம்


**1. ஏன் ஆண்மை? 6**

1.1. அறிமுகம் 6

1.2. ஆண்மைக்குரியன அரங்கில் 7

1.3. கெயார் கருத்திட்டம் 8

**2. ஆராய்ச்சி முறை 10**

2.1. அறிமுகம் 10

2.2. வடிவமைப்பு மற்றும் அமைப்பு 11

2.3. ஆய்வின் குறிக்கோள்கள் 11

2.4. நெறிமுறைத் தடைநீக்கல் 11

2.5. வினாகொத்து வடிவமைப்பு 13

2.5.1. வன்முறை, குழந்தைப்பராய மனவதிர்ச்சி மற்றும் பாலின மனப்பான்மைகளின் அளவீடு 13

2.6. கூறெடுத்தல் 13

2.7. வெளிகள ஆராய்ச்சி 15

2.8. ஒழுக்கமுறைகள் மற்றும் பாதுகாப்புச் செந்தரங்கள் 17

2.8.1. தனிப்பட்ட சம்மதம் 18

2.8.2. தன்னிச்சையான பங்கேற்பு 18

2.9. தரவுப் பகுப்பாய்வு 18

**3. ஆண்மை மற்றும் பால்நிலைத் தொடர்புகள்: மனப்பன்மைகள் மற்றும் நடைமுறைகள் 20**

3.1. அறிமுகம் 21

3.2. மனப்பான்மைகள்: பால்நிலை நெறிகள், பாலினத் தொடர்புகள், மற்றும் நெருங்கிய துணைவர் வன்முறை 22

3.3. ஆண்மையை உருவாக்குதல்: பெண்களின் ஒருமித்த அபிப்பிராயம் 26

3.4. தீர்மானம் எடுத்தல் 27

3.5. வீட்டுப் பொறுப்புக்கள் 29

3.6. வரதட்சணை 31

3.7. உடந்தையாக மற்றும் மாறிவரும் ஆண்மைகள் 31

3.8. இறுதிச் சுருக்கம் 32

**4. ஆற்றலை உருவாக்குதல்: பெண்கள் மற்றும் ஆண்களுக்கு எதிரான ஆண் இனத்தின் வன்முறை 33**

4.1. அறிமுகம் 34

4.2. பெண்களுக்கு எதிரான ஆண் வன்முறை: நெருங்கிய துணைவர் வன்முறையின் நிலவுகை 35

4.3. நெருங்கிய துணைவர் வன்முறையுடன் இணைந்த இடர்க் காரணிகள் அல்லது இயக்கிகள் 39

4.4. கற்பழிப்பு குற்றச்செயல் உள்ளடங்கலான பாலியல் வன்முறை: நிலவுகை செயலூக்கங்கள் மற்றும் இடர்க்காரணிகள் 43

| | |
|---|---|
| 1.1. துணைவரல்லாதவருக்கு எதிரான கற்பழிப்பு உட்படப் பாலியல் வன்முறைக் குற்றமிழைத்தலுடன் இணைந்த இடர்க்காரணிகள் | 47 |
| 1.2. பாலியல் வன்முறை பற்றி பெண்களால் அறிவிக்கப்படுதல் | 49 |
| 1.3. கற்பழிப்பு உள்ளடங்கலான பாலியல் வன்முறை தொடர்பான மனப்பான்மைகள் | 50 |
| 1.4. பால்நிலை சார்ந்த வன்முறை மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாடு | 51 |
| 1.5. குழந்தைப்பராயத் துஷ்பிரயோகம் | 52 |
| 1.5.1. பாலியல் துஷ்பிரயோகம் | 52 |
| 1.5.2. பகிடிவதை | 54 |
| 1.6. ஆண் மீதான ஆண் வன்முறை | 54 |
| 1.6.1. கும்பல்கள் | 54 |
| 1.6.2. தன்னினச்சேர்க்கை வெறுப்புப் பயம் மற்றும் ஆண் பாலியல் வன்முறை | 54 |
| 1.7. இறுதிச் சுருக்கம் | 57 |
| **2. ஆண்மை, நல்வாழ்வு மற்றும் குடும்ப சுகாதாரம்** | **58** |
| 2.1. அறிமுகம் | 59 |
| 2.2. பொருளாதார மனஅழுத்தம் மற்றும் நல்வாழ்வு | 59 |
| 2.3. தற்கொலை எண்ணங்கள் உள்ளடங்கலான மனச்சோர்வு | 62 |
| 2.4. குழந்தைப்பராய மனவதிர்ச்சி | 65 |
| 2.5. ஆஜராகாத தந்தையர்கள் மற்றும் ஆரோக்கியம் மீதான தாக்கம் | 67 |
| 2.6. இனவிருத்திச் சுகாதாரம் | 68 |
| 2.7. எச்ஐவி தொடர்பான மனப்பான்மைகள் | 69 |
| 2.8. வன்முறையும் அதன் ஆரோக்கியத் தாக்கமும் | 69 |
| 2.9. சுருக்கம் | 72 |
| **3. பரிந்துரைகள்** | **74** |
| 3.1. பிரதான முடிவுகள் | 75 |
| 3.2. பரிந்துரைகள் | 76 |
| 3.3. முடிவுகள் மற்றும் பரிந்துரைகளின் சுருக்கம் | 76 |
| **உசாத்துணை மேற்கோள்கள்** | **86** |

# நிறைவேற்றுச் சுருக்கம்

உலகத்தில் பல பாகங்களிலுமுள்ளவாறு, பால்நிலை கற்கைகள் மற்றும் பால்நிலை சார்ந்து பரிந்து பேசுதல் இரண்டிலும் திணரடிக்கும் அசையழுத்தம் இலங்கையில் பெண்களை இலக்காக்கி இருக்கின்றது. நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயல்களினது வீதத்தினைக் குறைப்பதற்கு ஆண்களை ஈடுபடுத்துவதன் தேவையையும் பயனுறுதியையும் அண்மைய சான்றுகள் சார்ந்த ஆராய்ச்சி கோடிட்டுக் காட்டுகின்றது.

இலங்கையில் ஆண்மைக்குரியன பற்றிய சான்றுகள் சார்ந்த கற்கைகளில் இடைவெளிகளை இணைக்கும் பொருட்டு, இலங்கை கெயார் இன்டர்நாஷனல், P4P யுடன் ஒன்றாக, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், ஐக்கிய நாடுகள் குடித்தொகை நிதியம், ஐக்கிய நாடுகள் பெண்கள் மற்றும் ஆசியா மற்றும் பசுபிக்கில் பால்நிலை சார்ந்த வன்முறையைத் தடுப்பதற்கான பிராந்திய இணை நிகழ்ச்சித்திட்ட ஐக்கிய நாடுகள் தொண்டர்கள், ஆண்களின் அறிவு, நடைமுறைகள், மற்றும் பால்நிலை மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை தொடர்பில் ஆய்வொன்றினை மேற்கொண்டிருந்தது.

ஆய்வின் பிரதான ஆராய்ச்சி கேள்விகள் வருமாறு:

- பெண்களுக்கு எதிரான ஆண்களின் பல்வேறு வகை வன்முறைக் குற்றச்செயல்களின் (மற்றும் பெண்களின் அனுபவங்களின்), அத்துடன் வேறு ஆண்களுக்கு எதிரான ஆண்களின் வன்முறை, நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் பாலியல் வன்முறை தொடர்பில் குறிப்பிட்ட அசையழுத்தத்துடன் நிலவுகைகள் மற்றும் தடவைகள் பற்றிச் செல்லுபடியான மதிப்பீட்டினைப் பெறல்.

- சிறுவர்களாக இருந்தபோது அனுபவித்த வன்முறை உட்பட, ஆண்களின் பல்வேறு வகை வன்முறையின் சொந்த அனுபவங்களை வரைபடமாக்கல்

- ஆண்களின் பால்நிலை மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகளை வரைபடமாக்கல் மற்றும் எந்த இடர்க் காரணிகள் ஆண்களை நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் பாலியல் வன்முறைக் குற்றச்செயல் இடரில் இடும் அல்லது பாதுகாக்கும் என இணங்காணல்

- இலங்கையில் பால்நிலை சார்ந்த வன்முறையைத் தடுப்பதற்கு சான்று அடிப்படையிலான கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்ட துலங்கல்களைக் கட்டியெழுப்புதல்.

இந்த ஆய்வு, ஒரு எழுமாற்றான மாதிரி மூலோபாயத்தைப் (Random Sampling Methodology) பயன்படுத்தி நான்கு மாவட்டங்களின் வகைமாதிரி - கொழும்பு, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா –1658 ஆண் பங்கேற்பாளர்கள் மற்றும் ஒரு சிறிய 18 – 49 வருடங்கள் வயதுகளுக்கு இடைப்பட்ட 653 பெண் மாதிரிகளுடன் நடாத்தப்பட்டது.

இந்த ஆய்வு உலக சுகாதார ஸ்தாபனத்தின் நெறிமுறை வழிகாட்டிகளைப் பயன்படுத்திச் செயற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆராய்ச்சி உபகரணங்கள் இன்ரிரியூடோ புறொமன்டோ மற்றும் பெண்கள் தொடர்பிலான ஆராய்ச்சிக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட பெண்களின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப வன்முறை மற்றும் சர்வதேச ஆண்கள் மற்றும் பால்நிலை சமத்துவ ஆய்வு தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபன பன்னாட்டுக் கற்கையினை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ஆய்வினை மேற்கொள்வதற்கு இலங்கை மருத்துவச் சங்கத்தின் நெறிமுறை மீளாய்வுக் குழுவின் நெறிமுறை அனுமதி பெறப்பட்டது.

கொள்கை வகுப்பாளர்களுக்கு மற்றும் திட்டமிடுவோருக்கு, பல்வகைச் சூழமைவுகளில் ஆண்மைக்குரிய மற்றும் பாலினம் சார்ந்த வன்முறைகள் மற்றும் ஆண்களின் தராதரம் மற்றும் குடும்ப சுகாதாரத்தினை வரைபடமாக்கல் மற்றும் சூழமைவுசார்பாக்கல் என்பவற்றின்மீது கவனம் செலுத்தி, பால்நிலைத் தொடர்புகள் தொடர்பில் நிலவும் ஆண்களின் மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகளைப் பகுப்பாய்வதன் ஊடாக நெருங்கிய துணைவர் மற்றும் பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்குத் தரவால் உந்தப்பட்ட சான்றுகள்- சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிப்பதற்கு போதிய தகவலை வழங்குவதனை இந்த அறிக்கை இலக்காகக் கொண்டிருக்கின்றது.

## பெறுபேறுகள்

### இலங்கையில் நிலவும் பெண்களுக்கு எதிரான வன்முறை

முப்பத்தாறு வீதம் எப்போதாவது துணைவராகவிருந்த ஆண்கள் ஒரு நெருங்கிய பெண் துணைக்கு எதிராக உடல்சார் அல்லது பாலியல்சார்ந்த வன்முறைக் குற்றம்புரிந்ததாக அறிவித்தனர். சகல ஆண்களிலும் 6 வீதத்தினர் துணைவரல்லாத பெண் ஒருவருக்கு எதிராக பாலியல் வல்லுறவு உள்ளடங்கலான பாலியல் வன்முறைக் குற்றம்புரிந்திருந்தனர் அத்துடன் 17 வீதத்தினர் பாலியல் வல்லுறவு உட்பட பாலியல் வன்முறைக் குற்றச்செயலை எந்தப் பெண்களுக்கு எதிராகவும் புரிந்திருந்தனர்.

## பால்நிலை சார்ந்த வன்முறை மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பில் ஆண்களின் மனப்பான்மைகள்

ஆண்களின் பதிலளிப்புகள் அவர்களது நாளாந்த வாழ்க்கையில் ஒரு மிதமான பால்நிலை ஒப்புரவினைக் காட்டுகின்ற அதேவேளை, GEM அளவிடையில், ஆண் பிரதிவாதிகள் பால்நிலை ஒப்புரவற்ற மனப்பான்மைகள் ஓர் உயர்ந்த சதவீத ஈட்டத்தைக் கொண்டிருந்தன. நெருங்கிய துணைவர் வன்முறை தொடர்பில், பெரும்பான்மையாக 74 சதவீதத்தினர் "ஒரு பெண் அடிக்கப்படுவதற்கு அருகதையுடையவராக இருக்கின்ற சமயங்கள் உள்ளன" என்ற கூற்றிற்கு உடன்படாதிருந்தனர், எவ்வாறாயினும், பெரும்பான்மையான ஆண்கள் (64 சதவீதத்தினர்) குழந்தைப் பராமரிப்பு பிரதானமாக தாயாரின் பொறுப்பு என்ற கருத்திற்கு பற்றார்வந் தெரிவித்தனர், அதேவேளை 57 சதவீதத்தினர் பெண்களின் பிரதான பொறுப்பு குடும்பத்தைப் பராமரிப்பதும் வீட்டைக் கவனிப்பதும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். "வன்முறைச் சாதனங்கள் ஊடாகவேனும் கூட உங்கள் குடும்பத்தின் கௌரவத்தைக் காப்பது ஆடவரின் கம்பீரம்" என்பதை 58 சதவீதமானோர் நம்புவதுடன், பெரும்பான்மையான ஆண்கள் கூட ஆண்மைநிலையை மேலாதிக்கம் மற்றும் வன்செயலுடன் தொடர்புபடுத்தினர். இலங்கையிலுள்ள பெண்கள் கூட பால்நிலை ஒப்புரவற்ற மனப்பான்மைகளைக் கொண்டிருக்கின்றனர்- அத்துடன் பெரும்பாலும் ஆண்களின் மனப்பான்மைகளை மிகவும் ஒப்புரவற்ற – குறிப்பாக பாலியல் வல்லுறவு தொடர்பில். மூன்றில் இரண்டு பெண் மாதிரி (67 சதவீதம்) கூட, 55 சதவீத ஆண்களுடன் ஒப்பிடும்போது, 'எந்தப் பாலியல் வல்லுறவு வழக்கிலும், வல்லுறவுக்கு உட்பட்டவர் ஒழுங்கீனமானவரா அல்லது நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டவரா என விசாரிக்கப்பட வேண்டும்,' என்பதனை உறுதிப்படுத்தியிருந்தனர், மற்றும் பெண்களில் 75 சதவீதமானோர் (மற்றும் ஆண்களில் 79 சதவீதமானோர்) 'சில பெண்கள் அவர்கள் உடுத்தும் மற்றும் நடக்கும் விதத்தில் பாலியல் வல்லுறவினை வரவழைத்துக் கொள்கின்றனர்,' எனத் தெரிவித்தனர்.

ஆய்வு பல்வேறு சூழமைவுகளைச் சுட்டிக்காட்டுகின்றது, பெண்களுக்கு எதிரான, அத்துடன் ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான, ஆண்களின் உடல்சார் மற்றும் பாலியல்சார் வன்முறைக் குற்றச்செயல்கள் தொடர்பான உந்துவிசைகள் மற்றும் மாறிகள் பல ஓர் ஆடவராக இருப்பது எப்படி என்ற காலாச்சார மனப்பான்மைகளில் ஊன்றியதாக இருக்கின்றது. குற்றச்செயலுக்கான இடர்க் காரணிகள் குழந்தைப்பராய மனவதிர்ச்சி, கட்டுப்பாட்டு நடத்தைகள், குறைந்த கழிவிரக்கம், சண்டை இயல்புறு தன்மை மற்றும் பன்மடங்கு பாலியல் துணைவர்கள் சம்பந்தப்பட்ட பாலியல்சார் நடத்தை என்பவற்றை உள்ளடக்குகின்றன.

கைப்பற்றப்பட்ட பெரும்பாலான பாலியல்சார் வன்முறை விவாக சம்பந்தமான வல்லுறவு உட்பட நெருங்கிய துணைவர் வன்முறை வகையினுள் அடங்குகின்றது. வல்லுறவு உட்பட பாலியல் வன்முறைக்கு ஆண்களால் தெரிவிக்கப்பட்ட முக்கிய உந்துசக்தி பாலியல்சார் உரிமையாக இருந்தது. வல்லுறவு உட்பட பாலியல்சார் வன்முறைக் குற்றமிழைத்த மூன்றில் இரண்டு மாதிரி, அவ்வாறு முதற் தடவை செய்தது 20 மற்றும் 29 வயதுகளுக்கு இடையில். அநேகமாக பாலியல் வல்லுறவு உட்பட பாலியல் வன்முறைக் குற்றஞ்செய்த ஆண்களில் மூன்றில் ஒன்று அவ்வாறு முதற் தடவை செய்தது 15 மற்றும் 19 வருடங்களுக்கு இடைப்பட்ட வயதுகளில்.

தண்டனை விலக்கீட்டுரிமை மட்டம் - குடுப்பங்களிலிருந்து, சமுதாயங்கள் மற்றும் சட்டம் - வல்லுறவு உட்பட பாலியல்சார் வன்முறைகளுக்கு இலங்கையில் சற்று அதிகமாக இருப்பதாகக் கூட ஆய்வு வெளிப்படுத்துகின்றது. பலாத்காரமான பாலியல்சார் தொடர்புகள் குற்றஞ்செய்த ஆண்களில் 18 சதவீதத்தினரிடம் மாத்திரம் தாம் கண்டுபிடிக்கப்படலாம் என்ற அச்சம் இருந்தது. மாதிரியின் 97 சதவீதத்தினர் பலாத்காரத்திற்கு உட்பட்டவருக்கு ஆதரவாயிருக்கும் எவரிடமிருந்தும் எந்த வன்முறையையான எதிர்நகர்வினையும் அனுபவிக்கவில்லை. முக்கியமாக, 7 சதவீதமான குற்றம்புரிந்தோர் மட்டுமே சட்டரீதியான விளைவுகளை (கைதுசெய்யப்பட்டு குற்றச்சாட்டு கைவிடப்பட்ட, அல்லது கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற வழக்கில் விளைந்த அல்லது சிறயைிடப்பட்டமை போன்ற) அனுபவித்திருந்தனர்.

## பெண்களின் ஆரோக்கியம் மீது நெருங்கிய துணைவர் வன்முறையின் தாக்கம்

நெருங்கிய துணைவர் வன்முறை பற்றிய பிரச்சனை பெரும்பாலும் பெண்களால் தெரிவிக்கப்படாது தொடர்ந்திருக்கின்றது. ஒட்டுமொத்தமாக, மூன்றில் ஒன்று எப்போதாவது துணைவராக இருந்த ஆண்கள் (33 சதவீதம்) அவர்கள் தமது வாழ்நாளில் நெருங்கிய துணைவிக்கு எதிராக உடல்சார் மற்றும் அல்லது பாலியல்சார் வன்செயலைத் தாம் புரிந்ததாகத் தெரிவித்திருந்தனர். இது எப்போதாவது துணைவியராய் இருந்து அவ்வாறான வன்முறையை அனுபவித்ததாகத் தெரிவித்த, குறைத்து அறிவித்த, 29 சதவீத பெண்களினால் ஆதரிக்கப்படுகின்றது. பெண்களினால் அவர்களின் கோபம், காயம் கணிசமான மட்டங்களுக்கு அடக்கப்படுதல், இலகுவில் தாக்குதலுக்கு இலக்காகும்நிலை மற்றும் நெருங்கிய துணைவர் வன்முறையைத் தொடர்ந்த பாதுகாப்பின்மை அவர்களின் உள ஆரோக்கியத்தில் நிச்சயமாக ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கும். மருத்துவ உதவியை நாடிய நெருங்கிய துணைவர் வன்முறையினை அனுபவித்தவர்களில் 32 சதவீதமானோர் மட்டும் வன்முறை பற்றி அறிவித்திருக்கின்றார்கள் அத்துடன், நெருங்கிய துணைவர் வன்முறையை அல்லது துணைவர் அல்லாதவரினால் பாலியல் வன்முறையை அனுபவித்த பெண்களில் 10 சதவீதமானோர் மட்டும் அவர்களது குடும்பங்களுக்கு வன்முறை மற்றும் அவர்கள் அனுபவித்த மனவுழைச்சல் பற்றிக் கூறியிருக்கின்றார்கள்.

பாலியல்சார் துஷ்பிரயோகம் தொடர்பான கண்டுபிடிப்புக்கள், குறிப்பாக ஆண் சிறுவர்கள் பற்றி, அவசர கவனத்தை ஈர்க்க உத்தரவாதமளிக்கின்றது. ஆண் மாதிரிகளில் இருபத்தெட்டு சதவீதம் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களை அனுபவித்தமை பற்றி அறிவித்திருக்கின்றார்கள். இது ஆண் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு இலகுவில் இலக்காகுவதை வெளியில் தெரியச் செய்வது மட்டுமல்லாது, ஆண் சிறுவர்கள் வன்முறை ஆண்களாக, பெரும்பாலும் பெண்களை வன்முறையுடன் இலக்காகக் கொண்டு, உருவாகும் செயல்முறை தொடர்பில் படியெடுக்கும் அது கொண்டிருக்கும் தாக்கம் முக்கியமானதாக இருக்கின்றது.

### ஆண்களின் நல்வாழ்வும் ஆரோக்கியமும்

போதிய வருமானமின்மை காரணமாக ஏற்படும் பொருளாதார அழுத்தம், பொருளாதார சொத்துக்கள் இன்மை மற்றும் வீடுகளின் ஆண் தலைவர்கள் மற்றும் பொருளீட்டுனராக நிதிசார் பொறுப்புக்கள் என்பன ஆண்களின் மனவழுத்தம் மற்றும் நலமின்மைக்கான பிரதான காரணங்களாகக் காணப்பட்டிருக்கின்றன. ஒரு ஒத்த மிதமான மட்ட மனச்சோர்வு மற்றும் தற்கொலை எண்ணங்கள் ஆண் மாதிரிகளிடையே காணப்பட்டிருந்தன.

## பெண்களின் ஆரோக்கியம் மற்றும் இனவிருத்தி மற்றும் பாலியல்சார் சுகாதாரம் தொடர்பில் ஆண்களின் மனப்பான்மைகள்

இனவிருத்தி சுகாதாரம் தொடர்பில், பெண்களை மகப்பேற்றுக்கு முந்திய சிகிச்சைகளுக்கு கூட்டிச்செல்வது தொடர்பில் அவர்களின் கர்ப்பவதியான மனைவியர் துணைவியருக்கு ஆண்களின் ஆதரவு மிதமானது முதல் உயர்வானது வரை இருந்ததுடன் பெரும்பாலும் கர்ப்ப காலத்தில் வன்முறை மற்றும் பலாத்காரமான பாலுறவிலிருந்து விலகியிருந்த அதேவேளை, அவர்களின் கருத்தடைகளின் பயன்பாடு குறைவாக இருந்தது, ஆண்கள் பெரும்பாலும் திட்டமிட்ட பெற்றோர் நிலை தொடர்பில் பிரதான பொறுப்பின் சுமையை அவர்களின் மனைவியர் காதலியிடம் விட்டிருக்கும் உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றது.

ஆண்கள், உயர்ந்த இடர்க் குழுக்களில் உள்ளோர் கூட, மற்றும் பெண்கள் இருபாலாரும் மிகவும் குறைந்த வீதத்தில் ஏச்.ஐ.வி. சோதனை பற்றி அறிவித்திருப்பது (4 சதவீதம்), எச்.ஐ.வி. தொடர்பான சுகாதாரம் நாடும் நடத்தை இலங்கையிலுள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ஒரு குறைந்த முன்னுரிமையாக தொடர்ந்திருக்கின்றமையைச் சுட்டிக்காட்டுகின்றது.

### இறுதிச் சுருக்கம்

நாட்டில் இதுவரையில் கடுமையான ஆராய்ச்சி முறைகளைப் பயன்படுத்தி மிகப்பெரிய ஆண்கள் மாதிரியில் இருந்து பதிலளிப்புகளைப் பெற்று பகுப்பாயப்பட்ட கெயார் ஆய்வு இலங்கையில் முதற் தடவையாக பால்நிலை சார்ந்த வன்முறை மற்றும் பால்நிலை ஒப்புரவு தொடர்பில் ஆண்களின் புலப்பாடுகள், நடத்தைகள் மற்றும் மனப்பான்மைகள் பற்றி ஓர் ஆளமான விளக்கத்தை கோடிட்டுக் காட்டுகின்றது.

இந்த ஆய்வு பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றம்புரிதலுக்கு பிரதான உந்துவிசைகளாக மற்றும் இடர்க் காரணிகளாகச் செயற்படும் மற்றும் செல்வாக்குச் செலுத்தும் ஆண்களின் கருத்தமைவுகள் மற்றும் மனப்பான்மைகளைக் கூர்ந்து ஆராய வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றது. இது வன்முறை வட்டத்தை உடைப்பதற்கு, குழந்தைப் பராயத்திலிருந்து கட்டிளமைப் பருவம் வரை ஒரு ஆரம்ப வயதிலிருந்து சமூக உளவியல் சேவைகளின் வடிவில் தலையீடுகளின் முக்கியத்துவத்தை வெளிக்காட்டுகின்றது.

பெண்களுக்கு எதிரான வன்முறையைக் குறைப்பதற்கு பெண்கள் மற்றும் மகளிருடன் தொடர்ந்து பணியாற்றுவதன் முக்கியத்துவத்தை அறிக்கை காட்டுகின்ற அதேவேளை, தனிநபர்களாக, குடும்ப அலகுகள் மற்றும் அவர்களின் சுற்றுப்புற சமுதாயங்கள் மற்றும் சமூகங்களின் உறுப்பினர்களாகப் பல்வேறு செயற்களங்கள் மற்றும் பதவிகளில் ஒரு உறுதியான புலப்பாட்டிலிருந்து உறுதியான தந்தை நிலை பெற்றோர் நிலை மற்றும் இளைஞர்களிடையே பால்நிலைப் பல்வகைமைக்கு மதிப்பளிக்கின்றமையை மேம்படுத்துவதன் ஊடாக 'ஆண் தன்மையுடையதாக' இருப்பதன் கருத்து என்ன என்பதனை உடைப்பதற்கு ஆண்களுடன் மிகவும் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டிய தேவை ஒன்று இருப்பதனை முடிவுகள் பிரதிபலிக்கின்றன. இதனை நோக்கி, இந்த நடைமுறைகளை ஆதரிக்கும் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒப்புதலளிக்கப்பட வேண்டியிருப்பதுடன் சமுதாயத்தில் உள்ள முக்கிய தீர்மானம் மேற்கொள்பவர்கள் மற்றும் செல்வாக்குச் செலுத்துவோர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்கின்ற அதேவேளை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினுள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

அத்தியாயம் 1:

# ஏன் ஆண்மை?

## 1.1 அறிமுகம்

இலங்கையில் ஒரு விசாரணைத் துறை மற்றும் பரிந்துபேசும் இடம் இரண்டுமாக ஆண்மைக்குரியன தொடர்பில் சிறிதளவு பணிகளே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த ஒரு சிலவற்றினுள், ஆனால் முக்கியமான, விடயம் தொடர்பிலான புலமைசார்ந்த ஆய்வுகள் அரசியல் மற்றும் இன வன்செயல் தொடர்பில் ஆண்மைக்குரியன பற்றிய அமைப்பு மற்றும் வகிபாகம் ( த சில்வா 2005 பிறெமநெர் 2004 ஜெகநாதன், 1998), பாலுணர்வுகள் (மில்லர், 2011 நிக்கொலஸ், 2010 சிம்ஸன், 2004 பர்ணாந்து, 2003), மற்றும் யுத்தம், போர்நாட்டப் போக்கு மற்றும் உடல் ஊனங்கள் (கம்பர்ட், 2004 குணவர்த்தன, 2010 த மெல், 2007) ஆகியன பற்றி கவனஞ்செலுத்துவனவாக இருக்கின்றன. பரிந்து பேசும் பரப்பெல்லைகளில், இலங்கையிலுள்ள ஆண்களின் அனுபவங்களை மேலாதிக்கமாக கோடிட்டுக் காட்டும் வெளியிடப்பட்ட அறிக்கைகள் மற்றும் கட்டுரைகளிடையே ஆண்களின் பாலுணர்வு சிறுபான்மையினர் மற்றும் அவர்களின் உரிமைகள், குடியுரிமை, சுகாதாரப் பராமரிப்புகள், ஊடகப் பிரதிநிதித்துவம் மற்றும் எச்.ஐ.வி. எயிட்ஸ் இடர் (இன்னும் மனிதன் இன்னமும் இங்கே, 2010 பயணம் ஒன்றில் தோழன் மற்றும் NAZ Foundation, 2009 பர்ணந்து, 2009 - 2010). சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம் அரச சார்பற்ற நிறுவனங்களினால் ஆண் குழுக்கள் தொடர்பிலான ஏனைய அறிக்கைகள் இருக்கின்றன, குறிப்பாக இலங்கையில் சட்டக் கோவையின் 365 அ பிரிவின் கீழ் தன்னினப்பாலுணர்வு குற்றமாக்கப்பட்டிருக்கும் சூழமைவில், ஆனால் பிரதிவாதிகளின் பாதுகாப்பு அக்கறை காரணமாக, உள்ளக ஆவணங்களாக வகைப்படுத்தப்படுகின்றது.

நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் பால்நிலை - சார்ந்த தொடர்பிலான சான்று - அடிப்படையிலான ஆராய்ச்சியினுள், எவ்வாறாயினும், பெண்களுக்குச் சமாந்தரமாக ஆண்களின் அனுபவங்கள் தொடர்பில், ஒரு வளர்ந்துவரும் அழுத்தம் இருக்கின்றது (பெண்களின் சுகாதாரக் குழு மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம், 2011). இந்த இரட்டைக் குவியம் ஒரு தோற்றநிலைக் கட்டத்தில் இன்னும் இருக்கின்றது. அறிவு மற்றும் ஆண்மைக்குரியன தொடர்பிலான பகுப்பாய்வுகள் இடையேயான இடைவெளியின் ஓர் அறிகுறியாக இது இருக்கின்றது, உதாரணமாக, இலங்கையில் (2011) பால்நிலை சார்ந்த வன்முறை தொடர்பில் ஆராய்ச்சிச் சான்றுகளில் மேற்கோள் காட்டப்பட்ட கணிசமானளவு துணைநூற் பட்டியல் 'ஆண்மை' அல்லது 'ஆண்மைக்குரியன' என்பவற்றை அதன் தலைப்பில் கோடிட்டுக்காட்டும் ஒரு கட்டுரை அல்லது நூலைக் கொண்டிருக்கவில்லை. இந்த மேற்கோள் காட்டப்பட்ட இலக்கியம் தவிர்க்கமுடியாது ஆண் நடத்தை மற்றும் மனப்பான்மைகளை, அவை வன்முறைகளுக்குப் பலியாக்கப்பட்டவர்களாக பெண்கள் மீது தாக்கத்தைக் கொண்டிருப்பதனால், ஆராய்கின்றன, ஆண்மைக்குரியன மையக் கருத்துருவ வடிவக் கட்டமைப்பொன்றாக ஆஜராகாதிருக்கின்றமை (அது தலைப்பில் அல்லது உபதலைப்பில் அது உள்ளடக்கப்படுவதனை உத்தரவாதப்படுத்துகின்றது) தெளிவாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

உலகின் பல பாகங்களில் உள்ளவாறு, பேரளவிலான அழுத்தம் இலங்கையில் பால்நிலை ஆய்வுகள் மற்றும் பால்நிலை சார்ந்த பரிந்து பேசுதல் இரண்டிலும் பெண்கள் மீதானதாக இருக்கின்றது. 1970 களிலிருந்த தொழிற்சங்கம் மற்றும் சமூக - அரசியல் இயக்கங்களின் எழுச்சிகளினைத் தொடர்ந்து இடம்பெற்ற முன்னேற்றங்கள், சர்வதேச பெண்கள் இயக்கங்கள், பெண்கள் கற்கைகள் மற்றும் 1975 ஐக்கிய நாடுகள் சர்வதே பெண்கள் ஆண்டு மற்றும் 1976-85 ஐக்கிய நாடுகள் பெண்கள் தசாப்தம் (விக்கிரமசிங்க, 2009, பக்.1-30) ஆகியவற்றினைத் தொடர்ந்து பெண்கள் தொடர்பில் பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் வளர்ச்சி இலங்கையில், கவனக்குவியத்தைப் பெண்கள் பக்கம் திருப்பியிருக்கின்றது.

இந்த முன்னேற்றங்களின் முக்கிய வருவிளைவு மகளிர் விவகாரங்கள் அமைச்சு உட்பட, தற்போது சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரங்கள் எனப் பெயர்மாற்றப்பட்டிருக்கின்றது, மற்றும் பெண்கள் தொடர்பான தேசிய குழு ஆகிய அரச நிறுவனங்கள் தாபிக்கப்பட்டமை; மற்றும் பெண்கள் சாசனம் மற்றும் பெண்களின் உரிமைகள் தொடர்பில் கவனஞ்செலுத்தும் பெண்கள் தொடர்பான தேசிய நடவடிக்கைத் திட்டம் போன்ற கொள்கை ஆவணங்கள் ஆக இருந்தன. நகர மற்றும் கிராமிய அரசசார்பற்ற நிறுவனங்கள், பால்நிலை சார் நிலையங்கள், பெண்ணிலைவாத வெளியீடுகள் மற்றும் கணிசமானளவு ஆராய்ச்சிகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு தொடர்பிலான பரிந்துபேசுதல், பெண்களுக்கு எதிரான வன்முறை (VAW), பெண்களின் இனவிருத்தி சுகாதாரம் மற்றும் பெண்களின் உரிமைகள் மனித உரிமைகளாக என்பன இந்த முன்னேற்றங்களிலிருந்து எழுந்தன.

இந்த பெண்கள் மீதான ஒருமுகச் சிந்தனை அரசியல்சார் மற்றும் பொருளாதார பெருவோட்டங்களில் பெண்கள் ஓரங்கட்டப்படும் நிலை தொடர்ந்திருக்குமாயின் பொதுக் கொள்கைத் தலையீடுகளுக்கு செயல்முனைவு நிலையின் முக்கிய மற்றும் அத்தியாவசியமான ஒரு செயற்பரப்பாக தொடர்ந்திருக்கின்றது. ஆகவே, ஆண்கள் மற்றும் ஆண்மைக்குரியன மீது கவனம் திரும்புமாயின் கடந்த சில தசாப்பதங்களில் பெண்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏதாவது ஈட்டங்கள் மறுதலையாக்கப்படும், இலங்கையில் மட்டுமல்லாது உலகம் பூராகவும் உணரப்பட்ட, முக்கிய கலக்கம் இருக்கின்றது (கிளீவ்வர், 2002இ பக.5.). வன்முறை காரணமாக மற்றும் அல்லது ஓரங்கட்டப்படல் காரணமாக, ஆண்களின் இலகுவில் இலக்காகும் தன்மைகளைப் பெண்களுடையனவற்றுடன் சமப்படுத்தும் போது, ஆண்கள் கொண்டிருந்த பெண்களுக்கு எதிரான பாரபட்சமான அல்லது துணிகரமான மனப்பான்மைகள் மற்றும் நடத்தைகளை மீள் வலியுறுத்துவதாகவே இருக்கும் என்ற நியாயமான அச்சம் ஒன்று இருக்கின்றது.

இன்னும், முடிந்தவரையில் இந்த செயற்பரப்புப் பற்றிய திட்டமிடல் அக்கறை பெண்களைப் பாதிக்காத வகையில் கவனமாகச் சிந்திக்கப்பட வேண்டியிருப்பதுடன், 'பால்நிலை' என்ற பதத்தின் தோற்றம் மற்றும் ஏற்புத்தன்மை, மற்றும் ஏற்பட்ட இடமாற்றம் துல்லியமாகப் பெண்களின் வாழ்க்கை ஆண்களுடையனவற்றின் தொடர்புசார்பாக இருந்ததன் புரிவு காரணமாக இருந்தது. உதாரணமாக, 1970 களின் அபிவிருத்தியில் பெண்கள் (WID) மாதிரியிலிருந்து 1980 களின் பால்நிலை மற்றும் அபிவிருத்தி (GAD) வரையான நகர்வு பால்நிலை ஒப்புரவு பற்றிய மறு சிந்தனையின் ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரினதும் மனப்பான்மைகள் மற்றும் அனுபவங்களின் மீள்- சீரமைப்பு சார்ந்ததாகச் சுட்டிக்காட்டியிருந்தது. பால்நிலை ஒப்புரவு நோக்கிய இலக்கில் ஆண்கள் மூலோபாய பங்காளர்களாக விளங்கிக்கொள்ளப்பட்டிருந்தனர் மற்றும், பெண்களின் 'விமர்சனங்கள் மற்றவைகள்' (சொப்ரா, 2007, பக்.2). ஆனால் 'பால்நிலை' என்ற பதம் - 1970 களில் ஆன் ஓக்லே (1972) போன்ற புலமைசார் செயற்பாட்டாளர்களால் முதலில் பயன்படுத்தப்பட்டிருந்த அதேவேளை – எவ்வாறு பெண்மையாக்கம் மற்றும் ஆண்மையாக்கம் நிகழ்கின்றது என்பது பற்றிக் கவனத்தில் எடுத்து விடயம் தொடர்பில் வலுவான கோட்பாடுகளை வழங்கியது, பெண்மைபற்றிய கோட்பாடுகள் மற்றும் அறிவின் முன்னேற்றங்களினால் அறிவிக்கப்பட்டு, ஆண்மைக்குரியனவான முக்கியமான மாறுநிலைத் திருப்பம் நிகழத்தொடங்கியது, 1990 களின் நடுப்பகுதி வரையில் நடந்திருக்கவில்லை.

## 1.2 ஆண்மைக்குரியன அரங்கில்

ஆண்மைக்குரியன ஒரு ஆய்வுப் புலமாக பெண்மைக் கற்கைகள் மற்றும் செயல்முனைவு நிலையின் ஒரு முக்கிய வருவிளைவாகவிருந்து, பின்கூறப்பட்டதால் அறிவிக்கப்பட்டதன் கவனக்குவியம் குடும்பத் தலைவர் ஆட்சி முறைமை அதிகாரம் மீதிருப்பதுடன் தொகுதிகளின் நடைமுறைகள் இரண்டும் உள்ளடக்கப்பட்டு தனிப்பட்ட முறையில் உருக்கொடுக்கப்பட்டு நிறுவனரீதியாகப் பதிக்கப்பட்டிருக்கின்றன (கிம்மெல், 2002, பக் ix-x). பெண்ணிய ஆய்வுகளுடன் கூட்டுச்சேர்ந்து, ஆண்மை ஆய்வுகள் ஆண்மைக்குரியன மீது ஒரு கொள்கை நெறியாகக் கவனஞ்செலுத்துகின்றதுடன் ஆண்கள் தாங்களே ஆக்கிரமித்துக் கொள்ளும், சில ஆண்கள் வகுப்பு, சாதி, இனம் அல்லது பாலியல் அடிப்படையில் பாதகமான பல நிலைகள் பற்றிக் கவனஞ்செலுத்துகின்றது. ஆகவே, ஒரு சீரான ஆனால், சரியாகச் சொல்லுமிடத்து பல்வேறு குழுக்கள், தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் சமூகங்களிடையே பல மாறிகளை உருவாக்கும் நிலைமைகள் அல்லது பல செயல்முறைகள் மற்றும் குறுக்கிடும் அடையாளங்களினால் வடிவுகொண்ட ஆண்மைக்குரிய காணப்படுவதில்லை (கார்டினர், 2002, பக். 11). முக்கியமாக, ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரும் ஆட்பட்டிருக்கும் அதிகாரத்தையும் சரிசமமற்ற சிறப்புரிமையைப் பகிரும் பால்நிலை உருவாக்க வரலாற்று மற்றும் கலாச்சார செயல்முறைகள் மற்றும் ஆண்மைக்குரியனவும் கூடப் பாலினப்பட்ட தகவல் நடைமுறை ஆண்மை ஆய்வுகளுக்குக் காரணமாகவிருக்கின்றது.

கெயிரோவில் நடைபெற்ற 1994 ஐக்கிய நாடுகளினால் பொறுப்பேற்கப்பட்ட குடித்தொகை மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச கருத்தரங்கு பால்நிலை தொடர்பான பணிகளில் ஆண்கள் மற்றும் ஆண்மைக்குரியன முக்கியமாக இருந்தமை பற்றிய அதன் ஒப்புகை காரணமாக ஆண்மையைச் சுற்றிய செயல்முனைவுகளில் ஒரு நீர் சிந்திய அடையாளத்தை ஏற்படுத்தியிருந்தது. 'ஆண் பொறுப்புக்கள் மற்றும் பங்கேற்பு' என்ற தலைப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் (www.un.org/popin/icpd2.htm அத்தியாயம் நான்கு (இ), பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதாரம் பற்றிய விடயங்கள் ஆண்கள் மற்றும் பெண்களிடையேயான மேம்பட்ட தொடர்பாடல் மற்றும் இணைந்த பொறுப்புக்களின் புரிந்துணர்வு மற்றும் பொது அத்துடன் தனிப்பட்ட வாழ்க்கையில் சம பங்குடமை என்பவற்றிற்கு அழைப்புவிடுத்தது. கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டமிடல் தலையீட்டிற்குக் குறிப்பாக இலக்காக்கப்பட்ட செயற்பரப்புக்கள் இணைந்த பெற்றோர்நிலையில் ஆண்களின் பகிரப்பட்ட பொறுப்புக்கள்; குடும்பத் திட்டமிடல், மகப்பேற்றுக்கு முந்திய, மகப்பேற்று மற்றும் குழந்தை ஆரோக்கியம் உட்பட பாலியல் மற்றும் இனவிருத்தி நடத்தைகள்; எச்.ஐ.வி. உட்பட பாலியல்ரீதியாக ஊடுகடத்தப்படும் நோய்களைத் தடுத்தல்; தேவையற்ற கருத்தரிப்பைத் தடுத்தல்; குடும்ப வருமானம், குழந்தைகள் கல்வி, ஆரோக்கியம் மற்றும் போசஷாக்கு என்பவற்றிற்கு பங்கிடப்பட்ட கட்டுப்பாடு மற்றும் பங்களிப்பு; இருபால்நிலையான குழந்தைகள் மீதும் மதிப்பு வைத்தல் என்பனவாக இருந்தன (பிரிவு 4.27). ஆரம்ப வயதுகளிலிருந்து கல்விசார் திரவியங்களில் குடும்ப வாழ்க்கையில் ஆண்களின் பொறுப்புக்களும் மற்றும் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான ஆண்களின் வன்முறைக் குற்றம்புரிதலைத் தடுத்தல் மீது விசேட அசையளுத்தத்துடன் உள்ளடக்கப்பட அழைப்புவிடுத்தது.

'பால்நிலை சமத்துவத்தைக் கொண்டுவருவதில் ஆண்கள் ஒரு முக்கிய பங்குபணியை வகித்தல், அநேக சமூகங்களில், வாழ்க்கையின் ஒவ்வொரு செயலெல்லையிலும் ஆண்கள் பெரும்பான்மையான அதிகாரத்தினைப் பிரயோகித்தல்' (ibid) ஆகியன காரணமாக குடித்தொகை மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச கருத்தரங்கு பாரிய ஆண்களின் பொறுப்பு மற்றும் பங்கேற்பிற்கு அழைப்புவிடுத்தது. எவ்வாறாயினும், தந்தைத் தலைமைத்துவ முறைமை மற்றும் ஆதிக்கமிக்க ஆண்மைக்குரியன பெண்களின் ஓரங்கட்டப்படுதலுக்கு கணிசமானளவு பங்களிக்கின்ற அதேவேளை, வயது, வகுப்பு, சாதி, இனம் அல்லது பாலியல் திசையமைவு மற்றும் அவர்களின் ஏதுநிலை காரணமாக சகல ஆண்களும் 'வெற்றியாளர்கள்' இல்லை என்பதனைக் களத்திலிருந்தான சான்றுகள் கூட அறிவுறுத்த ஆரம்பித்தமை ஆய்வினைச் சிறப்பாக்கியது (கிலீவ்வர், 2002, பக்.2-3). நிச்சயமாக, குடியேற்றத்திற்குப் பிந்திய புலமைப்பரிசில்களின் ஒரு பரந்த அமைப்பு (ப்பானொன், 1967; சட்டர்ஜி, 1989; ஷாப்பே, 1993; மக்கிலின்டொக், 1995; சிங்ஹா, 1995; கொன்னெல், 1995 மற்றும் 2005), பொது அதிகார எல்லையில் அவர்களின் அதிகாரமற்ற உணர்வு மற்றும் தனிப்பட்ட, குடும்ப செயலெல்லையில் பெண்கள் பற்றிய அவர்களின் ஒழுங்குவிதிகள் இடையே ஒரு இணைப்பு உள்ளடங்கலாக பிறப்பிடமாகக் கொண்ட குடியேற்ற ஆண்களின் அடக்கப்பட்ட சமூகப்படிநிலையை அழுத்தத்திற்கு உட்படுத்தியிருக்கின்றது (ப்பானொன், 1967; சட்டர்ஜி, 1989). ஏனைய ஆய்வுகள், அரசியலுக்கான ஓட்டப்பந்தையம், உலகமயமாக்கல், தொழில் சந்தைகள், இன முரண்பாடு அல்லது குடிபெயர்வு, எதுவாக இருந்தாலும் அது கூட பொருளாதார நன்மைகள், உதவி- ஓட்டங்கள் மற்றும் அவர்களின் சாதி தேசிய இனம், வகுப்பு, சாதி, சமய அல்லது பாலியல் திசையமைவு காரணமான குடியியல் உரிமைகளுக்கு அணுகல் மறுக்கப்பட்ட மற்றும் வன்முறைக்கு எளிதில் இலக்காகக்கூடியதாக ஆண்களையும் முன்னிலையாக்கத் தொடங்கின (கில்றோயி, 2000; தொம்சன், 1963 மற்றும் 1968; குஹா, 1982; டாஸ், 1990; கொன்னெல், 1995 மற்றும் 2005). 1990 களின் நடுப்பகுதிகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரினதும் மனித கண்ணியத்தை மேம்படுத்துவதற்கான பாலின ஒப்புரவினை வரையறுத்த இந்த விழிப்புணர்வு சில கொடையாளர் கொள்கை நிகழ்ச்சித்திட்டங்களில் (ஒக்ஸ்பாம், சீடா) பிரதிபலித்திருந்தது (கிலீவ்வர், 2002, பக்.2). இது ஆண்களின் சமூகப்படிநிலை மேலும் ஆராயப்பட மற்றும் பரிந்துபேசப்பட வேண்டியமைக்கு அதிகாரமளிக்கும் ஒரு ஒப்புகையாக இருந்ததுடன் அதிகாரத்திற்கான ஆண்களின் அணுகல் காரணமாக மட்டுமல்லாது அல்லது ஆண்களின் அவர்களிடையேயான வேறுபாடுகள், உலகமயமாக்கலில் எவ்வாறு சமகால நாடுகடந்த எதிர்மறை ஓட்டங்கள், தாராளமயமாக்கல், நகரமயமாக்கல், குடிபெயர்வு மற்றும் ஆயுதப்போராட்டம் என்பன ஆண்களின் வாழ்க்கையில் மிகவும் ஆழ்ந்த மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன.

## 1.3 கெயார் கருத்திட்டம்

இலங்கையில் ஆண்மைக்குரியன பற்றி சான்று- அடிப்படையிலான ஆய்வுகளில் இடைவெளிகளைச் சந்தித்து கவனத்திலெடுக்கும் பொருட்டு, இலங்கை கெயார் நிறுவனம் P4P உடன், ஆசியா மற்றும் பசுபிக்கில் பால்நிலை சார்ந்த வன்முறைகளைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம், ஐக்கிய நாடுகள் பெண்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் தொண்டர்களின் ஒரு இணை நிகழ்ச்சித்திட்டம், இணைந்து கொழும்பு, அம்பாந்தோட்டை, நுவரெலியா மற்றும் மட்டக்களப்பில் பால்நிலை மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை தொடர்பில் அறிவு, நடைமுறைகள் மற்றும் சமூக மனப்பான்மைகள் பற்றி இந்த ஆய்வினை மேற்கொண்டது. இந்தத் P4P ன் ஆய்வின் பகுதி ஏழு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட 'ஆண்கள் மற்றும் வன்முறை தொடர்பிலான ஐக்கிய நாடுகள் பன்னாட்டு ஆய்வு' என அழைக்கபடுகின்றது, அது பால்நிலை சார்ந்த வன்முறை மற்றும் ஆண்மைக்குரியன தொடர்பில் சான்று- அடிப்படையிலான வன்முறைத் தடுப்புத் தலையீடுகளை அறிவிப்பதனை ஆராய்கின்றது. கெயார் இலங்கை அதன் ஆண்களை ஈடுபடுத்தி பால்நிலை சமத்துவத்தை மீள்வரையறுக்க அதிகாரமளிக்கும் (EMERGE ) கருத்திட்டம் மற்றும் P4P ஆகிய இரண்டும் ஆய்வு மேற்கொள்ளப்படும் மாவட்டங்களில் ஆண்கள் தொடர்பான தரவு திரட்டுவதில் குறிப்பாக ஆர்வங்கொண்டிருந்தன. பெண்களை சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக வலுவூட்டுவதற்கு என்னதான் முன்னேற்றம் செய்யப்பட்டாலும் ஆண்களின் முழுமையான அர்த்தமுள்ள பங்கேற்பு இல்லாமல் அது நீடித்துநிலைத்திராது என்ற அங்கீகாரத்தின் அடிப்படையில் தோன்றிய ஆண்கள் மற்றும் ஆண்மைக்குரியன தொடர்பிலான கவனக்குவியம் ஆண்கள் மற்றும் பெண்கள் 'பொது மற்றும் தனியார் தளங்களில் சமத்துவமான மற்றும் ஒப்புரவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைக் கூடிக்கலந்து பேச' வேண்டியுள்ளதனை வலியுறுத்துகின்றது. இந்த இலக்கை நோக்கி, ஆண்களின் சலுகைகள், பாதிப்புகள் மற்றும் எதிர்ப்பு, ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கு ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரையும் ஒன்றாக கொண்டுவருவதற்கு புத்தமைவான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நீடித்துநிலைக்கும் செயல்முறைகளை வடிவமைக்க முடியுமாறு கவனத்திற்குத் தகுதிபெறச் செய்துள்ளன.

ஆய்வினது பிரதான ஆராய்ச்சி வினாக்கள் பின்வருமாறு:

- **எவ்வாறு ஆண்மைக்குரியன அமைக்கப்படுகின்றன?**
- **எவ்வாறு மேலாதிக்கமான ஆண்மைக்குரியன மீள்வலியுறுத்தப்படுகின்றன?**
- **அவை எங்கே மீள்வலியுறுத்தப்படுகின்றன?**
- **ஆண்கள் மீதான வன்முறை உட்பட பால்நிலை சார்ந்த வன்முறைக்கு அவற்றின் தொடர்புகள் என்ன?**
- **எந்தச் செயற்பரப்புகள் ஆண்மைக்குரியனவற்றிற்கு ஆதரவான சான்றுகளை வழங்குகின்றன?**

- ஆண்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வின் நிலை என்ன?
- பால்நிலை சமத்துவத்தை ஆண்கள் மற்றும் பெண்கள் எவ்வாறு உணர்ந்து கொள்கிறார்கள்?
- நிகழ்ச்சித்திட்டமிடல் அமுலாக்கத்தின் தாக்கத்தை நாம் எவ்வாறு அளவிடுகின்றோம்?

பால்நிலை ஒப்புரவான குறித்த தரங்களுக்கு ஆண்களின் மனப்பான்மைகளை மதிப்பிடுவதற்கு ஆய்விற்குச் செயற்படுத்தப்பட்ட வினாக்கொத்து ஹொறிசன்ஸ் மற்றும் புறோமன்டோ (புலெவிற்ஸ் மற்றும் பேக்கர், 2008) அவர்களினால் தயாரிக்கப்பட்ட பால்நிலை ஒப்புரவான ஆண்கள் (GEM ) அளவிடை பின்பற்றப்பட்டது. மற்றைய வினாக்கொத்துக்கள், பெண்கள் தொடர்பான ஆராய்ச்சிக்கான சர்வதேச நிலையம் (ICR W) மற்றும் இன்ஸ்ரிரியூடோ புறோமன்டோவினால் (www.icrw.org/node/765) தயாரிக்கப்பட்ட, சர்வதேச ஆண்கள் மற்றும் பால்நிலை ஒப்புரவுக் களஆய்வு (IMAGES ) மாதிரியினை அடிப்படையாகக் கொண்டிருந்தன; பெண்களின் ஆரோக்கியம் மற்றும் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை தொடர்பான உலக சுகாதார தாபனத்தின் பன்னாட்டு ஆய்வு; மருத்துவ ஆராய்ச்சிப் பேரவையினால் மேற்கொள்ளப்பட்ட ஆண்கள், ஆண்மைக்குரியன, வன்முறை மற்றும் எச்.ஐ.வி. பற்றிய தென் ஆபிரிக்க ஆய்வு. இந்த ஒருங்கிணைவின் பெறுபேறு பெண்களின் உடை, நகர்மை, தோழமைசார் சுதந்திரம்; ஆண் மற்றும் பெண் பாலியல் சுகாதாரம், மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை உட்பட பால்நிலை ஒப்புரவு தொடர்பான ஒரு பரந்த பல்வகைத் தலைப்புக்கள் தொடர்பில் ஆண்களின் மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகள் மீதான ஒரு விரிவான ஒரு வீடுசார் வினாக் கொத்தாக இருந்தது. வினாக்கொத்து பெண்களின் கருத்துக்கள் மற்றும் ஆண்களின் நடைமுறைகள் பற்றிய அவர்களின் அறிக்கைகளைக் கூடக் கவனத்திலெடுத்திருந்தது. இணைந்த பெற்றோர்நிலை, குடும்பங்களுக்கான நிதிப் பங்களிப்பு மற்றும் குடும்பப் பொருளாதார வளங்களின் கட்டுப்பாடு என்பன தொடர்பான ஆண்களின் மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகளைத் தீர்மானிப்பதற்குக் கூட வினாக்கள் வினவப்பட்டன. களஆய்வின் ஒரு முக்கிய பிரிவு, ஆண்களின் சொந்த ஆரோக்கியம் மற்றும் பாலுணர்வு, குழந்தைப்பராய பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் மனவதிர்ச்சி, பரிமாற்றப் பாலுறவில் பங்கேற்றல், ஆயதங்களை உடைமையாகக் கொண்டிருத்தல் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையில் அவற்றின் பயன்பாடு உள்ளடங்கலான நல்வாழ்வு மீதானதாக இருந்தது.

கெயார் இலங்கையின் EMERGE கருத்திட்டத்தின் ஒரு முக்கிய திட்டமிடற் குறிக்கோள் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்திற்கு இட்டுச்செல்லும் மனப்பான்மைகள் மற்றும் நடத்தைகள் மாற்றத்தில் ஆண்களை ஈடுபடுத்துவதுடன், பொதுவாக, அதன் சகல வடிவங்களிலும் பல்வகைமைகளின் ஒரு மதிப்பேற்றமாக இருக்கின்றது. இந்த உருமாற்ற செயல்முறையில் ஆண்களின் தன்னம்பிக்கையைப் பாதுகாத்தல், தன்மதிப்பு மற்றும் நிறுவன உணர்வு ஆகிய முக்கிய காரணிகளாக இருக்கின்றன, அதேநேரத்தில் பெண்கள் மீதான உரிமை உணர்வு மற்றும் 'பலவீனமான' ஆண்கள் மீதான ஆதிக்கம் ஒரு மாறுநிலை விசாரணையை வேண்டுகின்றது. மைக்கேல் மெஸ்னெர் (1997 ஹொல்ம்கிரென் இல் மேற்கோள் காட்டப்பட்டது, எஜ்பேர்க் மற்றும் ஹெர்ணி, 2009, பக். 405) ஆண்களின் நிலைப்படுத்தல் மற்றும் ஆண்களினால் அங்கீகரிக்கப்பட்ட முக்கோணப்பட்ட பால்நிலை சமத்துவத்தைச் சுற்றிய ஒழுங்கமைப்புப் பற்றிய ஒரு மாதிரியை முன்னிலைப்படுத்தினார்: அ) சமுதாயத்தில் அவர்கள் அனுபவித்து மகிழும் நிறுவனரீதியான மற்றும் கட்டமைப்புச் சிறப்புரிமைகள்; ஆ) ஆண்மையின் விலை மதிப்பு; மற்றும் இ) ஆண்களிடையே அவர்களுக்கிடையேயான வேறுபாடுகள் மற்றும் சமமின்மைகள். இந்த முக்கோணத்தின் உச்சிகள் அங்கீகரிக்கப்படுவது இடம்பெற்றவுடன், அதனைப் படமாக்குவது அத்துடன் சுற்றி நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரிப்பது சாத்தியமாகவிருக்கும் என மெஸ்னெர் விவாதித்தார்: அ) பால்நிலை ஒப்புரவு நோக்கிய ஆண்களின் ஆதரவான வகிபாகங்கள்; ஆ) இணைந்த பெற்றோர்நிலை, உளவியல்சார் சேவைகள் மற்றும் நல்வாழ்விற்கான ஆண்களின் உரிமைகள் தொடர்பிலான கொள்கைத் தலையீடுகள்; மற்றும் இ) இனம், வகுப்பு, சாதி, அங்கவீனம் மற்றும் பாலியல் ஆற்றுப்படல் நிலை காரணமாக மாறுபடும் ஏனைய ஆண்கள் தொடர்பாக ஆண்களின் மரியாதை. மேற்படி எல்லாவற்றையும் ஒப்புறுதியளிப்பது ஆண்மை மற்றும் பெண்ணியம் மாறாதன அல்ல என்பதனை விளங்கிக் கொள்வதாக இருக்கின்றது, ஆனால் வரலாறு, சமுதாயம் மற்றும் பண்பாட்டினால் உருவகப்படுத்தப்பட்டு, அவை காலத்துடன் மாறுகின்றன. அந்த மாற்றத்தின் கருத்து: ஆண்கள் மற்றும் பெண்கள் உயிரியல்ரீதியாக அத்தியாவசியமாக்கப்பட முடியாது (அதாவது, சகல ஆண்களும் வன்முறையாளர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை); ஆதிக்கமான ஆண்மை ஏனைய ஆண்கள் அத்துடன் பெண்கள் தொடர்பாக அமைக்கப்படுகின்றது, அதனால் ஆண்மைக்குரியனவற்றிற்கு ஒரு 'அதிகாரப் படிநிலையை' உருவாக்குகின்றது; மற்றும் இந்த கூறுகள் எல்லாம் ஆண்மை பல்வகைமையானதாக இருப்பதுடன் படமாக்கப்பட வேண்டிய ஆண்மைக்குரியனவற்றின் வித்தியாசமான மாதிரிகள் இருப்பதுடன் சேணமிடப்பட்டு, அல்லது மாற்றப்பட, பொருத்தமான வகையில், வேண்டிய தகவலையே சுட்டி நிற்கின்றது.

ஆய்வின் ஆராய்ச்சி வினாக்கள் மற்றும் குறிக்கோள்கள், அத்துடன் கெயார் இலங்கையின் நிகழ்ச்சித்திட்டமிடல் நலன்கள், என்பவற்றைக் கைப்பற்றிக் கொள்ளும் பொருட்டு இந்த அறிக்கை தனிப்பட்ட, ஆனால் ஒன்றோடொன்று தொடர்புபட்ட அத்தியாயங்களை உருவாக்குமாறு ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அத்தியாயம் ஒன்று, 'ஏன் ஆண்மை?' எனத் தலைப்பிடப்பட்டது, ஆய்வினை சூழிசைவு சார்பாக்குகின்ற அதேவேளை அத்தியாயம் இரண்டு அதன் ஆய்வுமுறையை விபரிக்கின்றது. 'ஆண்மை மற்றும் பால்நிலைத் தொடர்புகள்: மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகள்', மீதான அத்தியாயம் மூன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்ட மாவட்டங்களிலிருந்தான தரவினைக் கோடிட்டுக் காட்டுவதுடன் பகுப்பாய்கின்றது. 'விசையை உருவாக்குதல்: பெண்கள் மற்றும் ஆண்களுக்கு எதிரான ஆண் வன்முறை' என்ற தலைப்பிடப்பட்ட, அத்தியாயம் நான்கு, ஒரு பல்வகைமை சூழமைவுகளில் ஆண்மைக்குரிய மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை மீது கவனத்தைக் குவிப்பதுடன், 'ஆண்மை, நல்வாழ்வு மற்றும் குடும்ப ஆரோக்கியம்' மீதான அத்தியாயம் ஐந்து, குடும்ப ஆரோக்கியம் மற்றும் ஆண்களின் சமுதாயப் படிநிலையைப் படமாக்கி சூழமைவு சார்பாக்குகின்றது. இறுதியாக, அத்தியாயம் ஆறு ஆய்வினது சட்டவியல், பொதுக் கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டமிடலின் விளைவுகளைக் கலந்துரையாடுகின்றது.

அத்தியாயம் 2

# ஆராய்ச்சி முறை

## 2.1 அறிமுகம்

பால்நிலை மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை தொடர்பான விடயங்கள் தொடர்பில் இலங்கையில் ஆண்கள் மற்றும் பெண்களின் அறிவு, மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகளைப் பரிசோதிப்பதற்கு அளவறி ஆராய்ச்சி அணுகுமுறை ஒன்றை இந்த ஆய்வு ஈடுபடுத்தியது. இது ஒரு பாரிய குடித்தொகை சார்ந்த வீடுகள் சார்ந்த (1658 ஆண் பங்குபற்றுனர்கள் மற்றும் ஒரு சிறியளவிலான 653 பெண் மாதிரிகளுடன்), மற்றும் சர்வதேச மற்றும் தேசிய ஆராய்ச்சி மற்றும் நெறிமுறைச் செந்தரங்களைக் கடைப்பிடித்து, மாவட்ட (கொத்தணி) ஒப்பீட்டுத்திறனை அனுமதித்த, ஆய்வாக இருந்தது. ஆய்வுக்குட்பட்ட கொழும்பு, அம்பாந்தோட்டை, மட்டங்களப்பு, மற்றும் நுவரெலியா- ஆகிய நான்கு மாவட்டங்களின் பிரதிநிதிகள் எழுமாற்று மாதிரி மூலோபாயத்தைப் பயன்படுத்தி ஆய்வு நடாத்தப்பட்டது. கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தை முதன்மைத் தரவு திரட்டற் கருவியாகப் பயன்படுத்தி 18-49 வருடங்கள் வயதடைந்த ஆண்கள் மற்றும் பெண்கள் மாதிரி ஒன்று கவனமாகக் களஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுத் தலைப்பின் உணர்நுட்பத்தன்மை காரணமாக, பதிலளிப்பாளர்களின் உயர்ந்தபட்ச இரகசியத்தன்மையை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை ஆராய்ச்சியின் பண்புத்தரத்தை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு புத்தமைவான முறைகள் (தனிநபர் எண்ணியல் உதவியாளர்கள் அல்லது PDA போன்றவற்றின் பயன்பாடுகள்) ஈடுபடுத்தப்பட்டன. கருத்திட்டத்தில் சர்வதேச மற்றும் பலமடங்கு உள்ளூர் பங்காளர்களைக் கூட ஆலோசகர்களாக கெயார் வரவழைத்திருந்தது.

மனப்பான்மைகள், நடைமுறைகள், மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை தொடர்பில் கொழும்பு, அம்பாந்தோட்டை, நுவரெலியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இலங்கை ஆய்வு ஒரு பன்னாட்டு - ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் பகுதியாகும் – P4P, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், ஐக்கிய நாடுகள் மக்கள்தொகை நிதியம், ஐக்கிய நாடுகள் பெண்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் தொண்டர்கள் ஆகியவற்றினால் ஒருங்கிணைக்கப்பட்ட வன்முறை மற்றும் ஆண்மைக்குரியன தொடர்பில் ஆசியா மற்றும் பசுபிக்கில் பால்நிலை சார்ந்த வன்முறையைத் தடுப்பதற்கான பிராந்திய இணை நிகழ்ச்சித்திட்டம் ஆண்கள் மற்றும் வன்முறை தொடர்பில் ஐக்கிய நாடுகள் பன்னாட்டு ஆய்வு – ஐக்கிய நாடுகளின் ஆண்கள் மற்றும் வன்செயல் முறைகள் தொடர்பான பன்னாட்டு ஆய்வு பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் ஆராய்ச்சி நடாத்துவதற்காக கடுமையான விஞ்ஞானரீதியான செந்தரங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. ஆண்கள் மற்றும் வன்முறை தொடர்பிலான ஐக்கிய நாடுகள் பன்னாட்டு ஆய்வு வேறு நாடுகளில் வன்முறை பற்றிக் குறைத்து அறிவிப்பதனைக் குறைப்பதில் பயனுறுதியாகவிருந்த மாதிரி வடிவமைப்பு, வினாக் கொத்துக்கள், நேர்காணுபவர் பயிற்சி மற்றும் களஆய்வு நிர்வாகம் என்பன தொடர்பாக சர்வதேச சிறந்த நடைமுறைகளைப் பிரயோகிக்கின்றது. இலங்கை ஆய்வு சர்வதேச நெறிமுறைகளிலிலிருந்து ஆராய்ச்சி முறையியல் மற்றும் ஒழுக்கமுறைகள் மற்றும் செந்தரங்களைப் பின்பற்றுகின்றது.

[1] ஆய்வின் கவனக்குவியம் பெண்களுக்கு எதிரான ஆண்களின் வன்முறைப் பயன்பாடு மற்றும் ஆண்மைக்குரியன தொடர்பானவை மீதிருந்தமையால் முடிவுகளை ஒப்பிட ஒரு சிறிய பெண் மாதிரி எடுக்கப்பட்டது. பெண்கள் மாதிரி வன்முறைப் பலியாளாக்குதல் பற்றிய நிலவுகை வீதங்களை அல்லது தேசிய தரவினை வழங்குவதற்கு இயல்பாக வடிவமைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 வடிவமைப்பு மற்றும் அமைப்பு

இந்த ஆய்வின் வடிவமைப்பிற்கு பல நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் பங்களித்திருத்தனர். கெயார் ஒருங்கிணைப்பு நிறுவனமாகவும் அத்துடன் இந்த ஆய்வின் பிரதான நிதி அனுசரணையாளராகவும் இருந்தது. பாங்கொக்கைத் தலைமையகமாகக் கொண்ட, P4P, சகல ஆய்வு உபகரணங்கள், தொழில்நுட்ப உதவி மற்றும் கருத்திட்டத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட நிதி உதவி ஆகியவற்றை வழங்கியது. வினாக் கொத்து இலங்கை ஆராய்ச்சிக் குழுவினால் சீராக்கப்பட்டதுடன் சமூக சுட்டிகளினால் மொழிபெயர்க்கப்பட்டது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் களஆய்வு ஆராய்ச்சி அலகு களத்தில் கள ஆய்வினை செயற்படுத்தியது.

## 2.3 ஆய்வின் குறிக்கோள்கள்

இந்த ஆய்வு P4P யினது பிராந்திய குறுக்குத்- தேசிய ஆய்விற்குப் பங்களிக்கும் அதேவேளை இலங்கையில் ஆண்மைக்குரியன மற்றும் பாலினம்- சார்ந்த வன்முறை பற்றிய கருப்பொருளில் புதிய அறிவினை இலக்காகக் கொண்டிருந்தது. இது அத்தியாயம் ஒன்றில் விபரிக்கப்பட்ட முக்கிய ஆராய்ச்சி வினாக்களுக்குக் கட்டுமான ஆதரவு அமைக்கின்றது. களஆய்வின் திட்டவட்டமான குறிக்கோள்கள் பின்வருமாறு:

- ஆண்களின் வெவ்வேறு வகையான பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றம்புரிவதன் (மற்றும் பெண்களின் அனுபவங்கள்), அத்துடன் வேறு ஆண்களுக்கு எதிரான ஆண்களின் வன்முறை, நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் பாலியல் வன்முறை மீது ஒரு குறிப்பான அழுத்தத்துடன், அவற்றின் நிலவுகை மற்றும் நிகழ்வெண் பற்றிய ஒரு செல்லுபடியான மதிப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு;
- சிறுவர்களாக வன்முறை உட்பட பல்வேறு வன்முறை வகைகளில் ஆண்களின் சொந்த அனுபவங்களைப் படமாக்கல்;
- எந்தக் காரணிகள் நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் பாலியல் வன்முறைக் குற்றம்புரிவதற்கு ஆண்களை இடரில் இடும் அல்லது காக்கும் என்பதனை அடையாளம் காண்பது மற்றும் ஆண்களின் பால்நிலை மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகளைப் படமாக்கல்;
- இலங்கையில் பால்நிலை சார்ந்த வன்முறையைத் தடுப்பதற்கு சான்று- சார்ந்த கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டமிடற் துலங்கல்களைக் கட்டியெழுப்புதல்;

## 2.4 நெறிமுறை தடைநீக்கல்

கருத்திட்ட முன்மொழிவு மற்றும் முற்றுமுழுதான ஆய்வு வடிவமைப்பு ஆராய்ச்சி மரபு ஒழுங்குமுறைகள் உட்பட, அத்துடன் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான வினாக் கொத்துக்கள், சகலமும் இலங்கை மருத்துவச் சங்கத்தின் நெறிமுறைகள் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அது ஆராய்ச்சி உபகரணங்கள் மற்றும் ஆராய்ச்சி முறைகளுக்கு அதன் அனுமதியை வழங்கியது. இலங்கை மருத்துவச் சங்க அனுமதிக்கான ஒரு முன்- தேவையாக P4P இன் மரபு ஒழுங்குமுறையின் கீழ் வினாக்கொத்தின் ஒரு முன்னோடி ஆய்வு செயற்படுத்தப்பட்டது.

## 2.5 வினாக்கொத்து வடிவமைப்பு

பல்வேறு கண்ணோட்டங்களில் இருந்து ஒரே கருப்பொருள்களை உள்ளடக்கி ஆண் மற்றும் பெண் வினாக்கொத்தொன்றினை ஆய்வு பயன்படுத்தியது. உதாரணமாக, ஆண்களிடம் அவர்களின் பால்நிலை சார்ந்த வன்முறைக் குற்றச்செயல் பற்றிக் கேட்டகப்பட்ட அதேவேளை, பெண்களிடம் அவர்களின் பல்வேறு வடிவிலான பால்நிலை சார்ந்த வன்முறை அனுபவங்களைப்பற்றி வினவப்பட்டது.

இந்த ஆய்வு ஆண்கள் மற்றும் வன்முறை தொடர்பான ஐக்கிய நாடுகள் பன்னாட்டு ஆய்வினது களஆய்வு உபகரணங்களைப் பயன்படுத்தியது, எவ்வாறாயினும், முதன்மை ஆய்வாளர்கள், சமூகக் குறிகாட்டி மற்றும் ஆராய்ச்சிக்குழு வினாக்கொத்துக்களை இலங்கைச் சூழமைவிற்குப் பொருந்துமாறு அமைத்திருந்தனர். முதல் அடிப்படை வினாக்கொத்துக்கள் உலகளாவிய புகழ்பெற்ற பால்நிலை ஆராய்ச்சி நிபுணர்கள் மற்றும் பல்வேறு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கருவிகளை, தென் ஆபிரிக்க மருத்துவ ஆராய்ச்சிப் பேரவையால் (MRC ) மேற்கொள்ளப்பட்ட, ஆண்கள், ஆண்மைக்குரியன, வன்முறை மற்றும் ஏச்.ஐ.வி. பற்றிய தென் ஆபிரிக்க ஆய்வு; இன்ஸ்ரிரியூடோ புறமன்டோ மற்றும் பெண்கள் தொடர்பான ஆராய்ச்சிக்கான சர்வதேச நிலையம் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்ட, சர்வதேச ஆண்கள் மற்றும் பாலின சமத்துவ ஆய்வு (IMAGES ); மற்றும் உலக சுகாதார தாபனம் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை மற்றும் பெண்களின் ஆரோக்கியம் தொடர்பான பன்னாட்டு ஆய்வு.

2 பூரணமான ஆங்கிலதமிழ் - மொழியிலான ஆண் மற்றும் பெண் வினாக் கொத்து இணைப்பு 1 மற்றும் இணைப்பு 2 இல் இந்த அறிக்கையின் pdf வடிவத்தில் காணப்படுகின்றது, ஆனால் இடக் கட்டுப்பாடு காரணமாக அச்சுப்பதிப்பு வடிவத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை

வினாக் கொத்துக்கள் ஆலோசனைகள் மற்றும் கலந்துரையாடல்களின் நீண்ட செயல்முறைகளின் உற்பத்தி, அது தற்போதுள்ள இலக்கியம் மற்றும் எண்ணிலடங்கா உபகரணங்களின் மீளாய்வு, மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் அத்துடன் தேசிய பங்காளர்களிடமிருந்தான உள்ளீடுகளின் உள்ளடக்கம் என்பவற்றை உட்படுத்தியது. அடிப்படைப் பிரதேச வினாக்கொத்து ஆங்கிலத்தில் ஒரு சௌகரியமான ஆண்கள் மற்றும் பெண்கள் மாதிரிகளைப் பயன்படுத்தி அறிதகு பண்புசார் நேர்முகத் தேர்வுகளைப் பயன்படுத்தி முன்பரிசோதிக்கப்பட்டது. மேலும், வினாக்கொத்துக்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பன்னாட்டு ஆய்வின், பங்களாதேஷ் மற்றும் சீனா போன்ற, வேறு இடங்களில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டிருந்தன.

P4P இன் பிராந்திய ஆய்வில் வேறு நாடுகளிலிருந்தான தரவுடன் ஒப்பிடப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு, இலங்கைக்குப் பிரத்தியேகமானவற்றைக் கைப்பற்றுவதற்காக அத்துடன் ஒழுக்கமுறை மற்றும் நடைமுறை இடர்களைத் தவிர்ப்பதற்கு சில மாறுதல்கள் செய்யப்பட்டிருந்த போதும், இலங்கை வினாக் கொத்திலுள்ள பெரும்பான்மையான வினாக்கள் ஒரேமாதிரியாக இருந்தன. உதாரணமாக, நாடு பூராகவும் அறிவிக்கப்பட்ட வன்முறை வீதங்களின் ஒப்பிடுதிறனை உறுதிப்படுத்தும் பொருட்டு வன்முறை வினாக்களின் சொற்கள் (குறித்த சில வினாக்களில் நேரடிப் பொருத்தமானவை தமிழ் மற்றும் சிங்களத்தில் இல்லாத சந்தர்ப்பங்கள் தவிர) ஒரேமாதிரியாக வைக்கப்பட்டிருந்தன. அளவிடைகள் - குழந்தைப்பராய மனவதிர்ச்சி அளவிடை, பால்நிலை ஒப்புரவான ஆண்கள் (GEM) அளவிடை, உளச்சோர்வு அளவிடை மற்றும் கழிவிரக்க அளவிடை போன்றன - கூட மாற்றமடையாதிருந்தன ஏனெனில் அவைகள் அவர்களின் மனோரீதியான குணாதிசயங்களுக்கு கவனமாக வடிவமைக்கப்பட்டு செல்லுபடியாக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், சில இலங்கைக்குப் பிரத்தியேகமான வினாக்கள் மற்றும் குறிமுறைப் பதிலளிப்புகள் சேர்க்கப்பட்டிருந்தன, உதாரணமாக, சுனாமி தொடர்பான, பெண்களின் தொழில் சார்பான மனப்பான்மைகள், மற்றும் பாலியல்ரீதியான பகிடிவதை.

## அட்டவணை 2.1

## வினாக்கொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட தலைப்புகள்

| ஆண்களுக்கான வினாக்கொத்து | பெண்களுக்கான வினாக்கொத்து |
| --- | --- |
| சமூக- குடித்தொகையியல் குணாதிசயங்கள் மற்றும் வேலை | சமூக- குடித்தொகையியல் குணாதிசயங்கள் மற்றும் வேலை |
| குழந்தைப்பராய அனுபவங்கள் | குழந்தைப்பராய அனுவங்கள் |
| ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையேயான தொடர்புகள் பற்றிய மனப்பான்மைகள் | ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையேயான தொடர்புகள் பற்றிய மனப்பான்மைகள் |
| நெருங்கிய உறவுகள் | இனவிருத்திச் சுகாதாரம் |
| நெருங்கிய துணை வன்முறை | பதில்மனுதாரர் மற்றும் அவளது துணைவர் |
| தந்தைப் பராயம் | நெருங்கிய உறவுகள் |
| ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு | நெருங்கிய துணைவர் வன்முறை |
| கொள்கைகள் | காயங்கள் மற்றும் உதவி நாடல் |
| பாலியல் மற்றும் வாழ்க்கை அனுபவங்கள் | பாலியல் அனுபவங்கள் |
| | துணைவரல்லாத அனுபவங்கள் |
| | ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு |
| | கொள்கைகள் |

ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரிடமிருந்து அவர்களின் அனுபவங்கள் தொடர்பில் வெளிப்படுத்துகையை உச்சப்படுத்தும் பொருட்டு மற்றும் நேர்காணலைத் தொடர்ந்து, குறிப்பாகப் பெண்கள் களஆய்வில், பிரதிவாதிகளின் எதிர்மறையான பின்விளைவுகளைத் தணிப்பதன் பொருட்டு இந்த ஒழுங்கில் வினாக்கொத்துக்கள் பிரத்தியேகமாக வடிவமைக்கப்படிருந்தன. தழுவப்பட்ட வினாக்கொத்துக்கள் சமூகக் குறிகாட்டிகளினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தன. மொழிபெயர்ப்பின் கவனக்குவியம் ஆய்வு இடங்களில் பரவலாக விளங்கிக்கொள்ளப்படும் சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் மீதிருந்தது. மொழிபெயர்ப்புக்கள் ஆராய்ச்சி உதவியாளர்களினால் அத்துடன் மொழிபெயர்ப்பின் சரிநிலை மற்றும் பிரயோகத்தன்மையைச் சரிபார்க்க நகர மற்றும் கிராமியப் பிரதேசங்களிலிருந்து மாறுபட்ட வயதுக் குழுக்களைப் பிரதிநிதிதுவப்படுத்தும் வெளியார் குழுக்களினால் சரிபார்க்கப்பட்டன. வினாக்கொத்துக்கள் களத்தில் முன்பரிசோதனை (அறிதல்சார், பண்புசார் முன்பரிசோதனை மற்றும் ஒரு சிறிய சௌகரியமான மாதிரியுடன் அளவுசார் களப் பரிசோதனை) செய்யப்பட்டன. ஆராய்ச்சிக் குழு முழுமையான முன்னோடி ஆய்வின் பின்னர் வினாக்கொத்துக்களுக்கு மேலும் சில இறுதியான திருத்தங்களைச் செய்தது.

### 2.5.1 வன்முறை, குழந்தைப்பராய மனவதிர்ச்சி, மற்றும் பால்நிலை மனப்பான்மைகளின் அளவீடு

வன்முறையின் ஆண்களின் பயன்பாடும் பெண்களின் அனுபவமும் உலக சுகாதார தாபனத்தின் பன்னாட்டு ஆய்வு வினாக்கொத்து மற்றும் தென் ஆபிரிக்க மருத்துவ ஆராய்ச்சிப் பேரவையின் ஆண்கள், ஆண்மைக்குரியன, வன்முறை மற்றும் ஏச்.ஐ.வி. என்பன பற்றிய ஆய்வு கீழே (அட்டவணை 2.2) அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு ஒரு தொடரான நடத்தைசார் தனி வினாக்களைப் பயன்படுத்தி அளவிடப்பட்டன. பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான தரவுத் திரட்டும் சர்வதேச அனுபவங்கள் நடத்தைசார் குறிப்பான வினாக்கள் (வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் போன்ற சொற்களைப் பயன்படுத்துவதை விட), மற்றும் பிரதிவாதிகளுக்கு அவ்வாறான நடத்தையை வெளிப்படுத்துவதற்குப் பன்மடங்கு சந்தர்ப்பங்களை வழங்குதல் மிகவுந் துல்லியமான பெறுபேறுகளை ஈட்டியதாக காட்டுகின்றன. ஒவ்வொரு செயலுக்கும் உடன்பாடாக பதிலளித்த பிரதிவாதிகளிடம் அவை நிகழ்ந்திருந்த தடவைகள் பற்றியும் கேட்கப்பட்டன. ஒவ்வொரு தொடர்கள் வினாக்கள் முடிவில் - மனவெழுச்சி, பொருளாதார, உடல்சார் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பில் - நடைமுறை நிலவுகை வீதங்கள் தொடர்பான தகவலைத் திரட்ட, எதாவது செயல்கள் கடந்த 12 மாதங்களினுள் நிகழ்ந்ததா எனப் பிரதிவாதிகளிடம் கேட்கப்பட்டன.

குழந்தைப்பராய மனவதிர்ச்சி அளவிடை, அது ஒரு சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அளவிடை, ஒரு தொடரான 15 வினாக்களை உள்ளடக்குகின்றது (இலங்கை பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக மூன்று வினாக்களைச் சேர்த்தது) அது நான்கு பரந்த செயற்பரப்பினுள் அடங்குகின்றன: உடல்சார் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, மனவெழுச்சித் துஷ்பிரயோகம் மற்றும் உடல்சார் இன்னல். சகல பிரதிவாதிகளும் பின்வரும் கூற்றுக்கள் பின்வரும் நிகழ்வெண்களில் அவர்கள் 18 வருடங்கள் வயதாக முன்னர் அவர்களுக்கு நடந்ததா என கேட்கப்பட்டனர் - ஒருபோதுமில்லை, சிலவேளைகளில், பலதடவை அல்லது மிகப் பலதடவை. இந்தப் பதிலளிப்புகளை அடிப்படையாக் கொண்டு குறைந்த குழந்தைப்பராய மனவதிர்ச்சி (18) இலிருந்து உயர்ந்த (72) வரை வீச்சமுள்ள ஒரு எண் அளவிடை தயாரிக்கப்பட்டது.

இந்த ஆய்வு பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பால்நிலை சார்ந்த ஆண்களின் மனப்பான்மைகளை அளவிடுவதற்கு இரண்டு வெவ்வேறு மூலங்களிலிருந்து இரண்டு உருப்படிகளை இழுக்கின்றது. ஒன்று மக்கள்தொகைப் பேரவை மற்றும் இன்ரிரியூடோ புறமன்டோ ஆகியவற்றினால் உருவாக்கப்பட்ட பால்நிலை ஒப்புரவான ஆண்கள் (GEM ) அளவிடையாக இருந்ததுடன் இந்தியா, பிரேசில், மற்றும் வேறு 15 நாடுகளில் இன்றுவரை பயன்படுத்தப்பட்டது. இந்த மனப்பான்மைசார் வினாக்கள் பல்வேறு அமைப்புகளில் பயன்படுத்தப்பட்டது உள்ளக நம்பகத்தன்மையில் உயர்ந்த வீதங்களில் ஒத்திருக்கக் காணப்பட்டிருந்தது (புல்லேட்விற்ஸ் மற்றும் பேக்கர், 2008). மற்றைய முக்கிய மூலம் தென் ஆபிரிக்க மருத்துவ ஆராய்ச்சி பேரவையினால் நடாத்தப்பட்ட ஆண்கள், ஆண்மைக்குரியன, வன்முறை மற்றும் ஏச்.ஐ.வி. பற்றிய தென் ஆபிரிக்க ஆய்வாக இருந்தது (ஜுவ்கெஸ், 2009 பாக்கரில் மேற்கோள்காட்டப்பட்டது, 2011). பங்குபற்றுனர்களை ஆராய்வதற்கு பால்நிலை வகிபாகம் பற்றி ஒரு தொடர் கூற்றுக்கள் வாசிக்கப்பட்டு அவர்கள் அக்கூற்றுக்களுடன் ஆணித்தரமாக இணங்குகின்றார்களா, இணங்குகின்றார்களா, இணங்கவில்லையா, ஆணித்தரமாக இணங்கவில்லையா என வினவப்பட்டனர். பகுப்பாய்வு நோக்கங்களுக்காக சகல பதிலளிப்புக்களும் கூற்றுக்களுடன் இணங்குதல் அல்லது ஆணித்தரமாக இணங்குதல் பால்நிலை ஒப்புரவற்ற மனப்பான்மைகளை உணர்த்துமாறான ஒரு வழியில் குறிமுறைப்படுத்தப்பட்டன. இந்த வினாக்கள் இந்த அறிக்கையின் மூன்றாம் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டிருக்கின்றன.

## அட்டவணை 2.2

## வன்முறையின் அளவீடுகள்

### மனவெழுச்சித் துஷ்பிரயோகம்

ஒரு துணைவியை அவமதித்தல் அல்லது வேண்டுமென்றே அவளை அவளைப்பற்றித் தரக்குறைவாக உணரத் தூண்டுதல்

ஏனையவர்கள் முன்னிலையில் ஒரு துணைவியை சிறுமைப்படுத்தல் அல்லது மதிப்புக் குறைத்தல்

அச்சுறுத்த அல்லது ஒரு துணைவியை ஒரு நோக்கத்துடன் மிரட்டித் தன்வழிப்படுத்த ஏதாவது செய்தல், உதாரணமாக, அவளைப் பார்க்கும் முறையினால், பொருட்களை உடைத:துச சத்தமிடுவதினால்

ஒரு துணைவிக்குத் தீங்குவிளைவிப்பதாக அச்சுறுத்துதல்

உங்கள துணைவர் நேசிக்கும் ஆட்களை அவளைக காயப்படுத்தும் நோக்கில் காயப்படுத்தல், அல்லது அவளுக்கு முக்கியமான பொருட்களை சேதப்படுத்தல்

### பொருளாதார துஷ்பிரயோகம்

துணையொருவரை வேலையொன்றைத் தேடிக்கொள்வதிலிருந்து, வேலைக்குச் செல்வதிலிருந்து, வியாபாரம் செய்வதிலிருந்து அல்லது பணம் சம்பாதித்தலிருந்து தடுத்தல்.

ஒரு துணைவியின் உழைப்பினை அவளது விருப்பத்திற்கு மாறாக எடுத்திருத்தல்

துணைவி ஒருவரை வீட்டை விட்டுத் துரத்துதல்

உங்களது துணைவி வீட்டுச் செலவினங்களுக்குக் கஷ்டப்படும் போது, உங்கள் உழைப்பிலிருந்து பணத்தினை மது, புகையிலை, அல்லது வேறு விடயங்களுக்காக உமக்கென்றே வைத்திருத்தமை

### உடல்சார் வன்முறை

துணைவர் ஒருவரை அறைந்திருத்தல் அல்லது அவர் மீது காயப்படுத்தக்கூடிய யாதாயினும் ஒன்றை வீசி எறிந்திருத்தல்

துணைவி ஒருவரை தாக்கியிருத்தல் அல்லது தள்ளிவிட்டிருத்தல்

கைமுட்டியால் அல்லது அவளைக் காயப்படுத்தக் கூடிய யாதாயினும் ஒன்றினால் துணைவி ஒருவரை அடித்தல்

துணைவி ஒருவரை உதைத்தல், இழுத்தல், அடித்தல், கழுத்தை நெரித்தல் அல்லது சுடுதல்

### துணைவரல்லாத பெண்ணின் கற்பழிப்பு

உங்களது மனைவி அல்லது காதலியல்லாத ஒரு பெண்ணை உங்களுடன் பாலுறவு வைத்துக் கொள்ளுமாறு பலவந்தப்படுத்துதல்

ஒரு பெண் அல்லது சிறுமியுடன் அவள் மிகவும் குடித்திருக்கும் அல்லது போதைக்குட்பட்டிருக்கும் போது அது அவளுக்குத் தேவையா அல்லது வேண்டாமா எனக் கூற முடியாதிருக்கும் நிலையில் பாலுறவு கொள்ளுதல்

### பெண்ணொருவரைக் குழுவாகக் கற்பழித்தல

நீங்களும் வேறு ஆண்களும் ஒரு பெண்ணுடன் ஒரே நேரத்தில் அவள் சம்மதிக்காதிருக்கும் போது அல்லது நீங்கள் அவளைப் பலவந்தப்படுத்தி பாலுறவு கொள்ளுதல்

நீங்களும் வேறு ஆண்களும் ஒரு பெண்ணுடன் ஒரே நேரத்தில் அவள் உங்களைத் தடுப்பதற்கு முடியாதளவு மிகவும் குடித்து அல்லது போதைக்குட்பட்டு இருந்தபோது பாலுறவு கொண்டிருத்தல்

### ஆண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை

ஒரு சிறுவன் அல்லது ஆணுடன் அவர் சம்மதிக்காத போது அல்லது அவரை வற்புறுத்தி பாலியல் சம்பந்தமாக யாதாயினும் செய்திருத்தல்

ஒரு சிறுவன் அல்லது ஆணுடன் அவர் சம்மதிக்காத போது அல்லது பலவந்தப்படுத்தி பாலியல் சம்பந்தமாக யாதாயினும் செய்தல் அல்லது உங்களது ஆணுறுப்பை அவரின் வாயில் அல்லது மலவாயில் வைத்தல் (கற்பழிப்பு)

### ஆண் ஒருவரைக் குழுவாகக் கற்பழித்தல

நீங்கள் மற்றும் வேறு ஆண்கள் ஒரு ஆணுடன் அவர் சம்மதிக்காத போது அல்லது நீங்கள் அவரைப் பலவந்தப்படுத்தி பாலுறவு வைத்துக் கொள்ளுதல்

### பாலியல் வன்முறை

அவள் விரும்பாத போது துணைவியைப் பாலுறவு வைத்துக்கொள்ளப் பலவந்தப்படுத்தியிருதல்

அவள் விரும்பாத போது துணைவியை ஆபாசப் படங்களைப் பார்க்குமாறு பலவந்தப்படுத்தியிருத்தல

அவள் விரும்பாத போது துணைவியை பாலியல் சம்பந்தமான யாதாயினும் ஒன்றைச் செய்யுமாறு பலவந்தப்படுத்தியிருத்தல்.

அவள் விரும்பாத போது அவள் உங்களது மனைவி துணைவியாக இருப்பதால் அவள் அதற்கு இணங்க வேண்டுமென நீங்கள் நம்பியதால் பாலுறவு வைத்துக் கொண்டமை

## 2.6 கூறெடுத்தல்

களஆய்வு தெரிவுசெய்யப்பட்ட நான்கு மாவட்டங்களில் நடாத்தப்பட்டது – கொழும்பு, அம்பாந்தோட்டை, நுவரெலியா, மற்றும் மட்டக்களப்பு. இந்த மாவட்டங்களிலேயே கெயார் தொடரும் கருத்திட்டங்களைக் கொண்டிருக்கின்றது. கொழும்பு மாவட்டத்தில் களஆய்வு நகர சுற்றுவட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை மீதி மூன்று மாவட்டங்களிலும் களஆய்வு கிராமிய சுற்றுவட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்டது. P4P இன் ஆராய்ச்சி கட்டளை விதி வடிவமைப்பினைக் கருத்திலெடுக்கும் போது – ஒரு நகரக் கொத்தணியும் ஒரு கிராமக் கொத்தணியும் - அத்துடன் கெயார் நிகழ்ச்சித்திட்டமிடல் அக்கறைகள், காரணமாக களஆய்வு நான்கு மாவட்டக் கொத்தணிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்டக் கொத்தணியினுள்ளும், கூறெடுத்தல் கிராமத்ததைத் தெரிவுசெய்வதற்கு ஒரு பல- கட்ட அடுக்கடுக்காக அமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரியை (Random Sampling Methodology) நாம் பயன்படுத்தினோம். ஒவ்வொரு தெரிவுசெய்யப்பட்ட மாவட்டத்தினுள்ளும், தேர்தற் தொகுதிகளின் எண்ணிக்கை எழுமாற்றாகத் தெரிவுசெய்யப்பட்டதுடன் தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு தேர்தற் தொகுதியிலுமிருந்து களஆய்வினைச் செயற்படுத்துவதற்கு வேண்டிய எண்ணிக்கையான வாக்குச் சாவடிகள் தெரிவுசெய்யப்பட்டன. வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்தி, பிரதிவாதிகளுக்கான 15 குடும்பங்களைத் தெரிவுசெய்வதற்கு கள ஆராச்சியாளர்கள் அவர்களது எழுமாற்றான நடையை ஆரம்பிப்பதற்காக இரண்டு தொடக்கப் புள்ளிகளாக, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் இரண்டு குடும்பங்கள் எழுமாற்றாகத் தெரிவுசெய்யப்பட்டன. இந்த விதத்தில், எழுமாற்றாகத் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு தனித்தனி இடங்களிலிருந்து தொடங்கி, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் 30 வீடுகள் அணுகப்பட்டன (பெரும்பாலும் ஒரு கிராமத்துடன் ஒன்றிப் பொருந்துமாறு). தெரிவுசெய்யப்பட்ட குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தகுதியான உறுப்பினர்கள் இருந்தால், கிட்டிய பிறந்நாள் முறை – மிக அண்மையில் தனது பிறந்த நாளைக் கொண்டாடிய நபர் தெரிவுசெய்யப்படல் - கள ஆய்விற்கான பிரதிவாதி தெரிவு செய்யப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

வினாக்களின் உணர்நுட்பத்தன்மை காரணமாக, ஆண் மற்றும் பெண் நேர்காணல்கள் வெவ்வேறு வாக்குச் சாவடிகளில் நடாத்தப்பட்டன. ஒரு தேர்தற் தொகுதியினுள், வாக்குச் சாவடிகளின் மொத்த எண்ணிக்கை ஆண் மற்றும் பெண் நேர்காணல்களுக்கு இடையே 2:1 என்ற விகிதத்தில் தெரிவு செய்யப்பட்டன. ஆகவே, ஒரு தேர்தற் தொகுதியினுள், ஆண் நேர்காணல்கள் எட்டு வாக்குச் சாவாடிகளிலும் பெண் நேர்காணல்கள் நான்கு வெவ்வேறு வாக்குச் சாவடிகளிலும் நடாத்தப்பட்டன.

பின்வரும் அட்டவணை தனிப்பட்ட மட்டத்தில் பால்நிலை சார்ந்த மற்றும் இடம் சார்ந்த பதிலளிப்புகளைக் காட்டுகின்றன. பெண்களின் பதிலளிப்பு வீதம் ஆண்களினதைவிட உயர்வாக இருந்தது, அது ஆண்களை வீட்டில் சந்திப்பதும் அவர்கள் நேர்காணலுக்குக் கிடைக்கக்கூடியதாயிருப்பதும் கணிசமான அளவு கடினமாக இருந்ததனாலாகும். ஆய்வு நடாத்தப்பட்ட ஏனைய நாடுகளிலும் இது ஒரு பொதுவான விடயமாக இருந்திருக்கின்றது (icddr,b, 2011). அதிக கிராமப்புறங்களுடன் ஒப்பிடும் போது பதிலளிப்பு வீதம் கொழும்பில் மிகவும் குறைவாக இருந்தது, அது கூட குடித்தொகைசார் களஆய்வுகளில் ஒரு பொதுவான கோலமாகும் - நகர மற்றும் உயர் சமூக- பொருளாதாரப் பிரதேசங்களில் இருந்தான பதிலளிப்பாளர்கள் நேர்காண உடன்படுவதற்கு அல்லது நேர்காண்போர்களை அவர்களின் வீடுகளுக்கு அனுமதிப்பதில், சிலவேளைகளில் பகுதியளவில் பாதுகாப்பு அக்கறை காரணமாக, அதிகம் விருப்பமற்ற போக்கினைக் கொண்டிருந்தனர் (உலக சுகாதாரத் தாபனம், 2005).

### அட்டவணை 2.3

**மாதிரிப் பரம்பல் மற்றும் பதிலளிப்பு வீதம்**

| | தகுதியான பதில்மனுதாரருடனான வீடுகளின் மொத்த எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட நேர்காணல்களின் மொத்த எண்ணிக்கை | தனிப்பட்ட பதிலளிப்புகளின் வீதம் நூற்றுவீதம் |
|---|---|---|---|
| பெண் | 871 | 644 | 74 |
| ஆண் | 2656 | 1560 | 59 |
| கொழும்பு | 892 | 419 | 47 |
| அம்பாந்தோட்டை | 754 | 568 | 75 |
| மட்டக்களப்பு | 995 | 566 | 57 |
| நுவரெலியா | 886 | 651 | 73 |
| **மொத்தம்** | 2204 | 1323 | 63 |

இந்த மாதிரி வடிவமைப்பின் கீழ், களஆய்வின் முடிவுகள் அதன் மாதிரிக் குடித்தொகைக்குப பொதுமைப்படுத்தப்பட முடியும்: நான்கு ஆய்வு மாவட்டங்களில் வாழ்கின்ற 18 மற்றும் 49 வருடங்கள் வயதுகளுக்கு இடைப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள். பால்நிலை, ஆண்மை மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை தொடர்பான விடயங்களில் ஆண்கள் மற்றும் பெண்களின் அறிவு, மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய பெறுமதியான நுண்அறிவுகளைக் களஆய்வு வழங்கின்ற போதும் கூட, இந்தக் குறிப்பான முடிவுகள் மொத்த இலங்கைக் குடித்தொகைக்கும் பொதுமைப்படுத்த முடியாது. ஆண் களஆய்வின் முடிவுகள் 3 வீத வழுவிற்கு உட்பட்டிருப்பதுடன் பெண் முடிவுகள் 6 வீத வழுவிற்கு உட்பட்டிருக்கின்றன.

## அட்டவணை 2.4

## மக்கட்தொகையியற் தகவல்

| வயது | ஆண் சதவீதம் | பெண் சதவீதம் |
|---|---|---|
| 18–19 | 13.2 | 7.5 |
| 20–24 | 21.7 | 17.2 |
| 25–29 | 16.8 | 18.4 |
| 30–34 | 16.1 | 17.8 |
| 35–39 | 12.1 | 15.0 |
| 40–44 | 9.8 | 11.8 |
| 45–49 | 10.3 | 12.4 |

| கல்வி | ஆண் சதவீதம் | பெண் சதவீதம் |
|---|---|---|
| எதுவுமில்லை | 1.2 | 5.4 |
| ஆரம்பம் | 8.2 | 9.7 |
| சில இரண்டாம் நிலை | 49.8 | 53.7 |
| இரண்டாம் நிலை பூர்த்தி | 30.1 | 24.7 |
| மூன்றாம் நிலை | 10.7 | 6.6 |

| குழந்தைகளின் எண்ணிக்கை | ஆண் சதவீதம் | பெண் சதவீதம் |
|---|---|---|
| குழந்தைகள் இல்லை | 24.0 | 39.5 |
| 1 | 23.9 | 15.3 |
| 2 இலிருந்து 3 | 45.9 | 31.9 |
| 4 அல்லது மேல் | 6.2 | 13.3 |

| தொழில் | ஆண் சதவீதம் | பெண் சதவீதம் |
|---|---|---|
| வாழ்க்கைத் தொழிலாளர்: வைத்தியர், தாதி, ஆசிரியர் | 4.8 | 6.8 |
| உடலுழைப்பற்ற தொழிலாளர்: செயலாளர், அலுவலகப் பணியாளர் | 7.3 | 2.3 |
| உடலுழைப்புத் தொழிலாளர்: தொழிற்சாலைத் தொழில், மேசைப் பணியாள் | 19.6 | 11.1 |
| வாணிபம் வியாபாரம் | 13.6 | 5.8 |
| உடலுழைப்பு தொழிலாளி | 9.7 | 7.0 |
| விவசாயி மீன்பிடி | 14.8 | 0.7 |
| பாதுகாப்பு: காவல்துறை, இராணுவம், முதலின | 2.4 | 0.3 |
| சாரதி வாடகை வண்டி | 6.3 | 0.0 |
| பாலியல் தொழிலாளர் | 0.0 | 0.2 |
| ஒருபோதும் தொழில் செய்யாதவர் மாணவர் | 21.5 | 65.7 |

| தற்போதைய உறவு நிலை | ஆண் சதவீதம் | பெண் சதவீதம் |
|---|---|---|
| தற்போது திருமணமானவர் | 52.7 | 76.4 |
| துணைவருடன் வாழ்பவர், திருமணமாகவில்லை | 0.4 | 0.6 |
| துணைவருடன், சேர்ந்து வாழ்வதில்லை | 10.0 | 4.7 |
| திருமணமாகவில்லை உறவுகள் எதுவுமில்லை | 37.0 | 18.2 |

## 2.7 வெளிக்கள ஆராய்ச்சி

இந்த ஆய்வு தரவுகளின் தரம், நம்பகத்தன்மை மற்றும் பதிலளிப்பாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு விசேட வெளிக்கள ஆராய்ச்சித் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியிருந்தது. P4P உடன், சிறிய கையடக்க கணினிகள், அல்லது தனிநபர் கணினி உதவியாளர்கள் (PDAs), களஆய்வில் தரவு திரட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. PDA களின் பயன்பாடு பன்மடங்கு அனுகூலங்களை வழங்கியதுடன், அதே நேரம், ஆய்விற்கு மேலதிக சவால்களையும் கொடுத்தது. அவர்களுடைய பதில்களை எவருடனும் பகிர்ந்து கொள்ளாது, வெளிக்கள ஆராய்ச்சியாளர்கள் உட்பட, வினாக்களுக்கு அவர்களாகவே பதிலளிக்க வேண்டியிருந்தமையால் PDA கள் பதிலளிப்பாளர்களின் இரகசியத்தன்மையை, உறுதிப்படுத்தியிருந்தன. ஆகவே, வெளிக்கள ஆராய்ச்சியாளர்கள் ஒவ்வொரு பதிலளிப்பாளர்களையும் தெரிவுசெய்து சந்தித்திருந்த போதும்கூட, நேர்காணல்கள் பெரிதும் சுயமாக- நிர்வகிக்கப்பட்ட விதத்தில் நடாத்தப்பட்டன. சுய- நிர்வாகம் முகம்- முகம் பார்த்த நேர்காணலைப் பாதிக்கக்கூடிய நேர்காண்பவர் கழைப்பு மற்றும் நேர்காண்பவர் கோடல் ஆகிய பிரச்சினைகளை நீக்கியது. சுய- நிர்வாகம், குறிப்பாக ஆண் களஆய்வின் எட்டாம் பிரிவில், ஆண் பிரதிவாதிகள் தனிமையில் உணர்நுட்பமான வினாக்களுக்குக் கூடப் பதிலளிப்பதனை இயலச்செய்தது. குறைந்த எழுத்தறிவுள்ள பிரதிவாதிகளின் நன்மைகருதி, PDA கள் ஒரு ஒலித் தெரிவினையும் வழங்கியது அதற்கிணங்க அதில் பிரதிவாதிகள் வினாக்கள் மற்றும் பதில் தெரிவுகளை செவிமடுக்கமுடியும். மேலும், PDA இனால் இயலச்செய்யப்பட்டிருக்கும் தனிமை பிரதிவாதிகளுக்கு வீட்டிலுள்ள ஏனையவர்களிடமிருந்தான உள்ளீடோ அல்லது தலையீடோ இல்லாமல் வினாக்கொத்திற்கு விடையளிக்க உதவியது, அது வேறுவழியில் குறிப்பாக இலங்கையின் கிராமிய அமைப்புகளில் சவாலானதொன்றாக இருந்திருக்கும். PDA களிலிருந்தான தரவு நேரடியாக சேவை வழங்கியொன்றிற்கு பதிவேற்றப்படுவதனால், தரவு உட்புகுத்துவதற்கான தேவை அங்கு இருக்கவில்லை மற்றும் பிரதிவாதிகளுக்கோ அல்லது நேர்காண்பவர்களுக்கு சிக்கலான தாவற் கோலங்களை கற்றுக்கொள்ள வேண்டிய தேவையும் இருக்கவில்லை, ஏனெனில் அவைகள் PDA யினுள் தன்னியக்கமாக நிகழ்ச்சிநிரலிடப்பட்டிருந்தன. இந்த இரு காரணிகளும் தரவு வழுக்களைச் சாத்தியமானளவு குறைத்திருந்தன. முகத்துக்கு முகம் பார்த்த நேர்காணல்கள் போலல்லாது, இதில் ஒரு நேர்காணலை பூர்த்தி செய்ய மேலதிக நேரம் எடுத்தது ஏனெனில் நேர்காணலின் வேகம் PDA மீதுள்ள வினாக்களை வாசித்து விடையளிக்கும் பிரதிவாதியின் திறனில் தங்கியிருந்தது.

சமூக குறிகாட்டி நிறுவனம் களஆய்வின் வெளிக்கள ஆராய்ச்சியை ஒருங்கிணைத்தது. நான்கு மாவட்டங்களுக்குக் குறுக்காகவும் வெளிக்களப் பணிகளை மேற்கொள்வதற்கு சகல இனக் குழுக்களிலிருந்தும் (சிங்களம், தமிழ் மற்றும் இஸ்லாமிய) மொத்தமாக 70 வெளிக்கள ஆராய்ச்சியாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர். வெளிக்களக் குழு 51 ஆண்கள் மற்றும் 19 பெண்களைக் கொண்டிருந்தது. அநேகமாக அவர்கள் எல்லோரும் அவர்களது குறைந்தபட்ச கல்வித் தகமையாக பல்கலைக்கழக இளமாணிப் பட்டங்களைக் கொண்டிருந்ததுடன் அவர்களில் அநேகர் சமூகக் குறிகாட்டி நிறுவனத்துடன் வெளிக்கள ஆராய்ச்சியாளர்களாகப் பல வருடங்களாக பணியாற்றிக் கொண்டிருகின்றனர். வெளிக்கள ஆராய்ச்சியாளர்களுக்கு P4P, கெயார் மற்றும் முதன்மை ஆராய்ச்சியாளர்களுடன் சமூகக் குறிகாட்டி நிறுவனத்தினால் ஒரு ஏழு- நாள் பயிற்சிக் கருத்தரங்கொன்று கொழும்பில் நடாத்தப்பட்டது. இந்தப் பயிற்சி பிரதானமாக நான்கு செயற்பரப்புக்கள் மீது கவனக்குவியத்தைச் செலுத்தியிருந்தது: I) பால்நிலை மற்றும் ஆண்மை பற்றிய எண்ணக்கருக்கள், ii) வினாக்கொத்துக்கள், iii) PDA க்களைக் கையாளுதல் மற்றும் iv) வெளிக்களத் தொழில்நுணுக்கங்கள் மற்றும் ஆராய்ச்சி ஒழுக்கமுறைகள். உள்ளகப் பயிற்சிகளுக்கு மேலதிகமாக, வெளிக்கள ஆராய்ச்சியாளர்களுக்கு ஆய்வுக்களப் பயிற்சியும் வழங்கப்பட்டது. P4P இலிருந்து இரண்டு ஆராய்ச்சியாளர்கள் நிபுணத்துவப் பயிற்றுவிப்பாளர்களாக பங்கேற்றதுடன் உள்ளகப் பயிற்சிகளைத் தொடர்ந்து நடாத்தப்பட்ட முன்னோடி நேர்காணல்களின் போதும் வெளிக்கள ஆராய்ச்சியாளர்களுடன் உடனிருந்தனர். முன்னோடியின் அடிப்படையில், வெளிக்கள ஆராய்ச்சியினது தரத்தினை மெருகேற்றும் பொருட்டு P4P யும் கெயார் உம் வினாக்கொத்தினை மேலும் செப்பஞ்செய்வதற்குத் தீர்மானித்தன. வெளிக்களப் பணி தொடர்ந்துகொண்டிருந்த அதேவேளை சமூக குறிகாட்டி வெளிக்களக் குழுக்களுடன் ஒழுங்கான விளக்க அமர்வுகளை நடாத்தியது.

ஒவ்வொரு பிரதிவாதியும் அவர்களுடைய நேர்காண்பவருடன் சகஜமாக உரையடுவதற்கு உதவும் பொருட்டு அவன்/ அவளின் குறித்த இன சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு வெளிக்கள ஆராய்ச்சியாளரினால் நேர்காணப்பட்டனர். ஒவ்வொரு வெளிக்கள குழுவையும் முகாமை மற்றும் மேற்பார்வை செய்வதற்கு மொத்தமாக 12 வெளிக்கள மேற்பார்வையாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டனர். ஒரு பிரதிவாதியை தொடர்புகொள்ள முடியவில்லை எனப் பதிவதற்கு முன்னர் வெளிக்கள ஆராய்ச்சியாளர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு பிரதிவாதியைக் கண்டுபிடிக்கும் முயற்சியாக குறைந்தபட்சம் மூன்றுதரம் வருகைதந்தனர். நேர்முகவிசாரணைகள் சாராசரியாக இரண்டு மணித்தியாலங்கள் எடுத்தமையால் ஒவ்வொரு வெளிக்கள ஆராய்ச்சியாளரும் நாளொன்றிற்கு இரண்டு அல்லது மூன்று நேர்முகவிசாரணைகளையே நடாத்தக் கூடியதாகவிருந்தது. ஒரு மாதிரி பிரதேசத்தில் வெளிக்கள ஆராய்ச்சி பூர்த்தியாக்கப்பட்டவுடன், வெளிக்கள மேற்பார்வையாளர்கள் ஒவ்வொரு PDA களின் தரவினையும் கம்பியில்லா இணையத்தைப் பயன்படுத்தி P4P யின் தரவுத்தளத்திற்குப் பதிவேற்றம் செய்தனர்.

## 2.8 ஒழுக்கமுறைகள் மற்றும் பாதுகாப்புச் செந்தரங்கள்

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அல்லது ஆண் மீதான ஆண் வன்முறை தொடர்பில் ஆராய்ச்சி நடாத்துகின்ற போது கருத்தில் கொள்ள வேண்டிய பல ஒழுக்கமுறைகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டி இருக்கின்றன. உலக சுகாதார நிறுவனம் பாதுகாப்பு மற்றும் இரகசியத்தன்மை பற்றிய முதன்மை முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடுகின்றது; பங்கேற்பாளருக்கு மேலும் தீங்கேற்படுவதற்கு ஆராய்ச்சி காரணமாக இல்லாதிருப்பதனை உறுதிப்படுத்த வேண்டும் (பங்கேற்பாளருக்கு மேலும் மனவதிர்ச்சியைத் தோற்றுவிக்காமை உள்ளடங்கலாக); அந்தப் பங்கேற்பாளர் கிடைக்கக்கூடிய உதவி மூலங்கள் பற்றி அறிவிக்கப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவம்; மற்றும் நேர்காண்பவர்கள் நேர்காணப்படுபவரின் தீர்மானங்கள் மற்றும் தெரிவுகளை மதிப்பதன் தேவை என்பன.

### 2.8.1 தனிப்பட்ட சம்மதம்

சகல நேர்காணல்களின் தொடக்கத்தில், பங்கேற்பாளர்கள் ஆய்வின் நோக்கம் மற்றும் தன்மை பற்றி அறிவிக்கப்பட்டிருக்க வேண்டியதுடன், பங்கேற்பாளரின் தகவற் படிவம் ஊடாக இரகசியத்தன்மை பற்றி உறுதிப்படுத்தப்படல் வேண்டும். வினாக்களின் உணர்நுட்பத்தன்மை இருந்தபோதும், நேர்காணலை நடாத்துவதற்கு பங்கேற்பாளர்களின் வாய்மொழிமூல சம்மதத்தை வெளிக்கள ஆய்வாளர்கள் பெற்றுக்கொண்டு அதன் பின்னர் சம்மத முறைவழிகள் நிர்வகிக்கப்பட்டு, மற்றும் நேர்காணலை நடாத்துவதற்கான அனுமதிக்கு ஒப்புதலளிக்கப்பட்டதா என அவதானிக்கப்பட்டது.

சம்மத முறைவழியின் ஒரு பகுதியாக, பங்கேற்பாளருக்கு திரட்டப்படும் தகவல் கண்டிப்பாக இரகசியமாக வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. பங்கேற்பாளர்கள் களஆய்வு மிகவுயர் தனிப்பட்ட மற்றும் உணர்நுட்பமான உரையாடுவதற்குச் சிரமமான தலைப்புக்கள் தொடர்பான வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதென முன்னெச்சரிக்கை செய்யப்பட்டனர். பிரதிவாதிகள் நேர்காணலை எந்த இடத்திலும் முடிவுறுத்துவதற்கு மற்றும் அவர்கள் பதிலளிக்க விரும்பாத வினாக்களை விட்டுத் தாவுவதற்கான அவர்களின் சுதந்திரம் பற்றிக் கூட அறிவிக்கப்பட்டனர்.

பங்கேற்பாளர் கெயாரின் தொடர்பு விபரங்கள் மற்றும் (தற்போதுள்ள அரசாங்க சுகாதார, சட்ட, சமூக சேவைகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள்) அவர்களின் உள்ளூர் பிரதேசத்தில் நேர்காணலைத் தொடர்ந்து தோன்றக்கூடிய ஒரு தொகைப் பிரச்சினைகளுக்கான உதவி மூலங்களுடன் ஆய்வினைச் சமர்ப்பிக்கும் ஒரு தகவல் துண்டுப்பிரசுரத்தைப் பெற்றுக்கொண்டனர்.

### 2.8.2 தன்னிச்சையான பங்கேற்பு

ஆய்வில் பங்கேற்பது ஒரு தன்னிச்சையான அடிப்படையில் இருந்தது. பங்கேற்பாளர்களுக்கு எந்த ஊக்குவிப்போ அல்லது நிதிரீதியான கொடுப்பனவுகளோ மேற்கொள்ளப்படவில்லை.

## 2.9 தரவுப் பகுப்பாய்வு

PDA களிலிருந்து தரவு சேவைவழங்கி ஒன்றிற்குப் பதிவேற்றப்பட்டதன் பின்னர், P4P முதற்சுற்றுத் தரவுச் சுத்திகரிப்பினை நடாத்தியதுடன் கெயார் மற்றும் சமூகக் குறிகாட்டி நிறுவனத்துடன் ஒரு தொகுதி பூர்த்தியாக்கப்பட்ட தரவு அட்டவணைகளை வழங்கும், பகுப்பாய்விற்கான புதிய மாறிகளை உருவாக்கியது. இலங்கை ஆராய்ச்சிக் குழு SPSS மென்பொருளினைப் (புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுகளுக்குப் பயன்படுத்தப்படும் மென்பொருள்) பயன்படுத்தி மேலும் தரவுப் பகுப்பாய்வினை நடாத்தியது. இந்த அறிக்கையில் எழுதப்பட்ட பகுப்பாய்வு மேற்படி எல்லாவற்றிலிருந்தும் பெறப்படுகின்றது.

இது தொடக்கத்தில் எதிர்பார்க்கப்படிருந்தது போல, இந்தத் தரவுத் தொகுதி எதிர்கால களஆய்வுகளுக்கான பெறுமதியான பயனுச்ச அடிநிலைத் தரவினை வழங்க முடியும் என்பதுடன் இலங்கையில் பால்நிலை மற்றும் ஆண்மையின் அடிப்படையில் சமூக மாற்றங்களைக் கைப்பற்றுவதில் உதவும். இது 'காலம்' தொடர்பான ஒப்பீட்டினை வழங்குகின்றளவுக்கு, இந்தத் தரவுத்தொகுதி 'வெளி' க்குக் குறுக்கான சமுதாயங்களை ஒப்பிடுவதற்கும் எங்களை அனுமதிக்கின்றது. உதாரணமாக, இந்த ஆய்வு ஒரு பெரிய பிரதேச ஆய்வின் பகுதியாக இருப்பதனால், ஆசிய- பசுபிக் பிராந்தியத்திலுள்ள ஏனைய சமுதாயங்களுடன் ஒப்பிட்டு இலங்கையரின் அறிவு, மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகளைப் புரிந்துகொள்வதை இது அனுமதிக்கின்றது. மேலும், ஒவ்வொரு மாவட்டக் கொத்தணிக்கும் பெரிய மாதிரிகளை நாங்கள் ஒதுக்கியிருப்பதனால், இந்தக் களஆய்வுத் தரவு இலங்கையினுள் புவியியல் மற்றும் அமைவிட அடிப்படையில் ஒப்பீட்டு விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எங்களை அனுமதிக்கின்றது.

---

[3] பபுலா மற்றும் ஜுங்க்ஸ், 2010, பக்.28-31

களஆய்வுக்கான உபகரணம் மக்களின் கருத்து, மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகளை அளவிடுவதற்கு பல முறைகளைப் பயன்படுத்தியது; அவையாவன, இருசமபக்க விடை வகைகள், அளவிடைகள், பல பதிலளிப்புகள் மற்றும் ஆயிடைவிகிதாசார அளவிடைகள். சிக்கலான எண்ணக்கருக்களை கைப்பற்றுவதன் பொருட்டு, களஆய்வு உபகரணம் விரிவான வினாக் கலங்களை தரவுப் பகுப்பாய்வுக் கட்டத்தில் கூட்டுச்சுட்டிகளை அமைக்கும் நோக்குடன் வழங்கியிருந்தது. ஆண் மற்றும் பெண் வினாக்கொத்துக்களில் உள்ள அநேகமான வினாக்கள் நேரடியாக ஒப்பிடப்படக்கூடியன. இது ஒரு பால்நிலைக் குழுவின் பதிலளிப்புகளை பிறிதொன்று தொடர்பாக நாங்கள் புரிந்துகொள்வதற்கு அனுமதிக்கின்றது. இந்தச் சூழமைவில், இந்தத் தரவுத்தொகுதி புலமைசார் விசாரணைகளுக்குப் பயனுடையதாக இருப்பது மட்டுமல்லாது தீவிர முன்னேற்றகரமான தரவுப் பகுப்பாய்வு நுணுக்கங்களுக்கும் கூட வாய்ப்பளிக்கின்றது. எவ்வாறாயினும், களஆய்வு முறைமை உள்ளார்ந்த நேர்த்திசையாக்கமாக இருப்பது இங்கு கவனிக்கப்பட வேண்டும் - ஆகவே பால்நிலை மற்றும் பாலியல் பற்றி முழுமையாகத் தாவித்தாவிச் செல்கின்றமையைக் கைப்பற்றாது. மேலும், வினாக்கொத்தின் கட்டமைக்கப்பட்ட படிவம் அதிகமான நயநுட்ப வேறுபாடுகளைத் தனிப்பட்ட மற்றும் சமூக அனுபவங்கள் பண்புத்தரம்சார்ந்த ஆராய்ச்சி முறைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுதலைத் தவிர்க்கலாம்.

இந்த அறிக்கை பிரதானமாக விவரணப் புள்ளிவிபரவியலில் அதன் பகுப்பாய்வுகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும், ஒப்பீடுகள் ரீதியான வகையில், தேவையான விபரங்கள் (ஷை வர்க்கம் அல்லது பரிசோதனை அல்லது t-பரிசோதனையின் p – பெறுமதி) வித்தியாசத்தின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துவதற்குப் பரிசோதிக்கப்பட்டது. சீராக்கப்பட்ட ஒற்றை விகிதங்கள் மாறிகளுக்கு இடையிலான தொடர்புகளின் பருமனை விசாரிக்கும் பொருட்டுப் பயன்படுத்தப்பட்டிருந்தன. இந்த அறிக்கை ஒரு பால்நிலைப் பண்பாட்டு மற்றும் சமூக ஆய்வுகள் அணுகுமுறையை இந்தப் பகுப்பாய்வில் பின்பற்றியிருந்தது.

அத்தியாயம் 3

# ஆண்மை மற்றும் பால்நிலைத் தொடர்புகள்: மனப்பன்மைகள் மற்றும் நடைமுறைகள்

## பிரதான கண்டுபிடிப்புக்கள்

- சகல ஆண் மற்றும் பெண் பிரதிவாதிகளில் அரைவாசிக்கும் அதிகமானோர் 'ஒரு பெண்ணின் மிக முக்கியமான வகிபாகம் அவளது வீட்டைக் கவனித்துக்கொள்ளுவதும் அவளது குடும்பத்திற்காகச் சமைப்பதுமாகும்' என உடன்பட்டனர்.

- முப்பத்திரண்டு சத வீதமான ஆண்களும் 54 சத வீதமான பெண்களும் 'கர்ப்பந்தரிப்பதிலிருந்து தவிர்த்துக்கொள்வது ஒரு பெண்ணினுடைய பொறுப்பு' என நம்பினர்.

- ஆண்களின் 74 சத வீதமான ஒரு பெரும்பான்மை 'ஒரு பெண் அடிக்கப்படுவதற்கு அருகதையாகும் சந்தர்ப்பங்கள் உள்ளன' என்பதற்கு உடன்படவில்லை.

- ஆண்கள் மற்றும் பெண்களில் மூன்றில் இரண்டை விடவும் அதிகமானோர் 'ஒரு ஆடவனாக இருப்பதன் கருத்து உங்கள் குடும்பத்திற்கு வழங்குவதாகும்' என்பதற்கு உடன்பட்டனர்.

- ஐம்பத்தெட்டு சத வீதமான ஆண்கள் 'வன்முறை வழிகளினாலும் கூட உங்கள் குடும்பத்தின் கௌரவத்தைக் காப்பது ஒரு ஆடவனின் கடமையாகும்' என நம்புகின்றனர்.

- இலங்கையிலுள்ள பெண்களும் கூட பால்நிலை ஒப்புரவற்ற மனப்பான்மைகளைக் கொண்டிருக்கின்றனர் - மற்றும் பெரும்பாலும் அவை ஆண்களின் மனப்பான்மைகளை விட அதிகம் ஒப்புரவற்றன – குறிப்பாக வல்லுறவு தொடர்பாக.

- பெண்கள் மாதிரியின் மூன்றில் இரண்டிற்கும் அதிகமானோர் 'எந்த ஒரு கற்பழிப்பு வழக்கிலும், ஒருவர் வல்லுறவுக்கு உட்பட்டவர் ஒழுங்கீனமானவரா அல்லது நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டவரா என்பது வினவப்பட வேண்டும்' என்பதனை உறுதிப்படுத்தினர்.

- அவர்களின் தந்தையர் பங்கிட்டு, அல்லது சிலவேளைகளில் வீட்டுக் கடமைகளில் ஈடுபட்டிருந்த ஆண்கள் தாங்களாகவே அதிக வீட்டுவேலைகளைச் செய்தனர்.

- ஆண்களில் எண்பத்திரண்டு சத வீதமானோர் குடும்பத் தலைமைத்துவம் வருமானம் பிறப்பிப்பதன் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டுமெனக் கூறினர்.

- எழுபத்தொன்பது சத வீதத்தினர் தீர்மானம் மேற்கொள்வது குடும்பங்களின் தலைவர்களுக்கே என ஈடாக்கினர்.

- ஐம்பத்தேழு சத வீத ஆண்கள் அவர்களின் துணைவர் யாருடன் நேரத்தைச் செலவிட வேண்டுமெனத் தாங்கள் உத்தரவிடுவதாகக் கூறினர்.

## 3.1 அறிமுகம்

பால்நிலை சமூக மற்றும் பண்பாட்டு ரீதியாக, நடத்தைகள், வகிபாகங்கள், பொறுப்புக்கள், உரிமைகள் மற்றும் பெண்களிலிருந்து ஆண்களை வித்தியாசப்படுத்தும் 'ஆண்மை' அல்லது 'பெண்மை' பற்றிய சமூகப் பாகுபாட்டினைச் சூழ்ந்து கூடவே உருவாக்கும் எதிர்பார்ப்புக்கள், என்பவற்றைச் சூழ்ந்து அமைக்கப்பட்டிருப்பதாக விளங்கப்படுகின்றது (பாஷின், 2000, பக். 1-2). இந்த நடைமுறைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் வரலாற்றுரீதியாக உருவகப்படுத்தப்பட்டு இருக்கின்றன, காலத்துடன் மாற்றமடைந்து உயிரியல் கட்டுப்பாட்டையும் நீக்கியிருக்கின்றது ஏனெனில் ஒரு ஆண் 'பெண்மைத் தன்மையுடன்' இருப்பது மற்றும் ஒரு பெண் 'ஆண்மைத் தன்மையுடன்' இருப்பது அவர்களின் பால்நிலை காரணமாகவன்று, ஆனால் நடத்தைகள் மற்றும் தன்னைப் பிரதிநிதிதுவப்படுத்தும் வழிமுறைகள் காரணமாகவாகும் (கொன்னெல், 2005, பக். 68-69). மேலும், ஆண்மை மற்றும் பெண்மை அமைக்கப்படுகின்ற அச்சிலே உருவாகின்ற பால்நிலை மாற்றப்பட்ட, இருபாலின, இடைப்பட்ட பால்நிலை மற்றும் அரவாணி மக்களும் கூட, வகையைப் பொறுத்து குறைந்த அல்லது கூடிய தூரத்திற்கு, 'ஆண்மை' அல்லது 'பெண்மை' தன்மைகளை நிறைவேற்றுகின்றனர்.

ஆண்மை மற்றும் பெண்ணிய நடைமுறைகள் எம்மில் ஒரு ஆரம்ப வயதுகளிலிருந்தே ஆளப்பதிக்கப்படுகின்றன. தெற்கு ஆசியாவில், பெண் பிள்ளைகள் பொதுவாக அடக்கமான, மரியாதையான, கரிசனையான மற்றும் கீழ்ப்படிவானவர்களாக ஒழுக்கமுறைப்படுத்தப்படுகின்றனர்; அதேவேளை பையன்கள் பலமான, தைரியமான, பாதுகாப்பான, பகுத்தறிவுள்ள மற்றும் தன்னம்பிக்கையுள்ளவர்களாக வளர்க்கப்படுகின்றார்கள் (பாஷின், 2000, பக். 6). அவர்கள் முறையான மற்றும் முறைசாராப் பொருளாதாரத்தில் பங்கேற்பாளர்களாக அவர்களின் வகிபாகத்தை நிறைவுசெய்கின்ற போதும் கூட, பெண்கள் அதனால் குடும்ப செயற்பரப்பில் பேணி வளப்பவர்களாக, அன்னையர் மற்றும் கடமையுணர்வுள்ள அவர்களின் வகிபாகங்களைப் பாதுகாக்கும் அவேளை ஆண்கள் வீட்டின் முதன்மை வகிபாகத்தைப் பொறுப்பேற்று, கரு மற்றும் விரிந்த குடும்பங்கள் இரண்டும் தொடர்பான பொறுப்புக்களை ஏற்று, கூட்டுநிறுவன மற்றும் பொதுத்துறைச் செயற்பரப்புகளில் கருத்துத்தெரிவிப்பவர்கள் அல்லது கொள்கை வகுப்பாளர்களாக ஆகுகின்றார்கள்.

கெயார் ஆய்விலிருந்து திரட்டப்பட்ட தரவு சமூகத்தினுள் குறித்துரைக்கப்பட்ட பால்நிலை விதிமுறைகள் ஒரு கணிசமானளவு நிலவுவதனைச் சுட்டிக்காட்டுகின்றன. இருப்பினும் அது ஆண்கள் குறித்த பிரதேசங்களில் பால்நிலைச் சமத்துவத்திற்கு பற்றார்வங் கொண்டிருப்பதற்கான சான்றுகளைக் கூட வழங்குகின்றது. GEM அளவிடையில் அளவிடப்பட்டவாறு, ஆண் மாதிரியில் மூன்றில் இரண்டு (67 சதவீதம்) பெரும்பாலும் சமூகத்திலுள்ள பால்நிலை விதிமுறைகள் மற்றும் வகிபாகங்கள் தொடர்பில் பால்நிலை ஒப்புரவற்ற கூற்றுக்களைத் தவறென்று நிரூபித்தது, மற்றும் அதே மாதிரியின் மூன்றில் இரண்டு (67 சதவீதம்) ஆண்கள் மற்றும் பெண்கள் இடையேயான உறவுகள் தொடர்பிலான தனிப்பட்ட கருத்துக்களை மதிப்பிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட பால்நிலை ஒப்புரவற்ற கூற்றுக்களுடன் உடன்பட்டிருக்கவில்லை. இது ஆராய்ச்சியாளர்கள் (சோப்ரா, ஒசெல்லா மற்றும் ஒசெல்லா, 2004, ப.14-15; வால்லே, 2004, ப.107-108) எதனை, மேலாதிக்க அல்லது ஆதிக்கம் மிக்க ஆண்மை பற்றிய எண்ணக்கருவினது மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடு எனக் கருதுகின்றார்களோ அதனையும், ஆகவே அதன் பிரயோகமாகும் தன்மையையும், சுட்டிக்காட்டுகின்றமையை ஆதரிக்கின்றது. கட்டமைப்பு ரீதியாக ஆதரவளிக்கப்பட்டு மற்றும் சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மேலாதிக்க, ஆதிக்கம் மிக்க ஆண் நடத்தைகள் ஒரு புறமும் அந்த ஓரங்கட்டப்பட்ட, கீழ்நிலைப்பட்ட மற்றும் அதிகாரத்தில் இல்லாதிருக்கும் நிலை மறுபுறமுமாக அவற்றிற்கிடையே வேறுபடுத்தும் வழியொன்றை வழங்குவது இதன் தொடக்கப் பயன்பாடாக இருந்தது. இது எவ்வாறு ஆதிக்கமிக்க ஆண்மை குலம், வயது, இனம், பாலியல், வகுப்பு மற்றும் சாதி போன்ற அதிகாரத்தில் அதன் பிடியைத் தக்கவைத்திருக்கும் ஏனைய விடய நிலைகள் மீது எவ்வாறு தங்கியிருக்கின்றது என்பதனை எங்களால் பிரித்தறியப்படுவதற்கும் கூட இயலச்செய்கின்றது. எவ்வாறாயினும், ஆதிக்க அல்லது கீழ்நிலைப்பட்டநிலை என்ற அடிப்படையில் மட்டும் ஆண்களைப் பற்றிச் சிந்திப்பதற்கு மேலாதிக்க ஆண்மை துருவத்தின் ஒரு முனையிலும், ஓரங்கட்டப்பட்ட கீழ்நிலை வகுப்பிற்குரிய ஆண்மைக்குரியன மறு முனையிலும், இடையில் எதுவுமில்லாதிருக்கும், ஒரு இருகோடி எதிரெதிர் நிலையினை ஊக்குவிக்க வேண்டியிருக்கின்றது. இது கூட மேலாதிக்க ஆண்மைக்குரிய எண்ணத்தை வேறுபாடின்றி சீரானதாக வளர்கின்றது.

மறுபுறத்தில், ஆண்மைக்குரியன தொடர்பான அண்மைய ஆய்வுகள் ஆதிக்கத்தின் பலவேறு வடிவங்கள் அல்லது பாணிகள், அத்துடன் சமுதாயத்தில் ஆண்மை தொடர்பில் பல செந்தரங்கள் மற்றும் ஒழுக்கமுறைக் கோட்பாடுகள் உள்ளன எனக் காட்டியிருந்தன (டி நெவி, 2004). டி நெவி (2004, ப.63), உதாரணமாக, ஒவ்வொரு சமூகமும் ஆண்மைக்குரியன பற்றிப் பன்மைக் கொள்கைகளைக் கொண்டிருக்கின்றன அவைகள் 'வெவ்வேறு ஆண்களினால் மாறுபாடான அளவுகளில் அங்கீகரிக்கப்பட்டு உட்பதிக்கபட்டிருக்கின்றன' என்ற தகவலுக்கு கவனத்தை கருத்தீர்க்கின்றார். இது எங்கேயும் எப்போதும் ஆண்கள் ஒரே மாதிரி நடந்துகொள்வதில்லை என்ற உண்மை பற்றி எம்மை எச்சரிக்கின்றது. உண்மையிலே, அவர்கள் 'ஆண்மைக்குரியன பற்றி ஒரு நெகிழ்வான விதத்தில் செயற்படுத்துவதுடன் ... மற்றும் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய அதிகமான கொள்கைகள் மீது கருத்து ஈர்க்கப்படுகின்றது' (டி நெவி, 2004, ப.65). ஆகவே, கெயார் ஆய்விலிருந்து அந்தப் பகுப்பாய்வுகளுக்கு இணையாக தரவினை நோக்குவதற்கு, பெண்கள் தொடர்பில் ஆண் பிரதிவாதிகள் உயர் கட்டுப்பாடான நடத்தைகளை வெளிக்காட்டும் சந்தர்ப்பங்கள் இருப்பதாகவும் ஏனைய சந்தர்ப்பங்களில் பெண்கள் பற்றி ஆதரவாகவும் மரியாதையாகவும் இருப்பது சாத்தியமாக இருக்கின்றது. ஆண்மை, அதனால், அதன் 'தோற்றப்பாடு' அல்லது 'ஆக்கக்கூறுகளினால்' ஆக்கப்பட்டிருக்கின்றது அது குறித்த சமூக மற்றும் அமைவிடச் சூழமைவில், அத்துடன் அவைகள் தோன்றும் தற்காலிக மற்றும் தலைமுறை அமைப்புகளில் ஆராயப்பட வேண்டியிருக்கின்றது (டி நெவி, 2004, ப.92).

---

4 பால்நிலை அமைப்பிற்கு முதன்மை இடங்களாக பாடசாலை பாடப் புத்தகங்கள் இருக்கின்றன. இலங்கைப் பாடசாலைகளில், பாடசாலை குழந்தைகளுக்குப் பால்நிலை ஒரு தலைப்பாக தரம் ஆறில், 'வாழ்க்கைத்திறன்கள் மற்றும் குடியுரிமைக் கல்வி' (கல்வி வெளியீட்டத் திணைக்களம், 2011) என்ற பாடத்தில் முதலில் அறிமுகப்படுத்தப்படுகின்றது. பாடப் புத்தகத்தின் தொடக்கத்தில் (ப.1) கருக்குடும்பம் தந்தை, தாய், மகன், மற்றும் மகள் என, தந்தையும் மகனும் தாய் மற்றும் மகளை விட உயராமாக, வரையப்பட்டிருக்கின்றது; ஒரேமாதிரியான பால்நிலை வகிபாகங்கள் 'எனது தந்தையின் மனைவி எனது தாயார். அவள் எங்களைப் பராமரிக்கின்றார்' மற்றும் 'எனது அம்மாவின் கணவர் எனது தந்தை. அவர் ஒரு எழுதுவினைஞர்' போன்ற கூற்றுக்கள் ஊடாகக் கூட நெறிமுறைப்படுத்தப்படுகின்றன (ப.4).

5 பட்டியல் அமைவு GEM அளவிடைக்கு இணங்க தயாரிக்கப்பட்டது அது பற்றி இந்த அத்தியாத்தில் பின்னர் விபரிக்கப்படுகின்றது.

## 3.2 மனப்பான்மைகள்: பால்நிலை நெறிகள், பால்நிலை தொடர்புகள் மற்றும் நெருங்கிய துணைவர் வன்முறை

GEM அளவிடை, அது றியோ டி ஜனேய்றோவில் குறைந்த வருமானம் பெறும் ஆண்கள் பற்றி ஆராய்வதற்காக முதலில் தயாரிக்கப்பட்டதுடன் அன்றிலிருந்து உலகம்பூராகவும் பல்வேறு நாடுகளில் பரிசோதிக்கப்பட்டு, ஆண்கள் மற்றும் பெண்களின் பால்நிலை நெறிகள் தொடர்பான கருத்துக்களை மதிப்பிடுவதற்கு வடிவமைக்கப்பட்ட மாறுபாடான மனப்பான்மைசார் கூற்றுக்களை உள்ளடக்கி பல்வேறு முக்கிய விடயங்களை ஆராய்கின்றது. இந்த அளவிடையின் அடிப்படையில், ஒரு பால்நிலை ஒப்புரவான ஆண் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றார்:

- பெண்களுடன் வெற்றிகொள்வதைவிட சமத்துவம், கண்ணியம் மற்றும் நெருக்கத்தின் அடிப்படையில் உறவினை நாடுகின்றார்;
- குழந்தைகள் மற்றும் வீடு தொடர்பான நிதிசார் மற்றும் கரிசனை வழங்கும் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதனைப் பிரதிபலிக்கும், வீட்டுக் கடமைகள் மற்றும் குழந்தைப் பராமரிப்பில் ஈடுபட்டிருப்பதனை நாடுகின்றார்;
- அவர்களின் உறவுகளில் பாலியல் ஊடாக ஊடுகடத்தப்படும் தொற்றுத் தடுப்பு மற்றும் இனவிருத்திச் சுகாதாரம் என்பன தொடர்பில் சில பொறுப்புக்களைப் பொறுப்பேற்கின்றார்;
- எல்லா சூழ்நிலைகளிலும் பெண்களுக்கு எதிரான வன்முறையை எதிர்கின்றார்; மற்றும்
- தற்பாற்சேர்க்கை வெறுப்பு மற்றும் தன்னினச்சேர்க்கையாளர்களுக்கு எதிரான வன்முறையை எதிர்க்கின்றார்.

இலங்கை கெயார் ஆய்விற்கு, பால்நிலை வகிபாகங்கள், பால்நிலைத் தொடர்புகள், பாலியல் மற்றும் பொதுவாக சமூகத்திலுள்ள பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாக ஆண்கள் மற்றும் பெண்களின் கருத்துக்களை மதிப்பிடுவதற்கு 11 விடயங்கள் உள்ளடக்கப்பட்டு GEM அளவிடை பின்பற்றப்பட்டிருந்தது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையேயான தொடர்புகளுக்கு ஆண்கள் மற்றும் பெண்களின் தனிப்பட்ட மனப்பான்மைகளைக் குறிப்பாக மதிப்பிடுவதற்கு மேலும் 10 வினாக்கள் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன.

பின்வரும் அட்டவணை (அட்டவணை 3.1) ஆண்மை மற்றும் பெண்ணிய நெறிகள் உள்ளடங்கலாக, பால்நிலை வகிபாகங்களுக்கு ஆண்கள் மற்றும் பெண்களின் மனப்பான்மைகள் பற்றிய முடிவுகளை, கெயார் ஆய்வில் பயன்படுத்தப்பட்ட GEM அளவிடையில் பயன்படுத்தப்பட்டவாறு, தருகின்றது.

[6] www.popcouncpl.og/Horizons/ORToolkit/gem.htm

## அட்டவணை 3.1

### பால்நிலை ஒப்புரவான ஆண்கள் அளவிடைக்கு ஆண்களின் மற்றும் பெண்களின் பதிலளிப்புகள்

| | கூற்றிற்கு இணங்கும் அல்லது ஆனித்தரமாக இணங்கும் ஆண்களின் சதவீதம் | கூற்றிற்கு இணங்கும் அல்லது ஆனித்தரமாக இணங்கும் பெண்களின் சதவீதம் |
|---|---|---|
| ஒரு பெண்ணின் மிகவும் முக்கியமான பங்குபணி அவளது வீட்டைக் கவனிப்பதும் அவளது குடும்பத்திற்காக சமைப்பதுமாகும் | 57.4 | 66.9 |
| ஒரு பெண் அடிக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன | 26.4 | 37.5 |
| கர்ப்பந்தரிப்பதனைத் தவிர்த்துக்கொள்வது ஒரு பெண்ணின் பொறுப்பு | 31.9 | 54.3 |
| அவளது குடும்பத்தை ஒன்றாக வைத்திருக்கும் பொருட்டு ஒரு பெண் வன்முறையினைச் சகித்துக்கொள்ள வேண்டும் | 40.6 | 58.0 |
| ஒரு ஆணாக இருப்பதற்கு, நீங்கள் கடினமாக இருக்க வேண்டும் | 57.0 | 57.2 |
| குழந்தைகளின் துணிகளை மாற்றுதல், குளிப்பாடுதல் மற்றும் குழந்தைகளுக்கு உணவூட்டுதல் என்பன தாயாரின் கடமைகளாகும் | 64.3 | 82.6 |
| பெண்கள் கேலிசெய்யப்படுதல் பாலியற் தன்மையானதாக இருக்கின்ற போதும் கூட அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் ஏனெனில் அது தீங்கற்றது | 24.8 | 20.8 |
| கேலிசெய்தல் பெண்களுக்கு தீங்காவது உடல்சார் தொடுகை இருக்கின்ற போது மட்டுமே | 31.6 | 33.6 |
| ஒரு ஆணாக இருப்பதன் கருத்து உங்கள் குடும்பத்திற்கும் விரிந்த குடும்பத்திற்கும் வழங்குவதாகும் | 70.0 | 73.6 |
| வன்முறை வழிகளினால் கூட உங்கள் குடும்பத்தின் கௌரவத்தைக் காப்பது புருஷ இலட்சனமாகும் | 58.2 | 66.2 |
| ஒரு உண்மையான ஆண் ஒரு ஆண் குழந்தையை உருவாக்குகின்றான் | 25.1 | 42.5 |

ஒரு கணிசமான பெரும்பான்மையான ஆண்கள் (64 சதவீதம்) குழந்தைப் பராமரிப்பு அன்னையரின் முக்கிய பொறுப்பு என்ற கருத்திற்குப் பற்றார்வம் காட்டியிருப்பதனையும் அதேவேளை, 57 சதவீதமானோர் பெண்களின் முக்கிய பொறுப்பு குடும்பத்தையும் இல்லத்தையும் கவனிப்பதாகும் என்ற கருத்தைக் கொண்டிருப்பதையும் இந்தத் தரவு தெழிவுபடுத்துகின்றது. ஒரு பெரும்பான்மையான ஆண்கள் கூட ஆடவர்நிலையை ஆதிக்கம் மிக்கதாக மற்றும் வன்முறைக்குத் தொடர்புபடுத்தியதுடன், 58 சதவீதம் 'வன்முறை வழிகளின் ஊடாகவேனும் கூட உங்களுடைய குடும்பத்தின் கௌரவத்தைக் காப்பது ஆடவர்நிலையென' நம்புவதுடன் 57 சதவீதம் 'ஒரு ஆடவனாக இருப்பதற்கு நீங்கள் கடினமாக இருக்க வேண்டும்' என்பதற்கு உடன்படுகின்றார்கள். ஒரு கணிசமானளவு ஆண்கள் (70 சதவீதம்) கூட ஆண்மை குடும்பத்திற்கு வழங்குவதனைப் பயனாக ஏற்படுத்தும் வீட்டுப் பொறுப்புக்களைக் கொண்டுவருவதாக ஏற்றுக்கொண்டிருந்தது.

இது இனவிருத்திற்கு வருகின்றபோது, எவ்வாறயினும், ஆண்கள் பால்நிலை ஒப்புரவினைக் காட்டினார்கள் ஏனெனில் மாதிரியின் ஒரு காற் பங்கினர் மட்டும் (25 சதவீதம்) 'ஒரு உண்மையான ஆடவன் ஆண் குழந்தைதைய உருவாக்குகின்றான்' என்ற கூற்றிற்கு உடன்பட்டனர். இது பெண் குழந்தைகளுக்குத் தந்தையாயிருப்பது அவர்களின் ஆண்மைக்கான ஒரு அச்சுறுத்தலாக ஆண்களினால் நோக்கப்பட்டிருக்கவில்லை என்பதனை சுட்டிக்காட்டுகின்றது.

இது மாறாக, உண்மையான ஆடவன் என்பதன் கருத்து ஆண் குழந்தையை உருவாக்குவது என்பதற்கு 42 சதவீதமான பெண் பிரதிவாதிகள் பதிலளித்திருப்பது, பெண்கள் ஆண் குழந்தைகளுக்குத் தந்தையாவதற்கு ஆண்கள் மீது வைக்கும் அழுத்தத்தைச் சுட்டிக்காட்டி நிற்கின்றது. எதிர்ப்பாலுணர்ச்சியுடன் ஆதிக்கம் மிக்க ஆண்மையின் இணைவு, எவ்வாறாயினும், ஆண் (67 சதவீதம்) மற்றும் பெண் (63 சதவீதம்) பிரதிவாதிகள் ஒரு தன்னினச்சேர்க்கையாளரான மகனைக் கொண்டிருப்பது வெட்கத்தக்கதாயிருக்கும் என நம்பியிருந்தார்கள் (அட்டவணை 3.2 இனைப் பார்க்கவும்).

நெருங்கிய துணைவர் வன்முறை தொடர்பாக, பாலியல் வன்முறை உட்பட, ஒரு மிதமானது தொடக்கம் உயர் மட்ட பால்நிலை ஒப்புரவு ஆண் பிரதிவாதிகளினால் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஒரு பெரும்பான்மையான 74 சதவீதத்தினர் 'ஒரு பெண் அடிக்கப்படுவதற்கு அருகதையாகும் சமயங்கள் இருக்கின்றன' என்ற கூற்றுடன் உடன்படவில்லை, அதேவேளை 59 சதவீதத்தினர் 'ஒரு பெண் அவளுடைய குடும்பத்தை ஒன்றான வைத்திருக்கும் பொருட்டு வன்முறையைச் சகித்துக்கொள்ள வேண்டும்' என்ற கருத்தை தவறென மறுத்திருந்தனர். எழுபத்தைந்து சதவீதமான ஆண்கள் கூட 'பெண்கள் பாலியல் தன்மையானதொரு கேலிசெய்யப்படுதலை ஏற்றுக்கொள்ள வேண்டும் ஏனெனில் அது தீங்கற்றதாக இருக்கின்றது' என்ற கருத்துடன் உடன்படவில்லை மற்றும் 68 சதவீதத்தினர் 'உடல்ரீதியான தொடுகை இருக்கின்றபோது மட்டுமே கேலிசெய்வது தீங்காகின்றது' என்ற கூற்றைத் தவறென நிரூபித்திருந்தனர்.

நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாக ஆண்களின் மனப்பான்மைகள் தொடர்பான மேற்படி இலக்கங்கள் 'அரசியல்ரீதியாக சரியாக' இருக்க விரும்பும் மேலான- அறிவிப்புகளைச் சுட்டிக்காட்டினாலும் கூட, நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான பால்நிலை ஒப்புரவற்ற கூற்றுக்களுடன் உடன்பாடற்ற உயர்ந்த வீதங்கள், பாலியல் தொந்தரவு உட்பட, ஆண்கள் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் எவ்வாறான இலச்சிய ஒழுக்கமுறைச் செந்தரம் இருக்க வேண்டுமென்பது பற்றி அங்கீகரித்து, விழிப்புணர்வுடன் இருப்பதைக் காட்டுகின்றது. அவர்களுக்கும் அத்துடன் பெண்களுக்கும் தீங்காகவிருக்கின்ற வன்முறைகளையுடைய ஆண்களில் மாற்றத்தை நோக்கிப் பணியாற்றுவதற்கு இது ஒரு சந்தர்ப்பத்தையும் ஒரு தளத்தையும் வழங்குகின்றது.

இருப்பினும், பெண்கள் மற்றும் வேறு ஆண்களுக்கு எதிரான ஆண் வன்முறை தொடர்பில் நான்காம் அத்தியாயத்தில் கலந்துரையாடப்படவிருப்பது போன்று, பெரும்பாலும் ஆண்களின் விருப்பத்திற்கு - அல்லது தேவைக்குக் கூட – மாற்றத்திற்கு எதிராக தணிக்கும் சமூக மனப்பான்மைகள் கூட வகை மாதிரியாக இருக்கின்றது. குடும்பத்தை ஒன்றாக வைத்திருப்பதற்காக ஒரு பெண் வன்முறையைச் சகித்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் உடன்பட்ட ஆண்களின் (41 சதவீதம்) சதவீதத்துடன், ஒரு பெண் அடிப்படுவதற்கு அருகதையாகும் சமயங்கள் இருக்கின்றன என்பதுடன் உடன்பட்ட மிகவும் குறைந்த சதவீதமான ஆண்களுடன் (26 சதவீதம்) ஒப்பிடும்போது அதிலுள்ள முக்கியமான வேறுபாட்டினை உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள். இது எவ்வாறு குடும்ப அலகு சமன்பாட்டிற்கு வருகின்றது என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது, குடும்பத்தின் ஒட்டிணைவாற்றல் மீது வைக்கப்பட்டுள்ள கலாச்சார மற்றும் கருத்தியல் விழுமியம் நெருங்கிய துணைவர் வன்முறையை மன்னிக்கின்றதுடன் அதனால் ஆண்களைப் பெண்களுக்கு எதிரான வன்முறைப் பழி பாவங்களினின்றும் விடுவிக்கின்றது என்பதனைச் சுட்டுகின்றது. ஆண் மாதிரியின் அநேகமாக முக்கால் பங்கினர் ஒரு பெண் அடிக்கப்படுவதற்கு அருகதையாகும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்ற கூற்றிற்கு உடன்பட்டிருக்கவில்லை இருந்தபோதும், ஆண்களில் 15 சதவீதமானோர் மட்டுமே பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான சமுதாய அல்லது பணியிடச் செயற்பாடுகளில் பங்குபற்றியிருந்தனர் என்பது கூட குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. இது தொழில்தருனர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் பகுதியில் அவ்வாறான நிகழ்சிகளைப் பெருவோட்டத்தில் இடுவதற்கும் ஊழியர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களுக்கு அவற்றைக் கட்டாயமாக்குவதற்கும் அர்ப்பணிப்பின்மையைச் சுட்டிநிற்கின்றது. ஆகவே, பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பது மற்றும் ஆண்களில் மாற்றத்தைத் தொடக்குவிப்பதற்கு, 'பலமடங்கு, சமுதாய, சமூக, குடும்ப மற்றும் தனிப்பட்ட மட்டங்களில் ஒன்றோடொன்று தொடர்புபட்ட காரணிகளுக்குப்' பொறுப்புக்கூற வேண்டியுள்ளது (ப்பூலூ மற்றும் ஜுவ்க்ஸ், 2010, ப.15).

பாலியல் வல்லுறவுக்குட்பட்டவர்கள் தொடர்பாக ஆண்களின் மனப்பான்மைகள், எவ்வாறாயினும், குறைந்த பால்நிலை ஒப்புரவினைக் காட்டின (அட்டவணை 3.2 இனைப் பார்க்கவும்). ஆண்களில் ஐம்பத்தைந்து சதவீதத்தினர் 'எந்த ஒரு வல்லுறவு வழக்கிலும், வல்லுறவுக்குட்பட்டவர் ஒழுங்கீனமானவரா அல்லது நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டவரா என வினவப்பட வேண்டும் என நான் நினைக்கின்றேன்' என்ற கூற்றுடன் உடன்பட்டனர். மேலும், ஆண்களின் ஒரு கணிசமானளவு 79 சதவீதத்தினர் 'சில பெண்கள் அவர்கள் உடுத்தும் மற்றும் நடந்துகொள்ளும் விதத்தினால் வல்லுறவினை வரவழைத்துக் கொள்கின்றார்கள் என நான் நினைக்கின்றேன்' என்ற கூற்றுடன் உடன்பட்டிருந்தனர். இந்த மனப்பான்மைகளை உத்தரவாதப்படுத்தும் காரணங்கள் மற்றும் ஆண்களின் பாலியல் வன்முறைக் குற்றச்செயல் குணவியல்பினை அதிகரிக்கும் இடர்க்காரணிகள் என்பன அத்தியாயம் நான்கில் விபரமாகக் கலந்துரையாடப்படுகின்றது.
கெயார் ஆய்விலிருந்தான தரவு அதன் ஆண் பிரதிவாதிகளிடையே நடுத்தரமானதிலிருந்து பலமானதுவரை பெண்கள் மேலான, குறிப்பாக விவாகஞ்சார் மற்றும் பாலியல் தொடர்புகள், பெண்களின் ஆடை மற்றும் நகர்மை தொடர்பில், கட்டுப்பாட்டு நாட்டம் ஒன்றைச் சுட்டிக்காட்டுவதனைக் கூடக் காட்டுகின்றது. ஆண்களில் ஒரு உயர்ந்த விகிதத்தினர் (78 சதவீதம்) ஒரு பெண் அவளுடைய கணவனுக்கு கீழ்ப்படிய வேண்டுமென்ற கருத்திற்குப் பற்றார்வங் காட்டியிருந்தனர், கொழும்பு (92 சதவீதம்) மற்றும் அம்பாந்தோட்டை (97 சதவீதம்) அதியுயர்ந்த சதவீதங்களைப் பதிவுசெய்திருந்தன. சகல ஆண்களில் ஐம்பத்தெட்டு சதவீதத்தினர் 'ஒரு பெண் அவளுடைய கணவனுடன் பாலுறவு கொள்ள மறுக்கமுடியாது' என்ற கூற்றிற்குக் கூட உடன்பட்டிருந்தனர். இந்த மனப்பான்மைகள் ஆண்களின் அவர்களது நெருங்கிய துணைவர்கள் மேலான உண்மையான கட்டுப்படுத்தும் நடத்தையைப் பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, 63 சதவீதமான ஆண்கள் அவர்களுக்குப் பாலுறவு தேவைப்படும்போது அவர்கள் அவர்களது துணைவர்கள் உடன்படவேண்டுமென எதிர்பார்க்கின்றனர். மேலும், ஆண்களில் 55 சதவீதமானோர் அவர்கள் அவர்களது துணைவரை குறித்த சில ஆடையணி வகைகளை அணிய விடமாட்டோம் என அறிவித்திருந்தனர்; அவர்களில் 57 சதவீதத்தினர் அவர்களது பெண் துணைவர்களை அவர்கள் யாருடன் நேரத்தைச் செலவிட வேண்டுமென தாம் கூறுவதாகக் குறிப்பிட்டிருந்தனர்; மற்றும் 55 சதவீதத்தினர் எல்லா நேரமும் அவர்களது பெண் துணைவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பதனைத் தாம் அறிந்திருக்க விரும்புவதாகத் தெரிவித்திருந்தனர்.

## அட்டவணை 3.2

### பால்நிலைத் தொடர்புகள் பற்றி ஆண்களின் மற்றும் பெண்களின் மனப்பான்மைகள்

| பால்நிலைத் தொடர்புகள் பற்றிய புலனுணர்வு | கூற்றுக்கு இணங்கும் அல்லது ஆணித்தரமாக இணங்கும் ஆண்களின் சதவீதம் | கூற்றுக்கு இணங்கும் அல்லது ஆணித்தரமாக இணங்கும் பெண்களின் சதவீதம் |
|---|---|---|
| ஒரு பெண் அவளது கணவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென நான் நினைக்கின்றேன் | 78.1 | 87.3 |
| சகல குடும்ப விடயங்களிலும் ஒரு ஆணே இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டுமென நான் நினைக்கின்றேன் | 40.4 | 42.6 |
| பாத்திரங்கள் கழுவுதல், சுத்திகரிப்பு, மற்றும் சமையல் போன்ற வீட்டு வேலைகளில் பெண்களுடன் ஆண்களும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென நான் நினைக்கின்றேன் | 74.9 | 77.2 |
| ஒரு பெண் அவளது கணவருடன் பாலுறவு கொள்ள மறுக்க முடியாது என நான் நினைக்கின்றேன் | 58.2 | 67.4 |
| ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படும்போது, அந்நிலைமையினை உருவாக்கிக் கொண்டமைக்கு அவளே பொறுப்பு என நான் நினைக்கின்றேன் | 29.8 | 31.9 |
| ஒரு பெண் உடல்ரீதியாக எதிர்த்துப் போராடாவிட்டால் அது வல்லுறவு அல்ல என நான் நினைக்கின்றேன் | 43.3 | 44.3 |
| தன்னினச் சேர்க்கையாளரான ஒரு மகனைக் கொண்டிருப்பது வெட்கத்தக்கதென நான் நினைக்கின்றேன் | 67.2 | 62.8 |
| எந்த வல்லுறவு வழக்கிலும் பாதிக்கப்பட்டவர் ஒழுக்கமானவரா அல்லது துர்நடத்தையுடையவரா என விசாரிக்கப்பட வேண்டுமென நான் நினைக்கின்றேன் | 55.0 | 67.3 |
| சில பெண்கள் அவர்கள் உடுத்தும் மற்றும் நடந்துகொள்ளும் விதத்தில் வல்லுறவினை வரவழைத்துக் கொள்கின்றார்கள் என நான் நினைக்கின்றேன் | 79.1 | 75.1 |

இனவிருத்தி விடயங்கள், சம வேதனங்கள், குழந்தைகளின் கல்வி, பெண்களின் சங்கங்கள் மற்றும் அரசியற் பிரவேசம் என்பன தொடர்பில் ஆண்களின் மனப்பான்மைகள் மிகவும் ஒப்புரவானவையாக இருந்தன. அறுபத்தெட்டு சதவீதமான ஆண்கள் 'கருத்தரிப்பதிலிருந்து தவிர்த்துக்கொள்வது ஒரு பெண்ணின் பொறுப்பாக இருக்கின்றது' என்ற கூற்றுடன் உடன்படாதிருந்தது, மொத்தத்தில், ஆண்களினால் திட்டமிடப்பட்ட பெற்றோர்நிலையில் அவர்களின் சொந்த வகிபாகம் ஏற்றுக்கொள்ளப்பட்டமையைச் சுட்டிநிக்கின்றது, அதேவேளை 87 சதவீதத்தினர் ஆண்கள் அளவிற்குத் தகுதியுள்ளவர்கள் என்பதுடன் அவர்களின் உழைப்பிற்குச் சமமாகக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் என்பதற்கு உடன்பட்டிருந்தனர். ஒரு கணிசமானனளவு ஆண்களில் 84 சதவீதத்தினர் புதல்வர்கள் புதல்வியரைவிட அதிகம் கல்விபுகட்டப்பட வேண்டுமென்ற கருத்திற்கு உடன்படாதிருந்தமை, பொதுவாகப் பால்நிலை கருதாத குழந்தைகளின் கல்வி தொடர்பான அவர்களின் அர்ப்பணிப்புச் சமிக்ஞையாக இருக்கின்றது. ஆண்களில் அறுபத்து நான்கு சதவீதத்தினர் அவர்களின் மனைவியர் அல்லது பெண் சினேகிதிகள் பெண்கள் சங்கங்களில் செயற்பாட்டாளர்களாக இருப்பதைக் கூட ஆதரித்திருந்தார்கள்; அதிக பெண்கள் பொது தீர்மானம் மேற்கொள்ளும் வகிபாகங்களில் இருக்க வேண்டும் என்ற கூற்றுடன் 70 சதவீதமான ஆண்கள் உடன்பட்டிருந்தனர்; மற்றும் 62 சதவீதமான ஆண்கள் தேர்தல்களில் பாரியளவில் பெண்கள் பங்கேற்க முன்வருவதனை அவர்கள் ஆதரிப்பதாகத் தெரிவித்திருந்தனர்.

[7] பெண்களின் சமுதாயம் சார்ந்த நிறுவனங்கள் (CBOs) இலங்கையில் குறிப்பாக கிராமியப் பிரதேசங்களில் பெருமளவு பெண்களை உறுப்பினர்களாகக் கொண்டிருப்பது மிகவும் பொதுவானதாக இருப்பதுடன் பெண்களுக்கான நுண்-கடன்களுக்கு ஒரு பிரதான மூலமாக இருக்கின்றது (லெண்டன் மற்றும் விதானாச்சி, 2012)

## 3.3 ஆண்மையை உருவாக்குதல்: பெண்களின் ஒருமித்த அபிப்பிராயம்

'ஆண்கள் தொடர்பாக முகவர்களாகச் செயற்பட' மற்றும் 'குறித்தசில கூறுகளை ஆதரிப்பதன், கண்டிப்பதன் அல்லது ஏனையவை தொடர்பில் நடுநிலையாக இருப்பதுடன் சில ஆண்களுக்கு நேரடியாக ஆண்மையை மறுப்பதன் ஊடாக' ஆண்மையை உருவகப்படுத்துவதில் பெண்கள் செயற்படலாமென சொப்றா, ஒசெல்லா மற்றும் ஒசெல்லா (2004, ப.13) அவதானிக்கின்றனர். கெயார் ஆய்வு இதுதான் விடயமென சான்று வழங்குவது மட்டுமல்லாது, பெண்கள் தீவிரமாக ஊக்குவிக்கும், கண்டிக்கும் அல்லது நடுநிலை பேணும் - அது, நடைமுறையில், ஒரு சலுகைநிலை, பரப்புகளைச் (அல்லது ஆண்மையின் ஆக்கக்கூறுகளைச்) சுட்டிநிற்கின்றது. GEM அளவிடையில் அளவிடப்பட்டவாறு, பால்நிலை ஒப்புரவற்ற கூற்றுக்களுடன் ஆண்களைவிடப் பெண் பிரதிவாதிகள் உயர்ந்த வீதத்தில் உடன்பட்டிருப்பது எந்த அளவிற்குப் பெண்கள் பால்நிலை விதிமுறைகளை, பெண்களை குடும்பத்தின் கடமைகள் மற்றும் குழந்தைப்பராமரிப்புடன் இணைப்பதனையும் ஆண்களைக் குடும்பத்தின் ஆணாதிக்கத் தலைவர்களாக ஏற்பதனையும், வலுப்படுத்துவதாகவும் ஊக்குவிப்பதாகவும் இருப்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

அட்டவணை 3.1 இல் விளக்கப்பட்டவாறு, பெண் பிரதிவாதிகளில் 67 சதவீதத்தினர் (ஆண்களில் 57 சதவீதத்தினருடன் ஒப்பிடும்போது) ஒரு பெண்ணின் மிகவும் முக்கிய பங்குபணி அவளது இல்லத்தைப் பராமரிப்பது மற்றும் அவளது குடும்பத்திற்காக சமைப்பது என்பதற்கு உடன்பட்டார்கள், மற்றும் பெண்களில் 83 சதவீதத்தினர் (ஆண்களில் 64 சதவீதத்தினருடன் ஒப்பிடும்போது) குழந்தைக்குத் துணிமாற்றுதல், குளிப்பாட்டுதல் மற்றும் குழந்தைகளுக்கு உணவூட்டுதல் என்பன தாயாரின் பொறுப்பு என்ற கருத்தினைக் கொண்டிருந்தனர். பெண்கள் மற்றும் ஆண்களில் ஒரு சம எண்ணிக்கையானோர் (57 சதவீதத்தினர்) 'ஒரு ஆடவனாக இருப்பதற்கு நீங்கள் கடினமாக இருக்க வேண்டும்' என நம்பியிருந்தனர் அத்துடன் பெண்களில் 43 சதவீதத்தினர் (ஆண் பதிலளிப்பு 25 சதவீதமாக இருந்தது) 'ஒரு உண்மையான ஆண் ஒரு ஆண் குழந்தையை உருவாக்குகின்றான்' எனப் பிரகடனப்படுத்தினர். ஒரு கணிசமானளவு பெண்களில் 74 சதவீதத்தினர் (ஆண்களில் 70 சதவீத்தினருடன் ஒப்பிடும்போது) 'ஒரு ஆணாக இருப்பதன் பொருள் உங்கள் குடும்பத்திற்கும் விரிவான குடும்பத்திற்கும் வழங்குவதாகும்', அதேவேளை பெண்களில் 66 சதவீதத்தினர் (மற்றும் ஆண்களில் 58 சதவீதத்தினர்) 'வன்முறை வழிகளினூடாகவேனும் உங்கள் குடும்பத்தின் கௌரவத்தைக் காப்பது ஆண்மை' என்பதனை உறுதிப்படுத்தினர்.

இந்த மனப்பான்மைகளில் சில குழந்தைப்பராமரிப்பு மற்றும் குடும்பக் கடமைகள் தொடர்பாக ஆண்களின் சமமான பங்குடமையைத் தவிர்க்கின்றன. எடுத்துக்காட்டாக குழந்தைகளுக்கு உணவூட்டுதல், குளிப்பாட்டுதல், மற்றும் மாற்றுத் துணி மாற்றுதல் என்பன பெண்களின் பொறுப்புக்களாக இருந்தனவென நம்பியிருந்த பெண்களில் 83 சதவீதமானோர் (ஆண்களில் 64 சதவீதத்தினருடன் ஒப்பிடும்போது) ஒரு தாய்வழி கருத்தொருமிப்பைச் சுட்டிநிற்கின்றனர் அது குழந்தைப்பராமரிப்பு என வருகின்றபோது (அது உயிரியல் ரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட தாய்ப்பாலூட்டும் செயலுக்கு குறைக்கப்பட முடியாது ஆனால் கைக்குழந்தை மற்றும் குழந்தையைக் கவனித்தல் முதலியனவற்றை உள்ளடக்குகின்றது), அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட பொறுப்புக்களை ஆண்களை விடப் பெண்கள் அதிகமாக ஏற்றுக்கொள்கின்றார்கள், அதனால் கைக்குழந்தை மற்றும் ஆரம்பப் பராமரிப்பில் கூட்டுப் பெற்றோர்நிலை இல்லாமை சாதாரணமானதாக ஆக்கப்படுகின்றது. இது இந்த ஆய்விற்காக நேர்காணப்பட்ட ஒரு ஆணின் இடைநிகழ்வான சான்றினால் ஆதரவளிக்கப்பட்டது, அவர் தனது பாலகியான பெண் குழந்தையை குளிப்பாட்ட விரும்பிய போதும் கூட அவர் அவ்வாறு செய்ய அவரது மனைவி மற்றும் மாமியார் அனுமதிப்பதில்லை என முறையிட்டார், அவர்கள் அதனைத் தமது நிபுணத்துவப் பகுதியாகப் பார்த்தனர். கெயார் ஆய்விலிருந்தான சான்று, எவ்வாறாயினும், ஆண்கள் வளர்ந்த குழந்தைகளுடன் அதிக நேரம் செலவிடுவதனைச் சுட்டிக்காட்டின. அட்டவணை 3.3 காட்டுகின்றவாறு, ஆண் பிரதிவாதிகளில் 86 சதவீதத்தினர் அவர்கள் அவர்களுடைய குழந்தைகளுடன் விளையாடுவதாக அல்லது செயற்பாடுகளில் ஈடுபடுவதாகக் கூறினர், ஆண் பிரதிவாதிகளில் 66 சதவீதத்தினர் தாம் பிள்ளைகளுடன் சொந்த விடயங்களைப் பற்றி கதைப்பதாக அறிவித்தனர் மற்றும் ஆண்களில் 74 சதவீதத்தினர் தாம் தமது பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு வீட்டுவேலைகளில் உதவுவதாகக் கூறினர்.

P உடனான நேர்காணல், கொழும்பு, ஒக்டோபர் 2012

அட்டவணை 3.3

### சிறுவர்களுடன் ஆண்களின் ஈடுபாடு

| ஆண் ஆய்வு | ஒருபோதுமில்லை சதவீதம் | சிலவேளைகளில் சதவீதம் | பெரும்பாலும் சதவீதம் | மிகப் பெரும்பாலும் சதவீதம் |
|---|---|---|---|---|
| விளையாடுதல் அல்லது சிறுவர்களுடன் செயற்பாடுகளில் ஈடுபடுதல்? | 13.9 | 57.0 | 23.1 | 6.0 |
| அவர்களது உறவுகள், கவலைகள் அல்லது உணர்வுகள் போன்ற, சொந்த விடயங்களைப் பற்றி சிறுவர்களுடன் உரையாடுதல்? | 33.5 | 52.2 | 12.0 | 2.4 |
| உங்கள் குழந்தைகளுடன் பாலியல் பாலியல் கல்வி பற்றி உரையாடுதல்? | 85.9 | 12.5 | 1.2 | 0.4 |
| எந்தக் குழந்தைகளுக்காவது அவர்களது வீட்டு வேலைகளுக்கு உதவுதல்? | 26.0 | 50.8 | 14.6 | 8.5 |

அதேபோல, நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் பாலியல் வன்முறை தொடர்பாக, பெண் பங்கேற்பாளர்களின் பதிலளிப்புகள் பெண்களுக்கு எதிரான பாரபட்சமான சமூக மற்றும் பண்பாட்டு மனப்பான்மைகளை ஆண்களை விட ஒரு சமமான அல்லது ஆழமான ஏற்பினைப் பிரதிபலிக்கின்றது. பெண்களில் முப்பத்தெட்டு சதவீதத்தினர் (ஆண்களில் 27 சதவீதத்தினருடன் ஒப்பிடும்போது) ஒரு பெண் தாக்கப்படுவதற்குத் தகுதியான நேரங்களும் உள்ளன என்ற கருத்துடன் உடன்பட்டனர், மற்றும் 58 சதவீதமான பெண்கள் (நேரொத்த ஆண்களின் வீதம் 41 சதவீதமாக இருந்தது) ஒரு பெண் அவளது குடும்பத்தை ஒன்றாக வைத்திருக்கும் பொருட்டு வன்முறையைச் சகித்துக்கொள்ள வேண்டுமென நம்பியிருந்தனர். GEM அளவிடையில் அளவிடப்பட்டவாறு, பெண்களில் ஒத்த விகிதசமமானோர் (21 சதவீதம்) மற்றும் ஆண்களில் (25 சதவீதமானோர்) 'பெண்கள் கேலிசெய்யப்படுவதனை அது பாலியற் தன்மையானதாக இருந்தபோதும் சகித்துக்கொள்ள வேண்டும் ஏனெனில் அது தீங்கற்றதாக இருக்கின்றது' என்ற கூற்றுடன் உடன்பட்டனர். 'கேலிசெய்யப்படுவது பெண்களுக்குத் தீங்காவது உடல்சார் தொடுகை இருக்கும் சமயத்தில் மட்டுமே' என்ற கூற்றுடன் ஆண்கள் மற்றும் பெண்களின் உடன்பாடு கூட பெண்களில் 34 சதவீதத்தினரும் ஆண்களில் 32 சதவீதத்தினரும் உடன்படுகின்றமை ஒப்பிடப்படக் கூடியதாகவிருந்தது.

வல்லுறவுத் தொன்மங்கள் தொடர்பாகக் கூட பால்நிலை ஒப்புரவற்ற மனப்பான்மைகளைக் கொண்டிருக்கின்றனர் (அட்டவணை 3.2 இனைப் பார்க்கவும்), ஆண்களை விட (30 சதவீதம்) சிறிது உயர்ந்த சதவீதமான பெண்கள் (32 சதவீதம்) 'ஒரு பெண் வல்லுறவுக்குட்ட போது, அவள் தன்னை அந்த சூழ்நிலையில் வைத்திருந்தமைக்காக வழமையாகக் குறைகூறப்படுகின்றாள்' என்பதுடன் உடன்பட்டனர். மேலும், பெண்கள் (44 சதவீதம்) மற்றும் ஆண்கள் (43 சதவீதம்) இருபாலாரும் 'ஒரு பெண் உடல்ரீதியாகப் போராடாவிட்டால் அது வல்லுறவல்ல' என்ற கூற்றுடன் உடன்பட்டிருந்தமை கிட்டத்தட்ட சம அளவிலிலிருந்தது. பெண் மாதிரிகளில் மூன்றில் இரண்டு (67 சதவீதம்), ஆண்களில் 55 சதவீதத்தினருடன் ஒப்பிடம்போது 'எந்த ஒரு வல்லுறவு வழக்கிலும், வல்லுறவில் பாதிக்கப்பட்டவர் ஒழுங்கீனமானவரா அல்லது நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டவரா என வினவப்பட வேண்டும்' என்பதனைக் கூட உறுதிப்படுத்தினர், மற்றும் 75 சதவீதமான பெண்கள் (மற்றும் 79 சதவீதமான ஆண்கள்) 'சில பெண்கள் அவர்கள் உடுத்தும் விதம் மற்றும் நடந்துகொள்ளும் விதத்தினால் வல்லுறவினை வரவழைத்துக்கொள்கின்றார்கள்' என அறிவித்திருத்தனர்.

இந்த மனப்போக்குகள் பெண்கள் தங்கள் சொந்தப் பாதுகாப்புச் சுமையை தங்கள் மீதே சுமத்துவதுடன், ஆண்களை, வன்முறைக் குற்றச்செயல் உட்பட அவர்களின் சொந்த நடவடிக்கைளுக்கான பொறுப்புகளிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளவும், குடும்ப ஒன்றுமை மற்றும் மரியாதைக்காக பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு ஆதரவளிக்கவும் செய்கின்றன. இந்தப் பால்நிலை ஒழுக்கமுறைக்கு ஒப்புதலளிக்கும் பெண்கள் அதனால் மேலாதிக்க ஆண்மையை வலுவூட்டி ஆதரவளிப்பதற்கு சம்மதம் தருகின்றனர்.

## 3.4 வீட்டுப் பொறுப்புக்கள்

அதன் நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டத்தில், கெயிரோவில் நடைபெற்ற குடித்தொகை மற்றும் அபிவிருத்தி தொடர்பான 1994 ஐக்கிய நாடுகள் சர்வதேச மாநாட்டு கூட்டுப் பெற்றோர்நிலை உட்பட குடும்பம் மற்றும் வீட்டுப் பொறுப்புக்களின் சகல பரப்புக்களிலும் ஆண்கள் மற்றும் பெண்களின் சமமான பங்கேற்பினை அரசாங்கங்கள் ஊக்குவிக்க வேண்டுமென பரிந்துரைசெய்தது.

அடுத்தடுத்த ஆய்வுகள் (IMAGES களஆய்வு, 2010) வீட்டுக் கடமைகளின் பிரிப்பு மற்றும் துணைவர் தொடர்பாடல் தொடர்பாக ஆண்கள் மற்றும் பெண்களின் உணர்வுக்காட்சிகளை அதன் விரிவான வீட்டுக் களஆய்வுகளில் ஒரு முக்கிய பரப்பாக உள்ளடக்குவதற்கு இந்த நடவடிக்கைக் களத்தைக் கவனத்திலெடுத்தது. கெயார் களஆய்வு இந்த ரீதியிலான விசாரணைகளைப் பின்பற்றி வீட்டுக் கடமைகள், குழந்தைப்பராமரிப்பு மற்றும் பெற்றோர்நிலைகளில் ஒப்புரவான பங்கேற்புத் தொடர்பாக வினாக்களை உள்ளடக்கியது.

வீட்டினுள் பெண்களின் வகிபாகங்களுக்கு ஆண்களின் மனப்பான்மைகளைப் படமாக்குவதற்கு வடிவமைக்கப்பட்ட கூற்றுக்களுக்கான பதிலளிப்புகள் 57 சதவீதமான ஆண்கள் ஒரு பெண்ணின் முக்கிய பங்குபணி அவளின் இல்லத்தைப் பராமரிப்பதும் அவளது குடும்பத்திற்காக சமைப்பதும் என்ற கூற்றுடன் உடன்பட்டனர். அதேவேளை இதனுடன் உடன்பாடாக இருந்த ஆண்களின் சதவீதம் கொழும்பு, மட்டக்களப்பு, மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் பெரும்பாலும் சமமாக இருந்தது, இது நுவரெலியா மாவட்டத்தில் உயர்வாக (62 சதவீதம்) இருந்தமை, பெருந்தோட்ட தொழிலாளர்களிடையே ஒரு வலுவான பண்பாட்டு ஆண்ணாதிக்கக் கோலத்தைப் பிரதிபலிக்கின்றது. இருந்தபோதும் 75 சதவீதமான ஆண்கள், GEM அளவிடையில் அளவிடப்பட்டவாறு, 'பாத்திரங்கள் கழுவுதல், துப்பரவுசெய்தல் மற்றும் சமைத்தல் போன்ற வீட்டிலுள்ள வேலைகளை ஆண்கள் பகிர்ந்துகொள்ள வேண்டுமென நான் நினைக்கின்றேன்' என்ற கூற்றுடன் உடன்பட்டனர், வீட்டுவேலைகளைப் பகிர்ந்துகொள்ளல் அளவிடையின் மீது அளவிடப்பட்டவாறு, 70 சதவீதமான ஆண்கள் வழமையாக அல்லது எப்போதும் அவர்களது துணைவியே உணவு தயாரிப்பது என அறிவித்திருந்தனர், 59 சதவீதமானோர் வழமையாக அல்லது எப்போதும் அவர்களது துணைவியே வீட்டினைத் துப்பரவு செய்வதாகக் கூறினர், 67 சதவீதமானோர் வழமையாக அல்லது எப்பொழுதும் அவர்களது துணைவியே துணிகளைக் கழுவுவதாகத் தெரிவித்தனர், மற்றும் 52 சதவீதமானோர் வழமையாக அல்லது எப்போதும் அவர்களின் துணைவியே குழந்தைகளைப் பராமரிப்பதாகத் தெரிவித்தனர். மேற்படி சகல செயற்பாடுகளையும் கணக்கிலெடுக்கும் போது, கெயார் களஆய்வின் 62 சதவீதமான ஆண்கள் அவர்களது மனைவியர் அல்லது பெண் சினேகிதிகளே அவர்களைவிட அதிகம் வீட்டுவேலைகளைச் செய்வதாகத் தெரிவித்தனர்.

அட்டவணை 3.4

## வீட்டுக் கடைமைளில் ஆண் பங்கேற்பு


| ஏனையவர்களிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளும் எந்த உதவியையும் உள்ளடக்காது, எவ்வாறு நீங்களும் உங்கள் துணைவரும் பின்வரும் பணிகளைப் பிரித்துக் கொள்கின்றீர்கள்? | நான் எல்லாவற்றையும் செய்கின்றேன் சதவீதம் | வழமையாக நான் சதவீதம் | சமமாகப் பகிர்ந்து அல்லது ஒன்றாகச் செய்யப்படுகின்றது சதவீதம் | வழமையாகத் துணைவர் சதவீதம் | துணைவர் எல்லாவற்றையும் செய்கின்றார் சதவீதம் | எங்களில் எவரும் செய்வதில்லை / ஒன்றாக வசிப்பதில்லை சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| உணவு தயாரித்தல் | 1.6 | 2.1 | 23.6 | 49.8 | 20.7 | 2.1 |
| வீட்டைத் துப்பரவாக்குதல் | 2.0 | 3.1 | 32.8 | 42.9 | 16.5 | 2.7 |
| துணி துவைத்தல் | 1.8 | 1.8 | 27.0 | 41.0 | 25.9 | 2.5 |
| குழந்தைகளைப் பராமரித்தல் | 0.8 | 2.4 | 39.1 | 34.7 | 17.3 | 5.8 |

இளைய, கல்விகற்ற ஆண்கள், மற்றும் வீட்டுவேலைகளில் ஈடுபட்ட தந்தையர்களைக் கொண்ட ஆண்கள் அவர்களாகவே வீட்டுக் கடமைகளில் ஈடுபடும் சாத்தியம் அதிகமாக இருந்ததாக IMAGES களஆய்வில் (2010)அவதானிக்கப்பட்டது; மற்றும் பிரேசில், சிலி, குரோஷியா, தென் ஆபிரிக்கா, மெக்சிகோ, மற்றும் ருவண்டா போன்ற நாடுகளில் சகல இடங்களிலும் களஆய்வு செய்யப்பட்ட அரைவாசி ஆண்கள் அவர்களின் பெண் துணைவர்களுடன் ஒப்பிடும்போது அவர்கள் தாம் ஒன்று அல்லது அதிக வீட்டுக் கடமைகளில் (பாரம்பரியமாக ஆண்கள் தொடர்புடைய ஒரு பணியென்றாலும்) இந்தியா விதிவிலக்காக, ஒரு சமனனான அல்லது அதிக பங்கினை வகித்ததாகக் கூறினர். வீட்டுவேலைகளைச் செய்த தந்தையர்களைக் கொண்ட ஆண்கள் தாங்களாகவே வீட்டுவேலைகளில் ஈடுபடும் மற்றும் பகிர்ந்துகொள்ளும் சாத்தியம் அதிகமாக இருந்ததாக கெயார் ஆய்வுச் சான்று ஆதரிக்கின்றது. ஆண் பிரதிவாதிகளில் அறுபத்தொரு சதவீதமானோர் அவர்களுடை தந்தையர் சிலவேளைகளில் உணவு தயாரித்ததாகத் தெரிவித்தனர், 63 சதவீதமானோர் சிலசமயங்களில் அவர்களது தந்தையர் அவர்களது வீட்டைத் துப்பரவு செய்ததாகக் குறிப்பிட்டிருந்தனர், 57 சதவீதமானோர் அவர்களது தந்தையர்கள் சிலசமயரங்களில் துணிகளைக் கழுவியதாகக் கூறினர், 50 சதவீதமானோர் அவர்களது தந்தையர் அவர்களை அல்லது சகோதரர்களைக் கவனித்துக்கொண்டதாகத் தெரிவித்தனர் மற்றும் 44 சதவீதத்தினர் அவர்களது தந்தையர் சிலசமயங்களில் சந்தைக்குப் போவதாகத் தெரிவித்தனர், அதேவேளை 47 சதவீதத்தினர் அவர்களது தந்தையர் பெரும்பாலும் சந்தைக்குப் போகும் வேலையைச் செய்வதாகத் தெரிவித்தனர்.

அவர்களது தந்தையர் பெரும்பாலும் வீட்டுக் கடமைகளில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவித்தவர்களில், 49 சதவீதத்தினர் மட்டும் அவர்களது மனைவியர் அல்லது பெண் நண்பிகள் வழமையாக வீட்டுவேலைகளைச் செய்வதாகக் கூறினர். எவ்வாறாயினும், அவர்களது தந்தையர்கள் அரிதாக வீட்டுவேலைகளில் பங்குபற்றியதாகத் தெரிவித்த 69 சதவீதமான ஆண்கள் அவர்களது மனைவியர் அல்லது பெண் நண்பிகள் வழமையாகப் பெரும்பாலான வீட்டுவேலைகளைச் செய்ததாகக் கூறினர் (பக்கம் 3.1 ஐப் பார்க்கவும்). இது அவர்களின் தந்தையர்கள் வீட்டுக் கடமைகளைப் பகிர்ந்துகொண்ட அல்லது சிலவேலைகளில் ஈடுபட்டிருந்த ஆண்கள் அவர்களும் அதிக வீட்டுவேலைகளைச் செய்தமைக்கு தெளிவான சான்றுகளை வழங்குவதுடன் - வீட்டுவேலைகளில் பால்நிலை ஒப்புரவான மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகளை ஊடுகடத்துவதில் பெற்றோர்நிலையின் முக்கியத்துவத்தினைச் சுட்டிநிற்கின்றது.

**உரு 3.1**

## வீட்டுவேலைப் பகிர்வு 'மரபுவழிப்பெறுகை' வரைபடம் (ஆண் களஆய்வு)




**வீட்டு வேலைகளில் தந்தையர்களின் பங்கேற்பு எண்ணிக்கை அளவு**

### 3.5 தீர்மானம் மேற்கொள்ளல்

தீர்மானம் மேற்கொள்வதிலுள்ள ஒப்புரவு பால்நிலை ஒப்புரவு குறிகாட்டியாக நீண்டகாலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அது பரஸ்பர ஆதரவினைக் குறிப்பதுடன் பெண்களுக்கு முகாமை, தெரிவு மற்றும் பொறுப்புக்களைச் செயலாற்றுவதற்கு இடமளிக்கின்றது. வாழ்க்கைத் துணைவர்கள் மற்றும் நெருங்கிய துணைவர்களுடன் வீட்டு நிதிநிலவரம், வள மேம்பாடு, சிறுவர்களுடைய கல்வி மற்றும் குடும்பச் சுகாதாரம் தொடர்பான முக்கிய விடயங்கள் தொடர்பாக மரியாதையுடன் உகந்த கலந்துரையாடல்களில் ஈடுப்பட்டிருக்க இயல்வதற்கு தீர்மானம் மேற்கொள்வதிலுள்ள ஒப்புரவு ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரினுடைய தன் மதிப்பு மற்றும் ஒட்டுமொத்த உறுதியான குடும்ப நல்வாழ்வு என்பவற்றை அதிகரிப்பதற்கு இட்டுச் செல்லும்.

குடும்பத்தில் தீர்மானம் மேற்கொள்வதில் பால்நிலை ஒப்புரவு தொடர்பாக களத்திலிருந்து கிடைக்கும் தரவுகள் கலப்பானவையாக இருக்கின்றது. அதேவேளை ஆண்களில் 76 சதவீதத்தினர் அவர்களே அவர்களுடைய வீட்டின் குடும்பத் தலைவர்கள் எனத் தெரிவித்தனர் (அவ்வாறே தெரிவித்த 6 சதவீதமான பெண்களுடன் ஒப்பிடும்போது) அறுபது சதவீதமான ஆண்கள் "சகல குடும்ப விடயங்களிலும் ஒரு ஆண் இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டும்" என்ற கூற்றுடன் உடன்படவில்லை (அட்டவணை 3.2 இனைப் பார்க்கவும்). இது குடும்ப விடயங்களின் நிலை எவ்வாறு எனச் சுட்டிநிற்பதுடன் (பாராமரிப்பு வழங்கல், குழந்தைகள் வளர்த்தல், வீட்டு வேலையாட்கள், அயலவர் தொடர்புகள், நாளாந்த வீட்டுச் செலவினங்கள் முதலியன தொடர்பாக என வழமையாக விளங்கிக்கொள்ளப்படுகின்றது), அது தனிப்பட்ட பெண்ணியக் களத்தினுள்ளானவையாக கருதப்படுவதுடன், வீட்டினுள் ஒரு குறைந்த ஆணாதிக்க வடிவிலான தீர்மானம் மேற்கொள்ளல் தொடர்பாக ஆண்களிடம் ஒரு நாட்டமிருப்பதனைச் சுட்டிநிற்கின்றது. அவர்களின் சொந்தக் குடும்பத்தில் பெண்களின் ஆரோக்கியம் தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்வதில் சமமான தீர்மானம் மேற்கொள்ளல் நிகழ்வதாக ஐபத்தைந்து சதவீதமான ஆண்கள் கூடத் தெரிவித்திருந்தனர், அதேவேளை 73 சதவீதமான ஆண்கள் குழந்தைகளின் பாடசாலைச் செயற்பாடுகள் தொடர்பில் வழமையாக யார் இறுதித்தித் தீர்மானம் மேற்கொள்வது என்பது தொடர்பில் இரண்டு துணைவர்களும் சமமாக தீர்மானிப்பதாகத் தெரிவித்தனர். உணவு மற்றும் உடைகள் தொடர்பாக குடும்பம் எவ்வாறு பணம் செலவிட வேண்டும் என்பது தொடர்பாக இரண்டு துணைவர்களும் சமமாகத் தீர்மானிப்பதாக அறுபத்தாறு சதவீதமான ஆண்கள் கூறினர், மற்றும் வீட்டு உபகரணங்கள் அல்லது வாகனங்கள் வாங்குவது போன்ற பாரிய முதலீடுகள் தொடர்பாக குடும்பம் எவ்வாறு பணம் செலவிட வேண்டும் என்பது தொடர்பில் இரண்டு துணைவர்களும் சமமாகத் தீர்மானிப்பதாக 70 சதவீதமான ஆண்கள் தெரிவித்திருந்தனர்.

பாரிய முதலீடுகள் தொடர்பான தீர்மானங்கள் தவிர, தீர்மானங்கள் சமமாகப் பங்கிடப்படாத வகைகளில், வீட்டுத் தீர்மானங்கள் ஆண்களை விடப் பெண்களினால் அதிகமாக மேற்கொள்ளப்படும் சாத்தியங்கள் இருந்ததனைத் தரவுகள் சுட்டிக்காட்டின.

முன்பு அவதானிக்கப்பட்டவாறு, பெண்கள் பொதுத் தீர்மானம் மேற்கொள்ளும் வகிபாகங்களில் இருக்க வேண்டும் என்பதற்குக் கூட 70 சதவீதமான ஆண்கள் உடன்பட்டிருந்தனர் மற்றும் பொதுக் கொள்கை மற்றும் சட்டவாக்கங்கள் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்பவர்களாக பெண்கள் ஈடுபடுவதற்கு தங்களது ஆதரவினை உணர்த்தி தேர்தல்களில் பெண்களின் பாரிய பங்கேற்பிற்கு 62 சதவீதமானோர் ஆதரவளித்தனர். அரசியற் பிரதிநிதித்துவத்தில் பெண்களின் பாரிய பங்கேற்பிற்கு இலங்கையில் பரிந்துபேசுதல் அதிகரித்திருக்கும் சூழமைவில் இந்த இலக்கங்கள் முக்கியமாக இருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

**அட்டவணை 3.5**

## வீட்டில் தீர்மானம் மேற்கொள்ளல்

| ஆண்கள் ஆய்வு | நீங்கள் சதவீதம் | மனைவி / துணைவர் சதவீதம் | இருவரும் சமமாக சதவீதம் | வீட்டிலுள்ள வேறு உறுப்பினர் சதவீதம் |
|---|---|---|---|---|
| உங்கள் வீட்டில் குடும்பத்திலுள்ள பெண்களின் ஆரோக்கியம் தொடர்பில் வழமையாக இறுதி முடிவெடுப்பவர் யார்? | 11.1 | 31.7 | 54.7 | 2.6 |
| உங்கள் வீட்டில் உங்கள் குழந்தைகள் சம்பந்தமான தீர்மானங்கள் பற்றி வழமையாக இறுதித் தீர்மானம் எடுப்பவர் (அவர்களின் பாடசாலை, அவர்களின் செயற்பாடுகள்) யார்? | 9.6 | 16.9 | 72.8 | 0.7 |
| உங்கள் வீட்டில் உங்கள் குடும்பம் எவ்வாறு உணவு மற்றும் ஆடைகள் தொடர்பில் பணம் செலவிடுகின்றது சம்பந்தமான தீர்மானங்கள் பற்றி இறுதி முடிவெடுப்பவர் யார்? | 13.0 | 18.7 | 65.7 | 2.7 |
| ஒரு வாகனம், ஒரு வீடு அல்லது ஒரு வீட்டு உபகரணம் வாங்குவது போன்ற பாரிய முதலீடுகளில் உங்கள் குடும்பம் பணம் செலவிடுவது பற்றிய இறுதித் தீர்மானம் மேற்கொள்வது யார்? | 23.8 | 4.5 | 69.6 | 2.0 |

GEM அளவிடையில் அளவிடப்பட்டவாறு, எவ்வாறாயினும், தீர்மானம் மேற்கொள்வது தொடர்பாக ஆண்களின் மனப்பான்மைகள் குறைந்த ஒப்புரவானவையாக இருக்கின்றன. அவர்களைப் பாதிக்கும் முக்கியமான தீர்மானங்கள் பற்றி அவர்களுடைய மனைவியர் அல்லது பெண் நண்பிகளை விட தாங்கள் அதிகம் கூற வேண்டியிருப்பதாக ஐம்பத்தாறு சதவீதமான ஆண்கள் தெரிவித்திருந்தனர். மேலும், 79 சதவீதத்தினர் தீர்மானம் மேற்கொள்வதற்கு ஒரு குடும்பத் தலைவராயிருக்க வேண்டுமென ஈடாக்கினர், ஆணா அல்லது பெண்ணா வீட்டின் தலைவர் என்பதனை இது இரண்டாவது மிக தீர்க்கமான காரணியாகச் செய்திருக்கின்றது (86 சதவீதமான ஆண்கள் வீட்டுத் தலைமைத்துவம் வருமானம் பிறப்பிப்பதன் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும் எனக் கூறினர்).

தீர்மானம் மேற்கொள்வது தொடர்பான வினாக்கள் மனப்பான்மைசார்ந்த கூற்றுக்களாக வினவப்படுகின்ற போது, ஒரு பெரும்பான்மையான ஆண்கள் குறித்துரைக்கப்பட்ட பால்நிலை விதிமுறைகளுடன் உடன்படுகின்றமையை மேற்படி தரவு சுட்டிக்காட்டுகின்றது அது ஆண்களை தீர்மானம் மேற்கொள்பவர்களாக மற்றும் பெண்களைப் பிற்பற்றுபவர்களாக எதிர்பார்க்கின்றது, ஆனால் அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் மற்றும் வீட்டினுள்ளான தொடர்புகளில், ஆண்கள் நெருங்கிய துணைவர்களுடன் பரஸ்பர தீர்மானம் மேற்கொள்வதற்கும் கலந்துரையாடுவதற்கும் அறையை விட்டுச் செல்கின்றனர். 'விவாகம், தந்தைநிலை மற்றும் சமூக வாழ்க்கை என்பன பெரும்பாலும் வெறும் ஆதிக்கம் அல்லது போட்டியிடாத அதிகாரத்தைக் காட்டுவதைவிட பெண்களுடன் விரிவான சமசரங்கள் செய்துகொள்வதனை சம்பந்தப்படுத்துகின்றது' என கொன்னெல் (1995 மற்றும் 2005, ப.79) அவதானிக்கின்றார்.

மக்கள் செய்வது ஒருபுறம், மற்றும் நாளாந்த நடவடிக்கைகளுக்கு அவர்கள் இணைக்கும் புலக்காட்சிகள் மற்றும் மதிப்புகள் மறு புறம் இரண்டிற்கும் இடையேயான கலப்பின இயக்கு ஆற்றல் அவர்கள் இருவருடைய செயற்பாடுகள் மற்றும் அவர்களுடைய புலக்காட்சிகள் மற்றும் விழுமியங்கள் அடிக்கடி மாற்றமடைவதற்கும் சீரமைக்கப்படுவதற்கும் அனுமதிக்கின்றது. இது மீண்டும் ஒரு முறை, 'ஒரு குடும்பத் தலைவராவது ஒரு பொதுமைப்பட்ட ஆண்பாலின் பகுதியாக இருக்கின்றது ... மேலாதிக்க சீரமைக்கு எதிராக உள்ளபடியான ஆண்களின் செயலாற்றல்கள் [வேண்டும்] அது [மேலும்] வாழ்க்கையின் கல்வி, வீடு மற்றும் சொந்தபந்தம் போன்ற மற்ற அம்சங்களை கட்டமைக்க உதவும்' (சொப்ரா, ஒசெல்லா, 2004, ப.16).

## 3.6 வரதட்சணை

கெயார் ஆய்வின் ஆண் பிரதிவாதிகளிடையே விவாகம் செய்யும் போது வரதட்சணை அல்லது சீதனம் வாங்குவது ஒரு முக்கியமான காரணியாக இருக்கவில்லை, அவர்களில் 85 சதவீதத்தினர் வரதட்சணையை முக்கியமானதாக அவர்கள் கருதவில்லை எனக் கூறினர் மற்றும் அவர்களில் 69 சதவீதத்தினர் அவர்களுடைய விவாகங்களில் வரதட்சணை சம்பந்தப்பட்டிருக்கவில்லை எனத் தெரிவித்தனர். விவாகங்களில் வரதட்சணை சம்பந்தப்பட்டிராத மக்கள் குழுவில், 75 சதவீதமான ஆண்கள் வரதட்சணையாக வீடுகள் தரப்பட்டிருந்தவிடத்தில், ஆதனம் அவருடைய பெயரில் இருக்கவில்லை எனத் தெரிவித்திருந்தனர், மற்றும் ஆண்களில் 70 சதவீதத்தினர் வரதட்சணையாக ரொக்கம் தரப்பட்டிருந்தவிடத்து, அது தனியே மனைவியின் பெயரில் வைப்பிலிடப்பட்டிருந்தது. இது இலங்கையிலுள்ள திருமண மரபுகளின் பல்வேறு தோற்றுப்பாடுகள் மற்றும் ஆதன உடைமையைச் சுட்டிநிற்கின்றது. தொடங்குவதற்கு, பல சந்தர்ப்பங்களில், உரிமையாளர்கள் மரபுரிமையாகப் பெற்ற ஆதனங்களுக்கு சட்டரீதியான உரித்துக்களைக் கொண்டிருப்பதில்லை ஆகவே ஆணோ அல்லது பெண்ணோ அவர்கள் மரபுவழி உரிமையாக அனுபவிக்கும் ஆதனத்தின் உரித்தைக் கொண்டிருக்கும் சாத்தியமில்லை (பின்டோ மற்றும் அல்மெயிடா-குணரட்ண, 2010). இரண்டாவது மனப்பான்மைகள் மற்றும் திருமண மரபுகள் மாறிவருகின்றபோது பெற்றோர் அவர்களின் புதல்விகளின் பாதுகாப்பினை அவளுடைய பெயரில் தனியாக சீதனமாக வரதட்சணை வழங்கி உறுதிப்படுத்துவதனைத் தெரிந்தெடுத்துக் கொண்டனர், எதிர்கால மருமகன் வரதட்சணை அவர்களின் பெயர்களில் எழுதப்பட்டிருக்குமாறு வற்புறுத்தாத அல்லது முடியாதவாறு ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துகின்றது.

கெயார் ஆய்விலிருந்தான தரவு எவ்வாறு வரதட்சணை செலவிடப்படவேண்டுமென்பது தொடர்பில் முடிவெடுப்பதில் கூட மிதமான ஒப்புரவினைச் சுட்டிக்காட்டுகின்றது. எண்பத்திரண்டு சதவீதமான ஆண்கள் இரு துணைவர்களும் வரதட்சணை எவ்வாறு செலவிடப்பட வேண்டுமென சமமான கட்டுப்பாட்டினைக் கொண்டிருந்ததாகத் தெரிவித்தனர், அதேவேளை 65 சதவீதமான பெண்களும் அதையே தெரிவித்தனர். ஆண் மற்றும் பெண் பதிலளிப்புகளில் உள்ள இடைவெளி ஆண்களினால் அதிகமாக- அறிவிக்கப்பட்டிருப்பதற்கான சாத்தியத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. வரதட்சணை தொடர்பான வன்முறை இன்னமும் நிலவுகின்றது: நெருங்கிய துணைவர் வன்முறையில் பிழைத்து தேவை நாடும் பெண்களின் உதவிய நாடியவர்களின் ஒரு சமீபத்திய நிகழ்முறை அறிக்கை (ஜயசுந்தர, 2012, ப.14) அதன் நெருங்கிய துணைவர் வன்முறைகுடும்ப வன்முறை வழக்குகளில் 13 சதவீதம் வரதட்சணை தொடர்பானவையாக அவதானிக்கின்றது. கெயார் ஆய்வில் வரதட்சணை ஒரு முக்கிய காரணியாக நெருங்கிய துணைவர் வன்முறையில் கண்டுபிடிக்கப்படவில்லை மற்றும் அது எவ்வாறு குடும்பத்தினுள் பகிர்ந்தளிக்கப்பட்டது என்பது தொடர்பில் ஒரு மிதமான பால்நிலை ஒப்புரவினைக் காட்டியது.

## 3.7 உடந்தையாக மற்றும் மாறிவரும் ஆண்மைகள்

சகல ஆண்களும் மேலாதிக்க ஆண்மை முன்மாதிரியைக் கடைப்பிடிப்பதில்லை அதேவேளை, யதேச்சாதிகாரமான, பகைமைத் தொடக்கம் மற்றும் வன்முறை வழிகளினாலும் கூட மற்றவர்களைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றால் குணாதிசயப்படுத்தப்பட்ட பிறிதொரு வகையான உடந்தையான ஆண்மை, கொன்னெல் (1995 மற்றும் 2005, ப.79-80) அது மேலாதிக்க ஆண்மையிலிருந்து நன்மையடைந்திராத போதிலும், இருப்பதாக வாதிடுகின்றார். உடந்தையான ஆண்மை மேலாதிக்கமாக இருப்பதுடன் இணைந்திருக்கும் ஆபத்துக்களை எடுக்க மறுக்கின்றது (அதாவது., வெறும் பகைமைத் தொடக்கம் மற்றும் வன்முறைச் சண்டைகளின் விளைவு), ஆனால் இருந்தபோதிலும் மேலாதிக்க கருத்திட்டத்தினை ஒரு சாந்தமான பார்வையாளர் போல், மேலாதிக்க ஆதிக்கம் மிக்க ஆண்மை கொண்டுவரும் 'ஆணாதிக்க ஆதாயப் பங்கினை' அதனால் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. வன்முறைக்கான வளங்கள் இல்லாவிட்டால் கூட, ஆண்கள் அனுபவித்து சக்திபெறும் இந்தக் கட்டமைப்புச் சலுகை, 'ஒரு பலசாலியான ஆணுக்கு, ஒரு குண்டாந்தடியால் பயன் என்ன?' என்ற சிங்களப் பழமொழியில் சான்று பகர்ந்தவாறு அது சிங்களப் பண்பாட்டில் விளங்கிக்கொள்ளப்பட்டிருக்கின்றது (செனிவிரட்ண, 1936, ப.141)

ஆகவே, அவர்களது துணைவர்கள் எவ்வாறு ஆடையணிய வேண்டுமெனத் தாம் கட்டுப்படுத்துவதாக உடன்பட்ட 55 சதவீதமான ஆண்கள், அவர்களது துணைவர்கள் யாருடன் நேரத்தைச் செலவிட வேண்டுமென தாம் கூறுவதாகப் பிரகடனப்படுத்திய 57 சதவீதமான ஆண்கள் மற்றும் ஒரு தரப்பட்ட நேரத்தில் அவர்களது துணைவர்கள் எங்கு இருக்கின்றார்கள் எனத் தாம் அறிய விரும்புவதாக உடந்தையாக இருக்கும் ஆண்கள், அவர்கள் வன்முறையைப் பயன்படுத்தாவிட்டாலும் கூட, தாம் ஆண்களாக அனுபவிக்கும் அவர்களது பாலினம் மற்றும் கட்டமைப்பு அநுகூலங்களை ஈடுபத்தி பெண்களைக் கட்டுப்படுத்துகின்றமைக்கு ஏற்புத் தெரிவித்திருந்த 55 சதவீதமான ஆண்கள் ஆகியோர்களைப் பார்ப்பதற்கு அது சாத்தியமானதாக இருக்கின்றது. அதே வினாக்கள் கலத்தினைப் பயன்படுத்தி, ஆண்களை விடப் பெண் பிரதிவாதிகள் ஆண்களின் குறைந்த கட்டுப்படுத்தும் நடத்தையை அறிவித்திருந்தமை கவனிக்கத்தக்கதாக இருக்கின்றது: 39 சதவீதமான பெண்கள் மட்டுமே அவர்கள் விரும்பியதை அவர்களுடைய ஆண் துணைவர்கள் அணிய அனுமதிப்பதில்லை என அவதானித்திருந்தனர்; 41 சதவீதமான பெண்கள் அவர்களுடைய ஆண் துணைவர்கள் அவர்கள் யாருடன் நேரம் செலவிட வேண்டுமெனக் கட்டுப்படுத்துவதாகக் கூறினர் மற்றும் 46 சதவீதமானோர் எல்லா நேரமும் தாங்கள் எங்கே இருக்கின்றார்களென அவர்களுடைய ஆண் துணைவர்கள் அறிய விரும்புவதாக கூறினர்.

9 இது மருமகன்மார் எப்பொழுதும் வரதட்சணை ஆதனத்தில் பற்றார்வமற்றிருப்பார்கள், அல்லது வேறுவழிகளில் ஆண்கள் ஆதனத்தைக் கட்டப்படுத்துவதில்லை என்று பொருளில்லை. மக்கில்வ்றேய் மற்றும் லோறன்ஸ் (2010, ப்109) மற்றும் ஒசெல்லா மற்றும் ஒசெல்லா (2006, ப.3) மனைவியின் இன மரபுக்குழுவிடம் மரபுரிமையாகப் பெறும் கோலங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில், மற்றும் இந்து காரணவன் தாய்வழி சமூகம்சார்ந்த முறைமை பற்றி முறையே அவர்களின் கலந்துரையாடல்களில் இந்தக் கருத்தை உருவாக்குகின்றனர்.

10 வேறு ஆண்கள் வன்முறை இழைக்கின்ற போது அவ்வாறான உடந்தை கூட ஆண்களை அப்பால் நோக்குமாறு வற்புறுத்துகின்றது. கெயார் மாதிரியில் 45 சதவீதமான ஆண்கள் மட்டும் ஆண் நண்பர் ஒருவர் ஒரு பெண்ணுக்கு எதிராக உடல்சார் அல்லது பாலியல் வன்முறையை பயன்படுத்துவதனைக் கண்டால் தாங்கள் தலையிடுவோம் எனக் கூறினர்; அதேவேளை பெண்களுக்கு எதிரான வன்முறையில் அந்நியர்கள் சம்பந்தப்பட்டிருந்த வகையில் இலக்கம் 32 சதவீதத்திற்கு வீழ்ந்தது.

எப்படி நாங்கள் இந்த முரண்பாட்டைப் புரிந்துகொள்ள முடியும்? ஒரு புறம் பெண்கள் பதிலளிப்புகள் பெண்கள் மேலான ஆண் கட்டுப்பாட்டு நிகழ்வுகளை குறைத்து அறிவிக்கப்படுவதாக பொருள் விளக்க முடியும், அல்லது ஆண்கள் கட்டுப்படுத்தும் அளவினைப் பெண்கள் இனிமேல் அதன் தாக்கத்தினை உணராதவாறு இயல்பாகுமாறு அகவயமாக்கலாக இருக்கலாம். இது பால்நிலை விதிமுறைகள் பெண்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் உயர்ந்த வீதங்களின் அடிப்படையிலும் கூட விளக்க முடியும் (இந்த அத்தியாயத்தில் முன்னர் கலந்துரையாடப்பட்டவாறு). எவ்வாறாயினும், இது விளக்கங்கள் பெண்களிடமிருந்து முகமை மற்றும் புலக்காட்சிகளைத் திருடுகின்றன. மேலே அவதானிக்கப்பட்வாறு, ஆண்கள் திருமணங்களில் மற்றும் சமூக வாழ்க்கையில் சமரசங்களைச் செய்துகொள்கின்றனர் (கொன்னெல், 1995 மற்றும் 2005, ப.79), மற்றும் சீராக்கங்கள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கலந்துரையாடல்கள் குணாதிசயப்படுத்தும் மக்கள் உண்மையில் என்ன செய்கிறார்கள் மற்றும் அவர்கள் கொண்டிருக்கக் கூடிய புலக்காட்சிகள் மற்றும் மதிப்புகள் என்ன என்று இடைவினா எழுப்புகின்றன (வொல், 2004, ப.109). இந்தப் பின்னணியில், ஆடையணிதல், நகர்மை மற்றும் இணைவுகள் பற்றிய விடயங்கள் கெயார் மாதிரியின் பெண் பிரதிவாதிகள் சந்தித்திருக்காமை சாத்தியமானதாக இருக்கின்றது ஏனெனில் வெளிப்படையான கட்டுப்பாடு மற்றும் ஆண்களின் வன்தாக்கப் பகுதி விஷயங்களில் ஆனால், மாறாக, இசைந்து கொடுக்கும் ஊக்கத்தில் உடன்பட்டவாறு முக்கியத்துவம் பெறுகின்றது.

## 3.8 இறுதிச் சுருக்கம்

பால்நிலை மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான தரவு ஆண்களின் உள்ளபடியான நடத்தைகள் சிலவேளைகளில் அவர்களின் மனப்பான்மைகளை விடப் பால்நிலை ஒப்புரவானதாக இருக்கின்றதென்ற தகவலைச் சுட்டிநிற்கின்றது, பெண்கள் இந்த ஒப்புரவற்ற மனப்பான்மைகளை நிலைநிறுத்தி மீள உருவாக்குகின்றார்கள், மற்றும் வீட்டுக் கடமைகளில் தந்தையர்களின் பங்கேற்பு அவர்களின் புதல்வர்களின் பங்கேற்பில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இந்தத் தரவிலிருந்து பல்வேறு குறிப்பிடத்தக்க தாக்கங்கள் எழுகின்றன. GEM அளவிடையில் அளவிடப்பட்வாறு, ஆண் பிரதிவாதிகள் அவர்களின் தனிப்பட்ட நாளாந்த வாழ்க்கையில் குறிப்பிட்ட நடவடிக்கைகள் பற்றி வினவப்பட்டபோது பால்நிலை ஒப்புரவற்ற மனப்பான்மைகளில் அதிக சதவீதத்தினை அளித்திருந்தனர். சமுதாயத்தில் கருத்தியலாக இருக்கின்ற பால்நிலை விதிமுறைகளுக்கு பதிலளிக்குமாறு கேட்கப்பட்டபோது, ஒரு குறிப்பிட்ட சதவீதமான ஆண்கள் இந்த விதிமுறைகள் நடைமுறையில் இருந்தாலும் கூட அவைகள் எவ்வாறு மிகவும் இடமளிப்பனவாகவும் அல்லது பெண்களுடனான அவர்களின் உறவுகளில் மூலோபாயமானவையாகவும் உள்ளன என உறுதிப்படுத்துவதனை சுட்டிநிற்கின்றன. ஆண்களின் கூறப்பட்ட மனப்பான்மைகள் மற்றும் உள்ளபடியான நடத்தைகளுக்கு இடையிலான இந்தத் தொடர்பற்றநிலை மாற்றத்திற்கான ஒரு தளத்தை பரிந்துரைக்கின்றது. ஆண்மையின் புதிய பேருரைகள் மற்றும் நடைமுறைகள் எழுகின்றபோது, ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலார்களினதும் வாழ்கைகளில் நிகழ்ந்த மாற்றங்களுக்கு அவர்கள் அவசியம் பதிலளிக்க வேண்டும். இது பொதுச் செயற்பரப்பில் பெண்களில் பாரியளவிலான வலுவூட்டல் மற்றும் பெண்களின் உரிமைகள் மற்றும் உரிமங்களை மனித உரிமைக் கோட்பாடுகளின் ஒரு உள்ளார்ந்த பகுதியாக்கத் தூண்டுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

இன்னும் எச்சரிக்கை தேவையாக இருக்கின்றது ஏனெனில், விஜயான் (2004, ப.373) அவதானித்தவாறு, ஆண்மையின் வடிவங்கள் மற்றும் தேவைகள் மாறியிருக்கலாம் அதேவேளை, அதன் விநியோக நலன், முகாமைத்துவம் மற்றும் அதிகாரத்திற்கான அணுகல் மாறாதிருக்கின்றது. இது உதாரணமாக, சமமான தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் பொது வாழ்க்கையில் பெண்களின் பாரிய பங்கேற்பு என்பன தொடர்பாக உடன்பாட்டிற்கு அனுமதிக்கும் ஆண்மை ஏன், பெண்களின் கீழ்ப்படிவு, வீட்டுக் கடமைகளைப் பெண்ணியப்படுத்தல் மற்றும் பெண்களின் பாலியல் தொடர்புகளைக் கட்டுப்படுத்தல் என்பவற்றிற்கு அழைப்புவிடுக்கும் வெளிப்படையான ஆணாதிக்க ஆண்மையுடன் நேரடியான போட்டியாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதனை விளக்குகின்றது. மாறாக, இந்த பல்வகைமை வகையான ஆண்மை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ ஒன்றோடொன்றுடன் உடந்தையாகவும் ஒத்துழைப்பாகவும் இருக்கின்றது.

ஒரு ஒத்திசைவு இருக்கின்றது, ஆகவே, ஆண்மையின் வடிவ வித்தியாசங்களிடையே, சமூகங்கங்கள் மாறினாலும் மேலாதிக்க அல்லது ஆதிக்கம் மிக்க ஆண்மையாவதற்கு (விஜயன், 2004, ப.364) இயலச்செய்யும் ஆணாதிக்க நிபந்தனைகள் அந்த மாற்றத்தினுள் ஏற்கனவே உள்வாங்கப்பட்டிருக்கின்றன. இது அரசாங்கம், தொழில்நுட்பம் மற்றும் கூட்டுநிறுவனச் செயற்பரப்பு தொடர்ந்தும் ஏன் ஒரு ஆண்மைப்படுத்தப்பட்டு வருகின்றதெனவும் விளக்குகின்றது, தனிப்பட்ட ஆண்களாக கூட (கெயார் மாதிரியில் உள்ளவாறு) அவர்களின் நாளாந்த வாழ்க்கை, தீர்மானம் மேற்கொள்வது தொடர்பான நடைமுறைகள், பெண்களின் உடைகள் மற்றும் நகர்மைக் கட்டுப்பாடு மற்றும் சமகொடுப்பனவிற்கான மனப்பான்மைகளில் மிதமான பால்நிலை ஒப்புரவினைக் காட்டுகின்றன.

அத்தியாயம் 4:

# ஆற்றலை உருவாக்குதல்: பெண்கள் மற்றும் ஆண்களுக்கு எதிரான ஆண் வன்முறை

## பிரதான முடிவுகள்

- எப்போதாவது துணைவராகவிருந்த ஆண்களில் மூன்றில் ஒருவர் அவர்களுடைய வாழ்நாளில் நெருங்கிய துணைவர் ஒருவருக்கு உடல்சார் மற்றும்அல்லது பாலியல்சார் வன்முறையைப் புரிந்ததாக அறிவித்தனர்.

- எப்போதாவது துணைவராகவிருந்த ஆண்களில் ஐந்தில் ஒருவர் அவர்களுடைய வாழ்நாளில் அவர்களுடைய நெருங்கிய துணைவருக்கு எதிராக பாலியல்சார் வன்முறை புரிந்ததாக அறிவித்திருந்தனர்.

- குழந்தைப்பராய உடல்சார், பாலியல் அல்லது மனவெழுச்சி சார் துஷ்பிரயோகங்களை அனுபவித்த ஆண்கள் 1.6 முதல் 2 மடங்கு அதிகமாக அவர்களது துணைவர்களுக்கு எதிராக வன்முறைக் குற்றம்புரிதலுக்கான சாத்தியம் இருக்கின்றது.

- பாலியல் வன்முறை பெரும்பாலும் பொதுவாக நெருங்கிய துணைவர் உறவுகளினுள்ளே இடம்பெற்றிருந்த அதேவேளை, ஆண் பிரதிவாதிகளில் 6 சதவீதமானோர் வல்லுறவு உள்ளடங்கலான, பாலியல் வன்முறைக் குற்றச்செயல்களை ஒரு துணைவரல்லாத பெண்ணுக்கு எதிராகப் புரிந்ததாக அறிவித்திருந்தனர்.

- உடல்சார் துணைவர் வன்முறைக் குற்றம்புரிதல், பரிமாற்ற பாலுறவில் ஈடுபடல் அல்லது பாலியல் தொழிலாளருடன் பாலுறவு, குழந்தைப்பராய மனவெழுச்சி அல்லது பாலியல் அனுபவங்கள், மற்றும் பல பாலியல் துணைவர்களைக் கொண்டிருத்தல் சகலமும் ஒரு துணைவரல்லாத ஒருவருக்கு எதிரான வல்லுறவு உட்பட ஆண்களின் பாலியல் வன்முறைக் குற்றம்புரிதலுடன் தொடர்புபட்டன.

- பாலியல் வன்முறைக் குற்றம்புரிதலை ஒப்புக்கொண்ட அநேக ஆண்கள் அவர்களது முதல் குற்றச்செயலைப் புரிந்தது அவர்கள் 20-29 வயதுகளில் இருந்தபோது என ஒப்புக்கொண்டிருந்தார்கள். இருபத்தெட்டு பேர் முதற் தரம் இதனைச் செய்தபோது அவர்கள் 15 மற்றும் 19 வயதகளுக்கு இடைப்பட்டவர்களாக இருந்தனர்.

- பாலியல் வன்முறைக் குற்றம்புரிந்ததாக அறிவித்த அநேகமான ஆண்கள் அவர்கள் பாலியல் உரிமையால் உந்தப்பட்டதாகக் கூறினர், அதேவேளை மது மிகக்குறைந்த ஊக்கசக்தியாக அறிவிக்கப்பட்டிருந்தது.

- இருபத்தெட்டு சதவீதமான ஆண் பிரதிவாதிகள் குழந்தைப்பராயத்தில் பாலியல் துஷ்பிரயோகத்தை அனுபவித்திருந்ததாக அறிவித்திருந்தனர்.

- நான்கு சதவீதத்தினர் தற்பாற்சேர்க்கை வெறுப்பு வன்முறை அனுபவங்களை அறிவித்ததுடன் நான்கு சதவீதத்தினர் எப்போதாவது ஒரு ஆணினால் பாலியல்ரீதியாக தாக்கப்பட்டிருந்தனர்.

## 4.1 அறிமுகம்

பல்வேறு நிலைப்பாடுகளில், அது பிராய்டியின் உளவியல் பகுப்பாய்வு அல்லது இரண்டாவது அலை பெண்ணியம், எதுவாயினும் ஆண்களின் உடல்கள் மற்றும் உளவியல் ஆன்மாவின் உள்ளார்ந்த ஆக்கிரமிப்பினால் இயக்கப்படுவதனால் அதனைச் சுற்றி ஆண்மையின் அடையாளம் உருவாகி கூர்ப்படைகின்றது (சொடொறோ, 2002, ப.255; கொன்னெல், 2005, ப.45). சமூக விஞ்ஞானிகள் அத்துடன் பால்நிலை செயற்பாட்டாளர்கள் மற்றும் புலமைசார் ஆய்வாளர்களின் அண்மைய தலையீடுகள் வன்முறையைக் கண்டறிகின்றது, மறுபுறத்தில், ஆதிக்கப் பால்நிலையினால் எப்போதும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது, அதனால் அதிகாரத்துடன் வன்முறை பிணைக்கப்படுவதுடன் (கொன்னெல், 2005, ப.83), ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாருக்கும் பிரயோகமாகின்றது. நான்ஸி கொடொறோ (2002, ப.252) எங்களுக்கு நினைவுபடுத்துகின்றவாறு 'ஆக்கிரமிப்பு கண்டுபிடிக்கப்பட்டிருப்பதுடன் இரு பால்நிலைகளிலும் நோயியல் அல்லாத வழிகளில் உருவாகின்றது'. எவ்வாறாயினும், குழந்தை வளர்ப்புத் தொடர்பாக தாயாராக மற்றும் பாடசாலை ஆசிரியைகளாக அல்லது மாமியார்களாக அல்லது யுத்தங்களில் மற்றும் ஆயுதமேந்திய புரட்சிகளில் போர்க்களங்களில் போராளி உறுப்பினர்களாக வன்முறையை ஏற்படுத்துபவர்களாக வன்முறையைப் பயன்படுத்தும் ஆக்கிரமிப்பான பெண்களின் இருப்பிற்கான சான்றுகள் இருந்தபோதும், பால்நிலை ஆய்வுகளில் பெரும்பாலும் அமைதிப்படுத்தப்பட்டு புறக்கணிக்கப்பட்டதொரு வன்முறைப் பரப்பாக இருக்கின்றது. குறைந்தபட்சம் 1995 இல் பீஜிங்கிலிருந்தாவது பெண்களுக்கு எதிரான ஆண் வன்முறையின் அளவிலும் தீவிரத்திலும் சர்வதேச கவனம் மற்றும் ஆதரவு இருந்தாலும் கூட அவ்வாறான பெண் வன்முறைச் சம்பவங்கள் குறைவாகவே தெரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, பாலின தொழில்புரிபவர்கள் மற்றும் அறிஞர்களின் மேலாதிக்க சமீபத்திய கவனம் பெண்களுக்கு எதிரான ஆண் வன்முறை தொடர்பாக இருந்திருக்கின்றது.

இந்தக் கவனம் ஆண்கள் மிகப் பெரும்பாலும் சமூகம், பண்பாடு, அரசு மற்றும் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆயுதமேந்தி அதனால் அதிகாரத்திற்கான அணுகலைக் கொண்டிருக்கின்றனர் என்ற உண்மையிலிருந்து பெருக்கெடுத்திருக்கின்றது. அவர்கள் 'ஒரு மேலாதிக்கச் சித்தாந்தத்தினால் அங்கீகரிக்கப்பட்டதன்' காரணமாக ஆண்கள் அதனால் குடும்ப, பாலியல், இராணுவ மற்றும் நகர வன்முறைகைளில் லோதிக்கக் குற்றம் இழைப்பவர்களாக உருவாகியிருக்கின்றார்கள் (கொன்னெல், 2001, ப.44). ஆனால் ஆண்கள் பெண்கள் மேலான அவர்களின் மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு மட்டுமல்லாது அவர்களின் வேறுபாடு (இனம், வர்க்கம், வகுப்பு, பாலியல்) சாதி, மேலாதிக்க ஆண்மைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் வேறு ஆண்களுக்கு எதிராகவும் கூட வன்முறையைப் பயன்படுத்துகின்றனர். இந்த வழியில் வன்முறை பால்நிலை அரசியலில் ஆண்களுக்கிடையே தாமாகவே முக்கியத்துவத்தைப் பெறுகின்றது (ibid).

ஆண் வன்முறை கட்டமைப்புச் சமமின்மைக்கும் தொடர்புடையதாகக்கூட இருக்கின்றது. முககா (2012, ப.30) வறுமையின் இருப்பு, வருமான ஒப்புரவின்மை, பொருளாதார சந்தர்பங்களுக்கான சமனற்ற அணுகல், தொழில் சந்தைகள், சுகாதாரம் மற்றும் கல்விச் சேவைகள் ஆண் மீதான ஆண் வன்முறைக்கு இட்டுச்செல்கின்றன ஆகவே, உலகளாவிய ரீதியில், பெண்களைவிட ஆண்கள் அபாயகரமான தாக்குதல்களில் பொது இடங்களில் நகர மற்றும் கிராம அமைப்புகள் இரண்டிலும் கொல்லப்படும் சாத்தியம் அதிகமாக அத்துடன் சற்றே நகர்ப்புற அமைப்புகளில் பெண்களைவிட அதிகமாகப் பாதிக்கப்படக்கூடியதாக இருக்கின்றது. நகர அமைப்புகளில் கோடிட்டுக் காட்டப்பட்ட சான்றுகள் கூட நகரமயப்பட்ட அமைப்புகளில், பெண்கள் ஆண்களினால் பாலியல்சார் வன்முறைக் குற்றம் இழைத்தலில் உயர்ந்தளவு துன்பப்பட்டிருந்தபோதும், ஆண்கள் பெண்களைவிட அதிக உடல்சார் தாக்குதல் மற்றும் வன்முறைக் கொள்ளைகளை அனுபவிக்கும் போக்கு காணப்படுவதாகக் காட்டுகின்றது (ibid).

இலங்கையில் நகர மற்றும் கிராம அமைப்புகள் இரண்டிலும் ஆண் மீதான ஆண் வன்முறையின் தாக்கம் இன்னமும் விரிவாக ஆராயப்பட வேண்டியிருக்கின்றது. பால்நிலை சார்ந்த வன்முறை தொடர்பாகக் கிடைக்கக்கூடிய தேசிய இலக்கியங்கள் ஆண் வன்முறைக்கு பெண்கள் மற்றும் மகளிர் பாதிப்புக்குள்ளாதலை மேலாதிக்கமாக கவனத்திலெடுத்திருந்தன. இந்த இலக்கியங்கள் வளரிளம்பருவ மகளிர்களின் பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து கற்பழிப்புவரை பல்வேறு வன்முறைச் செயல்கள் மற்றும் சூழமைவுகளில் மதிப்புமிக்க சான்றுகளை வழங்கியுள்ளன, நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் ஆயுதப் போராட்டத்தில் வன்முறை (சண்முகம் மற்றும் இமானுவேல், 2010; விஜேயதிலக, 2004; ஜயசுந்தர, 2012; லோகநாதன் மற்றும் டி. சில்வா, 1999). சமீபத்திய குடும்ப வன்முறை தொடர்பான ஆய்வுகள் ஆண்கள் போதை, பாதிக்கப்பட்டவரின் தங்கியிருக்குந்தன்மை, பாலியல் உரிமை, பொறாமை மற்றும் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினால் தலையீடு போன்ற பல்வேறு காரணங்களுக்காக வன்முறைக் குற்றம் இழைப்பதாகக் காட்டுகின்றன (ஜயசுந்தர, 2012, ப.14). பாலியல் உரிமை மற்றும் குடும்பத் தலைமைத்துவத்திற்கான அச்சுறுத்தல் கூட (உதாரணமாக, விரிவான குடும்பத்தினால்) ஆண்களின் அவர்கள் அடிக்கடி பாதுகாக்கும், பின்னர் வன்முறை ஊடான ஆண்மை உணர்வு மீது ஒரு நேரடியான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது.

ஆண்மை மற்றும் வன்முறைக்கு இடையேயான இணைப்பு பாதிக்கப்பட்ட பெண்களுக்கு முன் இருந்த மற்றும் சுய-சான்றாக பெரும்பாலும் முழுவதும் வருகின்றது. 'வன்முறை இடம்பெறுவது ஏனெனில் குற்றம் இழைத்தவர் பொதுவாக வன்முறையானவர் அத்துடன் பாதிக்கப்பட்ட பிழைத்தவர் தொடர்பாக வன்முறைசெய்வதற்கு எந்த காரணமும் தேவையில்லை' என உதவி நாடும் பெண்களினால் நடாத்தப்பட்ட குடும்ப வன்முறை தொடர்பான ஆய்வில் பங்கேற்ற முப்பந்தைந்து சதவீதமான பெண்கள் கூறினர்.

இது ஆண்கள் இயல்பாக வன்முறையாளர்களாக இருப்பது பெண்களினால் அகவயப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் ஒரு சூழமைவில் ஆண் வன்முறை இயல்பாக்கப்பட்டு விதிமுறைப்படுத்தப்படுவதைச் சுட்டிநிற்கின்றது மேலும் அரசு, சட்டம் மற்றும் சமுதாயம் காரணமாக தண்டனை தொடர்பாக தளர்ந்ததாக அல்லது ஒன்றுக்கொன்று மாறுபட்டனவாக இருக்கின்றன. கெயார் ஆய்விலிருந்தான சான்றுகள் இந்த சகல விடயங்களுக்கும் பேசுகின்றன. இந்த அத்தியாயம் பெண்களுக்கு எதிரான ஆண் வன்முறை தொடர்பான ஏற்கவேயுள்ள ஆய்வுகளை முழுமையாக்கி கட்டியெழுப்புவதுடன், பால்நிலை சார்ந்த வன்முறைகளின் நிலவுகை மற்றும் காரணங்கள், போக்குகள், அனுபவங்கள் மற்றும் வன்முறை நாடும் ஆண்களின் உந்துசக்திகளைக் கண்டறிவதில் ஆனால் புறக்கணிக்கப்பட்ட ஆண் மீதான ஆண் வன்முறையின் ஆனால் முக்கிய அம்சங்களைக் கூடக் கோடிட்டுக்காட்டுகின்றது.

## 4.2 பெண்களுக்கு எதிரான ஆண் வன்முறை: நெருங்கிய துணைவர் வன்முறையின் நிலவுகை

நெருங்கிய துணைவர் வன்முறை என்ற பதம் ஒரு தற்போதைய அல்லது முன்னைய வாழ்க்கைத் துணைவர் அல்லது துணைவரால் மேற்கொள்ளப்படும் உடல்சார், பாலியல், பொருளாதார அல்லது மனவெழுச்சி வன்முறையைக் குறிக்கின்றது. உலக சுகாதார நிறுவனம் நெருங்கிய துணைவர் வன்முறையை 'ஒரு நெருங்கிய உறவில் உடல்சார், பாலியல், அல்லது உளவியல்சார் தீங்கினைத் தோற்றுவிக்கும் நடத்தை, உடல்சார் வன்தாக்கு, பாலியல் பலவந்தப்படுத்தல், உளவியல் துஷ்பிரயோகம் மற்றும் கட்டுப்படுத்தல் நடத்தைகள் உட்பட' என வரையறுக்கின்றது. இந்தப் பிரிவு பொருளாதார, மனவெழுச்சி, உடல்சார் மற்றும் பாலியல் வன்முறையை ஒரு பெண் நெருக்கிய துணைவருக்கு எதிராக ஆண்களினால் பயன்படுத்தப்படுவது தொடர்பாகக் கவனஞ் செலுத்துகின்றது. இந்தக் களஆய்வில் பயன்படுத்தப்பட்ட நெருங்கிய துணைவர் வன்முறையின் செயற்பாட்டு வரைவிலக்கணங்கள் ஆராய்ச்சி முறைகள் அத்தியாயத்தில் தரப்பட்டிருக்கின்றன.

### அட்டவணை 4.1

### எப்போதாவது துணைவராகவிருந்த ஆண்கள் உடல்சார் குற்றம்புரிந்ததாக அறிவிக்கப்பட்ட சதவீதம்

| | |
|---|---|
| ஏதாவது உடல்சார் வன்முறை செயல் (எப்போதாவது) | 24.2 |
| ஏதாவது உடல்சார் வன்முறை செயல் (12 மாதங்களினுள்) | 5.0 |
| அடித்தது | 12.7 |
| தள்ளியது இடித்தது | 19.0 |
| முட்டியால் அடித்தது | 6.8 |
| உதைத்தது, இழுத்தது, அடித்தது | 2.5 |
| மிரட்டியது அல்லது ஆயுதம் பயன்படுத்தியது | 2.2 |
| உடல்சார் துஷ்பிரயோகம்: ஒருபோதுமில்லை | 75.8 |
| ஒரு சில தடவைகள் | 14.6 |
| பல தடவைகள் | 9.6 |
| **துணைவராகவிருந்த மொத்த ஆண்களின் எண்ணிக்கை** | 1132 |

கெயார் மாதிரியில், எப்போதாவது துணைவராகவிருந்த 18-49 வருடங்கள் வயதுடைய ஆண்களில் 24 சதவீதத்தினர் உடல்சார் நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றம் இழைத்ததாக ஒப்புக்கொண்டனர் அவற்றுள் தள்ளுதல் மற்றும் இடித்துத் தள்ளுதல் (19 சதவீதமான ஆண்களினால் இழைக்கப்பட்டிருந்தது) மற்றும் அறைதல் (13 சதவீதமான ஆண்களினால் இழைக்கப்பட்டிருந்தது) என்பன பொதுவான வன்முறை வடிவங்களாக இருந்தன (அட்டவணை 4.1 இனைப் பார்க்கவும்). எப்போதாவது துணைவராகவிருந்த பெண் பிரதிவாதிகளில் இருபத்தொரு சதவீதத்தினர் ஆண் நெருங்கிய துணைவரால் உடல்சார் வன்முறையை அனுபவித்ததாக, ஆண்களினால் அறிவிக்கப்பட்ட நிலவுகையைச் சான்றுதி செய்து, அறிவித்திருந்தனர். இது முன்னைய ஆய்வுகளை மீள்வலியுறுத்துகின்றது (ஜயசுந்தர, விஜேவர்த்தன, அக்ஸிமோ, 2011, ப.8), அது பெண்களுக்கு எதிரான ஆண்களின் உடல்சார் வன்முறை பெரும்பான்மையான வகைகளில் அடித்தல், உதைத்தல், இழுத்தல், நெரித்தல் மற்றும் சுடுதல் என்பவற்றைக் கொண்டிருந்ததெனக் கூட உறுதிசெய்திருந்தது. கெயார் ஆய்வில், 5 சதவீதமான ஆண்கள் கடந்த 12 மாதங்களில் துணைவர் ஒருவருக்கு எதிராக உடல்சார் வன்முறையைப் புரிந்ததாகத் தெரிவித்திருந்தனர்.

[12] உலக சுகாதார நிறுவனம். 2005

அட்டவணை 4.2

## எப்போதாவது துணைவராகவிருந்த ஆண்களிடையே பாலியல் துணைவர் வன்முறைக் குற்றம்புரிந்ததாக அறிவிக்கப்பட்ட ஆண்களின் சதவீதம்

| | |
|---|---|
| ஏதாவது பாலியல்சார் வன்முறை செயல் (எப்போதாவது) | 19.78 |
| ஏதாவது பாலியல்சார் வன்முறை செயல் (12 மாதங்கள்)* | 5.72 |
| உடல்சார் பலவந்தப்படுத்தப்பட்ட பாலுறவு | 12.72 |
| அவள் விரும்பவில்லையென நீங்கள் அறிந்த போது ஆனால் அவள் உங்கள் மனைவி/காதலியாக(ஆண்) இருந்த காரணத்தால் அவள் இணங்க வேண்டுமென நீங்கள் எண்ணியதால், பலவந்தப்படுத்தி பாலுறவு கொண்டிருத்தல். | 10.54 |
| ஆபாசப்படங்களைப் பார்க்க வற்புறுத்தியமை | 6.04 |
| வேறு ஏதாவது பாலுணர்வு சம்பந்தமாக செய்ய வற்புறுத்தியமை | 7.16 |
| **துணைவராகவிருந்த மொத்த ஆண்களின் எண்ணிக்கை** | 1092 |


Ÿ சில மறுப்புக்கள் காரணமாக இந்த வினாவுக்குப் பதிலளித்த ஆட்களின் எண்ணிக்கை எப்போவதாவது துணைவராகவிருந்த ஆண்களின் எண்ணிக்கையைவிட சிறிது குறைவானதாகும்.

Ÿ சில மறுப்புகள் காரணமாக பாலியல் துணைவர் வன்முறைக்கான பதிலளிப்புகளின் எண்ணிக்கை பாலியல் துணைவர் உடல்சார் வன்முறைகளுக்கானவைகளை விட சிறிது குறைவாக இருக்கின்றது.

வயதுகள் 18 – 49 வருடங்களுக்கிடையில் எப்போதாவது துணைவராகவிருந்த ஆண்களில் ஐந்தில் ஒருவர் (20 சதவீதம்) நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றத்தை இழைத்தாகத் தெரிவித்தனர்; அது பற்றி இந்த அத்தியாயத்தில் பின்னர் விபரமாக கலந்துரையாடப்படும். மிகவும் பொதுவான பாலியல் வன்முறை வடிவமானது ஒரு துணைவரைப் பாலியல் உடலுறவு கொள்வதற்காக அவளின் விருப்பத்திற்கு மாறாக உடல்ரீதியாக பலாத்காரம் செய்தல் அந்தக் குற்றம் எப்போதாவது துணைவராகவிருந்த 13 சதவீதமான ஆண்களினால் இழைக்கப்பட்டிருந்தது (அட்டவணை 4.2 இனைப் பார்க்கவும்).

உரு 4.1

## எப்போதாவது துணைவராகவிருந்த ஆண் மற்றும் பெண்களிடையே, நெருங்கிய துணைவர் வன்முறையின் ஆண் குற்றம் இழைத்தலின் வாழ்நாள் நிலவுகை மற்றும் பெண் அனுபவம்



ஒட்டுமொத்தமாக, எப்போதாவது துணைவராகவிருந்து மூன்றில் ஒரு ஆண் (36 சதவீதம்) அவர்கள் அவர்களுடைய வாழ்நாளில் ஒரு நெருங்கிய துணைவர் ஒருவருக்கு எதிராக உடல்சார் மற்றும் அல்லது பாலியல் வன்முறை புரிந்ததாக தெரிவித்தனர், இது எப்போதாவது துணைவராகவிருந்த பெண்களில் 29 சதவிதத்தினரால் அவ்வாறு வன்முறையை அனுபவித்ததாக உறுதிப்படுத்தப்பட்டது. கெயார் ஆய்வில், உரு 4.2 இல் காட்டப்பட்டவாறு உடல்சார் மற்றும் பாலியல் துணைவர் வன்முறைக் குற்றம் இழைத்தமைக்கு இடையே சில மேற்பொருந்தகை இருப்பதாக தரவுகள் காட்டுகின்றன. உடல்சார் அல்லது பாலியல் வன்முறை இழைத்ததாகத் தெரிவித்த ஆண்களின் குழு ஒன்றைக் கூர்ந்துநோக்கி அவர்கள் பாலியல் வன்முறையை விட உடல்சார் வன்முறையைத் தாமாகவே இழைக்கும் சாத்தியம் இருப்பதனை நாங்கள் கண்டறிந்திருந்தோம். வன்முறை இழைத்த ஆண்களின் இருபத்தொரு சதவீதத்தினர் ஒரு துணைவருக்கு எதிராக உடல்சார் மற்றும் பாலியல் வன்முறை இரண்டினையும் பயன்படுத்தியிருந்தனர்.

**உரு 4.2**

**உடல்சார் மற்றும் பாலியல் வன்முறைக் குற்றமிழைத்தலின் மேற்பொருந்துகை - Overlap)**




கெயார் மாதிரியில் நாற்பத்தொரு சதவீதமான ஆண்கள் அவர்களது நெருங்கிய துணைவரை மனவெழுச்சி ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததாக ஏற்றுக்கொண்டனர்; 31 சதவீதத்தினர் அவர்களின் துணைவர்களுக்கு எதிராக மிரட்டல் மற்றும் அச்சுறுத்தலைப் பயன்படுத்தியதை ஏற்றுக்கொண்டனர் (அட்டவணை 4.3 இனைப் பார்க்கவும்).

### அட்டவணை 4.3

## மனவெழுச்சித் துஷ்பிரயோகச் செயல்களை அறிவிக்கும் ஆண்களின் சதவீதம்

| | ஆண் சதவீதம் |
|---|---|
| ஏதாவது மனவெழுச்சிசார் துஷ்பிரயோகச் செயல் (எப்போதாவது) | 40.7 |
| ஏதாவது மனவெழுச்சிசார் துஷ்பிரயோகம் (12 மாதங்கள்) | 14.3 |
| அவமதிப்புகள் | 14.6 |
| சிறுமைப்படுத்தல் தாழ்வுபடுத்தல் | 10.9 |
| மிரட்டல் அச்சுறுத்தல் | 30.9 |
| தீங்கிழைப்பது பற்றிய அச்சுறுத்தல் | 17.8 |
| அவளைக் காயப்படுத்தும் ஒரு வழியாக ஏனையவர்களைக் காயப்படுத்தல் | 9.6 |
| மனவெழுச்சித் துஷ்பிரயோகம்: ஒருபோதுமில்லை | 59.3 |
| ஒரு சில தடவைகள் | 19.5 |
| பல தடவைகள் | 21.1 |
| **துணைவராகவிருந்த மொத்த ஆண்களின் எண்ணிக்கை** | 1131 |

பதினெட்டு சதவீதமான ஆண்கள் பொருளாதாரம்சார் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூட அறிவித்திருந்தனர், அவை அவர்களின் துணைவர்களை தொழிலுக்குச் செல்வதிலிருந்து தடுத்தல், துணைவரின் உழைப்பினை எடுத்தல் மற்றும் குடும்பத்தை நடாத்துவதற்குப் போதிய நிதியில்லாதிருந்த போதும் மது அல்லது புகையிலை மற்றும் தமக்காக பணத்தினைச் செலவிடுதல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது (அட்டவணை 4.4 இனைப் பார்க்கவும்).

### அட்டவணை 4.4

## பொருளாதாரம்சார் துஷ்பிரயோகத்தை அறிவிக்கும் ஆண்களின் சதவீதம்

| | ஆண் சதவீதம் |
|---|---|
| ஏதாவது பொருளாதாரம்சார் துஷ்பிரயோகச் செயல் (எப்போதாவது) | 18.0 |
| ஏதாவது பொருளாதாரம்சார் துஷ்பிரயோகச் செயல் (12 மாதங்கள்) | 6.4 |
| பணியிலிருந்து தடைசெய்யப்பட்டிருத்தல் | 9.0 |
| ஆண் துணைவர் அவளது உழைப்பினை அவளது விருப்பத்திற்கு மாறாக எடுத்திருத்தல் | 6.4 |
| துணைவரை வீட்டிலிருந்து வெளியே விரட்டியிருத்தல் | 5.1 |
| தனக்காப் பணத்தை வைத்திருத்தல் | 8.1 |
| பொருளாதாரம்சார் துஷ்பிரயோகம்: ஒருபோதுமில்லை | 82.0 |
| ஒரு சில தடவைகள் | 13.4 |
| பல தடவைகள் | 4.6 |
| **துணைவராகவிருந்த ஆண்களின் மொத்த எண்ணிக்கை** | 1131 |

## 4.3 நெருங்கிய துணைவர் வன்முறையுடன் இணைந்த இடர்க்காரணிகள் அல்லது இயக்கிகள்

### அட்டவணை 4.5

### ஆண் உடல்சார் மற்றும் அல்லது பாலியல் துணைவர் வன்முறைக் குற்றச்செயல், வயது, கல்வி, திருமணத் தகுதிநிலை மற்றும் வருமான ரீதியாக

| | வாழ்நாள் உடல்சார் மற்றும் அல்லது பாலியல் துணைவர் வன்முறை<br>சதவீதம் | தற்போதைய உடல்சார் மற்றும் அல்லது பாலியல் துணைவர் வன்முறை<br>சதவீதம் |
|---|---|---|
| மொத்தம் (சகல எப்போதாவது துணைவராகவிருந்த ஆண்களிடையே) | 36.0 | 20.3 |
| **வயது** | | |
| 18–24 | 19.0* | 11.4* |
| 25–34 | 35.0 | 23.3 |
| 35–49 | 37.4 | 21.8 |
| **கல்வி** | | |
| எதுவுமில்லை | 14.3 | |
| ஆரம்ப | 29.7 | |
| ஏதாவது இரண்டாம் நிலை | 34.7 | |
| இரண்டாம் நிலை பூர்த்தி | 30.8 | |
| மூன்றாம் நிலை | 34.9 | |
| **தற்போதைய உறவுப் படிநிலை** | | |
| தற்போது விவாகமான | 37.8* | |
| தற்போது இணைந்து வசிக்கின்ற | 20.0 | |
| தற்போது துணைவரைக் கொண்டுள்ள ஆனால் சேர்ந்து வாழாத | 19.9 | |
| முன்பு விவாகமாகியிருந்த | 47.1 | |
| முன்பு துணைவராகவிருந்த | 16.0 | |
| **வருமானம்** | | |
| குறைந்த | 32.7 | |
| கீழ் – நடுத்தரம் | 35.3 | |
| மேல் உயர்ந்த | 37.5 | |

* குடித்தொகையில் குழுவினுள் நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றமிழைத்தலின் சதவீதங்களில் புள்ளிவிபரவியல் ரீதியாக கணிசமானளவு வித்தியாசம்.

நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றமிழைத்தலுடன் இணைந்த குடித்தொகையியல் சிறப்பியல்புகளைப் பரிசீலனைக்கு எடுக்கின்றபோது, வெவ்வேறு வயதுக் குழுக்களினுள் மற்றும் வெவ்வேறு உறவுமுறை வகைகளினுள் வன்முறைச் சதவீதத்தின் மாறுபாடுகள் தெளிவாக இருக்கின்றது. ஒரு வயதான ஆண் வாழ்நாள் துணைவர் வன்முறைக் குற்றமிழைத்தலில் உயர்ந்த சதவீதத்தைப் பெறுகின்றார். இது வயதான ஆண் அதிகம் வன்முறையைப் பயன்படுத்துகின்றார் என்று கருதவில்லை, ஆனால் இந்த முடிவு எதிர்பார்கப்பட்டது ஏனெனில் ஒரு வயதான ஆண் ஒரு துணைவருக்கு எதிராக வன்முறைக் குற்றமிழைத்தலுக்கான உள்ளாற்றலைப் பன் மடங்கு கொண்டிருக்கின்றார். வயதான அல்லது இளமையான ஆண்களா உண்மையில் அதிக வன்முறை குற்றமிழைக்கின்றார்கள் என்பதைப் பார்ப்பதற்கு கடந்த 12 மாதங்களில் தற்போதைய வன்முறைக் குற்றமிழைத்தல் வீதம் தீர்க்கமானதாக இருக்கின்றது. அட்டவணை 4.5 இலிருந்து நாம் காண்கின்றவாறு, 25-34 வருடங்கள் வயதுடைய ஆண்கள், உண்மையிலேயே, மிக உயர்ந்த நடைமுறை வன்முறைக் குற்றமிழைத்தல் வீதத்தைக் கொண்டிருக்கின்றனர். மிகவும் இளைய வயதுக் குழு மிகக் குறைந்த குற்றமிழைத்தல் வீதத்தைக் கொண்டிருக்கின்றது, ஏனெனில் பெரும்பான்மையானோருக்கு விவாகமாகி இருக்கவில்லை மற்றும் இன்னும் இணைந்து வாழும் உறவுகளிலும் இருக்கவில்லை. வருமானக் குழுவின்படி நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றமிழைத்தலில் சிறிதளவு மாறுபாடுகள் இருக்கின்றன, இருந்தபோதும் மிக உயர்ந்த வருமானக் குழுவில் உள்ள ஆண்களிடையே வீதங்கள் சிறிதளவு உயர்வாக இருந்தது. உதாரணமாக, மிகக் குறைந்த வருமானக் குழுவில் நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றமிழைத்தல் நிலவுகைகள் 33 சதவீதமாக இருப்பதுடன் மிக உயர்ந்த குழுவில் அது 38 சதவீதமாக இருக்கின்றது. இந்தத் தரவு ஒரு பொதுவான எடுகோளான நெருங்கிய துணைவர் வன்முறை குறைந்த வருமானக் குழுக்களிடையே ஒரு பாரியளவு நிகழ்வுகளைக் கொண்டிருக்கின்றது என்பதனை மறையச்செய்கின்றது. (வருமானம் ஒரு மாறியாக வருகின்ற போது, கெயார் மாதிரி முழுமையாக கீழ் நடுத்தர- வகுப்பு வகையினுள் வருமானம் மாதமொன்றிற்கு ரூபா 6,000 (அமெ$ 47) இற்கும் ரூபா 20,000 (அமெ$ 157) இற்கு இடையே அடங்குகின்றது.

கெயார் ஆய்வு நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றமிழைத்தலில் கல்வி மட்ட அடிப்படையில் புள்ளிவிபர ரீதியாக எந்தக் கணிசமான மாறுபாடும் கண்டறியப்படவில்லை. எவ்வாறாயினும், வன்முறை வீதங்கள் குறைந்த கல்விக் குழுக்களில் சற்றே குறைவாக இருக்கின்றமை, குறைவாகக் கற்ற ஆண்கள் மிகவும் வன்முறையாளராக இருக்கின்றார்கள் என்ற கருத்தை மறையச் செய்கின்றது. எவ்வாறாயினும், நெருங்கிய துணைவர் வன்முறையை அறிவித்த 35 சதவீதமான ஆண்களும், துணைவரல்லாதவர் பாலியல் வன்முறை குற்றமிழைத்தலை அறிவித்த 9 சதவீதமான ஆண்களும் மூன்றாம்நிலைக் கல்வியைப் பூர்த்திசெய்திருந்தனர். இது இளமாணிப்பட்ட ஆண் இளநிலை மருத்துவ மாணவர்களின் 2006 ஆம் ஆண்டு ஆய்வுடன் ஒத்ததிர்கின்றது அதில் 33 சதவீதமான பிரதிவாதிகள் மனைவியை அடிப்பதனை நியாயப்படுத்தினர், 63 சதவீதத்தினர் அவர்களுக்கு எதிரான வன்முறைப் பழியின் பாரிய அளவினைப் பெண்கள் சுமக்கின்றனர் என 63 சதவீதத்தினர் கூறினர் மற்றும் 23 சதவீதத்தினர் ஒரு கணவனால் அவனுடைய மனைவிக்கு எதிரான அவ்வப்போதான வன்முறை அவர்களுடைய விவாகத்தை பராமரிப்பதற்கு உதவும் எனக் கூறினர் (ஜயதிலக, et al., 2010, ப.93). இந்த முடிவுகள் பாடசாலை, பல்கலைக்கழகங்கள் மற்றும் வேறு மூன்றாம்நிலை கல்விசார் நிறுவனங்களில் பாலினம் சார்ந்த வன்முறைத் தடுப்பினை நோக்கி நிகழ்ச்சித்திட்டமிடல் தலையீடுகளுக்கான தேவையை சுட்டிக்காட்டுகின்றன.

கெயார் ஆய்வில் கண்டறியப்பட்டவாறு நெருங்கிய துணைவர் வன்முறையுடன் இணைந்த பல்வேறு இயக்கிகள் அல்லது இடர்க்காரணிகள் இருக்கின்றன. காரணிகளை ஆராய்வதற்கு ஒரு ஆண் துணைவர் வன்முறைக் குற்றமிழைத்தல் இடரினை ஒன்றில் அதிகரிப்பதற்கு அல்லது குறைப்பதற்குப் பல்மாறித் தகவுப் பொருத்தமான பின்னேகல் நடாத்தப்பட்டது. கெயார் ஆய்வு ஆண் நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றமிழைத்தலுக்கு இடைத்தொடர்பிற்கு, பால்நிலை மனப்பான்மைகள், கல்வி, சுகாதாரம், குடும்பத் தீர்மானம் மேற்கொள்ளல், வருமானம், குழந்தைப்பராய மனவதிர்ச்சி மற்றும் ஏனையவைகளின் அனுபவங்கள் உட்பட பல்வேறு மாறிகள் பரிசோதிக்கப்பட்டன. ஒரு நெருங்கிய துணைவருக்கு எதிராக ஆண்களின் வன்முறைப் பயன்பாட்டுடன் புள்ளிவிபரரீதியில் இணைந்திருப்பதாகக் கண்டறியப்பட்ட சகல காரணிகளும் அட்டவணை 4.6 இல் தரப்பட்டிருக்கின்றது. சீராக்கப்பட்ட தனிநிலை வீதங்கள் (aOR) ஒரு குறிப்பிட்ட குணாதிசயம் இருந்தால் ஒரு ஆண் நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றமிழைப்பான் என்பதற்கு அதிகரித்த சாத்தியகூறுகளைக் காட்டுகின்றது.

பாலின ஒப்புரவு அளவிடையில் (GEM ) அளவிடப்பட்டவாறு ஆண்கள் மற்றும் பெண்களின் மனப்பான்மைகள் ஆணாதிக்க வன்முறை மற்றும் குடும்ப மற்றும் சமுதாயச் சூழமைவுகளில் ஆண் அதிகாரத்தைப் பயன்படுத்துதல் ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற மட்டங்கள் உயர்வாக இருப்பதனைச் சுட்டுகின்றன. முன்னைய அத்தியாத்தில் கலந்துரையாடப்பட்டவாறு, ஆய்வு மேற்கொள்ளப்பட்ட மாவட்டங்களிலுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரிலும் பெரும்பான்மையானோர் ஆண்மை கடினத்தன்மை மற்றும் வன்முறையுடன் தொடர்புபட்டதாக நம்புகின்றனர். இந்த நிலைப்பாடுகள் இல்லம் மற்றும் சமூகத்தில் உடல்சார் மற்றும் அல்லது வாய்மொழி வன்முறை இடம்பெறுவதற்கான அடிப்படை நிபந்தனைகளை வழங்குகின்றன. அத்தியாயம் மூன்றில் அவதானிக்கப்பட்டவாறு, இந்தக் கூற்றுக்களை நோக்கிய பெண்களின் மனப்பான்மைகள் உயர்ந்ததொரு வீதத்தில் நிலவியிருந்தது, ஆண்களை ஒரு ஆதிக்கம் மிக்கப் பால்நிலையாக பெண்களுடைய ஒப்புகையை மட்டுமல்லாது வலிமையைப் பங்கிடுவதற்குப் பொருத்தமான பால்நிலையாகக் கூடச் சுட்டிக்காட்டுகின்றன.

குடும்பச் செயற்பரப்பில் வன்முறையை மீள்வலியுறுத்தும் பல்வேறு மனப்பான்மைகள், பெண்களுக்கு எதிரான வன்முறைபற்றிய சகிப்புத்தன்மை மற்றும் பயன்பாட்டுடன் தொடர்புபட்டதாக இருப்பதுடன், வீட்டினுள் ஆண் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்கின்றன. கெயார் ஆய்வு மாதிரியில் இருபத்தாறு சதவீதமான ஆண்கள் மற்றும் முப்பத்தெட்டு சதவீதமான பெண்கள் 'ஒரு பெண்ணை அடிப்பது சரியாக இருக்கின்ற சந்தர்ப்பங்கள் அல்லது பொருத்தமான சூழ்நிலைகள் உள்ளன' என்பதுடன் உடன்பட்டனர், மற்றும் 41 சதவீதமான ஆண்கள் மற்றும் 58 சதவீதமான பெண்கள் 'குடும்பத்தை ஒன்றாக வைத்திருப்பதற்கு ஒரு பெண் வன்முறையைச் சகித்துக்கொள்ள வேண்டும்'. எழுபத்தெட்டு சதவீதமான ஆண்கள் மற்றும் 87 சதவீதமான பெண்கள் 'பெண்கள் அவர்களுடைய கணவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்' எனப் பிரகடனப் படுத்தினர், அதேவேளை 40 சதவீதமான ஆண்கள் மற்றும் 43 சதவீதமான பெண்கள் குடும்ப விவகாரங்களில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமையை ஆண்கள் கொண்டிருக்க வேண்டுமென அவதானித்தனர்.

ஆண்களின் கட்டுப்படுத்தும் நடத்தை, உறவுக் கட்டுப்பாட்டு அளவிடையைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டவாறு, வன்முறையின் இயக்கிகளாகச் செயற்படாவிட்டாலும், மன்னித்துப் பொறுத்துக்கொள்ளும் வன்முறைச் செயலினைப் பிரதிபலிக்கும் தரைச் சூழ்நிலைகளின் வலுவான இடைத்தொடர்பைக் கொண்டிருப்பதாக கண்டறியப்பட்டிருக்கின்றது. அவர்களுடைய துணைவர்களுடன் அடிக்கடி சண்டையிடும் ஆண்கள் கூட வன்முறையைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள், வன்முறையை அரிதாகப் பயன்படுத்தும் ஆண்களுடன் ஒப்பிடும்போது, மிகவும் அதிகமாக இருந்தது. உறவுக்குள் ஆளிடைத் தொடர்பாடல் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் வன்முறையைக் குறைப்பதற்கு சில நேர்மறையான விளைவுகளைக் கொண்டிருக்கலாம்.

பச்சாத்தாபத்தின் மட்டங்கள், அதிஷ்டம் குறைந்த மற்றவர்களுக்கான கவலை குறித்துப் பரிசோதிக்கப்பட்டது, மற்றவர்களை நோக்கிய பாதுகாக்கின்ற தன்மை அவர்கள் நன்மை எடுத்துக்கொள்கின்ற போது, அவர்களுடைய வாழ்க்கையைச் சுற்றிய உணர்நுட்பம் மற்றும் இரக்க நெஞ்சம் அளித்திருக்கின்ற உயர்ந்த மட்டங்களிலான பச்சாத்தாபத்தைக் கொண்டிருக்கின்ற ஆண்கள் ஒரு நெருங்கிய துணைவருக்கு எதிராக வன்முறைக் குற்றமிழைப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதாக முடிவுகள் காட்டின. பச்சாத்தாப அளவிடையில் மிகவுயர்ந்த மட்டத்தைக் கொண்டிருந்தவர்களில் இருபத்தேழு சதவீதமானோரும் பாச்சாத்தாபத்தில் மிகக் குறைந்த மட்டத்தைக் கொண்டவர்களில் 40 சதவீதமானோரும் பாலியல் வன்முறைக் குற்றமிழைத்ததாக கண்டறியப்பட்டமை – உயர் பச்சாத்தாபம் பெண்களுக்கு எதிரான நெருங்கிய துணைவருக்கு எதிரான வன்முறைக் குற்றமிழைத்தலுக்கு ஒரு பாதுகாப்புக் காரணியாக இருக்கின்ற உண்மையைச் சுட்டிநிற்கின்றது. பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிரான பாதுகாப்பைச் சுற்றிய பரிந்துபேசுதலில், ஆகவே, உயர்ந்த பச்சாத்தாபம் ஊக்குவிக்கப்படக்கூடியதொன்றாக இருக்கின்றது.

பெற்றோர்நிலை முன்மாதிரிகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான ஆண்களின் சொந்த அனுபவங்கள் என்பன இந்த பகுப்பாய்வில் பரிசீலிக்கப்பட்ட ஏனைய மாறிகளாகும். சிறுவர்களாக ஆண்களின் மனவதிர்ச்சி அனுபவங்கள் தலைமுறை- இடை ஊடுகடத்தல் மற்றும் மீண்டும்வரும் வன்முறை இரண்டிலும் ஒரு வலுவான பங்கினைக் கொண்டிருக்கின்றது. சிறுவர்களாக உடல்சார், பாலியல் அல்லது மனவெழுச்சி வன்முறை அனுபவங்களைக் கொண்ட ஆண்கள் சிறுவர்களாக அவ்வாறான அனுபவங்களைக் கொண்டிராத ஆண்களைவிட நெருங்கிய துணைவர்களுக்கு எதிராக வன்முறைக் குற்றமிழைக்கும் வாய்ப்புகள் 1.7 தொடக்கம் 2 மடங்கு அதிகமாகும் என கெயார் ஆய்வு கண்டறிந்தது. உதாரணமாக, ஒரு குழந்தையாக அடிக்கப்பட்டிருந்த 41 சதவீதமான ஆண்கள் அவர்களாகவே வளந்தவர்களாக நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றமிழைத்திருந்ததை ஒப்பிடும் போது ஒரு குழந்தையாக அடிக்கப்பட்டிராத நெருங்கிய துணைவர் வன்முறை குற்றமிழைத்திருந்தவர்கள் 18 சதவீதத்தினர் மட்டுமே. வன்முறையை அனுபவித்திருந்த எல்லாப் பையன்களும் குற்றமிழைப்பபவர்களாக ஆகாதிருக்கும் அதேவேளை, வன்முறையை அனுபவித்திருந்த அல்லது நேரில்பார்த்திருந்த பையன்கள் ஆண்களாக அவர்களே வன்முறைக் குற்றமிழைப்பவர்களாக ஆவதற்கு அதிகமான வாய்ப்புக்கள் இருப்பதாக ஆய்வுகள் (ஸ்ற்ராவுஸ் மற்றும் கெலெஸ்; ஜவீ, et al. ஜயசிங்க, ஜயவர்த்தன மற்றும் பெரேரா, 2009, ப.275) காட்டியிருந்தன. வன்முறையற்ற குழந்தைப்பராய அனுபவங்களை மேம்படுத்துவதில் கவனஞ்செலுத்துகின்ற வன்முறைத் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தேவையை இது சுட்டிநிற்கின்றது.

## அட்டவணை 4.6


### இடர் மற்றும் பாதுகாப்பான காரணிகள் (ஆண்களின் உடல்சார் மற்றும் பாலியல்சார் நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றச்செயல் வயது மற்றும் இட ரீதியாக சரிசெய்யப்பட்டது)

| | | எப்போதாவது நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றஞ்செய்த ஆண்களின் சதவீதம் | aOR | CI | | P - பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| | | | | கீழ் | மேல் | |
| குழந்தைப்பராய மனவெழுச்சித் துஷ்பிரயோகம் | ஆம் | 46.6 | 2.02 | 1.38 | 2.96 | <0.0001 |
| | இல்லை | 21.8 | | | | |
| குழந்தைப்பராய பாலியல் துஷ்பிரயோகம் | ஆம் | 46.6 | 1.65 | 1.08 | 2.52 | 0.022 |
| | இல்லை | 29.8 | | | | |
| குழந்தைப் பராய உடல்சார் துஷ்பிரயோகம் | ஆம் | 40.9 | 2.02 | 1.32 | 3.10 | 0.001 |
| | இல்லை | 18.5 | | | | |
| பச்சாத்தாபம் | குறைவு | 39.8 | 0.90 | 0.86 | 0.94 | <0.0001 |
| | உயர்வு | 26.9 | | | | |
| சச்சரவுகளின் நிகழ்வெண் | அரிதாக | 21.5 | 1.00 | 1.00 | 1.00 | |
| | சிலவேளைக-ளில் | 52.4 | 4.61 | 3.21 | 6.62 | <0.0001 |
| | அடிக்கடி | 64.3 | 27.47 | 4.16 | 181.43 | 0.001 |
| துணைவர் மேலான கட்டுப்படுத்தும் நடத்தை | மிகக் குறைந்த கட்டுப்படுத்தல் | 25.2 | 1.00 | 1.00 | 1.00 | |
| | நடுத்தரக் கட்டுப்படுத்தல் | 32.3 | 1.77 | 1.14 | 2.76 | 0.012 |
| | மிக அதிக கட்டுப்படுத்தல் | 43.8 | 3.55 | 1.84 | 6.88 | <0.0001 |

## 4.4 கற்பழிப்புக் குற்றமிழைத்தல் உள்ளடங்கலாக பாலியல் வன்முறை: நிலவுகை, செயலூக்கங்கள், இடர்க் காரணிகள்

உரு 4.3

### ஆண்களினால் கற்பழிப்புக் குற்றமிழைத்தல் உட்பட பாலியல் வன்முறை மற்றும் பெண்களினால் பலியாக்கப்படுதல்




* துணைவர் அல்லாத மற்றும் ஏதாவது பாலியல் வன்முறை எல்லா ஆண்களிடையேயும் இருக்கின்றது, அப்படியிருக்க, நெருங்கிய துணைவர் வன்முறை எப்போதாவது துணைவராகவிருந்த ஆண்களிடையே இருக்கின்றது. ஏதாவது பாலியல் வன்முறையை விட நெருங்கிய துணைவர் வன்முறை உயர்வாக இருப்பதற்கு இதுவே காரணம்.

கெயார் மாதிரியில் பதினேழு சதவீதமான ஆண்கள் எப்போதாவது பெண்கள் அல்லது மகளிருக்கு எதிராக துணைவர்கள் மற்றும் துணைவரல்லாதவர் உட்பட பாலியல் வன்முறைக் குற்றமிழைத்ததாக அறிவித்திருந்தனர். இந்த எண் நெருங்கிய துணைவர்களுக்கு எதிராக பாலியல் வன்முறை மற்றும் நெருங்கிய துணைவரல்லாத ஒருவருக்கு எதிராக பாலியல் வன்முறைக் குற்றமிழைத்ததாக அறிவித்த ஆண்களில் 6 சதவீத்தினரையும் உள்ளடக்கியது.


13 பாலியல் வன்முறை நெருங்கிய துணைவர் வன்முறையின் ஒரு பகுதியாக ஆய்வில் எடுக்கப்பட்டது கவனிக்கப்பட வேண்டும், பாலியல் வன்முறைக்கான எண்ணிக்கைகள் பல நெருங்கிய துணைவர்கள் வன்முறையுடன் மேற்பொருந்துகின்றன.

14 இந்த அறிக்கையில் பயன்படுத்தப்பட்டவாறு பாலியல் வன்முறை என்ற பதம் ஒரு அளவு பாலியல் வன்முறைச் செயல்களைக் குறிக்கின்றது. அது கற்பழிப்பு, அத்துடன் 'பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்" வகையினுள் அடங்கும் செயல்களை உள்ளடக்கலாம். "1995 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்கக் குற்றவியல் சட்டக் கோவை (திருத்தம்) மற்றும் 2006 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரிவு 365 (ஆ) வின் கீழ், பாரதூரமான பாலியல் வன்முறை 'நபரொருவரால் அவருடைய பிறப்புறுப்புக்களை அல்லது மனித உடலின் வேறு ஏதாவது பகுதி அல்லது ஏதாவது உபகரணத்தைப் பயன்படுத்தி ஏதாவது துளை அல்லது வேறொரு நபரின் உடலின் பகுதியில், பிரிவு 363 இன் கீழ் கற்பழிப்பு எனக் கருதப்படாத ஒரு செயல், பின்வரும் விவரணத்தின் கீழ் அடங்கக்கூடிய ஏதாவது சூழ்நிலைகளில், அதாவது – அ) மற்றைய நபரின் சம்மதமின்றி செய்யும் ஏதாவது செயலாக ஜாலியல் மனமகிழ்ச்சிக்காக குற்றம்செய்தஸ்வீரையறுக்கப்படுகின்றது. குற்றவியல் சட்டக் கோவையின் பிரிவு 363 இன் கீழ் "ஒரு பெண்ணுடனான அவளுடைய சம்மதமின்றிய, மனைவியாக இருக்கின்ற சட்டபூர்வமாகப் பிரிக்கப்பட்டவர் உடனானாலும் கூட; பெண்ணின் சம்மதம் வலிமை, மிரட்டல் அல்லது அச்சுறுத்தலைப் பயன்படுத்திப் பெறப்பட்டிருக்கின்ற போது; பெண் மனோநிலை சரியில்லாத அல்லது மது அல்லது போதைப் பொருளால் தூண்டப்பட்டிருக்கின்ற போது; தவறான சூழ்நிலைகளில்; பெண் 16 வயதிற்குக் கீழ்ப்பட்டவராக இருந்தால் அவருடைய சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி, அந்தப் பெண் ஆணினுடைய மனைவியாகவும் 12 வருடங்களுக்கு மேற்பட்டவராகவும் சட்டபூர்வமாகப் பிரிக்கப்படாதவருமாக இருந்தாலன்றி, அவர்களுடனான பாலியல் உடலுறவு" கற்பழிப்பு என வரையறுக்கப்படுகின்றது.

இது ஆண்கள் ஒரு துணைவரல்லாதவரை விட ஒரு நெருங்கிய துணைவருக்கு எதிராக பாலியல் வன்முறைக் குற்றம்செய்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதனைக் காட்டுகின்றது. எவ்வாறாயினும், உரு 4.4 காட்டுகின்றவாறு இந்த எண்ணிக்கைகளிடையே ஒரு மேற்பொருந்துகை கூட இருக்கின்றது, அதன் பொருள் 4 சதவீதமான ஆண்கள் துணைவர்கள் மற்றும் துணைவர் அல்லாதவர்கள் இருவருக்கும் எதிராக பாலியல் வன்முறைக் குற்றமிழைத்திருக்கின்றார்கள்.

**உரு 4.4**

## துணைவர் பாலியல் வன்முறை மற்றும் துணைவரல்லாதவர் பாலியல் வன்முறை குற்றமிழைத்தல் இடையேயான மேற்பொருந்துகை




**உரு 4.4**

## துணைவர் பாலியல் வன்முறை மற்றும் துணைவரல்லாதவர் பாலியல் வன்முறை குற்றமிழைத்தல் இடையேயான மேற்பொருந்துகை

| | ஆண்<br>சதவீதம் |
|---|---|
| ஏதாவது துணைவரல்லாத பாலியல் வன்முறை செயல் (எப்போதாவது) | 6.2 |
| உடல்ரீதியாகப் பலவந்தப்படுத்தப்பட்ட பாலியல் உறவுகள் | 4.6 |
| ஒரு பெண் மறுக்க முடியாதளவு அதிகம் குடித்து அல்லது போதைக்கு உட்பட்டிருக்கும் போது பலவந்தப்படுத்திய பாலுறவுகள் | 1.9 |
| கும்பலாகக் கற்பழித்தல் | 1.6 |
| **மொத்த ஆண்களின் எண்ணிக்கை** | 1440 |

அட்டவணை 4.8

## துணைவரல்லாத பாலியல் வன்முறைக் குற்றமிழைத்தல் வயது, கல்வி, விவாகப் படிநிலை மற்றும் வருமான ரீதியாக

| | துணைவரல்லாதவர் பாலியல் வன்முறைக் குற்றச்செயல் |
|---|---|
| **மொத்த எண்ணிக்கை (சகல ஆண்களும்)** | |
| **வயது** | |
| 18–24 | 3.8%* |
| 25–34 | 8.2% |
| 35–49 | 6.8% |
| **கல்வி** | |
| எதுவுமில்லை | 6.3% |
| ஆரம்ப | 2.7% |
| சில இரண்டாம் நிலை | 6.3% |
| இரண்டாம் நிலை பூர்த்தி | 6.1% |
| மூன்றாம் நிலை | 8.7% |
| **வருமானம்** | |
| குறைந்த | 6.5% |
| கீழ்- நடுத்தரம் | 7.8% |
| மேல் - உயர்தரம் | 5.0% |


* குடித்தொகையில் குழுவினுள் நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றமிழைத்தலின் சதவீதங்களில் புள்ளிவிபரவியல் ரீதியாக கணிசமானளவு வித்தியாசம்.

அட்டவணை 4.8 வெவ்வேறு குடித்தொகையில் பண்புகள் சார்பாக துணைவரல்லாத பாலியல் வன்முறை வீதங்களைக் காட்டுகின்றது. எதிர்பார்கப்பட்டவாறு, ஒரு இளைய வயதைக்கொண்ட ஆண்கள் ஒரு குறைந்த வாழ்நாள் குற்றமிழைத்தல் வீதத்தைக் கொண்டிருக்கின்றனர் ஏனெனில் அவர்களுடைய வாழ்க்கையில் அத்தகைய குற்றமிழைப்பதற்கு அவர்கள் சில வருடங்களையே கொண்டிருந்தனர். கல்விசார்பாக பாலியல் வன்முறை வீதங்களில் கணிசமான வித்தியாசங்கள் இருக்கவில்லை, இருந்தபோதும் இந்த வன்முறை வீதங்கள் கல்வியறிவு அதிகரிப்பதுடன் குறையவில்லை. குறைந்த கல்வியறிவுடைய ஆண்களினால் பாலியல் வன்முறைக் குற்றம்செய்யக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன என்ற புராணத்தை இது தெளிவாக மறையச்செய்கின்றதுடன் பாலியல் வன்முறைக் குற்றமிழைப்பவர்கள் உயர்கல்வியுடான சிறிதளவு அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஆண்களாக இருக்கின்றதனைச் சுட்டிக்காட்டுகின்றது. வருமானம் சார்பாகவும் கூட பாலியல் வன்முறைக் குற்றமிழைத்தல் வீதங்களில் கணிசமான வேறுபாடுகள் இல்லையென கெயார் ஆய்வில் கண்டறியப்பட்ட அதேவேளை, ஏழை ஆண்கள் அதிகம் வன்முறையாக இருந்திருக்கக்கூடிய வாய்ப்புகள் இல்லை என்பது தெளிவாகவிருந்தது.

பாலியல் வன்முறைக் குற்றமிழைத்த ஒட்டுமொத்த சனக்கூட்டத்தில், 64 சதவீதத்தினர் ஒரு பெண்ணைப் பலியாக்கியதை ஏற்றுக்கொண்டனர் (விவாகம்சார்ந்த கற்பழிப்புச் சூழமைவை உறுதிசெய்கின்றது), அதேவேளை 24 சதவீதத்தினர் தாங்கள் இரண்டு மூன்று பெண்களுக்கு எதிராக பாலியல் வன்முறைக் குற்றமிழைத்ததாகக் கூறினர். பன்னிரண்டு சதவீதமான ஆண்கள் கடந்த 12 மாதங்களில் அவர்களுடைய நெருங்கிய துணைவர்களுக்கு எதிராக ஒரு வன்முறைப் பாலியல் செயல் குற்றமிழைத்ததாக தெரிவித்திருந்தார்கள் - மிகவுயர்ந்த சதவீதங்கள் கொழும்பிலும் (22 சதவீதம்) அம்பாந்தோட்டையிலும் (14 சதவீதம்) காணப்பட்டன.

**உரு 4.4**


## பாலியல் வன்முறைக் குற்றமிழைத்ததாக அறிவித்த ஆண்களிடையே கற்பழிப்பு உட்பட, முதல் தடவையாகப் பாலியல் வன்முறைக் குற்றஞ்செய்தபோது வயது




பாலியல் வன்முறைக் குற்றமிழைத்தவர்களில் பெரும்பான்மையானோர் (60 சதவீதம்) முதல் தடவையாக அவர்கள் பாலியல் வன்முறைக் குற்றம்செய்தபோது அவர்கள் 20 மற்றும் 29 வயதுகளுக்கு இடைப்பட்டவர்களாக இருந்தனர். முக்கியமாக, குற்றமிழைத்தவர்களில் 28 சதவீதமானோர் முதற் தடவையாக அத்தகைய வன்முறை குற்றஞ்செய்தபோது 15 – 19 வருடங்கள் வயதுடையவர்களாக (பாடசாலை செல்லும் வயது) இருந்தனர், பாலியல் வன்முறையின் தடுப்பினை நோக்கி பாடசாலைகள் மற்றும் இளம் பையன்களுடன் சேர்ந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை இது சுட்டிக்காட்டுகின்றது.

உரு 4.6

### கற்பழிப்பு உட்பட நெருங்கிய துணைவர் மற்றும் அல்லது துணைவரல்லாதவருக்கு எதிரான பாலியல் வன்முறை குற்றமிழைத்தலுக்கான செயலூக்கம்




கெயார் ஆய்வில் பாலியல் வன்முறை குற்றமிழைத்ததாக அறிவித்த ஆண்கள் அவர்களின் வன்முறைகள் குற்றச்செயலுக்கான செலயலூக்கம் பற்றியும் கூட கேட்கப்பட்டனர் (உரு 4.6). பாலியல் குற்றமிழைத்ததாகக் கூறிய அறுபத்தேழு சதவீதமான ஆண்கள் அவர்கள் பாலியல் உரிமையால் செயலூக்கப்பட்டதாகத் தெரிவித்தனர்: அதாவது, பெண்களுடன் பாலியல் உறவுகள் வைத்திருப்பதற்கான உரிமை.

## 4.5 துணைவரல்லாதவருக்கு எதிரான கற்பழிப்பு உட்பட பாலியல் வன்முறைக் குற்றமிழைத்தலுடன் இணைந்த இடர்க் காரணிகள்

துணைவரல்லாதவர்களுக்கு எதிராக ஆண்களின் பாலியல் வன்முறையுடன் இணைந்த முக்கியமான இடர்க்காரணிகளை அட்டவணை 4.9 அளிக்கின்றது. ஒரு நெருங்கிய துணைவருக்கு எதிராக உடல்சார் வன்முறையைப் பயன்படுத்திய ஆண் ஒரு துணைவரல்லாதவருக்கு எதிராக பாலியல் வன்முறையை ஏறக்குறையமூன்று மடங்கு அதிகமாகப் பயன்படுத்தும் சாத்தியமிருக்கும் ஒரு நடத்தைக் கோலத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. ஒரு குழந்தையாக பாலியல் துஷ்பிரயோகம் அல்லது மனவெழுச்சித் துஷ்பிரயோகத்தை அனுபவித்திருந்த ஆண்கள் கூடப் பின்னர் வாழ்க்கையில் இரண்டு மடங்கு அதிகமாக பாலியல் வன்முறை குற்றமிழைக்கும் சாத்தியமிருக்கின்றது. ஒரு குழந்தையாக பாலியல் வன்முறையை அனுபவித்திராத 3 சதவீதமான ஆண்களுடன் ஒப்பிடுகின்றபோது, ஒரு குழந்தையாக பாலியல் துஷ்பிரயோகஞ் செய்யப்பட்டிருந்த பதினேழு சதவீதமான ஆண்கள் ஒரு பெண்ணுக்கு அல்லது சிறுமிக்கு எதிராக பாலியல் வன்முறைக் குற்றமிழைத்திருந்தனர். இது குழந்தைப்பராயப் பாலியல் துஷ்பிரயோகம் - ஆண் சிறுவர்களின் நல்வாழ்வினை அத்துடன் அவர்களுடைய சொந்த பாலியல் மற்றும் வளர்ந்த ஆண்களாக வன்முறைப் போக்கினை உருவாக்கும் மனவதிர்ச்சிக்கான ஒரு பிரதான காரணம் - மற்றும் துணைவரல்லாதவர் பாலியல் வன்முறைக் குற்றமிழைத்தலுக்கும் இடையே ஒரு நேரடி இணைப்பிருப்பதற்கு இது பேரளவிலான சான்றாவிருக்கின்றது.

[15] கற்பழிப்புக் குற்றமிழைத்தமைக்கு அவர்களின் செயலூக்கத்தைப் பற்றித் தெரிவிக்கும் ஆண்கள் ஒன்று அல்லது மேலும் மூன்று பதிலளிப்புக்களாக இருந்தது: 'எனக்கு அவள் பாலியல்ரீதியாகத் தேவைப்பட்டாள்'; 'நான் பாலுறவு கொள்ள விரும்பினேன்'; 'நான் என்னால் அதைச் செய்யமுடியுமெனக் காட்ட விரும்பினேன்' எனப் பாலியல் வன்முறை வரையறுக்கப்படுகின்றது.

பல பாலியல் துணைவர்களைக் கொண்டிருத்தல் மற்றும் வர்தகப் பாலியல் தொழிலாளர்களுடன் பாலுறவு கொள்ளுதல் அல்லது பரிமாற்றப் பாலுறவு என்பன ஒரு துணவரல்லாதவர் ஆண் பாலியல் வன்முறைக் குற்றமிழைத்தலுடன் இணைந்திருக்கின்றன. ஒரு வர்த்தகப் பாலியல் தொழிலாளருடன் பாலுறவு கொண்ட ஆண்களிடையே துணைவரல்லாத பாலியல் வன்முறை நிலவுகை 25 சதவீதமாக இருந்ததை ஒப்பிடும்போது 3 சதவீதமான ஆண்கள் மட்டும் ஒரு வர்த்தகப் பாலியல் தொழிலாளருடன் பாலுறவைக்கொண்டிருக்கவில்லை.

**அட்டவணை 4.9**

## நெருங்கிய துணைவர் ஒருவருக்கு எதிராக ஆண் பாலியல் வன்முறைக் குற்றமிழைத்தலுக்கான இடர்க் காரணிகள் (வயது மற்றும் இட ரீதியாகச் சரிசெய்யப்பட்டது)

| | | எப்போதாவது துணைவரல்லா-தவர் பாலியல் குற்றம்புரிந்த ஆண்களின் சதவீதம் | aOR | CI | | P பெறுமதி (P value) |
|---|---|---|---|---|---|---|
| | | | | கீழ் | மேல் | |
| உடல்ரீதியான துணைவர் வன்முறைக் குற்றமிழைத்தல் | ஆம் | 15.8 | 2.96 | 1.62 | 5.42 | <0.0001 |
| | இல்லை | 4.5 | | | | |
| பரிமாற்றப் பாலுறவு அல்லது ஒரு பாலியல் வணிகத் தொழிலாளருடன் பாலுறவு | ஆம் | 24.7 | 3.17 | 1.64 | 6.12 | 0.001 |
| | இல்லை | 2.5 | | | | |
| குழந்தைப்பராய மனவெழுச்சித் துஷ்பிரயோகம் | ஆம் | 10.0 | 2.01 | 1.01 | 4.01 | 0.046 |
| | இல்லை | 1.9 | | | | |
| குழந்தைப்பராய பாலியல் துஷ்பிரயோகம் | ஆம் | 16.9 | 2.27 | 1.25 | 4.13 | 0.007 |
| | இல்லை | 3.1 | | | | |
| பாலியல் துணைவர்களின் எண்ணிக்கை | 1 துணைவர் | 2.0 | | | | |
| | 2-3 துணைவர்கள் | 15.2 | 2.91 | 1.37 | 6.16 | 0.005 |
| | 4+ துணைவர்கள் | 21.5 | 6.33 | 2.59 | 15.48 | <0.0001 |

ஆண் உடல்சார் மற்றும் பாலியல் நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் குழந்தைப்பராய மனவதிர்ச்சிக்கும், கட்டுப்படுத்தும் நடத்தை, குறைந்த பச்சாதாபம் மற்றும் சண்டைச்சரவிற்கும் இடையேயான ஒரு வலுவான தொடர்பு; மற்றும் குறைந்த வலுவான ஆனால் ஒத்த குறிப்பிடத்தக்க மது மற்றும் போதைப் பொருள் பயன்பாடு, பெற்றோர்களிடையே வன்முறையைக் காண்பதற்கும் மற்றும் பல மடங்கு பாலியல் துணைவர்கள் மற்றும் பரிமாற்றப் பாலுறவு சம்பந்தப்பட்ட பாலியல் நடத்தை என்பனவற்றைத் தரவு பிரதிபலிக்கின்றது. ஆகவே, விழிப்புநிலைக்கு இந்தக் காரணிகள் ஆண் உடல்சார் மற்றும் பாலியல் வன்முறையின் தள்ளுதல்-இழுத்தல் இயக்கிகளாக, தரவு தேவையை அடிக்கோடிடுகின்றது. இந்த இடர்க் காரணிகளை தேடுவதற்கும் கண்காணிப்பதற்கும் நாங்கள் ஆண்களை திரும்புகின்றோம், முக்கியமாக, சமூக, கலாச்சார, குடும்ப, வெளிசார், மனம்சார் மற்றும் பொருள்சார் சூழமைவுகளில் அவர்களின் நாளாந்த வாழ்க்கையின் மூலங்களாக அதிலிருந்து வன்முறையின் தள்ளுதல்-இழுத்தல் இயக்கிகள் வேரூன்றி முளைவிடும். நாங்கள் அதனால் சகல ஆண்களும் வன்முறையாளர்கள் என்ற அத்தியாவசியமாக்கலில் இருந்து விலகி பதிலாக சமயங்களில் தங்களையும் மட்டுமன்றி, அவர்கள் மனைவிகள் அல்லது பெண் நண்பிகள், மற்றும் வேறு பெண்கள் அத்துடன் ஆண்களுக்கும் இடருண்டாக்கும் வன்முறை ஆண்களை கட்டமைத்து உருவாக்கும் காரணிகளை இலக்குவைக்கின்றோம்.

## 4.6 பாலியல் வன்முறைபற்றிப் பெண்களினால் அறிவிக்கப்படுதல்

கெயார் ஆய்வில் பெண்களிடமிருந்தான மாதிரி ஆண்களிடமிருந்தானதை விடச் சிறியது, மற்றும் பெண்களின் அனுபவங்களின் ஒரு முழுமையான படத்தை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அது ஆண்களினால் அறிவிக்கப்படுகிறவற்றுடன் ஒப்பீடு செய்வதற்குப் பயனுள்ளதாக இருந்தது. கெயார் மாதிரியில் விடயம் தொடர்பாக பெண்களினால் அறிவிக்கப்பட்ட பாலியல் வன்முறை வீதங்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரினாலும் உண்மையான வன்முறை நிகழ்வுகள் தொடர்பாக குறைத்து அறிவிக்கப்பட்டிருக்கும் சாத்தியம் இருக்கின்ற போதும் கூட, பொதுவாக ஆண்களின் அறிவிப்பை விடக் குறைவாக இருக்கின்றது. உதாரணமாக, 4 சதவீதமான பெண்கள் துணைவர் அல்லாதவர்களால் பாலியல் வன்முறையை அனுபவித்தமையை அறிவித்திருந்தார்கள் அப்படியிருக்க 6 சதவீதமான ஆண்கள் துணைவர் அல்லாதவர் பாலியல் வன்முறைக் குற்றமிழைத்ததாக அறிவித்தார்கள். பதின்மூன்று சதவீதமான பெண்கள் அவர்களுடைய தற்போதைய அல்லது முன்னைய கணவர் ஆண் துணைவரினால் அவர்கள் விரும்பாத போதும் கூட பாலியல் உறவு கொண்டதாகக் கூறினர், மற்றும் 9 சதவீதமான பெண்கள் அவர்களுடைய தற்போதைய அல்லது முன்னைய கணவர் ஆண் துணைவருடன், அவர்கள் மறுத்தால் அவர்களுடைய துணைவர் என்ன செய்வார்களோ என்ற பயம் காரணமாக, தாம் பாலியல் உறவுகளுக்கு தம்மை அர்ப்பணித்ததாகக் கூறினர். ஐந்து சதவீதமான பெண்கள் அவர்கள் தாம் விரும்பாத ஒரு பாலியல் செயலுக்கு அவர்களுடைய தற்போதைய அல்லது முன்னைய கணவர் ஆண் துணைவரால் கட்டாயப்படுத்தப்பட்டதாகத் தெரிவித்தனர். இந்தத் தொகைகள் பெண்களால் குறைத்து அறிவிக்கப்படுவதனைப் பிரதிபலிக்கலாம் ஏனெனில் பாலியல் வன்முறையுடன் இணைந்த இழுக்கு மற்றும் தாம்பத்திய வாழ்க்கை பற்றி வெளிப்படையாகப் பேசுவது தொடர்பான சமூக விலக்குக் காரணமாக. இது பிரதிபலிப்பது, உதாரணமாக, உண்மையில் 10 சதவீதமான பெண்கள் மட்டும் பாலியல்சார் உறவுகளுக்கு ஒரு நெருங்கிய துணைவரால் கட்டாயப்படுத்தப்பட்டதாகத் தெரிவித்தனர் இதற்கு முரனாக, 14 சதவீதமான ஆண்கள் அவ்வாறான வன்முறைக் குற்றமிழைத்ததாகக் கூறினர். துணைவர் அல்லாதவர்களினால் பாலியல் வன்முறை பற்றி பெண்களினால் தெரிவிக்கப்படுவது (4 சதவீதம்) அவ்வாறான குற்றமிழைத்ததாகக் ஏற்றுக்கொண்ட ஆண்களின் (6 சதவீதம்) அநேகமாக அரைவாசியாக இருந்தது. ஒட்டுமொத்தமாக, பாலியல் வன்முறையை அறிவிக்கும் பெண்களின் தொகை அவர்களுடைய கணவர் ஆண் துணைவர் ஆண்கள் விரும்பும் போது அவர்கள் உடலுறவு கொள்ள உடன்பட வேண்டுமென எதிர்பார்த்பார்த்தனர் என்று கூறிய 80 சதவீதமான பெண்களின் பொது மாதிரியுடன் ஒப்பிடும் போது கூட குறைவாக இருந்தது.

[16] துணவர் ஒருவருக்கு எதிரான கற்பழிப்பு உள்ளடங்கலாக பாலியல் வன்முறைக்கான இந்த எண்ணிக்கைகள் ஆண்கள் மற்றும் பெண்கள் அறிக்கைகளிலிருந்து சிறிது வித்தியாசமாக கணிக்கப்படுவது கவனிக்கப்பட வேண்டும். துணைவர் கற்பழிப்பு குற்றமிழைத்தல் 'எப்போதாவது உங்களுடைய தற்போதைய அல்லது முன்னைய மனைவி அல்லது பெண்நண்பியை அவள் விரும்பாத போது பாலியல் உறவுகொள்ளக் கட்டாயப்படுத்தியிருக்கின்றீர்களா' மற்றும் 'எப்போதாவது உங்களுடைய தற்போதைய அல்லது முன்னைய மனைவி அல்லது பெண்நண்பியை அவள் விரும்பவில்லை என நீங்கள் அறிந்திருந்த போதும் ஆனால் அவள் உங்கள் மனைவி துணைவியாக இருந்த காரணத்தினால் அவள் உடன்பட வேண்டுமென நீங்கள் நம்பியதால் பாலியல் உறவுகொள்ளக் கட்டாயப்படுத்தியிருக்கின்றீர்களா' என்பனவற்றிற்கான ஆண்களின் பதிலளிப்புகளிலிருந்து கணிக்கப்படுகின்றது. துணைவர் கற்பழிப்புப் பலியாக்கல் இரண்டு வினாக்கள் தொடர்பாக பெண்களின் பதிலளிப்புகளில் இருந்து கணிக்கப்படுகின்றது: 'ஒரு தற்போதைய அல்லது முன்னைய கணவர் அல்லது ஆண் நண்பர் எப்போதாவது நீங்கள் விரும்பாத போது பாலியல் உறவுகொள்ள உங்களை உடல்ரீதியாகக் கட்டாயப்படுத்தினார்களா' மற்றும் 'எப்போதாவது நீங்கள் விரும்பாத போது உங்களுடைய கணவர் அல்லது ஆண் நண்பருடன் பாலியல் உடலுறவு கொண்டிருக்கின்றீர்களா ஏனெனில் அவர் என்ன செய்யக்கூடும் என நீங்கள் அஞ்சியமையால்'.

## 4.7 கற்பழிப்பு உள்ளடங்கலாக பாலியல் வன்முறை தொடர்பான மனப்பான்மைகள்

### உரு 4.7

### கற்பழிப்பு உள்ளடங்கலாக பாலியல் வன்முறை தொடர்பான மனப்பான்மைகள்


**சில பெண்கள் உடுத்தும் மற்றும் நடந்துக்கொள்ளும் விதத்தில் வல்லுறவினை வரழைத்துக்கொள்கிறார்கள் என நான் நினைக்கின்றேன்**

**எந்த ஒரு கற்பழிப்பு வழக்கிலும், பாதிக்கப்பட்டவர் ஒழுங்கீனமானவரா அல்லது நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டவரா என ஒருவர் வினவப்பட வேண்டும் என நான் நினைக்கின்றேன்.**

**ஒரு பெண் உடல்ரீதியாக எதிர்த்துப் போராடாவிட்டால் அது வல்லுறவு அல்ல என நான் நினைக்கின்றேன்**

**ஒரு பெண் கற்பழிக்கப்படும் போது, அந்த நிலைமையை ஏற்படுத்தியமைக்காக அவள் குறைக்கூறப்பட வேண்டும் என நான் நினைக்கின்றேன்**

**ஒரு பெண் அவளது கணவருடன் பாலுறவு கொள்ள மறுக்க முடியாது என நான் நினைக்கின்றேன்**




ஆண் பெண்

**உடன்படும் அல்லது ஆணித்திரமாக உடன்படும் சதவீதம்**

பாலியல் வன்முறை தொடர்பான மனப்பான்மைகள் பெரும்பாலும் பெண்களுக்கு எதிரான வன்முறைக்கான ஆண்களின் பொறுப்பினை பழியினின்று நீக்குகின்றமை, குற்றச்சாட்டின் ஒரு பாரிய அளவினைப் பெண்கள் மீது வைப்பதுடன் பெண்களுக்கு அவர்களுடைய சொந்த உடல்சார் பாதுகாப்பினை பாதுகாக்க வேண்டிய ஒரு பாரிய கடப்பாட்டினை ஒப்படைக்கின்றது. கெயார் மாதிரியில் 30 சதவீதமான ஆண்களும் 32 சதவீதமான பெண்களும் "ஒரு பெண் கற்பழிக்கின்றபோது அந்த நிலைமையை ஏற்படுத்தியமைக்காக அவள் குற்றஞ்சாட்டப்பட வேண்டும்" என்ற கூற்றுடன் உடன்பட்டமை இந்த நிலைப்பாடுகளை சுட்டிக்காட்டுகின்றனளுமற்றும் 79 சதவீதமான ஆண்களும் 75 சதவீதமான பெண்களும் "சில பெண்கள் ஆடைகள் அணியும் விதம் மற்றும் நடந்துகொள்ளும் விதத்தில் பாலியல் வல்லுறவினை வரவழைத்துக் கொன்கின்றார்கள் என்றே நான் நினைக்கின்றேன்" எனப் பிரகடனப்படுத்தி இருந்தனர். ஆடை, நடத்தை இடையேயான இணைப்பு மற்றும் திரும்பத் திரும்ப நிகழும் பாலியல் வன்முறையில் 55 சதவீதமான ஆண்கள் மற்றும் 67 சதவீதமான பெண்கள் கூட எந்த ஒரு வழக்கிலும் பெண்ணின் கடந்தகால நடத்தை அல்லது ஒழுங்கீனம் பற்றி வினவப்பட வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருந்தனர். சம்மதம் தொடர்பான கோட்பாடும் கூட, 43 சதவீதமான ஆண்கள் மற்றும் 44 சதவீதமான பெண்களினால் உறுதிப்படுத்தப்பட்டது, ஒரு பெண் உடல்ரீதியாகப் போராடாவிட்டால் அது வல்லுறவாகாது என்று கூறினர்.

---

17 මම සිතන්නේ කාන්තාවක් දූෂණයට ලක්වුවහොත්, ඒ සඳහා ඇයට දොස් පැවරිය යුතු බවයි

ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படும்போது, அந்நிலைமையினை உருவாக்கிக் கொண்டமைக்கு அவளே பொறுப்பு என்றே நான் நினைக்கிறேன்.

18 සමහර කාන්තාවන් ඇඳුම් අඳින ආකාරයෙන් හා හැසිරෙන ආකාරයෙන් ස්ත්‍රී දූෂණ ඇති වන බව මගේ අදහසයි

சில பெண்கள் அவர்கள் அணியும் விதம் மற்றும் நடந்துகொள்ளும் விதத்தில் பாலியல் வல்லுறவினை வரவழைத்துக்கொள்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

19 මම සිතන්නේ ඕනෑම ස්ත්‍රී දූෂණ අවස්ථාවකදී, අතවරයට ලක් වූ කාන්තාවගේ අයහපත් අතීත හැසිරීම/කල් ක්‍රියා තිබේද ප්‍රශ්න කළ හැකි බවයි

எந்தவொரு பாலியல் வல்லுறவு சம்பவத்திலும் வல்லுறவுக்குட்பட்டவர் ஒழுங்கீனமானவரா அல்லது நற்பெயருக்கு கலங்கம் ஏற்பட்டவரா என்பதனை விசாரிக்க வேண்டும் என்றே நான் நினைக்கிறேன்.

ஒத்த மனப்பான்மைகள் கூட பாலியல் தொந்தரவை, அது ஒரு பாலியல் துஷ்பிரயோக வடிவம் என ஒப்புறுதி செய்தன. இருபத்தைந்து சதவீதமான ஆண்கள் பெண்களைக் கேலிசெய்வதனை, அது பாலியல் தன்மையானதாக இருந்தபோதும் கூட, தீங்கற்றது என அவதானித்திருந்தனர்; அதேவேளை 32 சதவீதமான ஆண்கள் (மற்றும் 33 சதவீதமான பெண்கள்) உடல்ரீதியான கட்டாயம் இல்லாவிட்டால் கேலி செய்வது தீங்கற்றதாக இருந்ததாகப் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

## 4.8 பால்நிலை சார்ந்த வன்முறையும் பொறுப்புக்கூறும் கடப்பாடும்

மேற்படி மனப்பான்மைகள் பாலியல் வன்முறைச் செயல்களுக்கு ஆண்களைப் பொறுப்பாக்கும் பொறுப்புக்கூறும் கடப்பாடு தொடர்பில் ஒரு குறைந்த தொடக்கநிலையைச் சுட்டிக்காட்டுகின்றது. கொன்னெல் சுட்டிக்காட்டுகின்றவாறு, அநேகமான ஆண்கள் பெண்களுக்கு எதிராக வன்முறைக் குற்றமிழைக்காத அதேவேளை, அவ்வாறு செய்பவர்கள் அதனை வழமையாக நியாயப்படுத்தித் தாம் ஒரு உரிமையைப் பயன்படுத்துவதாக உணருகின்றனர் (கொன்னெல், 2001, ப.44). இது கெயார் ஆய்வில் ஆண் பிரதிவாதிகளினால் வழங்கப்பட்ட வாக்குமூலத்தை நிரூபிக்கின்றது. கட்டாயப்படுத்தப்பட்ட பாலியல் வல்லுறவு குற்றமிழைத்த ஆண்களில் 18 சதவீதத்தினர் மட்டுமே தாங்கள் கண்டுபிடிக்கப்படலாம் எனப் அஞ்சியதாகக் கூறினர், அதேவேளை 69 சதவீதத்தினர் அந்தச் செயலின் பின்னர் எந்தக் குற்றவுணர்வையும் உணரவில்லை எனத் தெரிவித்தனர், குற்றமிழைத்தவர்களில் தொன்னூற்று மூன்று சதவீதத்தினர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைக்கு குடும்பம் மற்றும் நண்பர்களிடமிருந்து எந்தத் தண்டனையும் இருக்கவில்லை என அறிவித்தனர், அதேவேளை, மாதிரியின் 97 சதவீதத்தினர் பாதிக்கப்பட்டவரை ஆதரிக்கும் எந்த ஒருவரிடமிருந்தும் எந்த வன்முறையான எதிர்வினையையும் அனுபவிக்கவில்லை எனத் தெரிவித்தார்கள். முக்கியமாக, குற்றமிழைத்தவர்களில் 7 சதவீதத்தினர் மட்டும் சட்ட ரீதியான பின்விளைவுகளை அனுபவித்திருந்தனர் (கைது செய்யப்பட்டு குற்றச்சாட்டுக்கள் கைவிடப்பட்டது, அல்லது நீதிமன்ற வழக்குடன் கைதுசெய்யப்பட்டது அல்லது சிறையிடப்பட்டது). எழுபத்தாறு சதவீதத்தினர் தாங்கள் எந்தப் பின்விளைவுகளையும் அனுபவிக்கவில்லை எனக் கூறினர் (அட்டவணை 4.10 பார்க்க).

**அட்டவணை 4.10**

### பாலியல் வன்முறைக் குற்றச்செயலின் பின்விளைவுகள்

| பாலியல் வன்முறைக் குற்றச்செயல்களின் பின்விளைவுகள் | ஆம் சதவீதம் | இல்லை சதவீதம் |
|---|---|---|
| நான் கண்டுபிடிக்கப்படுவேன் என்று நிறையக் கவலைப்பட்டேன் | 17.7 | 82.3 |
| குற்றவாளியாக உணர்ந்தேன் | 30.9 | 69.1 |
| எனது குடும்பம் மற்றும் நண்பர்கள் தண்டனை | 7.3 | 92.7 |
| அவள் / அவனுக்கு ஆதரவான ஒருவரிடமிருந்து அச்சுறுத்தல்கள் | 5.2 | 94.8 |
| அவள் / அவனுக்காக பழிவாங்கும் ஒருவரிடமிருந்து வன்முறை | 3.4 | 96.6 |
| கைதுசெய்யப்பட்டு குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டது | 2.5 | 97.5 |
| நீதிமன்ற வழக்குடன் கைது | 2.1 | 97.9 |
| சிறைத் தண்டனை | 2.1 | 97.9 |
| எந்தப் பின்விளைவுகளும் இல்லை | 24.3 | 75.7 |

20 මම සිතන්නේ කාන්තාවක් අරගල/සටන් කරමින් විරෝධය පල නොකලහොත් එය ස්ත්‍රී දූෂණයක් නොවන බවයි

ஒரு பெண் உடல்ரீதியாக போராடாவிட்டால் அது ஓர் பாலியல் வல்லுறவு ஆகாது என்றே நான் நினைக்கிறேன்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறையுடன் ஆண்கள் தப்பித்துக்கொள்ளும் தண்டனை விலக்கீட்டுரிமை மூன்று மூலங்களிலிருந்து தொடர்கின்றது அவை கொள்கைத் தலையீட்டுக்குப் பொருத்தமானது. கெயார் ஆய்வில் கைப்பற்றப்பட்ட பாலியல் வன்முறை பெரும்பான்மையான நிகழ்ச்சிகளில் நெருங்கிய துணைவர் வன்முறையில் அடங்குவதாக எடுத்துக்கொண்டால், விவாகசார் கற்பழிப்பு உட்பட, இலங்கையின் சட்டச் சூழமைவில் விவாகசார் கற்பழிப்பு சட்டத்தினால் பிரிக்கப்பட்டோர் வகை தவிர குற்றமாக்கப்படவில்லை. அரசும் நீதித் துறையும் ஒரு தொடரும் மணவாழ்க்கையினுள் கற்பழிப்பினைத் (அல்லது மண முறிவுகளில் கூட மனைவி தனியாக வாழ்கின்றபோது ஆனால் அவளுடைய கணவனிடமிருந்து சட்டபூர்வமாகப் பிரிக்கப்பட்டிராத போது) தண்டிக்கப்பட வேண்டிய வன்முறையாக் காணாதபோது, இந்த வகையான வன்முறையை முடிவுறுத்துவதற்கு கணவர்களுக்கு எந்த கட்டாயமும் இல்லை என்பதுடன் மனைவியர்களுக்கு எந்த சட்ட ரீதியான பாதுகாப்பும் இல்லை. இரண்டாவதாக ஆண் பாலியல் உரிமையை ஏற்றுக்கொண்டு மீள்வலியுறுத்தும் பொதுவான மனப்பான்மைகள். தங்கராஜா மற்றும் அரசு (2010, ப.34), உதாரணமாக, எப்படி பாலியல் உறவு பற்றிய பொது எடுகோள் மணவாழ்க்கைக் கடமை தோற்கின்ற போது ஒரு இன பரஸ்பரப் பொறுப்புக்களை மீள்வலியுறுத்துவதற்கு மிகப் பெரும்பாலும் கடமையின் சுமை மனைவி மீதே வைக்கப்படுகின்றதெனச் சுட்டிக்காட்டுகின்றனர். அதுவே கற்பழிப்புத் தொடர்பாகவும் நடைபெறுகின்றது அங்கு வல்லுறவுப் பாதிப்பிற்குட்ட பெண்களின் மீது கற்பிக்கப்பட்ட களங்கம் மற்றும் பெண்கள் மீதான குற்றச்சாட்டு அவைகளாகவே 'தாங்களாகவே கற்பழிக்கப்படும் நிலைக்கு உள்ளானமை' ஒரு பாரிய நிருபணத்தின் சுமை மற்றும் கடமையை ஆண் குற்றமிழைத்தவரை விடப் பெண்கள் மீது வைக்கப்படுகின்றது. இந்த நிலைப்பாடுகள் கற்பழிப்பு உட்பட அவர்களால் செய்யப்பட்ட பாலியல் வன்முறைக்கு ஆண்களின் குற்றம் மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாடுகளிலிருந்து விடுவிக்கின்றது. மூன்றாவதாக, வாழ்க்கைத் துணைவரல்லாத மகளிர் அல்லது பெண்களின் வகைகளில் குற்றவியல் சட்டக் கோவையை அமுலாக்குவது தாமதங்கள் மற்றும் இடைநிறுத்திவைக்கப்பட்ட தண்டனைகளால் அடிக்கடி தடைசெய்யப்படுகின்றது. மேலும், நீதிமன்றத்தில் உறுதிப்பாடு கோரப்படும் விதம் விளைவாக கற்பழிப்பின் பாதிக்கப்பட்ட பெண்ணின் சான்றினை சந்தேகத்தின் கீழ் வைக்கின்றது (கோமெஸ் மற்றும் கோமெஸ், 1999, ப. 135-138). மேலே அவதானிக்கப்பட்ட இந்தச் சட்டத் தவறுகள் மற்றும் சமூக மனப்பான்மைகள் ஆண்களை அதிகமாக 'பாலுறவின் நிபந்தனைகளையும் நேரத்தையும் வரையறுக்க' அனுமதிக்கின்றது (வூட் மற்றும் ஜுவ்க்ஸ், 2001, ப.134), பாலியல் வன்முறை உட்பட, அது, ஏனெனில் அவர்கள் அதிகாரம் மற்றும் ஆதிக்கத்தை உடலுடன் தொடர்பு படுத்துகின்றார்கள், 'நெருக்கமான மேலாதிக்க' செயல்களென அழைக்கப்படலாம் (கொன்னெல், 2005, ப.231).

## 4.9 குழந்தைப்பராயத் துஷ்பிரயோகம்

நாம் வளந்தவர்களாக வருவதனைக் குழந்தைப்பராயம் தீர்மானிக்கின்றது, மற்றும் குழந்தைப்பராயத்தின் நல்வாழ்க்கை உலகத்தைப் பற்றி, எங்கள் இடையேயான தனிப்பட்ட உறவுகள், அத்துடன் கட்டிளமைப்பருவத்து வன்முறைக்கு எங்களுடைய மனப்பான்மைகள் பற்றிய எமது கண்ணோட்டத்தை தீர்மானிப்பதில் ஒரு தீர்க்கமான பங்கு வகிக்கின்றது. குழந்தைகள், ஆகவே, பிரபல்யமான கற்பனை மற்றும் சமூக- சட்டம்சார் நிறுவனங்கள் இரண்டிலும் பாதுகாப்பின் மதிப்பு மற்றும் பொறுப்பான வளர்ப்பாக நியமிக்கப்படுகின்றார்கள். எவ்வாறாயினும், எளிதில் இலக்காகக்கூடிய இளம் தனிநபர்களாக, பெரியவர்களின் அதிகாரத்திற்குச் சமனற்றுப், பெரும்பாலும் வயதுவந்தவர்களின் துஷ்பிரயோகத்திற்குப் பலியாகின்றார்கள். இந்தத் துஷ்பிரயோகம் பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து மனவெழுச்சிப் புறக்கணிப்பு மற்றும் கொடுமைப்படுத்தல், மற்றும் உடல்சார்பான இழப்பு என வெவ்வேறு வடிவங்களை எடுக்கலாம்.

### 4.9.1 பாலியல் துஷ்பிரயோகம்

பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான முடிவுகள், கெயார் ஆய்வில் குறிப்பாக பையன்கள் பற்றியன, பாலியல் துஷ்பிரயோகத்திற்கான பையன்களின் எளிதில் இலக்காகுந் தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டியது மட்டுமல்லாது, செயல்முறை மீது அது கொண்டிருக்கும் தாக்கத்தைத் தேடுவதற்கும் எதன் மூலம் பையன்கள் வன்முறை ஆண்களாகுகின்றார்கள், பெரும்பாலும் வன்முறையுடன் பெண்களை இலக்குவைத்து என்பது தொடர்பில் அவசர கவனத்தை ஈர்க்கின்றது.

ஜுடித் ஹெர்மன் (1992, ப.37) குறிப்பிடுகின்றவாறு, மனவதிர்ச்சி நினைவகத்தில் அதுவே சீரமைப்பதுடன் பிழைத்தவரின் வாழ்க்கையில் மீண்டும் மீண்டும் ஊடுருவுகின்றது, அதனால், (அவருடைய) சாதாரண போக்கின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துகின்றது. பையன்களின் நல்வாழ்வு மீதான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தின் கெடுதலான தாக்கம் அவர்களை ஆபத்தைச் சந்திக்கத் துணியும் நடத்தைகள், கல்விசார்பாகக் குறைந்த- அடைவுகள், கோபம், குற்றம், வெட்கம், மற்றும் குறைந்த தன்மதிப்பு என்பவற்றிற்கு இட்டுச் செல்லக்கூடும் என்பதுடன் இவை சகலமும், முறையே, சுய-தண்டனையளிப்பதுடன் அல்லது கட்டிளமைப்பருவத்தில் மற்றவர்கள் மீது வன்முறைக் குற்றமிழைப்பதுடன் இடைத்தொடர்புகளைக் கொண்டிருப்பதாக ஆய்வுகளிலிருந்து கண்டறியப்பட்டிருக்கின்றது. ஆண் சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகத்தின் நிலவுகை (அத்துடன் ஆகவே பின்விளைவுகள்) இலங்கையில் சிறிதுகாலமாக முக்கியத்தவம் பெற்றிருக்கின்றது. குழந்தை உரிமைகள் குறித்த உடன்படிக்கை மீதான இரண்டாவது தேச அறிக்கை நோக்கங்களுக்காக குழந்தைகள் பராமரிப்புச் சேவைகள் மற்றும் நன்னடத்தைத் திணைக்களத்தினால் 1990 களின் தொடக்கத்தில் நடாத்தப்பட்ட ஒரு ஆய்வு 18 சதவீதமான பையன்கள் மற்றும் 4.5 சதவீதமான சிறுமிகள் குழந்தைப்பராயத்தில் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்யப்பட்டிருந்ததாகக் கண்டறிந்திருந்தது. சிறுவர் துஷ்பிரயோகந் தொடர்பான 'விரிவுரையொன்றைத்' தொடர்ந்து சிறுமிகளுக்காக நிர்வகிக்கப்பட்ட அதே வினாக்கொத்தில் பெண் அறிக்கைகள் 4.5 சதவீதத்திலிருந்து 12.3 சதவீதம் வரை அதிகரித்திருந்தது கண்டறியப்பட்டது (த சில்வா பெண்களின் சுகாதாரக் குழு, இலங்கை மருத்துவச் சங்கம், ப.3). இருப்பினும், இந்தக் குறித்த ஆய்வில், 18 சதவீதத்தில், சிறுவர்கள் சிறுமிகளைவிட அதிகம் பாதிக்கப்பட்டிருந்தனர். கெயார் ஆய்வு இந்த விகிதத்தை உறுதிசெய்கின்றது. கெயார் ஆய்வில் பங்கேற்ற ஆண் பிரதிவாதிகளில் இருபத்தெட்டு சதவீத்தினர் குழந்தைப்பராயத்தில் பாலியல் துஷ்பிரயோகத்தை அனுபவித்ததாக அறிவித்திருந்தார்கள் எதிராக 3 சதவீதமான பெண்கள் அதையே அறிவித்திருந்தார்கள். இந்த எண்ணிக்கைகள் சிறுமியர்களால் அனுபவிக்கப்பட்ட பாலியல் துஷ்பிரயோகப் பிரச்சனைகளிலிருந்து தேவையான கவனத்தை குறைவுபடுத்தவில்லை; மாறாக, அவை இந்தப் போக்கிலான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தின், குறிப்பாக பையன்களின், சான்றுகளை வழங்குவதுடன், கட்டிளமைப்பருவத்தில் பாலினம் சார்ந்த ஆண் வன்முறைக் குற்றமிழைத்தலின் நிலவுகைக்குக் கவலைதரும் பின்விளைவுகளுடன் தொடர முடியும்.

கெயார் ஆய்வில் பங்கேற்ற ஆண் பிரதிவாதிகளில் இருபத்தெட்டு சதவீத்தினர் குழந்தைப்பராயத்தில் பாலியல் துஷ்பிரயோகத்தை அனுபவித்ததாக அறிவித்திருந்தார்கள் எதிராக 3 சதவீதமான பெண்கள் அதையே அறிவித்திருந்தார்கள். இந்த எண்ணிக்கைகள் சிறுமியர்களால் அனுபவிக்கப்பட்ட பாலியல் துஷ்பிரயோகப் பிரச்சனைகளிலிருந்து தேவையான கவனத்தை குறைவுபடுத்தவில்லை; மாறாக, அவை இந்தப் போக்கிலான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தின், குறிப்பாக பையன்களின், சான்றுகளை வழங்குவதுடன், கட்டிளமைப்பருவத்தில் பால்நிலை சார்ந்த ஆண் வன்முறைக் குற்றமிழைத்தலின் நிலவுகைக்குக் கவலைதரும் பின்விளைவுகளுடன் தொடர முடியும்.

கெயார் மாதிரியில், ஆண் பிரதிவாதிகளின், 14 சதவீத்தினர் அவர்கள் சிலசமயங்களில் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்கள். மற்றும் 14 வீத்தினர் குழந்தைப்பராயத்தில் அடிக்கடி பாலியல் துஷ்பிரயோகத்தை அனுபவித்ததாகத் தெரிவித்தார்கள். பதின்மூன்று சதவீதத்தினர் யாரோ ஒருவர் அவர்களுடைய தொடைகள், பின்புறங்கள், பிறப்புறுப்புகளைத் தொட்டதாக அல்லது அவர்கள் விரும்பாதபோது அவர்கள் வேறுறொருவரின் அந்தரங்க உறுப்புக்களைத் தொடுமாறு வற்புறுத்தப்பட்டதாகத் தெரிவித்தனர். மேலும், 10 சதவீதமான ஆண்கள் அவர்கள் 18 வயதை அடையுமுன்னர், அவர்கள் 'வேண்டத்தகாத பாலியல் தன்மையானதொரு சம்பவங்களுக்கு', வெளிப்படுத்தப்பட்டதாகத் தெரிவித்தனர், அதேவேளை 14 சதவீதத்தினர் அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக ஆபாசப்படைப்புக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டனர். சிறுவர் பாலியல் வன்முறையின் ஒட்டுமொத்த நிலவுகை கொழும்பு மாவட்டத்தில் (47 சதவீதம்) மிகவுயர்ந்ததாக இருந்தது. நுவரெலியா மாவட்டம் இரண்டாவதாக (30 சதவீதம்) இருந்தது, அம்பாந்தோட்டை மூன்றாவது (18 சதவீதம்) மற்றும் மட்டக்களப்பு நான்காவது (16 சதவீதம்).

### அட்டவணை 4.11

### சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய ஆண்களின் அனுபவங்கள்

| சிறுவர் துஷ்பிரயோகம் | ஒருபோதுமில்லை சதவீதம் | சிலவேளைகளில் சதவீதம் | அடிக்கடி மிகப் பல தடவை சதவீதம் |
|---|---|---|---|
| ஏதாவது வடிவிலான பாலியல் துஷ்பிரயோகம் | 72.3 | 14.2 | 13.5 |
| யாரோ ஒருவர் எனது பின்புறம் அல்லது பாலுறுப்புக்களை தொட்டார் அல்லது நான் விரும்பாத போது என்னை அவ்வாறு செய்யுமாறு தூண்டினார் | 87.0 | 12.1 | 1.0 |
| நான் என்னைவிட 5 வருடங்கள் வயதுகூடிய பெண் ஒருவருடன் பாலுறவு கொண்டிருக்கின்றேன் | 94.4 | 4.7 | 0.9 |
| நான் யாரோ ஒருவருடன் அச்சுறுத்தப்பட்ட அல்லது மிரட்டப்பட்ட அல்லது கட்டாயப்படுத்தப்பட்ட காரணத்தால் பாலுறவு கொண்டிருந்தேன் | 96.7 | 3.1 | 0.2 |
| நான் கட்டாயப்படுத்தப்பட்டு ஒரு சமூகத் தலைவர்/ முதிர்ந்த பாடசாலை மாணவருடன் பாலுறவு அல்லது உடல்சார் உறவுகள் கொண்டிருந்தேன் | 97.0 | 2.9 | 0.1 |
| பாலுணர்வுத் தன்மையான தேவையற்ற சம்பவங்களுக்கு நான் வெளிப்படுத்தப்பட்டிருந்தேன். | 90.1 | 9.3 | 0.6 |
| எனது விருப்பத்திற்கு மாறாக ஆபாசத் திரவியங்களுக்கு நான் வெளிப்படுத்தப்பட்டேன் | 85.7 | 12.7 | 1.3 |

இந்த எண்ணிக்கைகள் (அட்டவணை 4.11 இனைப் பார்க்கவும்) பையன்களை இலக்குவைத்துப் பலியாக்கும் கட்டாயப் பாலியல் நடத்தையின் வித்தியாசமான வடிவங்களின் நிலவுகையைச் சுட்டுகின்றது. பெருமளவிற்கு, சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகக் குற்றமிழைப்பவர்கள் வழமையாக பாதிக்கப்பட்டவர்களுக்குத் தெரிந்தவர்களாக, ஒன்றில் குடும்ப உறுப்பினர்களாக, குடும்ப நண்பர்களாக அல்லது அவர்களுடைய நம்பிக்கையை மற்றும் அல்லது பயத்தை வெளிக்கொணரும் வயதான ஆண்களாக இருக்கின்றார்கள் (ஹெர்மன், 1992, ப.98-101; சண்முகம் மற்றும் இமானுவேல், 2010, ப.7 மற்றும் 14).

மேலதிகமாக, மேலே இடர்க்காரணிகள் பிரிவில் கலந்துரையாடப்பட்டவாறு, சிறுவர்களாக ஆண்களின் துஷ்பிரயோக அனுபவங்கள் அவர்கள் பின்னர் வாழ்க்கையில் ஒரு பெண் துணைவர் அல்லது துணைவரல்லாதவருக்கு எதிராக வன்முறைக் குற்றமிழைக்கும் வாய்ப்புக்களைப் பாரிய அளவில் அதிகரிக்கின்றன. வன்முறையை அனுபவிக்கும் சிறுவர்களைக் குற்றஞ்சாட்டாதிருப்பது முக்கியமானதாக இருக்கின்றது. ஒரு குழந்தையாக வன்முறையை அனுபவித்த சகல ஆண்களும் வளந்தவர்களாக வன்முறைக் குற்றமிழைப்பவர்களாக வருவதில்லை என்பது கவனிக்கப்படுவது முக்கியமானதாக இருக்கின்றது. எவ்வாறாயினும், அடுத்த தலைமுறையில் பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதன் ஒரு பகுதியாக சிறுவர் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான குழந்தைப்பராயத்தைப் பேணுவதனை மேம்படுத்துவதற்கான தேவையை தரவுகள் சுட்டிநிற்கின்றன.

### 4.9.2 பகிடிவதை

இலங்கைப் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பகிடிவதை (கல்விசார் நிறுவனங்களுக்குப் புதிதாக வருபவர்களின் வாய்மொழிமூல, உடல்சார் அல்லது மனவெழுச்சித் துஷ்பிரயோகம்) மேலும் பையன்களைப் பாலியற்படுத்தப்பட்ட தாக்குதலுக்கு இரையாக்கும் வல்லமை மிக்க இடங்களாக அமைகின்றன. கெயார் மாதிரியில் மூன்று சதவீதமான ஆண்கள் 18 வயதுக்கு முன்னர் அவர்கள் சிலசமயங்களில் ஒரு சமூகத் தலைவர் அல்லது பாடசாலை மாணவனுடன் பாலியல் அல்லது உடல் உறவுகொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவித்திருந்தனர். அதேபோல, எப்போதாவது பிறிதொரு நபரை பகிடிவதை செய்ததாக 4 சதவீதமான ஆண்கள் அறிவித்திருந்தார்கள். வளர்ந்த மாணவர்களால் கனிஷ்ட மாணவர்கள், மற்றும் பல்கலைக்கழகங்களில் புதியவர்கள் சிரேஷ்ட மாணவர்களினால் பகிடிவதை – பாலியற்பட்ட பகிடிவதை உட்பட – செய்யப்படுவது, இலங்கையில் பகிடிவதைக்கு எதிராகச் சட்டமூலம் கொண்டுவரும் அளவிற்கு பாரதூரமானதாகவிருந்தது, அது 1998 ஆம் ஆண்டில், மட்டுப்படுத்தப்பட்ட விளைவுடையதாக இருந்தபோதும் கூட, சட்டமாக்கப்பட்டிருந்தது. பகிடிவதை, மாணவர் வன்முறை மற்றும் தண்டனை விலக்கீட்டுக் கலாச்சாரமொன்றை வன்முறை தொடர்பாக பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களை உண்மையில் வன்முறையைப் பேணிப்பாதுகாக்கும் இடங்களாக மாற்றியிருக்கின்றன.

## 4.10 ஆண்மீது ஆண் வன்முறை

ஒரு ஆண்மைக்குரியன மற்றும் பால்நிலை - சார்ந்த வன்முறை தொடர்பான ஆய்வு ஆண் சிறுவர்கள், அத்துடன் நகர மற்றும் கிராமப்புற ஆண்கள், மற்றும் ஓரினச்சேர்க்கையாளர் மற்றும் இருபாலியல் ஆண்கள், அத்துடன் திரிபாலின அல்லது பாலியல்மாற்றமுடைய அல்லது இடைப் பாலியல் நபர்கள் வன்முறைக்கு எளிதில் இலக்காகுந் தன்மை பற்றிய ஒரு விளக்கத்திற்காக ஆண் மீதான ஆண் வன்முறை தொடர்பாக படமாக்கப்பட்டிராவிடின் பூரணமாகாது. அதேவேளை பாலியல் துஷ்பிரயோகத்தில் பாதிக்கப்பட்ட பையன்களின் வகை ஏற்கனவே கலந்துரையாடப்பட்டிருக்கின்றது, கும்பல்கள் மற்றும் ஆயுதங்களின் பயன்பாட்டின் பரிமாணங்களினால் பாதிக்கப்பட்டு, அல்லது குற்றமிழைப்பவர்களாக அல்லது ஓரினச்சேர்க்கை வெறுப்பு வன்முறை மற்றும் அல்லது பாலியல் வன்முறை உட்பட ஆண்கள் எதிர்கொள்ளும் வன்முறையை ஏனைய முக்கிய சூழமைவுகளை, இந்தப் பிரிவு ஆராய்கின்றது.

### 4.10.1 குழுக்கள்

குழுக்கள் ஆண்களுக்கு அவர்களுடைய தரநெறிசார் மனப்பான்மைகளை வடிவமைத்து மீள்வலியுறுத்தும் கூட்டுக்கள் அல்லது இணைநிலையினரின் சகோதரத்துவம் மற்றும் நட்புறவை வழங்குவதுடன் 'வீரதீரச்செயலுக்கான' ஆதரவினை வழங்குகின்றது, அது சுரண்டல் நடத்தை மற்றும் பெண்கள் மற்றும் வேறு ஓரங்கட்டப்பட்ட ஆண்களை நோக்கிய வன்முறையைக் கூட உள்ளடக்க முடியும். குழுச் செயல்முறைகள் பெரும்பாலும் தனிப்பட்ட கருத்துவேறுபாடுகள் அல்லது கவலைகளின் சமர்ப்பிற்பிற்கு, மற்றும் குழுக்களின் உறுப்புரிமை, குற்றமில்லாவிட்டாலும், வன்முறை நடத்தையை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களுக்கு வழிவகுக்கும், (மில்லர் மற்றும் பிறன்சன், 2000, ப.422) ஏனெனில் குழுக்களின் உறுப்பினர்கள் 'அவர்களுடைய ஆதிக்கத்தை நீடித்துநிலைக்கச் செய்வதற்கு வன்முறையைப் பயன்படுத்துதல்' (கொன்னெல், 2001, ப.44). சாதாரணமாக, குழுக்களின் நிலவுகை மற்றும் ஆயுதங்களை உரிமையாகக் கொண்டிருத்தல், கத்திகள் உட்பட, அது சண்டைகளில் ஆட்களை மிரட்டுவதற்கு அல்லது தீங்கிழைக்கப் பயன்படுத்தப்பட முடியும், என்பன ஆண்மைப்படுத்தப்பட்ட நகரக் கலாச்சாரங்களின் அம்சங்களாகும், குறிப்பாக துரிதமாக மாறிவரும் அயற்சூழலில் பொருளாதார, இன, மற்றும் வெளிசார்ந்த இடம்பெயர்வுகள் மற்றும் ஒப்புரவின்மைகள் காரணமாக நெருக்கடியின் கீழ் பொதுவானதாகும். இலங்கையில் நகர மற்றும் கிராமப்புறப் பிரதேசங்கள் இரண்டிலும் குழுக்களின் பிரசன்னம் கூட ஒரு இராணுவமயப்பட்ட சமூகத்தைப் பிரதிபலிக்கின்றது அது வன்முறையை ஆதரிப்பதுடன் இலங்கையில் அனுபவிக்கப்பட்டது போன்ற பொதுவாக நீடித்த ஆயுத மோதலிலிருந்து வெளிப்படுகின்றது. அத்தகைய இராணுவமயமாக்கலின் விளைவுகள் போராளித்தனத்தினை ஆதரித்து ஏற்றுக்கொள்ளுதல், அன்றாட வாழ்க்கையின் பகுதியாக முரண்பாட்டிற்கான வன்முறைத் தீர்வுகள், வழமையான சமூக உறவுகளாக இருக்கின்றன (த மெல், 2007, ப.24).

[21] பகிடிவதை சிறுவர்கள் மற்றும் சிறுமியர் இருபாலாரையும் பாதிப்பது கவனிக்கத்தக்கது. இது பெண்கள் பாடசாலைகளிலும் இடம்பெறுகின்றது, மற்றும் பல்கலைக்கழகங்களில், புதிய இளநிலை பட்ட மாணவிகள் சிரேஷ்ட ஆண் மாணவர்களால் பாலியற்பட்ட பகிடிவதைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.

அட்டவணை 4.12

## மாவட்ட வாரியாக ஆண் மீதான ஆண் வன்முறை

| | கொழும்பு சதவீதம் | அம்பாந்தோட்டை சதவீதம் | மட்டக்களப்பு சதவீதம் | நுவரெலியா சதவீதம் | மொத்தம் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| ஒரு ஆயுதத்துடன் எப்போதாவது சண்டையில் இருந்திருக்கின்றீரா | 18.6 | 4.0 | 6.1 | 16.6 | 11.4 |
| ஏதாவது வேண்டாத செயல்களில் ஈடுபடும் குழுக்களில் பங்குபற்றியிருந்தீரா | 15.0 | 6.7 | 3.6 | 6.2 | 7.6 |
| கடந்த வருட பாலியல் வன்முறைக் குற்றச்செயல் | 21.6 | 13.9 | 5.5 | 8.7 | 12.1 |

விரும்பத்தகாத குழுக்களில் உறுப்புரிமை (15 சதவீதம்) மற்றும் சண்டைகளில் ஒரு கத்தி அல்லது வேறு ஆயுதங்கள் பயன்படுத்தியமை (19 சதவீதம்) அத்துடன் கடந்த 12 மாதங்களில் பாலியல் வல்லுறவு (22 சதவீதம்) என்பவற்றை ஏற்றுக்கொண்டு அறிவித்த ஆண்களில் உயர்ந்த சதவீதம், துரிதமாக புறநகர்ப் பகுதிகளுக்கு விரிவடைந்துவருவதுடன், சேரிகள் மற்றும் நகரத்திற்கு நகரும் இடம்பெயர் தொழிலாளர் சனத்தொகை என்பவற்றுடன் தலைநகரமான, கொழும்பு மாவட்டத்தில் இருந்தது. இரண்டாவது உயர்ந்த சதவீதமாக விரும்பத்தகாத குழுக்களில் உறுப்புரிமை (7 சதவீதம்) மற்றும் கடந்த 12 மாதங்களில் பாலியல் வன்முறை (14 சதவீதம்) என்பனவற்றை அறிவித்த ஆண்கள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில்: தீவிர உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சமூக மாற்றங்களின் கீழ் வேகமாக விரிடைந்தவரும் மற்றொரு மாவட்டம். நுவரெலியா மாவட்டத்திலுள்ள (தேயிலைப் பெருந்தோட்டத் தொழிற்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும்) ஆண் பிரதிவாதிகள் ஓரளவு குறைவாக (6 சதவீதம்) விரும்பத்தகாத குழுக்களில் உறுப்புரிமையை அறிவித்தனர், மற்றும் 17 சதவீதத்தினர் சண்டைகளில் ஒரு கத்தி அல்லது வேறு ஆயுத பயன்பாட்டினை அறிவித்தனர். மாறாக, யுத்த காலத்தில் களமுனைப் போராட்டத்தினை மாவட்டம் அனுபவித்துக் கொண்டிருந்த போது, ஆகவே சிறு ஆயுதங்களின் புழக்கம் உட்பட பாரிய இராணுவமயமாக்கல் இருந்தபோதும்கூட 6 சதவீதமான ஆண்கள் மட்டுமே மட்டக்களப்பு மாவட்டத்தில் சண்டைகளில் ஒரு கத்தி அல்லது வேறு ஆயுதப் பயன்பாடு பற்றி அறிவித்தனர், ஆகவே, மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தான தகவல்கள், சிலவேளைகளில் யுத்தத்திற்குப் பிந்திய சூழமைவில் போர்க்குணம் மற்றும் ஆயுதங்களை உடமையாகக் கொண்டிருத்தல் அல்லது பயன்பாடு கடுங்கண்காணிப்பு மற்றும் சந்தேகத்தை எழுப்பும் சாத்தியம் இருப்பதனால் குறைத்து அறிவிக்கப்பட்டிருக்கலாம் என்பதனை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தான தரவு பிரதிபலிக்கின்றது. இது எவ்வாறாயினும், இராணுவமயமாக்கல் (அதன் வழமையான வன்முறைக்கான ஆதரவுடன்) போராளிக் குழுக்கள் இடையேயான வலுவான சான்றுசார் இணைப்பிலிருந்து குறைவுபடுத்தப்படக் கூடாது, ஆயுதங்களின் பயன்பாடு மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆண் உடல்சார் மற்றும் பாலியல் மற்றும் வன்முறை குற்றமிழைத்தல், அது யுத்த காலத்தில், சுனாமியின் போது நிலவியிருந்தது, மற்றும் அவற்றின் பின்விளைவுகள்; அது சூரியா பெண்கள் மேம்பாட்டு நிலையம் போன்ற பிரதேசத்தில் பணியாற்றிய பெண்கள் குழுக்களின் கவனத்தை ஈர்த்திருந்தது (பிஸ்ஷெர், 2012, ப.136 மற்றும் 140).

### 4.10.2 தன்னினச் சேர்க்கை வெறுப்புப் பயம் மற்றும் ஆண் பாலியல் வன்முறை

இலங்கையில் நெருங்கிய துணைவர் வன்முறை பற்றிய பெரும்பாலான ஆய்வுகள் ஒரு எதிர்பாலினக் கவர்ச்சி விதிமுறைக் கட்டமைப்பை எடுகோளாகக் கொண்டிருந்ததுடன், பெண்கள் மீதான ஆண் வன்முறைக் குற்றமிழைத்தலின் தாக்கத்தையே ஆராய்கின்றன. எவ்வாறாயினும், அவ்வாறானதொரு அணி ஒன்றை வெளிப்படையானதாக எடுத்துக்கொள்ள முடியாது ஏனெனில், கெயார் ஆய்வில் காட்டப்பட்டவாறு, ஒரு மிகவும் திரவத்தன்மையான, பல்லினமான அளவு பாலியல் நடத்தைகள் இலங்கையில் கடைப்பிடிக்கப்படுகின்றன. உதாரணமாக, 'நீங்கள் பாலியல் ரீதியாக ஆண்களுக்கு, பெண்களுக்கு அல்லது இருபாலாருக்கும் கவரப்பட்டீர்களா?, என்ற வினாவிற்குப் பதிலளித்த 1,431 ஆண்களில், 9 சதவீதத்தினர் அவர்கள் ஆண்களுக்கா அல்லது பெண்களுக்கா கவரப்பட்டனர் என்பது தொடர்பில் 'நிச்சயமாகத் தெரியவில்லை' எனக் கூறியிருந்தனர், அதேவேளை 7 சதவீதமான ஆண்கள் அவர்கள் இருபாலாருக்கும் கவரப்பட்டதாகத் தெரிவித்திருந்தனர். பதினொரு சதவீதமான ஆண் பிரதிவாதிகள் ஒரு பையன் அல்லது ஆணுடன் பாலியல் சம்பந்தமான ஏதாவது தன்னிச்சையாகவோ அல்லது கட்டாயப்படுத்தப்பட்டோ செய்திருந்தனர், மற்றும் 3 சதவீதத்தினர் தற்போது ஆண் காதலர்களைக் கொண்டிருக்கின்றனர் (அட்டவணை 4.13 இனைப் பார்க்க).

கெயார் ஆய்வு ஆண் மீதான ஆண் வன்முறையையும் கூட வெளிப்படுத்துகின்றது. உதாரணமாக, 4 சதவீதத்திற்கும் அதிகமான ஆண் பிரதிவாதிகள் ஓரினச்சேர்க்கை வெறுப்பு வன்முறையை அனுபவித்திருந்தனர், மற்றும் 4 சதவீதத்தினர் ஒரு ஆணின் கைகளில் பாலியல் வன்முறையை அனுபவித்திருந்தனர். நான்கு சதவீதமான ஆண்கள் வேறொரு ஆண் அல்லது சிறுவனுக்கு எதிராகக் கூடப் பாலியல் வன்முறையை மேற்கொண்டதாக ஏற்றுக்கொண்டிருந்தனர். வேறு ஆண்களால் ஆண்களின் கற்பழிப்பு பாலியல் திசைமுகப்பட்டதாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

ஆதிக்கம் மிக்க ஆண்கள், வழமையாக சமூக வகுப்பு மற்றும் நிறுவன ரீதியான ஆதரவுடன், அதிகாரம் குறைந்த 'பெண் தன்மையுள்ள' ஆண்களின் மேலாக தங்களது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு அவர்களைக் கீழ்மைப்படுத்துவதற்கும் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்குமான ஒரு சூழமைவிலும் கூட இது அனுபவிக்கப்பட்டிருக்கின்றது (ஷா மற்றும் பொடியோபத்தியா, 2007). எந்தச் சூழமைவிலும், ஆண் மீதான ஆண் வன்முறை புறக்கணிக்கப்பட முடியாததுடன் ஆண்மைக்குரியன பற்றிய உறவு, பாலியல் சிறுபான்மையினர் மற்றும் இலங்கையில் ஆண் மீதான ஆண் வன்முறை என்பன தொடர்பாக சான்று சார்ந்த அறிவில் தற்போதிருக்கும் இடைவெளியை நிரப்புவதற்கு மேலும் ஆழமாக ஆராயப்பட வேண்டியிருக்கின்றது என்பதை இந்த ஆய்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

**அட்டவணை 4.13**

## ஆண்களின் பாலியல்சார் மற்றும் ஆண் மீதான ஆண் வன்முறை

| பாலியல் கவர்ச்சி | சத வீதம் |
|---|---|
| ஆண்கள் | 1.8 |
| பெண்கள் | 82.3 |
| இருபாலர் | 6.9 |
| நிச்சயமில்லை | 9.1 |
| ஒரு காதலர் இருந்தார் | 3.0 |
| எப்போதாவது ஒரு சிறுவன் அல்லது ஆணுடன் பாலியல் சமபந்தமாக ஏதாவது செய்திருந்தமை (குதவழிப் பாலுறவு, வாய்வழிப் பாலுறவு, பரஸ்பர சுயஇன்பம், தொடைப் பாலுறவு) | 11.4 |
| ஏப்போதாவது வேறு ஆணால் பாலியல் வன்முறையை அனுபவித்தமை | 3.6 |
| எப்போதாவது தன்னிச்சேர்க்கை வெறுப்புப் பயம் காரணமான வன்முறை | 4.4 |
| எப்போதாவது ஒரு ஆணை, தனியாகவோ அல்லது கும்பலாகவோ பாலியல் ரீதியாகத் தாக்கியருந்தமை | 3.7 |

வேறு ஆண்களின் கைகளில் தன்னினச்சேர்க்கை எதிர்ப்பு வன்முறையை அனுபவித்ததாக அறிவித்த ஆண்ககளின் சதவீதம் குறைவாக இருந்தபோதும், அதன் நிலவுகை இருந்தபோதும் ஆண்களுக்கு எதிரான பால்நிலை சார்ந்த வன்முறை இலங்கையில் நிகழ்கின்றது என்பதனை குறித்துக் காட்டுகின்றது. இருந்தபோதும் நாட்டில் தன்னினச் சேர்க்கைக் கலாச்சாரம் மற்றும் சட்டத் தணிக்கை காரணமாக அது பெரும்பாலும் மறைக்கப்பட்டிருக்கின்றது. தன்னினச் சேர்க்கை 1995 ஆம் ஆண்டு குற்றவியல் சட்டக் கோவை (திருத்தம்) சட்ட இலக்கம் 22 பிரிவு 365அ இன் கீழ் குற்றமாக்கப்பட்டிருக்கின்றது, ஆகவே திருட்டுத் தனமாக, மிரட்டலுக்கு உட்பட்டதாக, அவதூறான இடமாக, மற்றும் குடும்ப கௌரவம் தொடர்பான வன்முறையாக இருக்கின்றது.

தன்னினச்சேர்க்கையுடன் இணைந்திருக்கும் பண்பாட்டு இழுக்கு மற்றும் அதன் இலங்கையில் குற்றமாக்கப்பட்டமை பெரும்பாலும் நெருங்கிய துணைவர் சூழமைவில், இழிவுபடுத்தப்படலாம் அல்லது தாங்களே கைதுசெய்யப்படலாம் என்ற பயம் காரணமாக, ஆண்களை ஆண் மீதான ஆண் வன்முறையை காவல்துறை போன்ற சட்ட அமுலாக்கல் அதிகாரத்தினருக்கு அறிவிப்பதிலிருந்து தடுக்கின்றது. ஆண் மீதான ஆண் வன்முறையில் பாதிக்கப்பட்வர்கள் ஆகவே, மிகவும் ஒரு சவாலான சூழலில் இருக்கின்றார்கள், சட்டத்திலிருந்து பாதுகாக்கப்படாமலும் குற்றமிழைத்தவர்களின் வன்முறை பெரும்பாலும் அறிவிக்கப்படாதும் போகின்றது.

ஓரினச்சேர்க்கை ஆண்கள் காவல்துறை மற்றும் வேறு மரபுவழாத ஆச்சாரமான அவர்களைத் தண்டிக்க வேண்டுமென 'வரம்பு கடந்து' வன்முறை நாடும் ஆண்களிடமிருந்தும் பாதுகாப்பான பொதுக் களத்திற்கான உரிமை கூட தடைசெய்யப்பட்டதாக இருக்கின்றது. ஆண் மேலாதிக்கச் சிந்தனைகள் 'பணியா முரட்டுத்தனத்' துடன் கட்டப்பட்டிருக்கின்ற மற்றும் வன்முறைப் பயன்பாடு ஆண்மை அதிகாரத்திற்கு இணைக்கபட்டிருக்கின்ற சூழமைவில் மாறாநிலையான தன்னினச்சேர்க்கையுடன் இணைந்த பலவீனம் மற்றும் பெண் தன்மை தன்னினச் சேர்கை வெறுப்பு வன்முறைக்கு இட்டுச் செல்லக் கூடும். ஆகவே, இலங்கையில் ஆண்களுக்கு எதிரான ஆண் வன்முறையினுள் மேலும் ஆராய்ச்சி தேவைப்படுகின்ற அதேவேளை, ஆண்களுக்கு எதிரான ஆண் வன்முறையில் ஆண்மை வெளிப்பாட்டு மாதிரி பெண்களுக்கு எதிரான ஆண் வன்முறையின் இயங்கியல் பால்நிலைப்பட்ட அதிகாரத்துடன் சில மேற்பொருந்துகைகளைக் கொண்டிருக்கின்றது.

[22] எவ்வாறு ஆதிக்கம் மிக்க தன்னினச் சேர்க்கை ஆண்கள் தாங்களாகவே எதிர்பாற் சேர்க்கை இணைநிலையினரால் ஏற்கப்படுவதற்கான மூலோபாயங்களை பாலுணர்வு மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை ஊடாக வகுக்கின்றார்கள் என்ற 'பெட்டக அறைக் கலாச்சாரம்' பற்றி வகிபாகம் தொடர்பாக ஒரு கலந்துரையாடலுக்கு மெஸ்னர், 2001, ப.261, மற்றும் அல்மகுவர், 1993, ப.257, பார்க்கவும்.

## 4.11 இறுதிச் சுருக்கம்

கெயார் ஆய்வு பல்வேறு சூழமைவுகளைச் சுட்டிநிற்கின்றது, பெண்கள் அத்துடன் ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான ஆண் உடல்சார் மற்றும் பாலியல் வன்முறை குற்றம் இழைத்தல் தொடர்பான இயக்கிகள் மற்றும் மாறிகள், ஒரு ஆடவனாக இருப்பது எப்படி என்பது பற்றிய பண்பாட்டு மனப்பான்மை, குழந்தைப்பராய மனவதிர்ச்சி மற்றும் பாலியலில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கை ஆகவே ஆண்களின் பால்நிலை - சார்ந்த வன்முறை குற்றமிழைத்தலை அத்தியாவசியமாக்கப்பட்ட ஆண் வன்தாக்காக வருவிளைவாகவில்லாது ஒரு வலுவான விடயத்தை உருவாக்க ('boys will be boys' போன்ற பிரபல்யாமான வெளிப்பாடுகளினால் அல்லது சிங்கள கூற்றான 'கொல்லோ பல்லோ' (பையன்கள் நாய்கள்) சுருக்கப்பட்ட) ஆனால் ஆதிக்கமான ஆண்மை அநுகூலம் பெறுகின்ற வழக்கமான சமூக தொடர்புகளின் பகுதியாக இருக்கும் வன்முறையை ஏற்றுக்கொண்டு அமுல்படுத்துவதன் ஊடாக கட்டமைப்பு ரீதியாக ஆதரவளிக்கப்பட்ட ஒன்றாக நோக்குகின்றது. ஆண் வன்முறைக் குற்றமிழைத்தல் பல்வேறு சமூக, பண்பாட்டு மற்றும் பால்நிலைப்பட்ட மனப்பான்மைகள் மற்றும் வன்முறை அனுபவங்கள் தொடர்பான எதிர்பாராத நிகழ்வாக இருக்கின்றது என்ற ஒரு புரிதல் ஏற்பட்டவுடன், இயற்பண்பூட்டுவதிலிருந்து அப்பால் திசைமாற்றுவது சாத்தியமாக இருக்கின்றது- அது, விளைவாக, அதன் மாற்றத்திலிருந்து அதனைப் பாதுகாக்கும் ஒரு நிலையாக இருக்கின்றது.

கெயார் தரவிலிருந்தான சான்றுகள் கூட எதிர்ப்பாலின உறவுகளுக்கு ஆதரவான ஒரு எடுகோளாக 'கூறாநிலை' கட்டமைப்பு மீதான மேலாதிக்கக் கவனம் பால்நிலை சார்ந்த வன்முறை அல்லது பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை கலந்துரையாடல் மற்றும் ஆய்வில் வினவுகின்றது, அவ்வாறாயின் அந்த முக்கியமான சான்று இலங்கையில் பல்வகைப் பாலியல் நடைமுறைகள் நிலவுகின்றன. இந்த சகலவற்றையும் கணக்கிலெடுத்து இறுதியாக ஆண்கள் குற்றமிழைக்கும் வன்முறைகளை மட்டும் வெளிக்காட்டுவது மட்டுமல்லாது அவர்களுடைய நாளாந்த வாழ்க்கைகள், அது அவர்கள் ஏன் எவ்வாறு குற்றமிழைப்பவர்களாகவும் வன்முறையால் பாதிக்கப்பட்வர்களாகவும் உருவாக்கப்பட்டார்கள் என்ற விளக்கங்களைக் கொண்டிருக்கின்றது.

அத்தியாயம் 5:

# ஆண்மை, நல்வாழ்வு மற்றும் குடும்ப சுகாதாரம்

## பிரதான முடிவுகள்

- ஆண்களில் ஆறு சதவீதமானோர் உயர் உளச்சோர்வு அறிகுறிகளைக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டது மற்றும் ஏழு சதவீதமானோர் எப்போதாவது தற்கொலை எண்ணங்களைக் கொண்டிருந்தனர்.
- எல்லா ஆண்களிலும் அரைப்பங்கிற்கும் அதிகமானோர் பணி-சார்ந்த மனஅழுத்தத்தை அறிவித்திருந்தனர்.
- ஆண்களில் முப்பத்தொன்பது சதவீதமானோர் குழந்தைப்பராயத்தில் உடல்சார் துஷ்பிரயோகத்தினை அனுபவித்திருந்த அதேவேளை 44 சதவீதமானோர் மனவெழுச்சிசார் துஷ்பிரயோகஞ் செய்யப்பட்டிருந்தனர்.
- ஆண்களில் முக்கால்வாசிப் பேர் அவர்களது மனைவியரை மகப்பேற்றுக்கு முந்திய சிகிச்சைகளுக்கு கூட்டிச்சென்றிருந்த அதேவேளை, தந்தையர்கள் பெரும்பாலும் குழந்தைப் பராமரிப்புப் பேணிவளர்ப்பில் ஆஜராகாதிருந்திருக்கின்றனர்.
- ஆண்கள் மற்றும் பெண்களில் 4 சதவீத்தினர் மட்டுமே எப்போதாவது எச்ஐவி பரிசோதனை செய்துகொண்டிருந்தனர்.
- உடல்சார் நெருங்கிய துணைவர் வன்முறையை அனுபவித்த எல்லாப் பெண்களிலும் அண்ணளவாக அரைப்பங்கிற்கும் அதிகமானோர் அவர்களின் கணவர்கள் அல்லது ஆண் துணைவர்களால் காயப்படுத்தப்பட்டிருந்தனர், 9 சதவீதமானோர் ஐந்து தடவைகளுக்கும் அதிகமாக காயப்படுத்தப்பட்டிருந்தனர்.
- இந்தப் பெண்களில் ஒரு காற் பங்கிற்கும் மேற்பட்டோர் படுக்கையில் இருக்க வேண்டியிருந்தது, 16 சதவீதமானோர் பணியிலிருந்து விடுப்பு எடுக்க வேண்டியிருந்ததுடன் 32 சதவீதமானோர் உடல்சார் வன்முறைதொடர்பான காயங்கள் காரணமாக மருத்துவப் பராமரிப்பை நாடவேண்டியிருந்தது.
- நெருங்கிய துணைவர் வன்முறையை அனுபவித்த பெண்களில் 13 சதவீதமானோர் மற்றும் துணைவரல்லாத பாலியல் வன்முறையை அனுபவித்த பெண்களில் 8 சதவீதமானோர் மட்டுமே இந்த வன்முறை பற்றிக் காவல்துறைக்கு அறிவித்திருந்தனர்.

## 5.1 அறிமுகம்

ஆய்வுக்குட்பட்ட நான்கு மாவட்டங்களில் பால்நிலை மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை தொடர்பாக அறிவு, நடைமுறைகள் மற்றும் சமூக மனப்பான்மைகள் தொடர்பான கெயார் ஆய்வு இல்லம் மற்றும் சமுதாயத்தினுள் பால்நிலைத் தொடர்புகளுக்கு ஆண் மற்றும் பெண் மனப்பான்மைகள் தொடர்பிலான தரவு மற்றும் நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் துணைவரல்லாத பாலியல் வன்முறைகளின் நிலவுகைகளைக் கைப்பற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டது. ஆனால் இது மனஅழுத்தம், உளச்சோர்வு, தற்கொலை எண்ணங்கள், குழந்தைப்பராய மனவதிர்ச்சி, மன்பான்மைகள் மற்றும் பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதாரம் தொடர்பான நடைமுறைகள் உள்ளடங்கலான சுகாதாரம் தொடர்பான குறிகாட்டிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையின் சுகாதாரத் தாக்கம் என்பனவற்றையும் கைப்பற்றுவதற்குக் கூட உத்தேசிக்கப்பட்டிருந்தது. கெயார் களஆய்வின் ஒரு மட்டுப்படுத்தல் ஆரோக்கியம் தொடர்பாக ஆண் மாதிரிகளை நோக்கி முன்வைக்கப்பட்ட வினாக்கள் பெண் மாதிரிகளை நோக்கி முன்வைக்கப்பட்டனவற்றை விட குறைவானதாக இருந்தன. இருப்பினும் தரவு ஆண்களின் நல்வாழ்வு மற்றும் உள சுகாதாரம், இனப்பெருக்க மற்றும் பாலியல் சுகாதார மனப்பான்மைகள் தொடர்பில் எழவில்லை, பெற்றோர்நிலை மற்றும் பெண்கள் மீதான நெருங்கிய துணைவர் வன்முறை ஆண் குற்றமிழைத்தலின் தாக்கம் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நான்கு மாவட்டங்களில் ஆரோக்கியத்தைப் பாலினப்படுத்துவது தொடர்பாக முக்கிய சான்றுகளை வழங்குகின்றது.

ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு பற்றிய பகுப்பாய்வுகளின் பல அணுகுமுறைகளில், சமீபத்திய அழுத்தம், சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும், நல்வாழ்வு மற்றும் அபிவிருத்தி (WeD) (வையிற், 2009, ப.7-8) ஒரு பயனுள்ள கட்டமைப்பினை வழங்குகின்றது. இந்த WeD அணுகுமுறை மக்களின் பௌதிக மற்றும் உள சுகாதாரத்தை இயலச்செய்கின்றது, உலக சுகாதார நிறுவனத்தின் வாழ்க்கைப் பண்புத்தர களஆய்வில் (1991 இலிருந்து தயாரிக்கப்பட்டது) அழுத்திக் கூறப்பட்டவாறு வாழ்க்கையின் பண்புத்தரம் மற்றும் சமூக உளவியல் நல்வாழ்வு பொருளாதார மற்றும் மனிதவள மேம்பாட்டின் மத்திய அம்சமாகக் கருதப்படுகின்றது. இது பெருநிலைப் பொருளாதார மற்றும் அபிவிருத்திப் போக்குகள் தொடர்பாக ஆரோக்கியக் குறிகாட்டிகளை சூழமைவாக்கல், அத்துடன் தனிப்பட்ட புலக்காட்சி, 'நல்வாழ்வு ஒரு குறிப்பிட்ட சமூக மற்றும் பண்பாட்டு அமைவிடங்களில் எப்பொழுதும் நிலைத்திருக்கின்றது' என்ற அடிப்படையில் பால்நிலை மற்றும் கலாச்சார மன்பான்மைகள் மீது அழுத்தத்தை வைக்கின்றது (ibid). மேற்படி ஆழ்கூறுகள் தொடர்பாக ஆண் மற்றும் பெண் ஆரோக்கியக் குறிகாட்டிகள் பற்றிய ஒரு முழு நீளப் பகுப்பாய்வு, பொருளாதார, தொழில் மற்றும் குடிபெயரும் கோலங்கள் உட்பட WeD அணுகுமுறைக்கு நியாயம் செய்யப்பட வேண்டுமாயின், வேண்டப்படுகின்றது. எவ்வாறாயினும், கெயார் ஆய்விலிருந்தான சான்று ஆண் பிரதிவாதிகளின் உள சுகாதாரத்திற்கும் மற்றும் பொருளாதார, தொழில், கவனத்தை ஈர்க்கும் மனப்பான்மைசார் மற்றும் குடிப்பெயர்வுக் கோலங்களுக்கு இடையே குறித்த இடைத் தொடர்புகளுக்கு வகை ஒன்றினை உருவாக்குவதற்கு ஏற்கனவே போதிய தகவல் இருக்கின்றதெனப் பரிந்துரைக்கின்றது.

## 5.2 பொருளாதார மனஅழுத்தம் மற்றும் நல்வாழ்வு

ஒட்டுமொத்த, 56 சதவீதமான ஆண்கள் தொழில்- தொடர்பான மனஅழுத்தத்தை அறிவித்தனர். அறுபது சதவீதமான ஆண் பிரதிவாதிகள் அவர்கள் போதிய வருமானத்துடன் நல்ல தொழிலைக் கொண்டிருக்கின்றார்கள் என்ற கூற்றுடன் உடன்படவில்லை, மற்றும் சம எண்ணிக்கையினர் (60 சதவீதம்) அவர்கள் போதிய வருமானமின்மை காரணமாக அடிக்கடி மனஅழுத்தம் அல்லது மனச்சோர்வடைவதாக அறிவித்தனர். ஐம்பத்தொரு சதவீதம் அவர்களின் பெரும்பாலான நேரத்தை வேலை இல்லாதிருப்பதிலும் அல்லது வேலை தேடுவதிலும் செலவிட்டதாக அறிவித்தனர். மேலும், அவர்களின் தொழில் நிலைமைகள் பெரும்பாலும் உறுதியானது என உடன்பட்ட 53 சதவீதமான பிரதிவாதிகள் மற்றும் உடன்படாத 43 சதவீதமானோரிடையே எந்த முக்கிய வேறுபாடுகளும் இருக்கவில்லை. நாற்பத்தியாறு சதவீதமான ஆண் பிரதிவாதிகள் கூட அவர்களின் கல்வி மற்றும் அல்லது அனுபவத்திற்குப் பொருந்தும் தொழில் இல்லாதிருப்பதன் காரணமாக அவர்கள் அடிக்கடி மனவழுத்தம் அல்லது மனச்சோர்வடைவதாக அறிவித்தனர் (அட்டவணை 5.1 இனைப் பார்க்க).

### அட்டவணை 5.1

## பணிசார் மனவழுத்தம்

| ஆண் களஆய்வு | உடன்பாடு சதவீதம் | உடன்பாடில்லை சதவீதம் |
|---|---|---|
| எனது பணி அல்லது தொழில் நிலைமைகள் பெரிதும் ஸ்திரமானது | 52.6 | 47.4 |
| போதிய வருமானமின்மை காரணமாக நான் அடிக்கடி மனஅழுத்தம் அல்லது மனச்சோர்வடைகின்றேன் | 60.1 | 39.9 |
| எனது கல்வியறிவிந்கும் / அனுபவத்திற்கும் பொருத்தமான வேலையொன்றின்மையால் நான் அடிக்கடி மனவருத்தத்திற்கு அல்லது மனச்சோர்விற்கு உட்படுகின்றேன் | 45.7 | 54.3 |
| நான் எனது குடும்பத்திற்கு வழங்கவேண்டி இருப்பது மற்றும் பொறுப்பாக இருப்பதன் காரணமாக அடிக்கடி மனஅழுத்தம் அல்லது மனச்சோர்விற்கு உட்படுகின்றேன் | 51.2 | 48.8 |

திடீரென குடும்பத்தில் யாராவது சுகயீனமுற்றால் அவசர சிகிச்சைக்குச் செலவிடுவதற்கு ரூபா 5,000- (அ.மெ.$ 38) வைத்திருப்பார்களா என ஆண் பிரதிவாதிகள் வினவப்பட்ட போது, 37 சதவீத ஆண்கள் ஓரளவுக்கு சிரமமென அறிவித்திருந்த அதேவேளை 21 சதவீதமானோர் மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும் என அறிவித்தனர். பெரும்பான்மையான 58 சதவீத ஆண் பிரதிவாதிகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள், இலவச அல்லது குறைந்த செலவிலான மருத்துவ சேவைகளை அணுகுவதனையும் அவசர சிகிச்சை நெருக்கடியானதாக இருக்கும் என்பதனையும் குறிப்பாக உணர்த்தினர்.

தொழில் வகைகள் மற்றும் வருமான மட்டங்கள் தொடர்பாக, 22 சதவீதத்தினர் அவர்கள் ஒருபோதும் தொழில் கொள்ளப்பட்டிருக்கவில்லை என அறிவித்தனர் (ஒன்றில் அவர்கள் மாணவர்கள் அல்லது தொழிலற்று இருந்தவர்கள்), 20 சதவீதத்தினர் நீலக் கழுத்துப்பட்டை தொழில்களைக் கொண்டிருந்தனர் (தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மேசைப் பணியாளர்கள்), 15 சதவீதத்தினர் விவசாயம் அல்லது மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர், 14 சதவீதத்தினர் வணிகர்கள் அல்லது வியபாரத்தில் இருந்தனர் மற்றும் 10 சதவீதத்தினர் நாளந்தக் கூலி கைவேலைத் தொழிலாளர்கள். இந்தத் தொழில்கள் பெரும்பாலும் உறுதியானவை – ஆண் மாதிரியில் 72 சதவீதமானோர் வழமையாக அவர்கள் வருடம் பூராகவும் தொழிலைக் கொண்டிருப்பதாக அறிவித்தனர், அதேவேளை 20 சதவீதத்தினர் பருவகால தொழில் என அறிவித்தனர். ஒரு பெரும்பான்மையான 41 சதவீதமான ஆண்கள் மாதமொன்றிற்கு ரூபா 10,000 (அமெ.$78) மற்றும் 20,000 (அமெ.$156) இடையில் சம்பாதித்தனர், அதேவேளை 24 சதவீதத்தினர் மாதாந்தம் ரூபா 6,000 (அமெ. $47) மற்றும் ரூபா 10,000 (அமெ.$78) இடையில் சம்பாதித்தனர். 3 சதவீதமான ஆண்கள் மட்டும் மாதாந்தம் ரூபா 3,000 (அமெ.$23) இற்கும் குறைவாக சம்பாதித்துடன், ஆகவே உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டின் கீழ் வருகின்றனர், மாதமொன்றிற்கு நபரொருவருக்கான உண்மையான செலவினம் ரூபா 3,028 ஆக அரசாங்கத்தினால் 2009 – 2010 இல் பட்டியலிடப்பட்டவாறு (குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியற் திணைக்களம், 2009-2010). செலவிடலின் அடிப்படையில், 62 சதவீதமான பிரதிவாதிகள் மாதாந்தம் ரூபா 20,000 இற்குக் கீழ் செலவிட்டனர், மற்றும் 17 சதவீதத்தினர் மாதத்திற்கு ரூபா 10,000 இற்கும் கீழ் செலவிட்டனர். பெரும்பான்மையான ஆண் பிரதிவாதிகளினால் பொருளாதார அழுத்தம், அது பூரண வறுமையின் விளைவாக இருந்திருக்காவிட்டாலும், அவர்களுடைய குறைந்த மாத செலவினம் காசுப்பாய்வு பிரச்சனைகள் மற்றும் பற்றாக்குறையான சம்பாத்தியங்கள் பற்றிய புலக்காட்சி மனஅழுத்த மட்டங்களின் மீது நேரடியான ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன.

அட்டவணை 5.2

## தொழில் வகைகள்

| ஆண் களஆய்வு | சதவீதம் |
|---|---|
| தொழில்நெறிசார்: வைத்தியர், தாதியர், ஆசிரியர் | 4.8 |
| வெள்ளை கழுத்துப்பட்டை: செயலாளர், அலுவலகப் பணியாளர்கள் | 7.3 |
| நீல கழுத்துப்பட்டை: தொழிற்சாலை தொழிலாளர், மேசைப் பணியாளர் | 19.6 |
| வாணிபம் வியாபாரம் | 13.6 |
| கை உழைப்புத் தொழிலாளர் | 9.7 |
| விவசாயம் மீன்பிடி | 14.8 |
| பாதுகாப்பு: காவல்துறை, இராணுவம், முதலியன | 2.4 |
| சாரதி வாடகை வண்டி | 6.3 |
| ஒருபோதும் தொழில்புரியவில்லை / மாணவர் | 21.5 |
| **அடிப்படை** | 1651 |

அட்டவணை 5.3

## வீட்டு மாதாந்த வருமானம்

| ஆண் களஆய்வு | சதவீதம் |
|---|---|
| ரூபா 3,000 விடக் குறைவு | 3.2 |
| ரூபா 3,001 - 6,000 | 7.5 |
| ரூபா 6,001 - 10,000 | 24.0 |
| ரூபா 10,001 - 20,000 | 41.0 |
| ரூபா 20,001 - 50,000 | 21.4 |
| ரூபா 50,001 - 100,000 | 1.5 |
| ரூபா 100,001 - 200,000 | 0.8 |
| ரூபா 200,001 - 300,000 | 0.3 |
| ரூபா 300,001 அல்லது அதிகம் | 0.3 |
| **அடிப்படை** | 1162 |

அவர்களின் பொருளாதாரப் படிநிலை தொடர்பாக, ஆண்களின் குடும்பப் பொறுப்புக்களும், கூட மனஅழுத்தத்திற்கு இட்டுச்சென்ற காரணிகளில் ஒன்றாக இருந்தது. ஐம்பத்தொரு சதவீதமான ஆண்கள் அவர்கள் குடும்பத்திற்கு வழங்க வேண்டி மற்றும் பொறுப்பாக இருந்தமை காரணமாக மனஅழுத்தம் அல்லது மனச்சோர்விற்கு அடிக்கடி ஆட்படுவதாகத் தெரிவித்திருந்தனர். அத்தியாயம் மூன்றில் ஏற்கனவே அவதானிக்கப்பட்டவாறு, பொதுவான பால்நிலை மனப்பான்மைகள் வழங்குனர்களாக ஆண்கள் மீது ஒரு பாரிய சுமையை வைக்கின்றது – அதற்கான சான்று கெயார் களஆய்வில் கண்டறியப்பட்டது அதில் 74 சதவீதமான பெண் மற்றும் 70 சதவீதமான ஆண் பிரதிவாதிகள் ஒரு ஆடவனாக இருப்பதன் பொருள் ஒருவருடைய குடும்பத்திற்கும் விரிவான குடும்பத்திற்கும் வழங்குவதாகும் எனப் பிரகடனப்படுத்தினர். இது எவ்வாறு ஆண்மை என்பதனைச் சுட்டிநிற்கின்றது, இந்த வகையில் 'ஆண் வழங்குனராக' உள்ளுர்க் கலாச்சாரத்தில் ஆழமாகப் பதிக்கப்பட்டு அமைக்கப்பட்டிருப்பதுடன், விளைவாக, ஆணாதிக்க வீட்டுத் தலைமைதுவத்திற்கு ஆண்கள் கொடுக்கும் ஒரு விலையாக ஆண்கள் பொருளீட்டுநர்களாகத் தவறும் போது, அல்லது பற்றாக்குறையான வழங்குனர்களாக உணர்ந்துகொள்ளப்படும் போது, பல்வேறு எதிர்மறையான விளைவுகள் தொடர்கின்றன. நாற்பத்தொன்பது சதவீதமான ஆண்கள் தாங்கள் வேலையின்றி இருப்பதன் காரணமாக அவர்களுடைய குடும்பத்தினருக்கு முகம் கொடுப்பதற்கு அவர்கள் சிலசமயங்களில் வெட்கப்படுவதாக தெரிவித்தனர். பதினேழு சதவீதமான ஆண்கள் அவர்கள் சிலசமயம் வேலை தேட முடியாமையினால் குடிப்பதாக அல்லது வீட்டிற்கு வெளியே தங்குவதாகத் தெரிவித்தனர், மற்றும் 24 சதவீதமான ஆண்கள் 'எனக்கு ஒரு வருமானம் இல்லாத காரணத்தினால் எனது மனைவி, குடும்பம் என்னால் வெட்கப்படுகின்றார்கள் என நான் நினைக்கின்றேன்' என்ற கூற்றுடன் உடன்பட்டனர்.

உழைக்கும் திறன் மற்றும் சம்பாத்தியம், ஆகவே, குடும்பங்களில் அவர்களின் நிலை தொடர்பாக ஆண்களின் புலக்காட்சி மீது அவர்களின் நலன்களைச் சிதைக்கும் வகையில் ஒரு நேரடியான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது. நாற்பத்தெட்டு சதவீதமான ஆண்கள் அவர்களின் பிரதான சம்பாத்தியதை அவர்களுடைய குடும்பத்திற்கு வழங்குகின்றனர், இருந்தபோதும் கூட சமமான எண்ணிக்கையினர் (48 சதவீதம்) அவர்கள் தமது சொந்த வீட்டினைச் சொந்தமாகக் கொண்டிருக்கவில்லை எனப் பிரகடனப்படுத்தினர். இது கணிசமான அளவு ஆண்கள் அவர்களின் சொந்த வீட்டினைச் சொந்தமாக்குவதற்கான கொள்வனவுச் சக்தி இல்லாதிருப்பதனைச் சுட்டிநிற்கின்றது. மேலும், ஆண் மாதிரியின் 36 சதவீதத்திற்கு, பெற்றோரின் சம்பாத்தியமே வீட்டின் பிரதான வருமான மூலமாக இருக்கின்றதது. பெற்றோரின் வருமானத்தில் தங்கியிருப்போர்களில், 78 சதவீதத்தினர் 20-24 வருட வயதுக் குழுவில் இருந்தனர், அதேவேளை 33 சதவீதத்தினர் 25-29 வருடங்கள் வயதுக் குழுவில் இருந்தனர். பெற்றோர் சம்பாத்தியமே குடும்பத்தின் பிரதான நிதி மூலம் எனத் தெரிவித்த ஒரு பேரளவிலான பெரும்பான்மையான ஆண் பிரதிவாதிகள் அவர்களே ஒரு தொழில்புரியும் வயதையுடையவர்கள் என்பதனை இது சுட்டிக்காட்டுகின்றது.

இந்த இலக்கங்கள் அவதானிப்பதற்கு முக்கியமானதாக இருக்கின்றன ஏனெனில், இலங்கையிலுள்ள பல குடும்பங்களில், உடைமையுரிமை மற்றும் வருமானம் குடும்பத்தின் தலைமைத்துவத்தினைத் தீர்மானிக்கின்றது, அது முறையே, வீட்டுக்காரரின் சுயமதிப்பு மற்றும் தன்னம்பிக்கை மீது ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன. 86 சதவீதமான ஆண்கள் ஒரு வீட்டின் தலைமை ஆணா அல்லது பெண்ணா எனத் தீர்மானிக்கும் ஒரு காரணி வருமானமாக இருந்ததெனப் பிரகடனப்படுத்தியமை சிறப்பாகக் கவனிக்கத்தக்கது அதேவேளை, 34 சதவீதத்தினர் மட்டும் வீடொன்றினைகாணியை உடைமையாகக் கொண்டிருத்தல் ஒரு தீர்க்கமான காரணியாக இருந்ததென பிரகடனப்படுத்தியிருந்தனர். சிலவேளை, ஆண்களின் ஆதன உடமையுரிமையின்மை (48 சதவீதம் சொந்தமாக வீட்டினைக் கொண்டிருக்கவில்லை) மற்றும் ஆகவே உடைமையுரிமையை குடும்பத் தலைமைதுவத்தினை நிர்ணயிக்கும் காரணியாகக் குறைத்து மதிப்பிடுவதினை இது சுட்டுகின்றது. ஒருவரது சொந்த வீட்டினைச் சொந்தமாக்க இயலாமை மற்றும் பெற்றோர் நிதிசார் உதவிகளில் தங்கியிருந்தல் ஆகியன ஆண்களின் வேலைகொள்ளப்படும் வயதினைச் சிதைக்கும் ஒரு விளைவினை கொண்டிருந்தமை அவர்கள் துணைப் பணியாளராக அல்லது அவர்களின் ஆண்மையில், பற்றாக்குறையான பொருளாதாரம், மற்றும் அதனால் சமூகப் படிநிலையில் 'சமரசம் செய்யப்பட்டதாக' உணரலாம்.

## 5.3 தற்கொலை எண்ணங்கள் உள்ளடங்கலான மனச்சோர்வு

கெயார் ஆய்வு அதன் ஆண் பிரதிவாதிகளுக்கு இடையே நோய்முறைக் கற்கைகள் நிலைய மனச்சோர்வு அளவிடையில் (CES-D ) அளக்கப்பட்டவாறு நடுத்தர அறிகுறிகளைக் காட்டியது. CES-D அளவிடை பொது மனஅழுத்தம், தூக்கம் மற்றும் உணவுக் கோலங்கள், வாழ்க்கை தொடர்பான நேரான அல்லது எதிர்மறையான நோக்கு மற்றும் தற்கொலை எண்ணங்கள் என்பவற்றின் மட்டங்கள் தொடர்பாக ஒரு தொகை வினாக்களை உள்ளடக்கியிருக்கின்றது (அட்டவணை 5.4 ஐப் பார்க்கவும்). மனஅழுத்தத்தின் நடைமுறைப் படிநிலை பிரதிவாதிகளிடம் அவர்கள் களஆய்வில் பங்கேற்பதற்கு முன்னைய வாரத்தில் அவர்களின் அனுபவங்களைப் பற்றி கேட்பதன் ஊடாக மதிப்பீடு செய்யப்படுகின்றது.

## அட்டவணை 5.4

## ஆண்கள் உள ஆரோக்கியம்: CES-D அளவிடை

| ஆண் களஆய்வு | அரிதாக அல்லது ஒருபோதும் இல்லை சதவீதம் | சில அல்லது சிறிது நேரம் (1-2 நாட்கள்) சதவீதம் | மிதமான அளவு நேரம் (3-4 நாட்கள்) சதவீதம் | அநேக அல்லது எல்லா நேரமும் (5-6 நாட்கள்) சதவீதம் |
|---|---|---|---|---|
| கடந்த வாரம் முழுவதும் நான் வழமையாக என்னைத் தொந்தரவு செய்யாத விடயங்களால் தொந்தரவு செய்யப்பட்டேன் | 80.3 | 15.8 | 2.8 | 1.2 |
| கடந்த வாரம் முழுவதும் எனக்கு உணவு உண்ண வேண்டும் போல உணரவில்லை, எனது உணவு இருப்புக் குறைவாக இருந்தது | 74.8 | 21.3 | 3.1 | 0.8 |
| கடந்த வாரம் முழுவதும் எனது குடும்பத்தின் மற்றும் நண்பர்களின் உதவியுடன் கூட என்னை உச்சாகப்படுத்த முடியவில்லை | 77.1 | 16.7 | 4.3 | 1.9 |
| கடந்த வாரம் முழுவதும் நான் செய்துகொண்டிருப்பதன் மீது எனது மனதைச் செலுத்துவது சிரமமாக இருந்தது. | 72.3 | 21.7 | 4.9 | 1.0 |
| கடந்த வாரம் முழுவதும் நான் மனச்சோர்வடைந்திருப்பதனை உணர்ந்தேன் | 71.9 | 22.1 | 4.6 | 1.3 |
| கடந்த வாரம் முழுவதும் நான் எனது வாழ்க்கை தோல்வியடைந்து இருப்பதாக உணர்ந்தேன் | 80.3 | 15.6 | 2.9 | 1.2 |
| கடந்த வாரம் முழுவதும் நான் அச்சமடைவதை உணர்ந்தேன் | 82.7 | 12.8 | 3.7 | 0.8 |
| கடந்த வாரம் முழுவதும் எனது உறக்கம் அமைதியற்றிருந்தது | 77.1 | 18.4 | 3.7 | 0.8 |
| கடந்த வாரம் முழுவதும் நான் வழமையை விடக் குறைவாகக் கதைத்தேன் | 79.3 | 16.6 | 3.0 | 1.1 |
| கடந்த வாரம் முழுவதும் நான் தனிமையை உணர்ந்தேன் | 79.7 | 15.4 | 3.5 | 1.4 |

## அட்டவணை 5.5

### மனஅழுத்தத்துடனான ஆண்களின் சதவீதம் (உயர் மனஅழுத்த அறிகுறிகள்)

| | ஆண்களின் சதவீதம் |
|---|---|
| தாழ் மனஅழுத்த அறிகுறிகள் | 86.0 |
| மிதமான மனஅழுத்த அறிகுறிகள் | 8.0 |
| உயர் (சிகிச்சையகம்சார்) மனஅழுத்த அறிகுறிகள் | 6.0 |

களஆய்வில், ஆண்கள் எப்போதாவது அவர்கள் தற்கொலை எண்ணங்களைக் கொண்டிருந்தார்களா எனவும் கூட வினவப்பட்டனர், ஒட்டுமொத்தமாக, 7 சதவீதமான ஆண்கள் எப்போதாவது அவர்களின் சொந்த உயிரை மாய்த்துக்கொள்ள எண்ணியதாகத் தெரிவித்திருந்தனர். ஆண் பிரதிவாதிகளிடையே 25-34 வருடங்கள் வயதுடைய குழு பெரும்பாலும் உளச்சோர்வு இடரிலிருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது, 25-34 வருடங்கள் வயதுடைய ஆண்களில் 8 சதவீதத்தினர் உளச்சோர்வின் உயர்ந்த அறிகுறிகளைக் காட்டினர், மற்றும் 8 சதவீதத்தினர் தற்கொலை எண்ணங்களைக்கூட அனுபவித்திருந்தனர். (இது பொருளாதார மனஅழுத்த சான்று மற்றும் 25-34 வருடங்கள் வயதுக் குழுவினரிடையே பெற்றோர் நிதியாதரவில் தங்கியிருத்தல் என்பவற்றுடன் ஒத்ததிர்கின்றது). 18-24 வருடங்கள் இளைய வயதுக்கு குழுவில், 6 சதவீதத்தினர் தற்கொலை எண்ணங்களைக் கொண்டிருந்ததுடன், 5 சதவீதமான ஆண்கள் உயர் உளச்சோர்வு அறிகுறிகளைக் கொண்டிருந்தனர், அதேவேளை முதிர்ந்த 35-49 வயதுக் குழுவினரிடையே, 5 சதவீதத்தினர் உயர்ந்த மட்டங்களில் மனஅழுத்தத்தினைக் காட்டியதுடன் 7 சதவீதத்தினர் தற்கொலை எண்ணங்களை அறிவித்தனர் (அட்டவணை 5.6 இனைப் பார்க்கவும்).

## அட்டவணை 5.6

### தற்கொலை எண்ணங்கள் (நீங்கள் எப்போதாவது உங்கள் வாழ்க்கையை முடித்துக்கொள்ள வேண்டுமென எண்ணியிருக்கின்றீர்களா)

| | ஆண்களின் மொத்த சதவீதம் | வயது | | |
|---|---|---|---|---|
| | | 18-24 சதவீதம் | 25-34 சதவீதம் | 35-49 சதவீதம் |
| ஆம் | 7.1 | 6.4 | 8.0 | 7.0 |
| இல்லை | 92.9 | 93.6 | 92.0 | 93.0 |

உளச்சோர்வு அறிகுறிகளுக்கு வந்தபோது கல்வி ஒரு முக்கிய காரணியாக இருந்தது. ஆண் பிரதிவாதிகளில் ஆரம்பப் பாடசாலைக் கல்வி மட்டும் அல்லது குறைவாகக் கொண்டிருந்தவர்களில், 15 சதவீத்தினர் தற்கொலை எண்ணங்களை அனுபவித்திருந்ததுடன் 13 சதவீதத்தினர் உளச்சோர்வு அறிகுறிகளைக் கொண்டிருந்தனர். ஏதாவது ஆரம்பக் கல்வியறிவு பெற்ற மக்கள் குழுக்களில், 15 சதவீதம் தற்கொலை எண்ணங்களைக் கொண்டிருந்ததுடன் 14 சதவீத்தினர் உளச்சோர்வின் உயர் அறிகுறிகளைக் கொண்டிருந்தனர். சில ஆரம்பக் கல்வி பெற்றவர்களில் பத்து சதவீதத்தினர் மிதமான உளச்சோர்வு அறிகுறிகளைக் கொண்டிருந்தனர், மற்றும் 8 சதவீதத்தினர் தற்கொலை எண்ணங்களைக் கொண்டிருந்தனர். இரண்டாம்நிலைக் கல்வியைப் பூர்த்திசெய்தவர்களிடையே, 5 சதவீதத்தினர் தற்கொலை எண்ணங்களை அனுபவித்திருந்ததுடன் 4 சதவீதத்தினர் உயர் உளச்சோர்வு அறிகுறிகளைக் கொண்டிருந்தனர். இது கல்விசார் அடைவுகளின் குறைந்த விகிதங்களுக்கும் அதன் ஒட்டுறவான குறைந்த தொழில் வாய்ப்புக்கள் மற்றும் குறைந்த சமூக நகர்மை என்பவற்றிற்கு இடையேயான ஒரு இணைப்பை ஒரு புறமும், உயர் உளச்சோர்வு அறிகுறிகள் மற்றும் தற்கொலை எண்ணங்கள் மறு புறமும் சுட்டிநிற்கின்றன.


முன்னர் விவாகமான (பின்னர் பிரிந்து அல்லது விவாகரத்தான) ஆண்கள் உயர் உளச் சோர்வு இடரில் இருந்தனர் எனக் கூட இந்த ஆய்வு கண்டுபிடித்திருக்கின்றது, 26 சதவீதத்தினர் உயர் அறிகுறிகளைக் காட்டியிருந்ததுடன் 15 சதவீத்தினர் தற்கொலை எண்ணங்களை அனுபவித்ததாக அறிவித்திருந்தனர்.

## 5.4 குழந்தைப்பராய மனவதிர்ச்சி

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தவிர, அது விபரமாக அத்தியாயம் நான்கில் கலந்துரையாடப்பட்டது, கெயார் ஆய்வு குழந்தைப்பராய மனவதிர்ச்சி தொடர்பான வேறு குறிகாட்டிகளின் சான்றுகள் கண்டறியப்பட்டிருக்கின்றன. ஆண் பிரதிவாதிகளிடம் வினவப்பட்ட வினாக்களுக்கு இடையே பசி, அவமானப்படுத்தல் மற்றும் அடித்தல், மனவெழுச்சிப் புறக்கணிப்பு, கொடுமைப்படுத்துதல் மற்றும் கேலிசெய்தல், பெற்றோர்களுக்கு இடையே நெருங்கிய துணைவர் வன்முறையைக் கண்டிருத்தல் அத்துடன் மதுபோதைக்கு அடிமையான மற்றும் ஆஜராகாத பெற்றோர் தொடர்பான அனுபவங்களைக் கைப்பற்ற வடிவமைக்கப்பட்டனவும் இருந்தன.

உரு 5.1

### சிறுவர்களாக வித்தியாசமான துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பை அனுபவித்த ஆண்களின் சதவீதம்




அட்டவணை 5.7 ஆண்கள் அவர்கள் 18 வருடங்களுக்குக் குறைந்த வயதுடையவர்களாக இருந்தபோது அனுபவித்ததாகத் தெரிவித்த ஒட்டுமொத்த சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு வீதங்களைக் காட்டுகின்றது. உரு 5.1 குழந்தைப்பராய மனவதிர்ச்சி அளவிடையில் சகல வினாக்களுக்குமான ஆண்களின் பதிலளிப்புகளை உடல்சார் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம், மனவெழுச்சித் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு என்ற வகைகளினுள் கூட்டமாக்கிக் காட்டுகின்றது. அனுபவங்களின் நிகழ்வெண் சிலசமயம், மற்றும் பலதடவை மிகப் பலதடவை எனச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஒட்டுமொத்தமாக, 38 சதவீதமான ஆண் பிரதிவாதிகள் அவர்கள் 18 வருடங்கள் வயதை அடைய முன்னர் அவர்கள் உண்பதற்குப் போதியனவின்றி இருந்திருக்கின்றார்கள். அதேபோல, 38 சதவீதத்தினர் ஒரு குழந்தையாக சில வடிவிலான உடல்சார் துஷ்பிரயோகத்தை அனுபவித்ததாகக் கூட அறிவித்திருந்தனர் - 50 சதவீதத்தினர் அவர்கள் ஒரு பாடசாலை ஆசிரியரால் அல்லது ஆசிரியையால் சிலசமயங்களில் அல்லது அடிக்கடி அடிக்கப்பட்டு அல்லது உடல்ரீதியாகத் தண்டிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிட்டனர் மற்றும் 36 சதவீதத்தினர் சிலவேளைகளில் அல்லது அடிக்கடி வீட்டில் ஒரு தடியால் அடிக்கப்பட்டிருந்தனர். இருபத்தெட்டு சதவீதமான ஆண்கள் அவர்கள் சிறுவர்களாக இருந்தபோது சில வடிவிலான பாலியல் துஷ்பிரயோகத்தினை முன்னைய அத்தியாயத்தில் கலந்துரையாடப்பட்டவாறு அனுபவித்திருக்கின்றனர்.

நாற்பத்திநான்கு சதவீதமான ஆண்கள் அவர்கள் குழந்தையாக இருந்த போது சோம்பேறி, முட்டாள் அல்லது பலவீனமானவன் எனக் குடும்பத்திலுள்ள ஒருவரால் அழைக்கப்பட்டமை போன்ற சில வடிவிலான மனவெழுச்சித் துஷ்பிரயோகத்தை அனுபவித்திருந்தனர், அல்லது மற்றவர்கள் முன்னிலையில் குடும்பத்தில் உள்ள ஒருவரால் அவமதிப்பு மற்றும் இழிவுபடுத்தலை அனுபவித்திருந்தனர். முப்பத்தொன்பது சதவீதத்தினர் அவர்கள் சில வடிவிலான மனவெழுச்சிப் புறக்கணிப்பை அனுபவித்ததாக அறிவித்திருந்தனர் - உதாரணமாக, 10 சதவீதமானோர் சிலசமயங்களில் அல்லது அடிக்கடி அவர்களைக் கவனிக்க முடியாதளவுக்கு இரண்டு பெற்றோர்களும் மிகவும் குடித்து அல்லது போதைவசப்பட்டிருந்ததாகக் கூறினர். முப்பது சதவீதமான ஆண் பிரதிவாதிகள் அவர்கள் சிலசமயங்களில் அவர்களுடைய தாயார் அவர்களுடைய கணவர்களால் அல்லது ஆண் நண்பர்களால் அடிக்கப்படுவதை கண்ணுற்றிருந்தார்கள் (அட்டவணை 5.7 இணைப் பார்க்க).

அட்டவணை 5.7

## ஆண் குழந்தைப்பராய மனவதிர்ச்சி அளவிடை

| ஆண் களஆய்வு | ஒருபோதுமில்லை சதவீதம் | சிலவேளைகளில் சதவீதம் | பல தடவை / மிகப் பல தடவை சதவீதம் |
|---|---|---|---|
| **எந்த வடிவிலுமான உடல்சார் துஷ்பிரயோகம்** | **61.7** | | |
| நான் ஒரு பெல்ட் அல்லது தடி அல்லது சவுக்கு அல்லது கடினமான வேறு ஒன்றினால் அடிக்கப்பட்டேன் | 64.0 | 33.2 | 2.8 |
| நான் வீட்டில் தழும்பு அல்லது காயம் வருமளவுக்கு பலமாக அடிக்கப்பட்டிருக்கின்றேன் | 87.9 | 11.5 | 0.6 |
| நான் பாடசாலையில் ஒரு ஆசிரியரால் அல்லது தலைமை ஆசிரியரால் அடிக்கப்பட்டேன் அல்லது உடல்ரீதியாகத் துன்புறுத்தப்பட்டேன் | 50.5 | 42.1 | 7.4 |
| **எந்த வடிவிலுமான பாலியல் துஷ்பிரயோகம்** | **72.3** | | |
| ஒருவர் என் பின்புறங்களைத் அல்லது பாலுறுப்புக்-களைத் தொட்டார் அல்லது நான் விரும்பாத போது என்னை அவற்றைத் தொடுமாறு செய்தார் | 87.2 | 12.1 | 1.0 |
| நான் மிரட்டப்பட்டதால் அல்லது அச்சுறுத்தப்பட்டதால் அல்லது பலவந்தப்படுத்தப்பட்ட காரணத்தால் நான் ஒருவருடன் பாலுறவு கொண்டிருந்தேன் | 96.7 | 3.1 | 0.2 |
| நான் என்னைவிட 5 வருடங்களுக்கு அதிகமான வயதுகூடிய ஒரு பெண்ணுடன் பாலுறவு கொண்டிருந்தேன் | 94.4 | 4.7 | 0.9 |
| நான் ஒரு சமூகத் தலைவர் வயதுகூடிய பாடசாலைப் பையனுடன் பாலியல் அல்லது உடல்சார் உறவு கொள்ள கட்டாயப்படுத்தப்பட்டேன் | 96.8 | 2.9 | 0.1 |
| நான் ஒரு பாலியற் தன்மையான தேவையற்ற சம்பவங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டேன் | 90.1 | 9.3 | 0.6 |
| எனது விருப்பத்திற்கு மாறாக நான் ஆபாசப் படங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டேன் | 85.7 | 12.7 | 1.3 |
| **எந்த வடிவிலுமான மனவெழுச்சிப் புறக்கணிப்பு** | **61.5** | | |
| நான் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வீடுகளில் வசித்தேன் | 73.6 | 21.5 | 5.0 |
| நான் வீட்டிற்கு வெளியே நேரத்தைச் செலவிட்டேன் வீட்டிலுள்ள எந்த வளர்ந்தவர்களுக்கும் நான் எங்கிருந்தேன் என்று தெரியாது | 83.7 | 12.8 | 3.5 |
| என்னைக் கவனிப்பதற்கு முடியாதளவுக்கு எனது பெற்றோரில் ஒருவர் அல்லது இருவரும் மிகவும் குடித்து அல்லது போதைவசப்பட்டிருந்தனர் | 89.9 | 9.0 | 1.1 |
| **எந்த வடிவிலுமான மனவெழுச்சித் துஷ்பிரயோகம்** | **55.8** | | |
| நான் எனது தாயார் அவளது கணவரால் அல்லது ஆண்நண்பரால் அடிக்கப்படுவதை பார்த்தேன் அல்லது கேட்டேன் | 69.5 | 27.3 | 3.1 |
| எனது குடும்பத்திலுள்ள ஒருவரால் நான் சோம்பேறி அல்லது முட்டாள் அல்லது பலவீனமானவன் என எனக்குக் கூறப்பட்டிருந்தது | 76.1 | 22.3 | 1.5 |
| நான் எனது குடும்பத்தில் உள்ள ஒருவரால் மற்றவர்கள் முன்னிலையில் அவமானப்படுத்தப்பட்டு அல்லது இழிவுபடுத்தப்பட்டு இருந்தேன் | 82.6 | 16.3 | 1.2 |
| எனக்கு உண்பதற்குப் போதியன எவையும் இருக்கவில்லை | 62.2 | 30.0 | 7.8 |

புவியியல் அமைவிட ரீதியாக வேறுபடுத்தி ஆராய்கின்றபோது, 18 வயதுக்கு முன்னர் பசியை அனுபவித்த வீதம் நுவரெலியா மாவட்டம் (34 சதவீதம்) மற்றும் கொழும்பு (31 சதவீதம்) தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டம் மிகவும் உயர்ந்ததாக (37 சதவீதம்) இருந்தது, யுத்தம், பெருந்தோட்டத் தொழிற்துறையின் நிலையற்ற மாறுந்தன்மை மற்றும் நகரமயமாக்கல் காரணமாக உள்ளூர்ப் பொருளாதாரம் அழுத்தத்திற்கு உட்பட்டிருந்தமையை முறையே பிரதிபலிக்கின்றது. பெருந்தோட்டத் தொழிற்துறையில் மட்டும், ஊட்டச்சத்துக் குறிகாட்டிகள் குறைவாக இருக்கின்றன: நாட்டில் வேறெங்கும் இல்லாதவாறு நகர மற்றும் கிராமியப் பிரதேசங்களுடன் ஒப்பிடுகின்றபோது குறைந்த பிறப்பு நிறை இரண்டு மடங்கை விட அதிகமாக இருக்கின்றது (ஜயசூரிய, 2012, ப.10); மற்றும் பெருந்தோட்டத் தொழிற்துறைபற்றிய முன்னைய ஆய்வுகள், 2010 ஆண்டில் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் களஆய்வு உட்பட, நுவரெலியா மாவட்டத்திலுள்ள 70 சதவீதமான குடும்பங்களில் வறுமை காரணமாக குறைந்த கொள்வனவுத் திறன் தொடர்பான குறைந்த மட்டங்களிலான விலங்குப் புரதம் மற்றும் இரும்புச்சத்துடன் உணவுப் பல்முகத்தன்மை இல்லாதிருப்பது அவதானிக்கப்பட்டது (ஜயசூரிய, 2012, ப.12).

## 5.5 ஆஜராகாத தந்தையர்கள் மற்றும் ஆரோக்கியம் மீதான தாக்கம்

குழந்தை வளர்ப்பில் பெற்றோர் ஆஜராகாதிருத்தல் குழந்தை மனவெழுச்சிப் புறக்கணிப்புடன் தொடர்புபட்டதாக இருக்கின்றது. குழந்தை மேம்பாடு, பெற்றோர்- குழந்தைப் பிணைப்பு மற்றும் முழுமையாக குடும்ப சுகாதாரத்தில் குழந்தைகளுடன் பெற்றோர் நேரம் செலவிடுதல் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. தந்தையர்கள், குறிப்பாக, குழந்தையைப் பேணி வளர்ப்பதில் பெரும்பாலும் ஆஜராகாதிருத்தல் ஒன்றில் பால்நிலைப்பட்ட விதிமுறைகளால் உருவாக்கப்பட்ட பற்றற்ற தன்மை காரணமாக, அல்லது பொருளாதாரத் தேவை நிமித்தம் தொழில் தேடி அவர்களுடைய சொந்த மாவட்டங்களிலிருந்து ஆண் பெற்றோர் இடம்பெயர்ந்து செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டமை கெயார் ஆய்வில் கண்டறியப்பட்டிருக்கின்றது. இந்தக் களஆய்வில் ஆண் பிரதிவாதிகள் அவர்கள் அவர்களுடைய குழந்தைகளுடன் விளையாடினார்களா, சொந்த விடயங்களைப் பற்றி அவர்களுடன் கதைத்தார்களா, பாலியல் கல்வி பற்றி அவர்களுடன் கதைத்தார்களா மற்றும் வீட்டுவேலைகளில் உதவிசெய்தார்களா என ஒரு தொடர் வினாக்களுக்கு விடையளிக்குமாறு கேட்கப்பட்டனர். வினாக்களுக்குப் பதிலளித்த ஒரு குறைந்தபட்ச 245 பிரதிவாதிகளின் அடிப்படையில், 18-24 வருடங்கள் வயதுக் குழுவில் 40 சதவீதமான தந்தையர், 25-34 வருட வயதுக்குழுவில் 38 சதவீதமான தந்தையர் மற்றும் 35-49 வருட வயதுக் குழுக்களில் 28 சதவீதமான தந்தையர்கள் ஆகியோரினால் குழந்தைகளுடன் நடுத்தர- மட்ட ஈடுபாடு கொண்டிருந்தது காணப்பட்டது. சகல வயதுக் குழுக்களிலும் பேரளவிலான பெரும்பான்மை, எவ்வாறாயினும், அவர்களுடைய குழந்தைகளுடன் குறைந்த மட்டத்திலான ஈடுபாட்டினைக் கொண்டிருந்தனர், 35-49 வருட வயதுக்குழுவில் 65 சதவீதத்துடன் குறைந்த- மட்ட ஈடுபாடு வகையில் மிகவுயர்ந்தாகவிருந்தது.

இந்தத் தரவு தலைமுறைசார் பரிமாற்றத்திற்கு பாரதூரமான விளைவுகளைக் கொண்டிருக்கின்றது ஏனெனில் திடமான பெற்றோர்நிலை குழந்தைகளில் அவர்கள் கட்டிளமைப்பருவத்தினராக வருகின்ற போது, சிறந்த உடல்சார் மற்றும் உளசார் சுகாதாரக் குறிகாட்டிகள் அத்துடன் கல்விசார் அடைவு மற்றும் குறைந்த குற்ற உணர்மை நன்மையான விளைவுகளை உருவாக்குவதாக அறியப்பட்டிருக்கின்றது (மக்அலிஸ்டர், et al., 2012, ப.5).

இன்று அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களிலுள்ள ஒரு அம்சம் தொழிலாளர் படையிலுள்ள அநேகர் மேலதிக நேரம் உட்பட தொழிலில் அல்லது கிராமப்புற இல்லங்களிலிருந்து நகர்ப்புற வேலைத்தளங்களுக்குப் பிரயாணஞ் செய்வதில் நீண்ட நேரத்தைச் செலவிடுகின்றனர். ஒரு கணிசமான அளவு குடித்தொகை கூட நாட்டிலுள்ள ஏனைய மாவட்டங்களுக்கு உள்ளகமாக அல்லது தொழிலுக்காக வெளிநாடுகளுக்குக் இடம்பெயர்கின்றனர். இந்தக் கோலங்கள் அவர்களுடைய இல்லங்களிலிருந்து கணிசமான அளவு தந்தையர் அல்லது தாய்மார்கள் ஆஜராகாமையில் விளைகின்றது, அது தனிப்பட்ட பெற்றோர் நல்வாழ்வு அத்துடன் ஒட்டுமொத்த குடும்ப சுகாதாரத்தில் ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது. ஐம்பத்தொரு சதவீதமான ஆண்பிரதிவாதிகள் தொழிலுக்காக அவர்களுடைய சொந்த மாவட்டங்களை விட்டு இடம்பெயர்ந்ததாகத் தெரிவித்தனர்.

இருபது சதவீதமான ஆண்கள் கூட அவர்கள் வளரும்போது அவர்களுடைய உயிரியல் தாயார் ஒருபோதும் வீட்டிலிருந்ததில்லை அல்லது அரிதாக இருந்தார்கள் என்று தெரிவித்தனர், அதேவேளை 35 சதவீதமான ஆண்கள் அவர்களுடைய உயிரியல் தந்தையர் ஒருபோதும் வீட்டிலிருந்ததில்லை அரிதாக வீட்டிலிருந்ததாகத் தெரிவித்தனர். எழுபத்தேழு சதவீதமான ஆண் பிரதிவாதிகள் அவர்கள் வளரும்போது அவர்களுடைய உயிரியல் தந்தையர்கள் தவிர வேறு எந்த முக்கிய ஆண் நபர்களும் அவர்களுடைய வாழ்க்கையில் இருந்ததில்லை என்று அறிவித்தார்கள். கெயார் ஆண் மாதிரியில், தந்தையர் தாய்மார்களைவிடப் பெரும்பாலும் ஆஜராகாதிருப்பதனையும் உயிரியல் தந்தையர் ஆஜராகாதபோது ஆண் குழந்தைகளை ஆண் வழிகாட்டல் இல்லாதிருந்தமையை இது கோடிட்டுக் காட்டுகின்றது.

நுவரெலியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள் அஜராகாத பெற்றோர்களில் மிக உயர்ந்த சதவீதத்தைக் கொண்டிருந்தன, 27 சதவீதம் மற்றும் 38 சதவீதமான ஆண் பிரதிவாதிகள் நுவரெலியா மாவட்டத்தில் இருந்து, முறையே, அவர்களின் தாய்மார்கள் மற்றும் தந்தைமார்கள் அரிதாக வீட்டில் இருந்ததாகத் தெரிவித்தார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில், 24 சதவீதமான ஆண்கள், அவர்களுடைய தாயார் அரிதாக வீட்டிலிருந்ததாகத் தெரிவித்தனர் அதேவேளை 36 சதவீதத்தினர் அவர்களுடைய தந்தையர் வீட்டில் அரிதாக இருந்தனர். இந்த இரண்டு மாவட்டங்களிலும் தாய்மார்களுடன் ஒப்பிடும்போது தந்தையர்களின் ஆஜராகாமை புள்ளிவிபர ரீதியில் முக்கியத்துவமானதாக இருந்தமையை இந்தத் தரவு சுட்டிக்காட்டுகின்றது.குறித்தசில கட்டமைப்பு நிபந்தனைகள் குறிப்பாக நுவரெலியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள் தொடர்பாக ஏன் தந்தையர்கள் பெரும்பாலும் அவர்களுடைய இல்லங்களில் ஆஜராகாதிருந்தனர் என்பதற்குகான பதிலைக் கொண்டிருக்கின்றன. நுவரெலியா பெருந்தோட்டங்களில் வேலை நாளின் தொடக்கத்தில் ஆரம்பிப்பதுடன் வேலையின் பின்னர் ஆண்கள் பெரும்பாலும் அவர்களின் வருமானத்தை மேம்படுத்துவதற்காக மிகைநிரப்புத் தொழில்களில் ஈடுபடுகின்றனர். பெருந்தோட்டத் தொழிற்துறையில் மது நுகர்வு உயர்வாக இருந்ததாகக் கூட ஆய்வுகள் காட்டின, இருந்தபோது ஆண்களின் மது பாவனை மற்றும் மது அடிமையாதல் தொடர்பில் அங்கு பண்புசார்பாக குறைத்து அறிவிக்கப்பட்டிருக்கின்றது (CEPA, 2005, ப.83). இது கெயார் மாதிரியை உறுதிசெய்கின்றது அங்கு, ஒட்டுமொத்தமாக 5 சதவீதமான ஆண்கள் மட்டும் ஒவ்வொரு நாளும் குடிப்பதாக ஒப்புக்கொண்டிருந்த போதிலும், இங்கு கூட, உயர்ந்த மிகவுயர்ந்த மது நுகர்வு ஒப்புகை (8 சதவீதம்) நுவரெலியா மாவட்டத்திலிருந்து வந்திருந்தது. அவர்களுடைய ஒழுங்கான தொழில் தவிர, மிகைநிரப்புத் தொழில்கள் மற்றும் உள்ளூர் தவறணைகளில் செலவிடப்படும் காலம் ஏன் பெருந்தோட்டத் தொழிற்துறையில் ஆண்கள் இல்லத்திற்கு அப்பால் நேரத்தைச் செலவிடுகின்றார்கள் என்ற காரணங்களை அமைக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டம், மறு புறத்தில், இலங்கையின் நீண்ட ஆயுத முரண்பாட்டின் களமுனையில் இருந்ததுடன், ஆஜராகாத தந்தையர்கள் உள்நாட்டு யுத்தத்தால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு, யுத்தம் காரணமான மரணங்கள், அல்லது கடல்கடந்த குடியகல்வு மற்றும் தொழில் தேடியும் யுத்தத்ததை தவிர்ப்பதற்குமான உள்நாட்டு இடம்பெயர்வு (பிரதானமாக மேல் மாகாணத்திற்கு) என்பவற்றினைப் பிரதிபலிக்கின்றனர். மட்டக்களப்பிலிருந்து ஆண்கள் பொலன்னறுவை போன்ற அடுத்துள்ள மாவட்டங்களுக்குக் கூட பருவகால விவசாய வேலைக்காக இடம்பெயர்கின்றனர். உள்நாட்டு யுத்தம் தொடர்பான வன்முறை, இடம்பெயர்வு, பொருளாதாரச் சரிவு – கிழக்கு மாகாணம் 2009 இல் மொத்தத் தேசிய உற்பத்திக்கு 5.8 சதவீதத்தை மட்டுமே பங்களிப்புச் செய்திருந்தது (த ஐலன்ட் 20/7/2010) – மற்றும் பருவகால விவசாயப் பாங்கு, ஆகியன காரணமாக ஆண்கள் அவர்களுடைய இல்லங்களைவிட்டுச் செல்வதற்குக் கட்டாயப்படுத்திய காரணிகளாக இருந்தன, இதன் விளைவாக தந்தைவழி பெற்றோர்நிலை ஆஜராகாமை ஆண்களின், அத்துடன் குடும்பத்தின் நல்வாழ்வுகளில், சிறுவர் மேம்பாடு உட்பட, தாக்கம் செலுத்தியிருக்கின்றது.

## 5.6 இனவிருத்திச் சுகாதாரம்

ஒட்டுமொத்த கெயார் எழுமாற்று மாதிரி ஒரு பெரும்பாலும் விவாகமான மக்கள்தொகையையே கைப்பற்றியிருந்தது. கர்ப்பம் தொடர்பான மனப்பான்மைகள் பெரும்பாலும் மிதமான ஆதரவான ஆண்களைச் சுட்டிக்காட்டியது. கெயார் ஆய்வில் பங்கேற்ற தொன்னூற்றொரு சதவீதமான பெண் பிரதிவாதிகள் கருவுற்றிருந்தார்கள் 30 சதவீதமான மாதிரி இரண்டு குழந்தைகளில் தாயாராக இருந்தனர். ஒரு பெரும்பான்மையான பெண்கள் (54 சதவீதம்), இருந்தபோதும் ஒரு பேரளவிலான பெரும்பான்மையல்ல, கருத்தரிப்பதிலிருந்து தவிர்த்துக்கொள்வது பிரதானமாக பெண்களின் பொறுப்பாக இருந்தது என்ற கருத்திற்கு ஆதரித்தனர். எவ்வாறாயினும், ஒரு கணிசமான அளவு பெரும்பான்மையான (68 சதவீதம்) ஆண்கள் இந்த நிலைப்பாட்டிற்கு உடன்படவில்லை. இந்தத் தொகைகள் ஆண்கள் தரப்பில் கூட்டி- அறிவிக்கப்பட்டமையைப் பிரதிபலிக்கலாம், ஆனால் கூட்டி- அறிவிக்கப்பட்டிருத்தல் அல்லது அரசியல் சரிநிலை, இருந்தபோதும், அவர்களுடைய துணைவர்களின் இனவிருத்திச் சுகாதாரம் தொடர்பாக அவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய ஆண்களின் விழிப்புணர்வினைச் சுட்டிக்காட்டுகின்றது.

அவர்களுடைய கர்பவதியான மனைவியருக்கு ஆண்களின் உண்மையான ஆதரவு, 74 சதவீதமான ஆண்கள் (வினாக்களுக்குப் பதிலளித்த 650 ஆண் பிரதிவாதிகளின் ஒரு அடிப்படை ஒன்றின்) அவர்களுடைய மனைவியரை அவர்கள் மகப்பேற்றிற்கு முந்திய சிகிச்சையகங்களுக்குக் கூட்டிச்சென்றதாகத் தெரிவித்தமை, அல்லது மகப்பேற்று உதவியாளர்தாதியின் இல்ல வருகைகளின் போது உடனிருந்தமை, அதேவேளை 97 சதவீதமான பெண்கள் (பெண் பிரதிவாதிகளின் ஒரு 343 அடிப்படையின்) அவர்களின் கணவர்கள் தாங்கள் மகப்பேற்றுக்கு முந்திய சிகிச்சையகங்களுக்குச் செல்வதை ஒருபோதும் தடுக்கவில்லை என்று அறிவித்திருந்தமை என்பவற்றுடன் ஒரு உயர்ந்த மட்டத்தைப் பிரதிபலித்திருந்தது. தொன்னூற்று நான்கு சதவீதமான பெண்கள் அவர்களுடைய எந்த கர்ப்பத்திலும் குழந்தைக்குத் தயாராவதற்கு ஆடைகள் வாங்குவதற்கு ஒருபோதும் மறுத்ததில்லை என்று கூடக் கூறியிருந்தனர். மேலும், 96 சதவீதமான பெண்கள் அவர்கள் கர்ப்பகாலத்தில் ஒருபோதும் உடல்ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்யப்படவில்லை எனத் தெரிவித்திருந்தனர், மற்றும் 95 சதவீதமானோர் அவர்கள் ஒருபோதும் கர்பகாலத்தில் பாலுறவு கொள்ளப் பலவந்தப்படுத்தப்படவில்லை என்று கூறினர்.

கர்ப்பந்தரிப்பதைத் தவிர்த்தல் பிரதானமாகப் பெண்களின் பொறுப்பு என்பதற்கு 68 சதவீதமான ஆண்கள் உடன்படாதிருந்த போதிலும் - இனவிருத்தியில் அவர்களின் இணைந்த பொறுப்பினை ஏற்றுக்கொண்டமையைக் குறிப்பாகச்சுட்டுகின்றது – கருத்தடைகள் பயன்பாட்டிற்கு வருகின்றபோது, ஆண்களின் ஆணுறைப் பயன்பாடு மிகவும் குறைவாக இருந்தது. எந்தக் கருத்தடை முறை பயன்படுத்தப்பட்டன என்ற வினாவிற்குப் பதிலளித்த 11 சதவீதமான பெண்களில், 9 சதவீதத்தினர் திட்டமிட்ட பெற்றோர்நிலையின் ஒரு வழிவகையாக ஆண்களின் ஆணுறைப் பயன்பாட்டினை அறிவித்திருந்தனர். ஆண்கள் கருத்தடையினை பெரும்பாலும் பெண்களிடம் விட்டிருப்பதனை இது காட்டுகின்றது, அவர்களில் 42 சதவீதமான பெண்கள் ஊசி உட்பதிப்பினை பயன்படுத்தினர், அவர்களில் 25 சதவீதத்தினர் மாத்திரைகளில் இருந்தனர், அவர்களில் 16 சதவீதத்தினர் குடும்பக் கட்டுப்பாட்டுச் சாதனத்தைப் (IUD) பயன்படுத்தினர் மற்றும் அவர்களில் 5 சதவீதத்தினர் மலடாக்கப்பட்டிருந்தனர். 21 சதவீதமான பெண்கள் மட்டும் ஆணுறை பயன்படுத்துமாறு கேட்டால் அவர்களின் துணைவர்கள் கோபப்படுவார்கள் என்ற கூற்றுடன் உடன்பட்டிருப்பது அவற்றுள் முக்கியமானதாக இருக்கின்றது. பெண்களால் அறிவிக்கப்பட்டவாறிருந்தால், அவர்களுடைய பெரும்பாலான ஆண்கள் ஆணுறை பயன்படுத்துவதற்கு விரும்பியிராது இருந்தால் ஏன் அந்த சில பெண்கள் ஆணுறைப் பயன்பாட்டினை ஒரு கருத்தடை வழிவகையாகத் தெரிவித்தனர்? இது சிலவேளை, ஒரு பாலினப்பட்ட, ஆண்களைக் கேட்பதற்கு பெண்கள் உரித்தற்றிருக்கின்றதாக உணரும் அல்லது அவர்களது ஆண் துணைவர்களை மகிழ்ச்சிப்படுத்த விரும்பியமை, அல்லது ஆணுறைகளை ஒரு கருத்தடை முறையாக அவர்களாகவே விரும்பாதிருந்த ஒரு பண்பாட்டு சூழமைவினை சுட்டிக்காட்டுகின்றது.

## 5.7 எச்ஐவி தொடர்பான மனப்பான்மைகள்

ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரிடையேயும் எச்ஐவி பரிசோதனை குறைவாக இருந்தது. 4 சதவீதமான ஆண் மற்றும் பெண் பிரதிவாதிகள் மட்டுமே எப்போதாவது எச்ஐவிக்குப் பரிசோதிக்கப்பட்டிருந்தனர். இது தலையீடு வேண்டப்படுகின்ற ஒரு பரப்பாக இருக்கின்றது, குறிப்பாக 25-34 வருடங்கள் வயதுக் குழுக்களில் குறிப்பாக 15 சதவீதமான ஆண்கள், 35-49 வருடங்கள் வயதுக் குழுக்களில் 13 சதவீதமானோர் மற்றும் 18-24 வருடங்கள் வயதுக் குழுவில் 3 சதவீதத்தினர் பரிமாற்றப் பாலியல் மற்றும் வர்த்தகப் பாலியற் தொழிலாளர்களுடன் பாலுறவினைக் கொண்டிருந்ததாக அறிவித்திருந்தனர். நான்காவது அத்தியாயத்தில் கலந்துரையாடப்பட்டவாறு, பரிமாற்றம் பாலுறவு மற்றும் வர்த்தகப் பாலியல் தொழிலாளர்களுடனான பாலுறவு இரண்டும் ஆண்களின் துணைவரல்லாத பாலியல் குற்றமிழைத்தலுக்கான சாத்தியச்கூற்றினை அதிகரிப்பதாகக் காணப்பட்டிருந்தது, அது கற்பழிப்பினையும் உள்ளடக்கக்கூடும். மேலும், 24 சதவீதமான பாலியல் வன்முறைக் குற்றமிழைத்தோர் அவர்களுடன் பாலுறவு கொள்வதற்கு இரண்டு மூன்று பெண்களைப் பலவந்தப்படுத்தியிருந்ததாக ஏற்றுக் கொண்டிருந்தனர்.

இந்தப் பல பாலியல் துணைவர்கள் கோலங்கள், அத்துடன் முன்பு குறிப்பிடப்பட்ட ஆண்களினால் குறைந்தளவு ஆணுறைப் பயன்பாடு, மற்றும் போதைப்பொருள் பாவனையை ஏற்றுக்கொண்ட (அத்தியாயம் நான்கினைப் பார்க்க) நெருங்கிய துணைவர் வன்முறை பாலியல் வன்முறை குற்றமிழைத்த ஆண்களில் 49 சதவீதத்தினரில் சிலரால் ஊசிகளின் பயன்பாட்டின் சாத்தியம் ஆண் மற்றும் பெண் இருபாலாரையும் எச்ஐவி இடரில் வைக்கின்றது. எச்ஐவி தொடர்பான பகிரங்க விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் இலங்கையில் உயர் புலப்பாடற்றிருந்த அல்லது நீடித்துநிலைத்திராத உண்மையைத் தவிர, எச்ஐவி உடன் இணைந்த களங்கம் கூட ஆண்கள் சார்பாக வேறு ஆய்வுகளில் அவதானிக்கப்பட்வாறு தன்னிச்சையான பரிசோதனைக்கு எதிராகத் தணிக்கின்றது (ICES, 2009, ப.29). சில பெண்கள் ஏன் தாம் எச்ஐவிக்குப் பரிசோதிக்கப்பட வேண்டும் என ஒரு தார ஆண் துணைவர்களைக் கொண்ட பெண்களினால் எதிர்பார்க்கப்படுவது கூட ஒரு காரணமாக இருக்கலாம். ஒரு அடிப்படையான 511 பெண்களில், கெயார் மாதிரியில் 82 சதவீதமான பெண்கள் 'உங்களுடைய தற்போதைய/முன்னைய கணவர்கள் துணைவர்கள் வேறு யாருடனாவது பாலுறவு கொண்டிருப்பது எவ்வளவு சாத்தியம்?' என்ற வினாவிற்கு 'நிச்சயமாக இல்லை' என்று கூறினர். அதேவேளை 11 சதவீத்தினர் மட்டும் 'ஒருவேளை இருக்காது' எனப் பதிலளித்தனர். ஆகவே சமூக மனப்பான்மைகள் மற்றும் பண்பாட்டுசார் எதிர்பார்ப்புக்கள் தன்னிச்சையாக எச்ஐவி பரிசோதனை செய்தல் உட்பட, மக்களின் ஆரோக்கியம்- நாடும் நடத்தை தொடர்பான நடைமுறைகளில் செல்வாக்கு செலுத்துகின்றன.

மேற்படி தரவு இனவிருத்திச் சுகாதாரத்திற்கு வருகின்ற போது பாலின உறவுகளின் சில முக்கியமான தோற்றப்பாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றன. முதலாவதாக, ஆண்கள் மிதமான மட்டங்களில் இனப்பெருக்கச் சுகாதாரம் தொடர்பாக அவர்களின் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டிருப்பதைக் காட்டிய போதிலும்கூட, கலந்துரையாடப்பட்ட கருத்தடை (குறிப்பாக ஆண்களினால் ஆணுறைகளின் பயன்பாடு) குறைவாக இருக்கின்றது. ஆண்களின் மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இடையேயான இந்த இடைவெளியின் விளைவாக கருத்தரித்தலைத் தவிர்ப்பதற்கு பல்வேறு கருத்தடை முறைகளை பெண்கள் நம்பியிருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுவதுடன் திட்டமிட்ட பெற்றோர்நிலைக்கான பொறுப்பின் பெரும் பங்கிற்குத் தோழ்கொடுக்க வேண்டியிருக்கின்றது. இரண்டாவதாக, எச்ஐவிக்கான பரிசோதனை மிகவும் குறைவாக இருக்கின்றது, பரிசோதனையை ஒரு தேவையாகக் கருதாத ஒரு மாதிரி மக்கள்தொகையைச் சுட்டிக்காட்டுகின்றது, பரிமாற்றப் பாலியல் அல்லது வர்த்தகப் பாலியல் தொழிலாளர்களுடன் பாலுறவில் ஆண்கள் ஈடுபட்டிருப்பதும்கூட, மற்றும்அல்லது பல பெண் துணைவர்கள் மீது நெருங்கிய துணைவர் வன்முறை பாலியல் வன்முறைக் குற்றமிழைத்தவர்கள், குறைந்த ஆணுறைப் பயன்பாட்டிற்கு இசைகின்றமை அல்லது போதைப்பொருள் எடுக்கும்போது ஊசிகளின் பயன்பாடு உயர் - இடர்க் குழுக்களை அமைக்கின்றமை அவர்கள் முறையே மற்றவர்களுக்கு எச்ஐவியினை ஊடுகடத்தும் சாத்தியம் இருப்பதைக் காட்டுகின்றது.

## 5.8 வன்முறை மற்றும் அதன் ஆரோக்கியத் தாக்கம்

பல்வேறு வகையான வன்முறை வடிவங்களின் நிலவுகை தொடர்பான முடிவுகள் இந்த அறிக்கையின் நான்காவது அத்தியாயத்தில் விபரமாக கலந்துரையாடப்பட்டிருக்கின்றன. எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட பெண்களை மட்டுமல்லாது ஒட்டுமொத்தக் குடும்பத்தின் நல்வாழ்வினையும் பாதிக்கின்ற பெண்களுக்கு எதிரான வன்முறையின் ஆரோக்கியம் மீதான தாக்கத்தை இங்கு கோடிட்டுக் காட்டுவது பொருத்தமானதாக இருக்கின்றது.

நெருங்கிய துணைவர் ஒருவரினால் உடல்சார் துஷ்பிரயோகத்தினை அனுபவித்திருந்த 110 பெண்களின் ஒரு அடிப்படையிலிருந்து, 48 சதவீதத்தினர் கணவர் ஆண் துணைவர்களால் காயப்படுத்தப்பட்டதாக அறிவித்திருந்தனர். இந்த மக்கள் குழுவில், 20 சதவீதத்தினர் மூன்று நான்கு தடவைகள் காயப்படுத்தப்பட்டதாக அறிவித்தனர், அதேவேளை 9 சதவீதத்தினர் அவர்கள் ஐந்து தடவைகளுக்கும் மேலாக காயப்படுத்தப்பட்டதாகக் கூறினர். இருபத்தாறு சதவீதமான பெண்கள் உடல்சார் வன்முறையிலிருந்தான காயங்கள் காரணமாக படுக்கையில் இருக்க வேண்டியிருந்தது. பதினாறு சதவீதமான பெண்கள் அவர்களுடைய காயங்கள் காரணமாக பணியிலிருந்து விடுப்பு எடுத்திருந்தனர், அதேவேளை 32 சதவீதமானோர் மருத்துவப் பராமரிப்பை நாடவேண்டியிருந்தது (அட்டவணை 5.8 இலிருந்து 5.11 வரை பார்க்கவும்).

### அட்டவணை 5.8

**உங்கள் வாழ்க்கையில் எந்தனை தடவைகள் நீங்கள் (யாராவது) உங்கள் கணவர் / துணைவ(ர்களால்)ரால் காயப்படுத்தப்பட்டிருக்கின்றீர்கள்?**

| | சதவீதம் |
|---|---|
| ஒருபோதுமில்லை | 51.8 |
| ஒரு இரண்டு தடவை | 19.1 |
| சில (3-5) தடவைகள் | 20.0 |
| பல (5 தடவைகளுக்கு மேல்) தடவைகள் | 9.1 |

### அட்டவணை 5.9

**இந்தக் காயங்கள் காரணமாக நீங்கள் எப்போதாவது படுக்கையில் இருந்தீரா?**

| | சதவீதம் |
|---|---|
| ஆம் | 25.5 |
| இல்லை | 74.5 |

### அட்டவணை 5.10

**இந்தக் காயங்கள் காரணமாக நீங்கள் எப்போதாவது வருமானத்தைத் தோற்றுவிக்கும் வேலையிலிருந்து விடுப்பு எடுத்திருக்கின்றீர்களா?**

| | சதவீதம் |
|---|---|
| ஆம் | 15.8 |
| இல்லை | 50.9 |
| எந்தக் கொடுப்பனவு செய்யப்படும் வேலையும் இல்லை | 33.3 |

### அட்டவணை 5.11

**இந்தக் காயங்களுக்காக நீங்கள் மருத்துவப் பராமரிப்பை நாடியிருந்தீர்களா?**

| | சதவீதம் |
|---|---|
| ஆம் | 31.6 |
| இல்லை | 68.4 |

நெருங்கிய துணைவர் வன்முறையை அனுபவித்த பெண்களில், 23 சதவீதம் கருச்சிதைவடைந்திருந்தனர், மாறாக 14 சதவீதமான பெண்களுக்குக் கருச்சிதைவு ஏற்பட்டிருந்தாலும் நெருங்கிய துணைவர் வன்முறையால் பாதிக்கப்பட்டிருக்கவில்லை. இது கருச்சிதைவிற்கும் நெருங்கிய துணைவர் வன்முறைக்கும் இடையே ஒரு இணைப்பு இருப்பதனை சுட்டிக்காட்டுகின்றது. நெருங்கிய துணைவர் வன்முறையை ஒருபோதும் அனுபவித்திராத பெண் மாதிரியில் ஏழு சதவீதத்தினருக்கு குழந்தை இறந்து பிறந்தது, அதேவேளை நெருக்கிய துணைவர் வன்முறையை அனுபவித்த பெண்களுக்கு இது 6 சதவீதமாக இருந்தது, குழந்தைகள் இறந்து பிறந்த வகைகளில், நெருங்கிய துணைவர் வன்முறை பாராட்டத்தக்க காரணியல்ல. எவ்வாறாயினும், 0.7 சதவீதம் நெருங்கிய துணைவர் வன்முறையை அல்லது துணைவரல்லாத பாலியல் வன்முறையை ஒருபோதும் அனுபவித்திராத ஆனால் கருக்கலைவுக்கு உட்பட்ட பெண்களுடன் ஒப்பிடும்போது, நெருக்கிய துணைவர் வன்முறை பலவந்தப்படுத்தப்பட்ட பாலியல் வல்லுறவினை அனுபவித்த பெண்களில் 7 சதவீதத்தினர் கருக்கலைவுக்கு உட்பட்டிருந்தனர் (அட்டவணைகள் 5.12-5.14).

### அட்டவணை 5.12

## உங்களுக்கு எப்போதாவது கர்ப்பம் அழிந்த கருத்தரிப்பு ஏற்பட்டதா?

| | | உடல்சார் அல்லது பாலியல்சார் நெருங்கிய துணைவர் வன்முறை | |
|---|---|---|---|
| | | ஒருபோதுமில்லை சதவீதம் | எப்போதாவது சதவீதம் |
| உங்களுக்கு எப்போதாவது கர்ப்பம் அழிந்த கருத்தரிப்பு ஏற்பட்டதா? | ஆம் | 13.6 | 22.9 |
| | இல்லை | 86.4 | 77.1 |

### அட்டவணை 5.13

## உங்களுக்கு எப்போதாவது குழந்தை இறந்து பிறந்ததில் முடிந்த கருத்தரிப்பு ஏற்பட்டதா?

| | | உடல்சார் அல்லது பாலியல்சார் நெருங்கிய துணைவர் வன்முறை | |
|---|---|---|---|
| | | ஒருபோதுமில்லை சதவீதம் | எப்போதாவது சதவீதம் |
| உங்களுக்கு எப்போதாவது குழந்தை இறந்து பிறந்ததில் முடிந்த கருத்தரிப்பு நிகழ்ந்ததா? | ஆம் | 7.1 | 5.5 |
| | இல்லை | 92.9 | 94.5 |

### அட்டவணை 5.14

## உங்களுக்கு எப்போதாவது கருக்கலைவு ஏற்பட்டதா?

| | | உடல்சார் அல்லது பாலியல்சார் நெருங்கிய துணைவர் வன்முறை | |
|---|---|---|---|
| | | நெருங்கிய துணைவர் வன்முறை ஒருபோதுமில்லை சதவீதம் | நெருங்கிய துணைவர் வன்முறை எப்போதாவது சதவீதம் |
| உங்களுக்கு எப்போதாவது கருக்கலைவு ஏற்பட்டதா? | ஆம் | 0.7 | 7.3 |
| | இல்லை | 99.3 | 92.7 |

நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் துணைவரல்லாதவர் பாலியல் வன்முறை பற்றி பெண்களினால் அறிவிக்கப்படுதல் குறைவாக இருப்பதாக கெயார் ஆய்விலிருந்தான தரவு சுட்டிக்காட்டுகின்றது, ஏனைய ஆய்வுகள் ஒரு 'மறைக்கப்பட்ட' பிரச்சினையாக கண்டுபிடிக்கப்பட்டிருந்ததைக் கூட உறுதிப்படுத்துகின்றது (ஜான்சென், 2006, ப.8). கெயார் மாதிரியில், மருத்துவ உதவியை நாடிய நெருங்கிய துணைவர் வன்முறைப் பெண் பலியாட்களில் 32 சதவீதமானோர் மட்டும் வன்முறை பற்றி அறிவித்திருந்தனர்.

இது பெண்களினால் தொடர்ந்து குறைத்து அறிவிக்கப்படுவதனைச் சுட்டிக்காட்டுகின்றது. இருப்பினும் நெருங்கிய துணைவர் உடல்சார் வன்முறையைக் காவல்துறைக்கு அறிவித்த பெண்களின் (சதவீதம்) எண்ணிக்கை நம்பிக்கையாக 8 சதவீதத்தைவிட அதிகம் அல்லது துணைவரல்லாதவர் பாலியல் வன்முறையைக் காவல்துறைக்கு அறிவித்த பெண்கள் வெறும் 18 பேர். இந்தப் பெண்களில் பதின்மூன்று சதவீதத்தினர், எவ்வாறாயினும், துணைவரல்லாதவர் பாலியல் வன்முறை பற்றி சுகாதார சேவைகளுக்கு அறிவித்திருந்தனர். ஒட்டுமொத்தமாக, நெருங்கிய துணைவர் வன்முறை அல்லது துணைவரல்லாதவர் பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களில் 10 சதவீதத்தினர் மட்டும் வன்முறை மற்றும் தாம் துயருற்ற மனவதிர்ச்சி பற்றி அவர்களுடைய குடும்பங்களுக்கு கூறியிருக்கின்றனர்.

பெண்களால் நெருங்கிய துணைவர் வன்முறையைத் தொடர்ந்த கோபம், காயம், பாதிப்பு மற்றும் பாதுகாப்பின்மை போன்ற அவர்களுடைய உணர்வுகள் கணிசமான அளவு மட்டங்களுக்கு அடக்கப்படுதல் அவர்களுடைய உள ஆரோக்கியத்தில் அவசியமான ஒரு தாக்கத்தைக் கொண்டிருந்தது. ஆகவே பெண்களின் நெருங்கிய துணைவர் வன்முறை அனுபவங்களுக்கும் தற்கொலை எண்ணங்களைக் கொண்டிருந்தமைக்கும் இடையே ஒரு பலமான இடைத்தொடர்பு கண்டுபிடிக்கப்பட்டதில் ஆச்சரியமில்லை. நெருங்கிய துணைவர் வன்முறையை அனுபவித்த பெண்களிடையே நெருங்கிய துணைவர் வன்முறையை ஒருபோதும் அனுபவித்திராத 7 சதவீதமான பெண்களுடன் மட்டும் ஒப்பிடும் போது 25 சதவீதமான பெண்கள் எப்போதாவது தற்கொலை எண்ணங்களைக் கொண்டிருந்ததாகத் தெரிவித்திருந்தனர்.

முக்கியமாக, நெருங்கிய துணைவர் வன்முறையை அனுபவித்திராத 66 சதவீதமான பெண்கள் நெருங்கிய துணைவர் வன்முறையால் பாதிக்கப்படிருந்த குறைந்த 54 சதவீதமான பெண்களுடன் ஒப்பிடும் போது கருத்தடைகளைப் பயன்படுத்திக் கொண்டிருந்தமை, நெருங்கிய துணைவர் வன்முறைக்கும் குறைந்த கருத்தடைப் பயன்பாட்டிற்கும் இடையே ஒரு இணைப்பைச் சுட்டிக்காட்டுகின்றது. நெருங்கிய துணைவர் வன்முறையை அனுபவித்திராத 3 சதவீதமான பெண்கள் அவர்களுடைய துணைவர்கள் கருத்தடையை நிறுத்தியிருந்தனர் மறுத்திருந்தனர் என்று அவதானித்திருந்ததுடன் முரணாக நெருங்கிய துணைவர் வன்முறையால் பாதிக்கப்பட்ட மற்றும் அவர்களுடைய ஆண் துணைவர்கள் கருத்தடை பயன்படுத்துவதனை மறுத்தமை நிறுத்தியிருந்தமையை அறிவித்த 7 சதவீதமான பெண்களும் இந்தக் கோலத்தை உறுதிசெய்திருந்தனர். நெருங்கிய துணைவர் வன்முறைக் குற்றமிழைத்த ஆண்களுக்கு மாறாக வன்முறையற்ற, ஆதரவான ஆண்கள் அவர்களுடைய துணைவர்களைக் கருத்தடை பயன்படுத்துவதனை ஊக்குவிப்பதனையும் மற்றும் அவர்களாகவே அதனைப் பயன்படுத்துவதனையும் இது சுட்டிக்காட்டுகின்றது.

மனைவியர் மற்றும் பெண் துணைவர்கள் மீதான ஆண் வன்முறையின் தாக்கம் தவிர, நெருங்கிய துணைவர் வன்முறை குழந்தைகள் மீது ஒரு நேரடியான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது. பெற்றோர் நெருங்கிய துணைவர் வன்முறைக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற பையன்கள் மீச்செயற்பாடுகள், ஆக்கிரமிப்பு மற்றும் அழிவுப் போக்குகளைக் காட்டுவது ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது, அதேவேளை பெண்பிள்ளைகள் மனப்பதற்றம் மற்றும் மனச்சோர்வினை அனுபவிக்கக்கூடும் (ஜயசிங்க, ஜயவர்த்தன மற்றும் பெரேரா, 2009, ப.275). நான்காவது அத்தியாயத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு, கெயார் களஆய்விலிருந்தான தரவு நெருங்கிய துணைவர் வன்முறையை அனுபவித்த ஆண்கள் கட்டிளமைப் பருவத்தில் கூட அவர்கள் சிறுவர்களாக இருந்தபோது அவர்களுடைய தாய்மார்கள் அடிக்கப்பட்டதைக் கண்டதனைக் காட்டுகின்றது, இருந்தபோதும் இந்த உறவு புள்ளிவிபரவியல் முக்கியத்துவமானதாக எழவில்லை.

## 5.9 இறுத்திச் சுருக்கம்

கெயார் ஆய்விலிருந்தான தரவு ஆண் உள ஆரோக்கியத்தின், அத்துடன் குழந்தைப்பராய மனவதிர்ச்சியின் இயக்கிகள், இனவிருத்திச் சுகாதாரம் தொடர்பான மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகள், மற்றும் நெருங்கிய துணைவர் வன்முறை மற்றும் துணைவரல்லாவர் பாலியல் வன்முறை ஆண் குற்றமிழைத்தலின் பெண்கள் மீதான தாக்கம் ஆகியவற்றின் பல்வேறு தோற்றப்பாடுகளை சுட்டிக்காட்டுகின்றது. போதிய வருமானமின்மையிலிருந்து விளைந்த பொருளாதார அழுத்தங்கள், பொருளாதாரச் சொத்துக்கள் இன்மை மற்றும் பொருளீட்டுனராக மற்றும் ஆண் குடும்பத் தலைவர்களாக நிதிசார் பொறுப்புக்கள் என்பன ஆண் மனவழுத்தம் மற்றும் நல்வாழ்வின்மைக்கான பிரதான காரணங்களிடையே கண்டுபிடிக்கப்பட்டிருந்தன, அத்துடன் ஒரு ஈடான மிதமான மட்ட மனச்சோர்வு மற்றும் தற்கொலை எண்ணங்கள் ஆண் மாதிரிகளிடையே காணப்பட்டன.

ஆண் குழந்தைப்பராய மனவதிர்ச்சி பற்றிச் சான்றுகள் கூட கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மட்டும் உள்ளடக்கியிருக்கவில்லை (அத்தியாயம் நான்கில் கலந்துரையாடப்பட்ட) ஆனால் பட்டினி, மனவெழுச்சிப் புறக்கணிப்பு, பகிரங்க அவமதிப்பு, அடிக்கப்பட்டிருத்தல் மற்றும் அஜராகாத பெற்றோர்கள் என்பன உட்பட கெயார் ஆய்வில் பங்கேற்ற ஆண் பிரதிவாதிகள் மேற்படி சகலவற்றையும் குறைந்தளவிலிருந்து மிதமான மட்டங்கள் வரை அனுபவித்திருக்கக் காணப்பட்டனர். முக்கியத்துவம் பெறுவனவற்றில் தந்தையர்களா இருந்த ஆண் பிரதிவாதிகள் ஒன்றில் பாலினப்பட்ட பெற்றோர்நிலை விதிமுறை காரணமாக அல்லது தொழிலுக்காக வீட்டிற்கு வெளியே நேரம் செலவிட்டமை இடம்பெயர்ந்தமை காரணமாக அவர்களுடைய குழந்தைகளுடன் குறைந்தளவு நேரம் செலவிட்டதாக அறிவித்திருந்தனர். இது ஒரு தொடரும் பற்றற்ற அல்லது ஆஜராகாத தந்தையர்கள், ஆண் பிணைப்பு மற்றும் குழந்தைகளின் உறுதியான ஆண் வழிகாட்டுதல்கள் இன்மை, இன்னும் பிறிதொரு சந்ததியைப் பாதிக்கும், குழந்தைகளில் மனவெழுச்சிப் புறக்கணிப்பு உணர்வுகளுக்கு, இட்டுச்செல்லக் கூடும் என்பதனைச் சுட்டிநிற்கின்றது.

இனவிருத்திச் சுகாதாரம் தொடர்பாக, அவர்களுடைய கருவுற்றிருக்கும் மனைவியர் அல்லது துணைவிகளுக்கு ஆண்களின் ஆதரவு மகப்பேற்றுக்கு முந்திய சிகிச்சையகங்களுக்கு அழைத்துச்செல்லுதலின் அடிப்படையில் மிதமானதிலிருந்து உயர்வானதாக இருந்தது மற்றும் பெரும்பாலும் வன்முறை மற்றும் கர்ப காலத்தில் பலவந்தப்படுத்தப்பட்ட பாலுறவு என்பவற்றிலிருந்து விலகியிருத்தல், அவர்களின் கருத்தடைப் பயன்பாடு குறைவாக இருந்தது, ஆண்கள் அதனை பெரும்பாலும் அவர்களின் மனைவியரை அல்லது பெண் சினேகிதிகளைத் திட்டமிட்ட பெற்றோர்நிலையின் பிரதான பொறுப்புக்களைச் சுமக்க விட்டிருப்பதன் உண்மையைச் சுட்டிநிற்கின்றது. அதேபோல, எச்ஐவி பரிசோதனை தொடர்பாக ஆண்களின் மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகள், உயர்ந்த தொற்று இடரிலுள்ளவர்கள் இடையேகூட, எச்ஐவி தொடர்பாக ஆரோக்கியம் நாடும் நடத்தை ஒரு குறைந்த முன்னுரிமையாக இருப்பது, ஆண் மற்றும் பெண் மாதிரிக் குழுக்களில் இருபாலாராலும் தவிர்க்கப்பட்டிருந்தது.

கெயார் ஆய்வு பெண்கள் மீதான ஆண் வன்முறையின் சுகாதாரத் தாக்கம் கூட முக்கியமானதாகக் கண்டுபிடித்திருக்கின்றது. அதேவேளை நெருங்கிய துணைவர் வன்முறை அல்லது துணைவரல்லாதவர் பாலியல் வன்முறை காரணமான காயங்கள் ஒரு கணிசமான அளவு பெண்களை மருத்துவ உதவி நாட அல்லது படுக்கையில் இருக்கக் காரணமாகியது, தற்கொலை எண்ணங்கள் மற்றும் கருச்சிதைவுகளும் கூட வன்முறைக்கு ஒன்றுக்கொன்று தொடர்புற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பெண்களினால் பிரச்சினை பெரும்பாலும் குறைத்து அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இருப்பினும், ஒரு வன்முறை இல்லத்தில் வளர்வது குழந்தைகளின் நல்வாழ்வு, அவர்களின் மேம்பாடு மற்றும் சமூகமயமாக்கல் அல்லது குடும்பத்தின் வேறு உறுப்பினர்கள் மீது ஒரு எதிர்மறையான தாக்கத்தைக் கொண்டிருக்க முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மேற்படி சகலமும் தனிப்பட்ட உடல்சார் மற்றும் உள சுகாதாரம், மனப்பான்மைகள் மற்றும் நடத்தைகளைத் தனிமைப்படுத்தி எடுக்கப்பட முடியாது ஆனால் அவசியமாக நிலைப்படுத்தப்பட்டு பொருளாதார, சமூக, பண்பாட்டு மற்றும் அரசியல் தொடர்பாக அவை எழுகின்ற சூழமைவுகளில் இருந்து மதிப்பிடப்பட வேண்டும் என்ற உண்மையைச் சுட்டிநிற்கின்றது. கெயார் ஆய்வில் ஆண்களால் அத்துடன் பெண்களினால் அனுபவிக்கப்பட்ட மனவழுத்த மட்டங்கள் மது, போதைப்பொருள் அல்லது வன்முறையை நாடாத பெரும்பான்மையானோருக்கு வடிகாலுக்கான சில வழிகள் இருப்பதனைச் குறிப்பாகச் சுட்டுகின்றது. அதன் விளைவாக, மனவழுத்தத்தினை அகவயமாக்கும் ஒரு போக்குக் காணப்படுகின்றது, அது முறையே, ஆண் மற்றும் பெண் இருபாலாரினதும் நல்வாழ்வில் ஒரு முக்கியமான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது.

அத்தியாயம் 6:

# பரிந்துரைகள்

கெயார் ஆய்வு முதற் தடவையாக இலங்கையில் பால்நிலை ஒப்புரவு மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை தொடர்பாக ஆண்களின் கண்ணேட்டங்கள், நடத்தைகள் மற்றும் மனப்பான்மைகள் பற்றிய ஒரு ஆழமான விளக்கத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது. குழந்தைப்பராயத்தில் ஆண்களின் அனுபவங்கள் மற்றும் வயதுவந்தவர்களாக அவை இறுதியாக எவ்வாறு அவர்களின் நடத்தையைப் பாதிக்கின்றன என்பன ஆய்வில் தெளிவாக வெளிக்கொணரப்பட்டிருக்கின்றன, அதனால், அவர்களின் நடத்தைகள் மற்றும் மனப்பான்மைகளை உறுதியாகப் பாதிக்கும் தலையீடுகளை ஏற்படுத்தும் பொருட்டு, ஆண்களின் சொந்த வாழ்க்கை வட்டத்தில் குழந்தைப்பராயத்திலிருந்து கட்டிளமைப்பருவம் வரை அவர்களின் அனுபவங்கள் ஆழமாகப் பகுப்பாயப்பட வேண்டியதன் தேவையை உயர்த்துகின்றன. பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு அநேக கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டமிடற் தலையீடுள் பெண்களின் சொந்த அனுபவங்கள் மற்றும் கண்ணோட்டங்களின் அடிப்படையிலிருக்கின்ற போது, பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றச்செயல் தொடர்பான ஆண்களின் சொந்த மனப்பான்மைகளின் வெளிப்பாடு மற்றும் உந்துசக்தி பெறப்பட்டிருக்கின்ற ஒரு முக்கிய கண்ணோட்டமாக இருக்கின்றது. இந்த நுண்ணறிவின்மை பால்நிலை சார்ந்த வன்முறை தொடர்பான தலையீடுகள் ஏன் கடந்த தசாப்தங்களுக்கு மேலாக இன்னும் பெண்களுக்கு எதிரான வன்முறை வீதங்களைக் கணிசமானளவுக்குக் குறைக்க முடியாதிருந்தமைக்கான ஒரு காரணமாக இருக்க முடியும்.

ஆய்வு எவ்வாறாயினும், பெண்கள் மற்றும் மகளிருடன் பெண்களுக்கு எதிரான வன்முறையைக் குறைப்பதற்கு தொடர்ந்து பணியாற்ற வேண்டிய தேவையை வலியுறுத்துகின்ற அதேவேளை, எதிரொலிக்கும் அழைப்பு ஆண்களுடன் அவர்களின் பல்வேறு செயற்பரப்புகள் மற்றும் பதவிகளில் தனிநபர்களாக, குடும்ப அலகுகளின், அவர்களின் சுற்றுப்புச் சமுதாயத்தின் மற்றும் சமூகங்களின் உறுப்பினர்களாக, மற்றும், இறுதியாக அவர்களின் பணியிடங்களில் தீர்மானம் மேற்கொள்பவர்களாக மற்றும் கொள்கைவகுப்பாளர்களாக மிக நெருக்கமாகப் பணியாற்றுவதற்காக இருக்கின்றது.

பரிந்துரைகள் அத்தியாயம் கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டமிடல் அணுகல்களில் ஆலோசனைகளுக்கு அத்திவாரமாக பணியாற்றும் சில முக்கிய முடிவுகளைக் கோடிட்டுக் காட்டுகின்றன. இந்த பரிந்துரைகள் ஒரு ஆணின் வாழ்க்கையின் தீர்க்கமான கட்டங்களில் வன்முறை வட்டத்தை உடைக்குந் தொலைநோக்கிலிருந்து பிரதானமாகச் சமர்ப்பிக்கப்படவிருக்கின்ற தலையீடுகள் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்காக ஆண்களுடன் நட்பாகப் பணியாற்றுதல் தொடர்பில் கவனஞ் செலுத்தியிருக்கின்றன.

## 6.1 பிரதான முடிவுகள்

கீழே விபரிக்கப்பட்டிருப்பன பால்நிலை சார்ந்த மனப்பான்மைகள் மற்றும் நடைமுறைகள், வன்முறைக் குற்றமிழைத்தல் மற்றும் நல்வாழ்வு மற்றும் குடும்ப சுகாதாரம் பற்றிய கருப்பொருள்களுக்குக் குறுக்காக கெயார் ஆய்விலிருந்தான தீர்க்கமான முடிவுகள், அது பரிந்துரைகளின் சாரக்கூறினை அறிவிக்கின்றது:

### GEM அளவிடை மனப்பான்மைகள் - ஆண்கள் மிதமான பால்நிலை ஒப்புரவு மனப்பான்மைகளைக் கொண்டிருப்பதாகக் காணப்படுகின்றனர் ஆனால் நடைமுறையில் முரண்பாடுகளை வெளிக்காட்டுகின்றனர்

அவர்களுடைய நாளாந்த வாழ்க்கையில் ஆண்களில் பதிலளிப்புகள் மிதமான பால்நிலை ஒப்புரவினைக் காட்டிய அதேவேளை, GEM அளவிடையில், ஆண் பிரதிவாதிகள் ஒரு உயர்ந்த சதவீதமான பால்நிலை ஒப்புரவற்ற மனப்பான்மைகளை ஈட்டியிருந்தனர். இந்தக் கருத்தியல் மற்றும் நடைமுறைகளுக்கு இடையே உள்ளதாகக் கருதப்பட்ட இடைவெளி – பின்னையது பற்றி ஆண்களினால் கூட்டி- அறிவிக்கப்பட்டிருந்தாலும் கூட – ஆண்கள் மாறக்கூடிய ஒரு உள்ளாற்றலுள்ள களத்தைக் சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கையிலுள்ள பெண்கள் கூட பால்நிலை ஒப்புரவற்ற மனப்பான்மைகளைக் கொண்டிருக்கின்றார்கள் - அத்துடன் பெரும்பாலும் ஆண்களைவிட மிகவும் ஒப்புரவற்ற மனப்பான்மைகள் - குறிப்பாக கற்பழிப்புத் தொடர்பாக. மேலும், ஏன் அரசாங்கம், தொழில்நுட்பம், மற்றும் கூட்டுநிறுவனச் செயற்பரப்பு தொடர்ந்தும் ஆண்மைப்படுத்தப்படல் தனிப்பட்ட ஆண்களாகக் கூட (கெயார் மாதிரியில் உள்ளவாறு) தீரமானம் மேற்கொள்ளுதல், பெண்களின் ஆடை மற்றும் நகர்மை பற்றிய கட்டுப்பாடு மற்றும் சம ஊதியம் தொடர்பான மனப்பான்மைகள் தொடர்பாக மிதமான பாலியல் ஒப்புரவினை அவர்களுடைய நாளாந்த வாழ்க்கையில் மற்றும் மற்றும் நடைமுறைகளில் காட்டுதல் என்பவற்றை இந்த மனப்பான்மைகள் விளக்குகின்றன.

### வன்முறை மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை – பாலியல் பால்நிலை சார்ந்த வன்முறை பற்றி மனப்பான்மைகள், கற்பழிப்பு உட்பட பாலியல் வன்முறை மற்றும் தண்டனைகளிலிருந்து விலக்குப் பெறுதல்

இந்த ஆய்வு பெண்களுக்கு, அத்துடன் ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கு, எதிரான ஆண் உடல்சார் மற்றும் பாலியல் வன்முறை குற்றமிழைத்தல் தொடர்பாக பல்வேறு சூழமைவுகள், இயக்கிகள், மற்றும் மாறிகளைச் சுட்டிக்காட்டுகின்றது, அவற்றில் பல ஒரு ஆடவானக இருப்பது எப்படி என்ற பண்பாட்டு மனப்பான்மைகளில் வேரூன்றியுள்ளது. வழமையான சமூகத் தொடர்புகளின் ஒரு பகுதியாக வன்முறை ஏற்கப்பட்டு செயற்படுத்தப்படுவதன் ஊடாக கட்டமைப்பு ரீதியாக ஆதரவளிக்கப்பட்ட, அதிலிருந்து ஆதிக்கம் மிக்க ஆண்மை அநுகூலத்தைப் பெறுகின்ற ஒன்றாக, ஆண் பால்நிலை சார்ந்த வன்முறைக் குற்றமிழைத்தலை நோக்குவதற்கு, இந்த ஆய்வு ஒரு வலுவான வழக்கினை உருவாக்குகின்றது.

கைபற்றப்பட்ட பெரும்பான்மையான பாலியல் வன்முறை, விவாகம்சார் கற்பழிப்பு உட்பட, நெருங்கிய துணைவர் வன்முறையினுள் அடங்குகின்றன. கற்பழிப்பு உட்பட பாலியல் வன்முறைக்கான முக்கிய ஊக்குவிப்புக் காரணியாக அறிவிக்கப்பட்டது ஆண் பாலியல் உரிமையாக இருந்தது. கற்பழிப்பு உட்பட பாலியல் வன்முறைக் குற்றமிழைத்த மாதிரியில் மூன்றில் இரண்டு முதற் தடவையாக அதனைச் செய்தது 20 மற்றும் 29 இற்கு இடைப்பட்ட வயதுகளில். இலங்கையில் கற்பழிப்பு உட்பட பாலியல் வன்முறைக்கான தண்டனை விலக்களிப்பு மட்டம் - குடும்பங்கள், சமுதாயம் மற்றும் சட்டத்திலிருந்து – முற்றிலும் உயர்வானதாக இருக்கின்றது.

கற்பழிப்பு உட்பட பாலியல் வன்முறைக் குற்றமிழைத்த ஆண்களில் அநேகமாக மூன்றின் ஒருவர் இதனை முதற் தடவையாகப் புரிந்தது 15 மற்றும் 19 வருடங்களுக்கு இடைப்பட்ட வயதில்.

### பெண்களின் ஆரோக்கியம் மீதான நெருங்கிய துணைவர் வன்முறை

பெண்கள் மீதான ஆண் வன்முறையின் சுகாதாரப் பாதிப்புக் குறிப்பிடத்தக்கதாக இருப்பதாகக் கண்டறியப்பட்டது. நெருங்கிய துணைவர் வன்முறை காரணமான காயங்கள் மற்றும் துணைவர் அல்லாதவரால் பாலியல் வன்முறை ஒரு கணிசமான அளவு பெண்கள் மருத்துவ உதவி நாட அல்லது படுக்கையில் இருக்கக் காரணமாகவிருந்தது, தற்கொலை எண்ணங்கள் மற்றும் கருச்சிதைவுகளுக்கும் வன்முறைக்கும் கூட இடைத்தொடர்புகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

நெருங்கிய துணைவர் வன்முறை விடயம் பெண்களினால் பெருமளவில் குறைத்து அறிவிக்கப்பட்டிருக்கின்றது. பெண்களினால் அவர்களுடைய கோபம், காயம், பாதிப்புகள் மற்றும் நெருங்கிய துணைவர் வன்முறையைத் தொடர்ந்த பாதுகாப்பின்மை பற்றிய உணர்வுகள் கணிசமான அளவு மட்டங்களுக்கு அடக்கப்பட்டமையால் நிச்சயமாக அவர்களுடைய உள சுகாதாரத்தில் ஒரு தாக்கத்தைக் கொண்டிருந்தது.

### வன்முறை தொடர்பான ஆண்களின் அனுபவங்கள்

பல சிறுவர்கள், விசேடமாக ஆண் சிறுவர்கள், குழந்தைப்பராயத்தில் சில விதமான வன்முறை அல்லது புறக்கணிப்பை அனுபவிக்கின்றார்கள். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மட்டுமல்லாது, பசி, மனவெழுச்சிப் புறக்கணிப்பு, பகிரங்க அவமதிப்பு, அடிக்கப்படுதல் மற்றும் ஆஜராகாத பெற்றோர் ஆகியவற்றைக் கூட உள்ளடக்குகின்றது. தந்தையர்களாகவிருந்த ஆண் பிரதிவாதிகள் ஒன்றில் பாலினப்பட்ட பெற்றோர்நிலை மற்றும் அல்லது தொழில் நிமித்தம் இல்லத்தைவிட்டு வெளியே நேரத்தைச் செலவிட்டமை அல்லது இடம்பெயர்வு காரணமாக, அவர்களுடைய குழந்தைகளுடன் குறைந்தளவு நேரம் செலவிட்டதாக அறிவிக்கப்பட்டமை முக்கியத்துவம் பெறுகின்றது. இது ஒரு தொடரும் பற்றற்ற தன்மை அல்லது ஆஜராகாத தந்தையர்களைச் சுட்டிக்காட்டுகின்றது, குழந்தைகளுடைய ஆண் பிணைப்பு மற்றும் திடமான ஆண் வழிகாட்டல் இல்லாமை, இன்னும் பிறிதொரு தலைமுறையினைப் பாதித்தது, குழந்தைகளில் மனவெழுச்சிப் புறக்கணிப்பிற்கு இட்டுச் செல்லக் கூடும்.

குழந்தைப்பராய காலத்தில் பாலியல், உடல்சார் அல்லது மனவெழுச்சித் துஷ்பிரயோகத்தை அனுபவித்த ஆண்கள் கட்டிளமைப் பருவத்தில் பெண்களுக்கு எதிராக வன்முறைக் குற்றமிழைக்கும் சாத்தியம் அதிகமாக இருக்கின்றது.

குறிப்பாக ஆண் சிறுவர்கள் தொடர்பானவை பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய கண்டுபிடிப்புகள் அவசர கவனத்தை ஈர்க்கின்றன. ஆண் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எளிதில் இலக்காகுந் தன்மையை வெளிப்படுத்துவது மட்டுமல்லாது, ஆண் சிறுவர்கள் வன்முறை ஆண்களாக, பெரும்பாலும் வன்முறையுடன் பெண்களை இலக்கு வைத்து, உருவாகும் செயல்முறை மீது அது கொண்டிருக்கும் பாதிப்பின் தடயங்களைத் தேடுவதற்கும் கூட இது முக்கியமானதாக இருக்கின்றது.

இலங்கை ஆண்களும் கூட ஓரினச் சேர்க்கையாளர் எதிர்ப்புத் தாக்குதல்கள் மற்றும் பாலியல் வன்முறையினை வேறு ஆண்களின் கைகளில் அனுபவிக்கின்றார்கள். பெண்களின் கற்பழிப்பை விட ஆண் கற்பழிப்பு நிலவுகை மிகவும் குறைவாக இருந்தபோதும், கற்பழிப்பப் பாதிப்பிற்கு உட்பட்ட ஆண்களுக்குக் கிடைக்கக்கூடிய சமுதாய, சட்ட மற்றும் மருத்துவ ஆதரவு மிகவும் குறைவானதாக இருக்கின்றது.

### ஆண்களின் நல்வாழ்வு மற்றும் சுகாதாரம்

பற்றாக்குறையான வருமானம், பொருளாதார சொத்துக்கள் இன்மை, மற்றும் ஆண் குடும்பத் தலைவர்கள் மற்றும் பொருளீட்டுனர்களாக நிதிசார் பொறுப்புக்களிருந்து விளைந்த பொருளாதார அழுத்தங்கள் என்பன ஆண்களின் மனவழுத்தம் மற்றும் நலனின்மைக்கான பிரதான காரணங்களாகக் கண்டறியப்பட்டிருந்தது; ஒரு ஈடான மிதமான மட்ட உளச்சோர்வு மற்றும் தற்கொலை எண்ணங்கள் ஆண் மாதிரிகளிடையே கண்டறியப்பட்டன.

பல பாலியல் துணைவர்களை அல்லது பரிமாற்றப் பாலுறவு மற்றும் பாலியற் தொழிலாளர்களுடன் பாலுறவு கொண்டிருந்த ஆண்கள் பெண்களுக்கு எதிராக பாலியல் வன்முறைக் குற்றமிழைப்பதற்கான சாத்தியம் அதிகாமாக இருப்பதாகக் கண்டறியப்பட்டிருந்தது.

### பெண்களின் சுகாதாரம் மற்றும் இனவிருத்தி மற்றும் பாலியல் சுகாதாரம் தொடர்பான ஆண்களின் மனப்பான்மைகள்

இனவிருத்தி சுகாதாரம் தொடர்பாக, அவர்களுடைய கர்பவதியான மனைவியர்களுக்கு துணைவிகளுக்கான ஆண்களின் ஆதரவு மகப்பேற்றுக்கு முந்திய சிகிச்சையகங்களுக்குக் கூட்டிச்செல்லுதல் மற்றும் கர்ப்பகாலத்தில் வன்முறை மற்றும் கட்டாயப் பாலுறவு என்பவற்றிலிருந்து விலகியிருந்தல் என்பதன் அடிப்படையில் மிதமானது முதல் உயர்வானது வரையாக இருந்த அதேவேளை, அவர்களுடைய கருத்தடைப் பயன்பாடு குறைவாக இருந்தது, ஆண்கள் பெரும்பாலும் திட்டமிடப்பட்ட பெற்றோர்நிலையின் முக்கியமான பொறுப்புக்களை அவர்களுடைய மனைவியர் பெண் நண்பர்களைச் சுமக்க விட்டிருந்த உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றது.

ஆண்கள், உயர்- இடர்க் குழுக்களில் உள்ளவர்கள் கூட, மற்றும் பெண்கள் இருபாலாரும் மிகவும் குறைந்த வீதத்தில் எச்.ஐ.வி. பரிசோதனை செய்ததாக தெரிவித்திருந்தமை, இலங்கையில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு எச்.ஐ.வி. தொடர்பாக ஆரோக்கியம் நாடும் நடத்தை மிகவும் குறைந்த முன்னுரிமையாக இருந்தமையைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 6.2 பரிந்துரைகள்

### பால்நிலை மனப்பான்மைகள் மற்றும் ஆண்மைக்குரியன தொடர்பான சமூக- பண்பாட்டு விதிமுறைகளை மாற்றுதல்

கல்வித் துறையுடனான ஈடுபாடு: சிறுவர்களைச் சென்றடைவதற்கு மிகவும் பயனுறுதியான வழி பாடசாலை முறைமை ஊடானதாக இருக்கின்றது. பாடசாலை செல்லும் வயதுடைய சிறுவர்களிடையே பபால்நிலை சமத்துவ விடயங்கள் தொடர்பான மற்றும் பால்நிலை - சார்ந்த வன்முறை தொடர்பான விழிப்புணர்வு உயர்த்தப்பட வேண்டும்.

பால்நிலை விதிமுறைகள் மற்றும் மனப்பான்மைகளை மீள்வலியுறுத்தும் பாடப்புத்தகங்கள் மீளாயப்பட்டு மறுசீரமைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், முறையான கல்வித் துறை ஊடுருவுவதற்கு மிகவும் கடினமானதுடன் கல்வியிலாளர்கள் அவர்களுடைய முயற்சிகளில் பலவருடங்களுக்கு மேலாக பெரும்பாலும் வெற்றியடையாது இருந்திருக்கின்றனர். குடிசார் சமூக நிறுவனங்களை முறையான கல்வி முறைமையினுள் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கு அரச கல்வி முகவர்கள் காட்டும் தயக்கம் ஊடுருவ முடியாத ஒரு தடைக்கல்லாக இருக்கின்றது. பாடசாலை- சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள் இனவிருத்திச் சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைக்கப்படுகின்றதனை உறுதிப்படுத்துவது மிகவும் பயனுறுதியானதாக இருக்கும்.

